ஞானோதயம்

சில இரகசியங்கள்

சத்குரு

ஞானோதயம்
சில இரகசியங்கள்

மதங்களும் முந்தின தலைமுறைக்காரர்களும் சொன்னதையே தன் போதனைகளாகத் திருப்பிச் சொல்லும் வழக்கம் இல்லாதவர். எதையும் நேரடியாக வேர் வரை உணர்ந்து அனுபவித்து அவற்றையே மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டவர்.

ஒவ்வொரு தனி மனிதனும் எல்லை இல்லா ஆனந்த நிலையை அனுபவித்து உணர, கோவை, வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் .ஈஷா யோக மைய'த்தை நிறுவியவர். உலகெங்கும் பல லட்சம் மனிதர்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய சத்குருவாக முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்.

90 சதவீத மக்கள் ஞானமடைந்த ஷணமே உடலை விட்டு நீங்கி விடுகிறார்கள். உடலின் தந்திரத்தை, உடலின் தொழில்நுட்பத்தை அறிந்தவர்கள் மட்டுமே உயிரைத் தக்க வைத்துக் கொள்ள முடிகிறது. அப்படித் தங்கி விட்டவர்களிலும் பெரும்பான்மையோர் தங்கள் மீதி வாழ்க்கையை மௌனத்தில் கழித்து விடுகிறார்கள். ஒரு சிலர்தான் தங்களைச் சுற்றியுள்ள மக்களின் உள் வளர்ச்சிக்காக, ஏதேனும் செய்ய, முயற்சிக்கிறார்கள். ஆனால் மக்கள் எப்போதும் தர்க்கரீதியான அறிவுடன் இருக்கவே முயற்சிக்கிறார்கள். அது எந்தப் பயனையும் தரப்போவதில்லை....

– சத்குரு

ஞானமடைதல் குறித்து சத்குரு பல சத்சங்கங்களில் பேசியவற்றின் தொகுப்பாக இந்த நூல் வழங்கப்படுகிறது. ஞானமடைவது என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? அதற்கு என்ன செய்யலாம்? என்ன செய்யக்கூடாது? இதற்காகவே ஈஷா யோக மையம் எப்படி பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது? – இந்தக் கேள்விகளுக்கு இந்த நூலில் விடை காணலாம். இந்த நூலைப் படிப்பதன் மூலம், நம்மிடையே ஒரு ஞானமடைந்த குரு வாழ்ந்து கொண்டிருக்கும்போது, ஞானமடைவது என்பது மிகத் தொலையில் இல்லை என்ற நம்பிக்கை உங்களுக்கு மலரும் என்று நம்புகிறோம்.

2010 ஈஷா அறக்கட்டளை
அனைத்து உரிமைகளும் பதிப்பாளருக்கே

முதல் வெளியீடு: அக்டோபர் 2010

பதிப்பாளர்:
ஈஷா அறக்கட்டளை,
15, கோவிந்தசாமி நாயுடு லேஅவுட்,
சிங்காநல்லூர், கோவை 641005

Phone: +91-422-2515345
E-Mail: info@ishafoundation.org
Web: www.ishafoundation.org

பொருளடக்கம்

முன்னுரை 7
1. ஞானியிடம் கேளுங்கள் 21
2. ஞானோதயம் 45
3. ஆளுமை கரைதல் 74
4. திருஷ்டி - தொலைநோக்குப் பார்வை 94
5. கல்பவிருக்ஷா 103
6. உள்நிலை நிர்வாகம் 119
7. ஈஷா - உள்நிலை மாற்றத்திற்கான புனிதத்தலம் 145
ஈஷா அறக்கட்டளை 185



முன்னுரை

ஞானமடைதல் என்பது ஆன்மீகப் பாதையின் முதற்படியும் அல்ல, கடைசிப்படியுமல்ல. ஆனால் முன்பு எப்போதும் இருந்திராத வகையில், அந்த வார்த்தை இப்போது மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. முற்காலத்தில் ஆன்மீக நாட்டமுள்ளவர்கள் தங்களின் தேடுதலைத் துவங்கியபோது, கடவுளைக் காணவேண்டும் என்று கேட்டார்கள். அத்தகைய கேள்வி இனி எழப்போவது கிடையாது. ஞானமடைதலைக் குறித்த கேள்விகள்தான் தற்போது மக்களை அதிகம் சிந்திக்க வைக்கின்றன. "கடவுள் இருக்கிறாரா?" "நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?" "எனக்குக் கடவுளைக் காண்பிக்க முடியுமா?" என்பதைப் போன்ற கேள்விகள் எல்லாம் இப்போது அவர்களிடம் முக்கியத்துவம் பெறுவதில்லை. "ஞானமடைதல் என்றால் என்ன?" "நீங்கள் ஞானமடைந்தவரா?" "உங்களால், எனக்கு ஞானத்தை வழங்கமுடியுமா?" இந்த கேள்விகளைத்தான் ஒரு நவீன கால குரு, ஆன்மீக நாட்டமுடையவர்களிடமிருந்து இனிமேல் அதிகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

"ஞானமடைதல்"(enlightenment) என்ற வார்த்தையை, கூகுள் வலைத் தளத்தில் தற்செயலாகத் தேடியதில், 1.5 கோடி வார்த்தை உபயோகங்கள், 50 இலட்சம் புகைப்படங்கள், 23,000

ஒளிப்படங்கள், 30,000 புத்தகங்கள் சில விநாடிப்பொழுதுகளில் பதிவாயின. ஒரு கணம் நான் எண்ணினேன், இந்தப் வார்த்தையை உலகிற்கு அறிமுகம் செய்த புத்தர் இதைக்காண இங்கில்லாமற்போனது பரிதாபமானது என்று. ஆனால் அந்த எண்ணம் ஷணநேரமே நீடித்தது. ஏனென்றால் அந்தப் பதிவுகளின் முடிவுகளை ஆராய்ந்ததில், பெரும்பான்மை மக்களும் "ஞானமடைதல்" என்ற ஒரு விஷயமே உலகத்தில் இல்லை என்ற தெளிவான முடிவில், அந்த வார்த்தையை வேறு பலவற்றிற்கு உபயோகிக்கத் துவங்கிவிட்டது தெளிவாகப் புரிந்தது. ஒரு மின்சார விளக்கினை இயக்குவதற்கான தொழில்நுட்ப வார்த்தை முதல், தன் சர்வாதிகார ஆட்சியை "ஜிகாத்" எனப்படும் புனிதப் போர் என ஒரு சர்வாதிகாரி நியாயப்படுத்துவது வரை, மேலும் சோப்பு, சீப்பு, ஊதுபத்தி விற்கின்ற புதுமையான வீதியோர விற்பனைப் பிரதிநிதிகளுக்கான அதீத பேச்சில் இழையோடுவது வரை, ஒவ்வொரு தரப்பினரும் அவரவர் வசதிக்கேற்ப இந்த வார்த்தையை (enlightenment) உபயோகித்திருக்கின்றனர். தம் காலத்திற்குப்பிறகு, 2500 வருடங்கள் கழித்து, 'தம்ம சக்கர'த்தின் மறுசுழற்சி நிகழுமென்று கணித்துச் சென்ற புத்தனாகிய கௌதமனுக்கு, இன்று இவ்வுலகத்தில் இவ்வார்த்தை உபயோகப்படுத்தப்படும் விதம் நிச்சயமாக துயரத்தைத் தந்திருக்கும்.

இருப்பினும் இத்தகைய தடைகளையும் மீறி, கௌதம புத்தரின் கூற்றுப்படியே ஞானமடைதல் என்பது அதன் உள்ளார்ந்த பொருளில், இன்னமும் இலட்சக்கணக்கான உலக மக்களிடம் தூண்டுதலை உண்டாக்கியே வருகின்றது. "ஞானமடைதல் என்றால் என்ன?" "ஒருவர் எவ்விதம் ஞானமடைவது?" "ஞானமடைந்தவர் எப்படி அதை உணருவார்?" "ஞானமடைதலுக்கான படிநிலைகள் உள்ளனவா?" "நான் ஞானமடைந்துவிட்டால், யாருடைய எதிர்காலத்தையும் கணித்துவிட முடியுமா?" "என்னால் மற்றவர்களின் மனதைப் படிக்கமுடியுமா?" "இதனாலெல்லாம் ஏதேனும் பயன் உண்டா?" இதுபோன்ற மேலும் இலட்சம் கேள்விகள், ஆர்வமுடைய மக்களின் ஆழ்மனதில் சுற்றிச்சுழன்று, வட்டமடித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இது குறித்து கோட்பாடுகளும், எதிர்க்கோட்பாடுகளும் உண்டு. இதற்கு உரிமை கொண்டாடுபவர்களும் மறுப்பாளர்களும் உண்டு. மொத்தத்தில் இதைப்பற்றி இங்கு போதுமான அளவு குழப்பம் இருக்கத்தான் செய்கிறது. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அதிகாரபூர்வமாக பதிலளிக்கக்கூடிய யாராவது இருந்தால் புத்தகத்தாலோ, கேள்விஞானத்தாலோ அன்றி சுயமான உணர்தல் மற்றும் அனுபவத்திலிருந்து எழுகின்ற வல்லமையோடு, இவ்வுலகில் இருந்து மறைந்து விட்டவராக இல்லாமல் இரத்தமும் சதையுமாக எதிர்நிற்பவராக இருந்தால், பிறகு ஒரு கனவு கண்ணெதிரிலே மெய்யாவது போலத்தானே உணர்வீர்கள்?

பாலகனாய் இருந்தபோது, சத்குருவிற்கு ஆன்மீகத்தில் சிறிது கூட ஈடுபாடு இருந்ததில்லை. அவரின் குழந்தைப்பருவத்தில் குடும்பத்தினருடன் கோவில்களுக்குச் செல்லும்போதெல்லாம், கடவுளிடம் பிரார்த்தனை செய்வதற்காக மேல்சட்டையைக் கழற்றிவிட்டு கோவிலுக்குள் வருவதைக்காட்டிலும், எதிர்ப்பு காட்டி அடிவாங்கிய தருணங்களே அதிகம். இளைஞராக இருந்தபோது ஏற்பட்ட ஆங்கில மொழியின் தாக்கம் அவருக்குள் மேற்கத்திய சிந்தனையை நிலைநாட்டியது. நீலநிற ஜீன்ஸ் மற்றும் பீட்டில்ஸ் குழுவினரின் இசை அவருடன் எப்பொழுதும் இணைபிரியாதிருந்தன.

துறவு மனப்பான்மையின் சாயல் கடுகளவும் தென்படாத, மேற்கத்திய வாழ்க்கையை மேற்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில்தான், கால தேவனுடைய திருவிளையாடலின் வேடிக்கை போன்று, அவருக்குள் அந்த அனுபவம் நிகழ்ந்தது. அதுவும் அவருக்குள் அது குறித்த தேடல் ஏதுமின்றி நிகழ்ந்தது. அந்த மகத்தான அனுபவத்தை, அத்துணை சுலபமாக வழங்குவதற்கு இயற்கை விரும்பாதது போல, அவருக்குள் ஞானமடைதல் நிகழ்ந்தபோது, அது ஒரு அமைதி நிரம்பிய போதிமரத்தினடியிலோ அல்லது குளுமையான முழுநிலவின் அரவணைப்பிலோ நிகழவில்லை. மைசூரின் சாமுண்டி மலையில் கரடுமுரடான பாறையின்மீது சுட்டெரிக்கும் சூரியக்கதிர்களின் அடியில்தான் நேர்ந்தது.

சத்குரு தனக்கே உரிய விதத்தில் விவரிக்கிறார்: "நான் எப்போதும் மலைகளை அனுபவித்தும், குறிப்பாக மைசூரின்

சாமுண்டி மலைகளை நேசித்தும் வந்தேன். அந்த நாட்களில், மைசூர் நகரில், இளைஞர்களைப் பொறுத்தவரை, இருசக்கர மோட்டார் வாகனத்தை ஓட்டிப் பார்க்க வேண்டுமா, சாமுண்டி மலைக்குப் போக வேண்டும்; தியானம் செய்ய விருப்பமா, சாமுண்டி மலை செல்ல வேண்டும்; நீங்கள் காதலில் வீழ்ந்தால் சாமுண்டி மலையை நாடவேண்டும்; நீங்கள் வெறுப்பினால் உந்தப்பட்டாலும் சாமுண்டி மலைதான் போகவேண்டும்; மொத்தத்தில் ஏதாவது நிகழ்ந்தாலும் சாமுண்டி மலை; எதுவும் நிகழவில்லையென்றாலும் சாமுண்டி மலை என்பதுதான் அந்த நகரின் பாரம்பரியமாக இருந்தது.

அதேபோல், எனக்கும், அடிக்கடி மலையேற்றம் செய்யவும், நாட்கணக்கில் முகாமிடும் இடமாகவும், தியானம் மற்றும் அநேக விஷயங்களைச் செய்யும் இடமாகவும் சாமுண்டி மலை திகழ்ந்தது. வியாபார சம்பந்தமான சந்திப்புகளையும் சாமுண்டி மலையில் நடத்தியிருக்கிறேன். வழக்கமாக "சாமுண்டி மலையில் வியாபார சந்திப்பு" என்று நான் கூறியபோதெல்லாம் மற்றவர்கள் ராஜேந்திரவிலாஸ் மாளிகையில்தான் ஏற்பாடாகியிருக்கும் என்று நினைப்பதுண்டு. ஆனால் நானோ சாமுண்டி மலையில் அதற்கு ஒரு கற்பாறையைத் தயார் செய்திருப்பேன். ஆகவே, நான் அந்த இடத்தில்தான் அதிகமான நேரத்தைச் செலவழித்தேன்.

பலவிதமான வியாபார ரீதியான செயல்பாடுகளில் நான் தீவிரமாக ஈடுபட்டிருந்தபோது, எனக்குள் அற்புதமான ஒன்று நிகழ்ந்தது. அந்தத் தேதிகூட எனக்கு மிகச் சரியாக நினைவில் இருக்கிறது. 1982ஆம் வருடத்தில் செப்டம்பர் 23ஆம் நாள். அந்த நாளிலிருந்து நான் முற்றிலும் மாறுபட்டவனாகி விட்டேன்..

அந்த குறிப்பிட்ட நாளின் மதியப்பொழுதில், அன்றைய இரண்டு வியாபார சந்திப்புகளுக்கிடையே கிடைத்த சிறிது நேர இடைவெளியைப் பயன்படுத்தி, இருசக்கர மோட்டார் வாகனத்தில் சாமுண்டி மலைக்குப் பயணப்பட்டேன். என்னுடைய வாகனத்தை நிறுத்திவிட்டு, நான் வழக்கமாக அமர்கின்ற ஒரு குறிப்பிட்ட பெரிய பாறையொன்றின்மீது, கண்கள் திறந்த நிலையில் அமர்ந்திருந்தேன். சில நிமிடங்களுக்குப் பிறகு நான் எங்கிருக்கிறேன் என்றே எனக்குத் தெரியவில்லை.

"திடீரென்று எது "நான்" எது "நான் இல்லை" என்பதே தெரியாமல் போனது. எது 'நான்' ஆக இருந்ததோ அது எங்கெங்கும் பரவிநின்றது. நான் அமர்ந்திருந்த பாறை, நான் சுவாசித்த காற்று, என்னைச் சுற்றிச் சூழ்ந்திருந்த பரந்தவெளி இப்படி எல்லாமே நானாக மாறியிருந்தது."

சாமுண்டி மலையில், 23 செப்டம்பர் 1982 ல் அவரது வாழ்க்கை முற்றிலும் மாறிப்போன அதே பாறையில், சத்குரு.

அந்தக் கணம் வரை பெரும்பாலான மக்களைப் போல், "நான்" என்பது இந்த உடல் மட்டுமே என்று நம்பிக்கொண்டிருந்தேன். திடீரென்று சில நிமிடங்களில் எது "நான்" எது நான் இல்லை என்பதே தெரியாமல் போனது. எது 'நான்' ஆக இருந்ததோ அது எங்கெங்கும் பரவிநின்றது. நான் அமர்ந்திருந்த பாறை, நான் சுவாசித்த காற்று, என்னைச் சுற்றிச் சூழ்ந்திருந்த பரந்தவெளி இப்படி எல்லாமே நானாக மாறியிருந்தது.

அதனைப் பற்றி நான் எவ்வளவுதான் கூறினாலும், உங்களுக்கு முட்டாள்தனமாகவும், பைத்தியக்காரத்தனமாகவும் தான் தோன்றும். அதே நிலையில் சுமார் 10, 15 நிமிடங்கள் தான் இருந்தேன் என்று நினைத்தேன். ஆனால் மறுபடியும் நான் இயல்பான சுய நினைவுக்கு வந்தபோது இரவு 7.30 மணி ஆகியிருந்தது. 4.30 மணிநேரங்கள் கடந்திருந்தது. கதிரவன் மறைந்திருந்தது. என் கண்கள் திறந்தே இருந்தன. நான் முழு விழிப்புணர்வோடு இருந்தேன். ஆனால் நேரம் மட்டும் கரைந்திருந்தது. எட்டு வயது முதற்கொண்டு கண்களில் கண்ணீர் வருவதென்பதை அவமானமாகக் கருதி, ஒரு துளி கண்ணீரைக் கூட சிந்தாமல் இருந்த எனக்கு, கண்ணீர் பெருகியிருந்தது. என் சட்டை நனைந்து போகுமளவுக்கு கண்ணீர் பெருகியிருந்தது.

நான் எப்போதும் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும்தான் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தேன். அதில் எனக்குப் பிரச்சினையே வந்தது கிடையாது. எல்லாமே நீங்கள் விரும்பியவாறு அமையும்போது என்ன பிரச்சினை இருக்கமுடியும்? ஆனால் இப்போது, ஒரு புதுமையான விவரிக்க இயலாத அளவுக்கான பரவசம், என்னுடைய உடலின் ஒவ்வொரு அணுவிலும் வெடித்துக் கிளம்பியது. அந்த அனுபவத்தை விளக்க என்னிடம் வார்த்தையே இல்லை. என்ன கூறுவதென்று தெரியவில்லை. எனக்கு நிகழ்ந்து கொண்டிருந்தது என்னவென்று தெரியவில்லை. எனக்கு நிகழ்வது என்ன? என்று என்னையே நான் கேட்டுக்கொண்டபோது, பயிற்சிக்குட்படுத்தப்பட்ட என்னுடைய தர்க்க அறிவு, ஒருவேளை நான் சமநிலை தவறுகிறேன் போலும் என்று தான் கூறியது. என்னிடம் நிகழ்ந்த அனுபவத்தை நான் என் நெருங்கிய நண்பர்களிடம் பகிர்ந்துகொண்டபோது, என்னை நோக்கி அவர்கள் "எதையாவது அருந்தினாயா? ஏதாவது போதைப்பொருள் உட்கொண்டாயா?" என்ற கேள்விகளைத்தான் எழுப்பினர். இந்த விதமாகத்தான் அவர்களால் இதை நோக்க முடிந்தது. இனி இவர்களிடம் இது பற்றிப் பேசுவதில் பலனில்லை என்று எனக்குப் புரிந்தது. ஏனென்றால் என்னைச் சுற்றி இருந்த ஒருவரிடமும் இது தொடர்பான விளக்கம் இல்லை. அற்புதமான ஏதோ ஒன்று எனக்குள் நிகழ்ந்து கொண்டிருந்தது.

எதனுடனும் என்னுடைய இந்த அனுபவத்தை தொடர்புபடுத்திக்கொள்ள முடியவில்லையெனினும், எனக்குத் தெரிந்ததெல்லாம் நான் ஒரு தங்கச் சுரங்கத்தைத் தற்செயலாகக் கைக்கொண்டுவிட்டேன் என்பதுடன், எனக்குள் பொதிந்துள்ள அந்த பெயரில்லாத தங்கச்சுரங்கத்தை ஒரே ஒரு கணம்கூட இழக்க விரும்பவில்லை என்பது மட்டும்தான். இது முற்றிலும் நிதானமிழந்ததைப் போன்றதொரு பித்துநிலை என்பது எனக்குத் தெரியும். ஆனால் அந்த உணர்வை ஒரு கணமும் இழப்பதற்கு நான் விரும்பவில்லை. ஏனென்றால் அவ்வளவு பிரம்மாண்டமான ஏதோ ஒன்று நிகழ்ந்து கொண்டிருந்தது.

6, 7 நாட்களுக்குப் பிறகு என் குடும்பத்தினரோடு இரவு உணவுக்காக அமர்ந்திருந்தபோது இது மீண்டும் நடந்தது. அதே நிலையில் ஏதோ இரண்டு நிமிடங்கள்தான் அமர்ந்திருந்ததாக நான் நினைத்ததற்கு மாறாக, 7 மணி நேரங்கள் கடந்து போயிருந்தன. அந்த நாளுக்குப் பிறகு இந்த ஆச்சரியப்படத்தக்க அனுபவம் எனக்கு அடிக்கடி நிகழத் துவங்கியது. ஒவ்வொரு முறை இந்த அனுபவத்திற்கு நான் ஆட்படும்போதும், அதைத் தொடர்ந்த 3, 4 நாட்களுக்கு நான் உறங்காமலேயே இருந்தேன். அநேக தருணங்களில் 2, 3 நாட்களுக்கு சாப்பிடாமலும் இருந்திருக்கிறேன்.

ஒருமுறை தொடர்ந்தாற் போல் 13 நாட்கள் இந்த உணர்வுநிலை நீடித்தபோது, அது மிகவும் தீவிரமாக இருந்தது. இதற்குள் மக்கள் கூட்டம் கூடி விட்டதோடு, சிலர் எனக்கு மாலை அணிவித்தனர். "ஓ, இவர் சமாதியில் இருக்கிறார்" என்று மக்கள் கூறத் துவங்கி விட்டனர். அதுவரைக்கும் "சமாதி" என்ற வார்த்தையை நான் கேள்விப்பட்டது கூடக் கிடையாது. சிலர் என் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தனர். வேறு சிலர் அவர்களுடைய வியாபாரம் குறித்த எதிர்காலத்தை அறிந்துகொள்ள விரும்பினர். மற்றும் சிலரோ அவர் தம் மகளின் திருமணம் நடந்துவிடுமா என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள விரும்பினர். என் வாழ்க்கையில் எதையெல்லாம் கோமாளித்தனம் என்று வெறுத்து ஒதுக்கினேனோ, அத்தனையும் திடீரென்று என்னைச் சுற்றியே நடந்தேறிக்கொண்டிருந்தது. நான் நெருங்கவே விரும்பியிராத அனைத்து நிகழ்வுகளும் சட்டென்று எனக்கே நடந்தது.

சுற்றிலுமுள்ள மக்களைக் கையாள இயலாமல் இருந்த இந்தக் காலக்கட்டத்தில்தான், எனக்குள் நிகழ்ந்து கொண்டிருந்ததில் தெளிவு காண்பதற்காக என்னையே ஒரு ஒழுங்குமுறைக்குள் கொண்டுவரும் முகமாக, நான் நீண்ட தொடர்பயணம் ஒன்றினை மேற்கொள்ள முனைந்தேன்.

இந்த நிகழ்வு மேலும் மேலும் ஏற்படத்துவங்கி, ஆறு வார காலத்தில் அது என் வாழ்க்கையின் யதார்த்தமாகவே மாறிவிட்டது. இந்த 6 மாதத்தில் என்னைப் பற்றிய ஒவ்வொன்றுமே மாறிவிட்டிருந்தது. இந்த அனுபவத்தை என்னால் சாதாரணமாக நினைத்து ஒதுக்க முடியவில்லை.

ஒரு மாத காலத்தில் என்னுடைய அத்தனை வியாபாரங்களையும் நிறுத்திவிட்டேன். ஓரிரண்டு வருடங்கள் இங்கும், அங்கும் பல இடங்கள் சுற்றி அலைந்தேன். எனக்குள் அற்புதமான ஏதோ ஒன்று இருக்கிறது என்பதை நான் அறிந்தேன். ஆனால் அதை எப்படி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது என்று எனக்குத் தெரியவில்லை. எத்தனையோ பேரிடம் இது பற்றிய விளக்கம் கேட்டேன். சிலர் இது ஆன்மீகத்தன்மையான அனுபவம் என்று கூறியதால் இந்த அனுபவத்தினால் எழுந்த கேள்விகளுக்கு விடைதேடி, சில ஆன்மீக அமைப்புகள் மற்றும் அத்தகைய மனிதர்களை நாடினேன். ஆன்மீகப்பாதையில் உள்ள ஏறக்குறைய எல்லா மனிதர்களும், அற்புதமான ஒன்றைக் குறித்துப் பேசுவதைத் தவிர அவர்கள் ஒருவர் கூட அந்த அனுபவத்தை உணர்ந்தது கிடையாது என்று கண்டுகொண்டேன். எனக்கு மாபெரும் அனுபவம் கிடைத்தது. ஆனால், என்னால் உணர்ந்ததை உள்ளபடியே எப்படி வெளிப்படுத்துவது என்பதை நான் அறியவில்லை!

எனக்குள் நிகழ்ந்து கொண்டிருந்த பரிமாணத்தைப் புரிந்து, முழுவதுமாய் ஏற்றுக்கொள்ள ஏறக்குறைய ஒன்றரை வருடங்கள் ஆனது. அந்த நேரத்தில் என் உடலிலும் பலவித மாற்றங்கள் நேர்ந்தது. என் உடல் கட்டமைப்பு புதிதான உருமாற்றத்தை அடைந்து வந்ததை, என்னைச் சுற்றிலும் இருந்தவர்களால் தெளிவாகப் பார்க்கமுடிந்தது. முந்தைய அமைப்பிற்கும் இப்போதைய மாற்றத்திற்குமுள்ள வித்தியாசத்தைக் கண்கூடாகக் கண்டனர். என்னுடைய குரல் மாறியிருந்ததுடன், என் கண்களின்

வடிவம், அளவு அனைத்தும் மாறுதல் அடைந்தது. அந்தக் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை நீங்கள் பார்த்தால், உடலமைப்பில் திடீரென ஏற்பட்ட மாற்றங்களை நீங்கள் தெளிவாகக் காணமுடியும்.

நான் ஏதோ ஒன்று செய்ய வேண்டும் என்று நான் அறிந்திருந்தேன், ஆனால் அது என்னவென்று எனக்கு புரியவில்லை நான் அறிந்ததெல்லாம் எனக்குள் வெடித்துக் கிளம்பியவாறிருந்த பரவசம் ஒவ்வொரு மனிதருக்கும் நிகழமுடியும் என்பது மட்டும்தான். அனைத்து மனிதர்களுக்குள்ளேயும் அதேவிதமான மூலம் இருக்கின்றது. ஆனால் அந்த உணர்தல் அவர்களுக்கு நிகழவில்லை. எவ்வகையிலேனும் இந்த அனுபவத்தை அவர்களிடம் பரவச் செய்வதுதான் சிறந்த செயல் என்று முடிவெடுத்து, அதைச் செய்யக்கூடிய வழிகளை ஆராயத் துவங்கினேன்.

என்னுடைய நண்பர்கள் இதனை அறிந்தால் என்னை சுற்றி கூடிவிடுவார்கள், அவர்களையும் நான் பரவசத்தில் ஆழ்த்த முடியும் என்றெண்ணினேன். "உங்களுக்கு நான் ஒரு புதிய அனுபவம் தர விரும்புகிறேன். வாருங்கள்" என்று நான்தான் அழைத்தேனே அன்றி, அவர்களில் ஒருவர்கூட அதற்குத் தயாராக இல்லை. அனைவரும் என்னைத் தவிர்க்கத்தான் பார்த்தனர். என்னுடைய வெற்றிகரமான வியாபாரத்தை நிறுத்திவிட்டு அமைதியாக அமர்ந்துவிட்ட காரணத்தால் இந்த ஒரு வருடத்தில், நான் ஒரு ஆபத்தான மனிதன் என்ற பெயர் பெற்றுவிட்டேன். என்னுடைய சொந்த முயற்சியில், ஆரம்பம் முதல் நானே ஈடுபட்டு, சிறிது சிறிதாக வளர்த்து, ஒருவரிடமும் 1 ரூபாய்கூட கடன்படாமல் நடத்தி, நிறுத்திய வியாபாரமாக இருந்தபோதும் மக்கள் கூறியது, "அவர் ஆபத்தானவர் வியாபாரத்தை அப்படியே நிறுத்தியவர்", என்பதுதான். ஆகவே ஒருவரும் என்னை அணுக விரும்பவில்லை. இதை என்னால் நம்பமுடியவில்லை.

என்னுடைய பல வேண்டுதல்கள் மற்றும் கட்டாயத்திற்குப் பிறகு, 7 பேர், அவர்கள் சப்தரிஷிகள் அல்ல, எனினும் முன் வந்தனர். அவர்களும் எந்த ஒரு முனைப்போடும், தீவிரத்தோடும் வேறு எந்த உணர்விலும் வரவில்லை. சிலர் ஏதோ ஆர்வத்திலும்,

மற்றும் சிலர் எனக்குக் கீழ்படிய வேண்டிய உணர்விலும்தான் வந்தனர். அவர்களால் முடியாது என்று என்னிடம் கூற இயலாத ஒரு இக்கட்டினால் வந்தனர். இப்படியாகத்தான் அவர்கள் வர நேர்ந்தது.

முதலில் வகுப்புகள் 4 நாள், 2 மணிநேரம் என்று தொடங்கியது. ஆனால் 2ம் நாளே 5, 6 மணிநேரம் வகுப்பு நீடித்தது. 3வது நாளும் இப்படியே நடந்தது. 4வது நாள் அனைவரும் "இது மிகவும் நன்றாக உள்ளது. வகுப்பை மேலும் 2 நாட்களுக்கு நீட்டிப்போம்" என்று கூறினர். ஆகவே அது 6 நாள் வகுப்பானது. அதிலிருந்து பின்னடைவே இல்லாமல் இன்றுவரை நடந்து கொண்டிருக்கும் இந்த வகுப்பில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பாளராகி, அதனால் அவர்களின் வாழ்வின் போக்கில் மாற்றமும் கண்டுவருகின்றனர். ஆனாலும் அந்த 7 பேரிடம் நான் மிகவும் நன்றியுணர்ச்சி கொண்டுள்ளேன். ஏனென்றால் அதுவரை நான் எவருக்கும் எதையும் கற்றுக் கொடுத்ததுமில்லை, எனக்கும் யாரும் எதையும் கற்றுக்கொடுக்கவும் நான் அனுமதித்ததில்லை. என்னால் கற்றுக்கொடுக்க முடியும் என்பதை இந்த 7 பேர் உணர்த்தியதோடு என்னுடைய பரவச அனுபவத்தை எப்படியோ சிறிதளவேனும் அவர்களுக்குப் பரவச் செய்ய முடிந்தது."

சத்குரு தன்னுடைய கனவைக் குறிப்பிட்டு, எப்போதும் இப்படிக் கூறுவதுண்டு: "இந்தியாவில் எந்த வீதியில் இறங்கி நடந்தாலும் உங்களால் சாதாரணமாக காய்கறி விற்பவர்களைப் பார்த்துவிட முடியும். அதேபோல் ஒருநாள் வீதியில் நடக்கும்போது ஞானமடைந்த மனிதர்களை நான் சாதாரணமாக நான் எதிர்கொள்ள வேண்டும்."

அவருடைய ஒரு கவிதையின் சில வரிகள் அவருடைய கனவை இன்னும் நன்றாக விவரிக்கின்றது:

ஷம்போ, என் உறுதியும் உன் அருளும்,
உன் வாயிலில் என்னை சேர்த்தது.
இக்கதவை யார் தாண்டலாம், கூடாது, என்று
நீ வரையறுத்து வைத்திருந்தால்,
என் விஷயத்தில் நீ தவறு செய்து விட்டாய்.
இந்த புது உணர்வின் மதிமயக்கத்தில், இக்கதவை



"குரு" என்பவர் உங்கள் ஆளுமையை முற்றிலுமாய் அழித்து, நீங்கள் உண்மையை அதன் தன்மையில் உணர வழி செய்பவர். பழங்கால ஆன்மீக ஏடுகளையும் புத்தகங்களையும் உங்களுக்கு புரியவைக்க அவர் இங்கு வரவில்லை. அவர் உங்களுள் உள்ள சாத்தியங்களை நீங்கள் உணர வழி செய்பவர்."

சத்குரு மிகவும் எளிமையாக, நேரிடையாக, மறுக்க இயலாத அளவில் தர்க்கரீதியாக பேசுவார். அதே நேரத்தில், அவரது வார்த்தைகள் நம்முள்ளே ரீங்கரித்து, நம்முடைய வாதங்களை ஒவ்வொன்றாய் பிரித்தெறிகிறது.

மேலும் மனிதனை உண்மையில் இருந்து பிரிக்கிற கலாச்சார சீரழிவுகளையும் கடுமையாக சாடுகிறார்.

ஊர்ந்து செல்லும் புழு பூச்சிக்கும் கூட
வேறுபாடின்றி திறந்து வைப்பேன்,
என் இந்த அகந்தையை தயவு செய்து மன்னித்துவிடு,
ஏனெனில் நானேதான் நீ.

இந்த கனவு நிறைவேற வேண்டுமென கடந்த 25 வருடங்களாக பல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது. தனக்கு நிகழ்ந்த பரவச நிலை பிறருக்கும் நிகழ வேண்டும், என்று ஆரம்பித்த அந்த முயற்சி, இன்று அசுர வளர்ச்சி பெற்று, ஒரு மாபெரும் ஆன்மீக இயக்கமாக உருவாகியிருக்கிறது. உலகெங்கிலுமுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு ஆன்மீகப்பாதையில் தீட்சை வழங்கப்பட்டு, அவர்கள் பல்வேறு வளர்ச்சி நிலைகளில் உள்ளனர். மேலும், இந்தக் குறிக்கோளுக்கு உறுதுணை செய்யும் விதமாக, பல வகுப்புகளும், பயிற்சி நிலையங்களும் சத்குருவால் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், இது அவருக்கு போதுமானதாக இல்லை.

சமீபத்தில் ஆசிரமத்தில் நடைபெற்ற ஒரு சத்சங்கத்தில் சத்குரு அவர்கள் பேசும்போது, "முதன்முறையாக நமக்குத் தேவையான கருவிகளும், தொழில்நுட்பங்களும், இன்று நம் கைவசம் இருப்பதால், ஒவ்வொரு மனிதருக்குள்ளும் தனித்தனியாக ஒளியேற்றுவதைக் காட்டிலும், ஒட்டுமொத்த பூமிப்பந்தையும் ஒருங்கே ஒளிரச் செய்யக்கூடிய திட்டம் குறித்து யோசித்து வருகிறோம்" என்று கூறினார்.

முதல் பார்வையில், அது அதீதமான எதிர்பார்ப்பாக இருப்பது போலத் தெரிந்தாலும், அது எப்படி சாத்தியம் என்பதை சத்குரு விளக்குகிறார்: புவியீர்ப்பு விதிகளை வரையறுப்பதற்காக ஐசக் நியூட்டன் போன்ற ஒருவர் தன் வாழ்நாள் முழுக்க உழைத்திருந்தாலும், இன்றைக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி மாணவனால்கூட அந்த விதிகளை விளக்க முடிகிறது. ஏனென்றால் ஐசக் நியூட்டன் போன்ற மற்றும் பலரின் தோள்களின்மீது இன்று அவன் நின்று கொண்டிருக்கிறான். அதைப்போலவே, ஆன்மீகம் சார்ந்த தொழில்நுட்பம் தொடர்பானவற்றில்கூட, பண்டைய கால ரிஷி மற்றும் ஞானியரால் நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாத

விஷயங்கள் இன்றைக்கு சாத்தியமாகக் கூடும். ஏனென்றால் அவர்கள் அடித்தளமிட்டுச் சென்றவற்றைப் பெறுவதற்கு இன்று பல வழிகள் இருக்கின்றன. இன்னும் கூடுதல் வாய்ப்பாக, முந்தைய எந்த காலகட்டத்தைக் காட்டிலும், நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் உறுதுணையுடன், ஒரு ஆன்மீக குரு, ஒட்டுமொத்த உலக மாந்தரை ஒருங்கே தொடர்பு கொள்ள முடியவில்லை என்றாலும் ஒரு பெருந்திரளான மக்களுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. இது நம் முயற்சிக்கு ஒரு அபூர்வமான தனிச்சிறப்புமிக்க சாதகமான சூழலாக இருக்கிறது என்று கூறுகிறார்.

ஞானமடைதல் குறித்து 6 சத்சங்கங்களில் சத்குரு வெளிப்படுத்தியவைகளின் தொகுப்பாக இந்நூல் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சொற்பொழிவும் ஞானமடந்தவரின் தன்மையை வெளிப்படுத்துகிறது. ஞானமடைவது என்றால் என்ன, அது எப்படி இருக்கும், எதை செய்யலாம், எதை செய்யக்கூடாது, எதை செய்தால் அதற்கு இன்னும் அருகே செல்லலாம், எதெல்லாம் அதற்கு தடைகளாய் இருக்கும் போன்றவை இங்கே தொகுத்து வழங்கப்பட்டிருக்கின்றன. இதில் ஒரு பகுதியில், ஈஷா யோக மையம் ஆன்மீக பாதையில் இருப்பவர்களுக்காக அவர் உருவாக்கிய பிரத்யேக புனித இடம் என்று சத்குரு மிகத் தெளிவாக விவரிக்கிறார். இந்த புத்தகத்தை படிப்பதன் மூலம், நம்மிடையே ஒரு குரு வாழ்ந்து கொண்டிருக்கும் போது ஞானமடைவதென்பது மிகத் தொலைவில் இல்லை என்ற நம்பிக்கை உங்களுக்கு வளரும் என்று நம்புகிறோம்.

சுவாமி நிசர்கா

(ஆங்கில நூல் முன்னுரையின் தமிழாக்கம்)



நானாக மாறுங்கள்

நான் என் தாயின் கருப்பையில் தோன்றினேன்
ஆனால் அவள் என்னைப் படைக்கவில்லை.
நான் இந்த பூமியின் உப்பைத் தின்றேன்
ஆனால் நான் அவளுக்குச் சொந்தமில்லை.
இந்த உடம்பின் மூலமாக நான் நடக்கிறேன்
ஆனால் நான் அதுவல்ல.
என் மனதின் மூலமாக நான் பணிபுரிகிறேன்
ஆனால் அதற்குள் நான் இல்லை.
காலம், வெளி என்ற எல்லைக்குள் என் வாழ்க்கை
ஆனால் அது என் எல்லையற்ற தன்மையை மறுக்கவில்லை.
உங்களைப் போல பிறந்தேன், உங்களைப் போல உண்கிறேன்,
உங்களைப் போல தூங்குகிறேன், உங்களைப் போலவே இறப்பேன்.
ஆனால் எல்லைகள் என்னைக் குறுக்கவில்லை
வாழ்வின் தளைகள் என்னைப் பிணைக்கவில்லை
வாழ்க்கை நடனம் வளர்ச்சியடையும் போது
இந்த வெளியும், இந்தக் கட்டற்றத் தன்மையும்
தாங்க முடியாத இனிப்பாகி விட்டது.
அன்பாய் மலருங்கள், வெளிப்படுங்கள்
நானாக மாறுங்கள்.

சத்குரு

அத்தியாயம் 1

ஞானியிடம் கேளுங்கள்

"நீங்கள் ஒரு பாலைவனத்தில் இருக்கும்போது, உங்களைச் சுற்றியுள்ள மக்கள் தாகத்தால் தவிக்கும்போது, உங்களிடம் ஒரு நீரூற்று இருக்கிறது என்றால் அதைப்பற்றி மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது உங்களுடைய கடமை" என்கிறார் சத்குரு. எனவே சத்குருவின் வாழ்க்கை, மக்களை ஆன்மீகப் பாதையில் அழைத்துச் செல்வதற்காகவே அர்ப்பணிக்கப் பட்டிருக்கிறது. 2000-2002ம் ஆண்டுகளில் சத்குரு தொடர்ச்சியாக பல சத்சங்கங்களை நடத்தினார். இந்த சத்சங்கங்களில், மாலை நேரங்களில், ஆயிரக்கணக்கான சில நேரங்களில் இலட்சத்தையும் தாண்டிய மக்கள் சத்குருவின் வழிகாட்டுதலுக்காக கூடினர்.

இந்த சத்சங்கங்கள் 'ஞானியின் சந்நிதியில்' என்ற பெயரில் சிறு நகரங்கள், பெரு நகரங்கள் என்று பல நகரங்களிலும் நடந்தது.

ஆண், பெண்; இளையவர், முதியவர் என்று எந்த வித்தியாசமும் இன்றி, சத்குருவின் அருளுரையைக் கேட்பதற்காக மக்கள் திரளாகக் கூடினர். தங்கள்

வாழ்க்கையில் அரிதாகக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள ஒவ்வொருவரும் விரும்பினர். அவர்கள் எதிர்பார்த்த விதமாகவே, அந்த மாலை நேரங்கள், அவர்கள் வாழ்க்கையிலேயே ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம்.

அப்படிப்பட்ட ஒரு மகாசத்சங்கம் கோவை மாநகரத்தில் நடந்த போது சத்குருவிடம் நகர மக்கள் கேட்ட கேள்விகளுக்கு சத்குரு அளித்த பதில்கள் இங்கு வழங்கப்படுகின்றன.

கேள்வியாளர்: *சத்குரு, இந்தியா ஆன்மீகத்துக்குப் பெயர் பெற்றது. மனிதகுல மேம்பாட்டுக்காகப் பாடுபட்ட பல ஆன்மீக குருமார்களையும் அது சந்தித்துள்ளது. இன்றும் எங்கள் மத்தியில் நீங்கள் இருக்கிறீர்கள். மேலும் பல குருமார்களும் உள்ளனர். இருந்தும் இந்தியா எதற்காக இப்படி ஒரு மோசமான சூழலில் உள்ளது?*

சத்குரு: *இந்தியா இன்றுள்ள நிலையில் இருப்பதற்குக் காரணம் இன்னமும் நீங்கள் இந்த நாட்டை கடவுளின் கைகளிலேயே விட்டு வைத்திருப்பதால்தான். இந்த நாட்டில், எதையும் நீங்கள் உங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அர்த்தமுள்ள வழியில் செயல்படும் வரை இந்த நாடு இப்படித்தான் இருக்கும். இல்லாவிடில் இன்னமும் மோசமாகும். உங்களுக்கு உண்மையிலேயே நாட்டைப் பற்றியோ, சமூகச் சூழலைப் பற்றியோ ஏதேனும் செய்ய வேண்டும் என்றால், நீங்கள் பொறுப்புடனும் கட்டுப்பாடுடனும் அர்த்தமுள்ள வழியில் செயல்பட வேண்டும் என்பது மிக மிக முக்கியமானது.*

நான் என் பதினைந்தாம் வயதில், "என்னிடம் உண்மையிலேயே ஈடுபாடு கொண்ட 100 மனிதர்களைக் கொடுங்கள். இந்த நாட்டையே மாற்றி விடுகிறேன்" என்று ஸ்வாமி விவேகானந்தர் சொல்லி இருந்ததைப் படித்ததாக நினைவு உள்ளது. அதைப் படித்தபோது நான் வெட்கப் பட்டேன். இவ்வளவு பெரிய நாட்டில், நம் எல்லோருக்கும் தேவையானதை அடையும் வகையில் செயல் படக் கூடிய ஈடுபாடு மிக்க 100 மனிதர்களை, அவரால் கண்டுபிடிக்க முடியவில்லையா? விவேகானந்தர் போன்ற மனிதர்கள் நம் வாழ்க்கையில் அன்றாடம் வருவதில்லை.

அப்படி ஒருவர் வந்த போது அவரால் 100 மனிதர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அதை விட வெட்கக் கேடு வேறு என்ன இருக்க முடியும்? வெட்கக் கேடு அவருக்கல்ல; நமக்கும் நாட்டுக்கும்தான். அன்றிலிருந்து, குறைந்த பட்சம், விவேகானந்தரை நினைவுகூரும் விதமாவது 100 ஈடுபாடு மிக்க மனிதர்களை உருவாக்க வேண்டும் என்று நினைத்தேன். இன்று என்னால் மாற்றங்களை நிகழ்த்தக்கூடிய ஈடுபாடு மிக்க நூற்றுக் கணக்கான மக்கள் நம்மிடையே இருக்கிறார்கள் என்று பெருமிதத்துடனும், மிக்க மகிழ்ச்சியுடனும் சொல்ல முடியும்.

மாற்றம் துவங்கி விட்டது; ஆனால் அது போதுமானதாக இல்லை. நூறு பேர் போதவில்லை என்பதை என்னால் பார்க்க முடிகிறது. இன்றைய சூழலில் உண்மையிலேயே ஈடுபாடு மிக்க லட்சம் மக்களாவது இருந்தால்தான் இந்த நாட்டில் பயனுள்ள எதுவும் செய்ய முடியும். இன்று இங்கு உங்கள் எல்லோரிடமும் நான் மன்றாடிக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், உங்களால் எந்த வகையில் முடியுமோ, வாழ்வில் எந்தச் செயலில் நீங்கள் இருந்தாலும் சரி, இந்நாட்டில் ஒரு அழகான சூழலை உருவாக்க உங்களை ஈடுபடுத்திக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்வதுதான்.

சுற்றியுள்ள சூழலைப் பார்த்துவிட்டு இவை எல்லாம் கடவுளின் சித்தம் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். உங்கள் வயிறு நிறைந்து இருப்பதால், உங்கள் வாழ்க்கை வசதியாக உள்ளதால் நீங்கள் இது போல் பேசலாம். உங்கள் வயிறு காலியாக இருந்தால் உங்கள் திட்டம், உங்கள் அடுத்த வேளை உணவைப் பற்றித்தான் இருக்கும். அப்படித்தானே?

இப்போது உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியை உங்களின் கைகளில் எடுத்துக்கொண்டு மற்றொரு பகுதியை வேறு எவரிடமும் விட்டுவிட முடியாது. எடுத்துக் காட்டாக, இந்நாட்டின் மிகப் பெரிய துன்பத்துக்குக் காரணம் அதிக மக்கள் தொகைதான். இது ஒன்றும் கடவுளின் சித்தம் அல்ல. பொறுப்பற்ற முறையில் நிகழும் இனப் பெருக்கம்தான் இதற்குக் காரணம். மருத்துவ அறிவியல் மற்றும் பல முறைகளின் மூலம் மரணத்தை ஓரளவு உங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு விட்டீர்கள். எப்போது மரணத்தை உங்கள் கட்டுப்பாட்டில்

கொண்டு வந்து விட்டீர்களோ, அப்போதே பிறப்பையும் உங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டாமா?

இப்போது, மரணத்தை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு பிறப்பைக் கடவுளின் பொறுப்பில் விட்டு விட விரும்புகிறீர்கள். அது வேலை செய்யாது. இரண்டையுமே கடவுள் பொறுப்பில் விட்டு விடுங்கள். பிறகு மீதியை அவர் பார்த்துக் கொள்வார். எனவே இந்த நாட்டில் நிகழும் பெருந் துன்பங்கள் கடவுளின் செயலல்ல. மனிதர்களின் உணர்ச்சியற்ற தன்மைதான் அந்தப் பெருந்துன்பமே. எதிலும் பொறுப்போ ஈடுபாடோ இல்லாத வாழ்க்கைமுறைதான் பெருந்துன்பம். அந்தப் பெருந்துன்பத்தைச் சரி செய்து விட்டால் அதன்பிறகு வேறு பெருந்துன்பம் எதுவும் ஏற்படாது.

கேள்வியாளர்: சத்குரு, இங்கு யாரோ ஒருவர், பல ஞானிகளிடம் தான் தீக்ஷை பெற்றதாகவும், அதில் சிலர் சமாதி நிலையை அடைந்தவர்கள் என்றும், ஆனாலும் தன் வாழ்க்கையில் எந்த மாறுதலும் ஏற்பட வில்லை என்றும் கூறினார். அவருடைய கேள்வி என்னவென்றால், உங்கள் யோக வகுப்புகளாவது அவருடைய வாழ்க்கையில் ஏதாவது மாறுதலைக் கொண்டு வருமா என்பதுதான்.

சத்குரு: பல ஞானிகளை சந்தித்தது மட்டுமே உங்களுக்கு ஒரு சிறப்புத் தகுதியை தந்து விடாது. உண்மையில் சொல்லப் போனால், அத்தனை பேரை சந்தித்தும் உங்களுக்கு ஒன்றும் நடக்க வில்லை என்பது உங்களுக்கு ஒரு இழுக்குதான். நீங்கள் எங்கு யாரிடம் சென்றிருந்தாலும் அதில் தோற்றுப் போயிருக்கிறீர்கள். யாராலும் உங்களை விழிப்புணர்வுக்கு நகர்த்த முடியவில்லை. ஏனெனில் அந்த இடங்களுக்கு எல்லாம் ஒரு பாறை போல போய் வந்திருக்கிறீர்கள். எனவே தயவுசெய்து அத்தனை ஞானிகளை சந்தித்ததை ஒரு தகுதியாக நினைத்துக் கொள்ளாதீர்கள்.

இதுவரை எந்த வழியும் உங்களுக்கு வேலை செய்யவில்லையென்றாலும், இந்த வழியை ஒரு முறை முயற்சி

> கடவுள், கடவுள் அருள் பெற்றவர் என்பதான பேச்சுக்கள் மக்களிடையே மிகவும் அதிகமாக இருக்கிறது. ஏனெனில் மனிதராக இருப்பதின் மகத்துவத்தை இன்னமும் அவர்கள் உணரவில்லை.
>
> ஆன்மீகம் என்பது அற்புத மனிதராக மாறுவது பற்றியல்ல, மனிதராக இருப்பதே அற்புதம்தான் என்பதை உணர்வது.

செய்யுங்கள். கடினமானவர்களுக்கு கடினமான வழிகள், மென்மையானவர்களுக்கு மென்மையான வழிகள் என்று பல வழிகளை நாங்கள் வைத்திருக்கிறோம். நீங்கள் ஒரு கடினமான பேர்வழி என்றால் உங்களுக்கென்றே சில வழிகள் வைத்திருக்கிறோம். எனவே இங்கு வந்து இன்னொரு முறை முயற்சித்துப் பார்க்கலாம். தயவுசெய்து வாருங்கள்.

கேள்வியாளர்: தற்போதைய சூழலில் ஞானோதயம் என்ற பெயரில் பல்வேறு சாத்தியங்களை முன்னிலைப்படுத்தி நிறைய குருமார்கள் உள்ளனர். அவர்களில் எனக்கேற்ற சரியான குருவை நான் எப்படி அறிந்து கொள்வது?

சத்குரு: *(சிரிக்கிறார்) நான் எந்த வழியையும் வலியுறுத்தவுமில்லை, உங்கள் குருவாக இருக்க விரும்பவுமில்லை. எந்த ஒரு குருவும் உங்களுடைய குருவாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படமாட்டார். சரியா? குரு என்ற வார்த்தையில், 'கு' என்றால் இருட்டையும் 'ரு' என்றால் அதை நீக்குபவர் என்றும் அர்த்தம். எனவே உங்கள் இருட்டை நீக்குபவர்தான் உங்கள் குரு. அவர் உங்கள் குருவாக இருக்க ஆசைப்படுவதால் உங்கள் இருட்டை நீக்கவில்லை. அவருக்குள் இருட்டை விரட்டத் தேவையான ஒளி இருப்பதால்தான் அவர் அந்தச் செயலைச் செய்கிறார். இப்போது உங்கள் கேள்வி என்னவென்றால், இவ்வளவு நிறைய குருமார்கள் உள்ளபோது யாரை நான் தேர்வு செய்வது? என்பதுதான். இந்தக் கேள்வி எப்படி உள்ளது என்றால் எந்த சோப்பை நான் உபயோகிக்க வேண்டும்? லக்ஸ், ஹமாம், நிர்மா? என்பது போல் உள்ளது. (சிரிக்கிறார்)*

எப்படியும் அதை முடிவு செய்ய வேண்டியது நீங்கள் அல்ல. பிரச்சினை என்னவென்றால், உலகத்தில் தற்போது பலர், மக்களுக்கு ஆறுதல் தேவைப்படுவதால் ஆறுதல் தரத் தயாராக இருக்கிறார்கள்.. உங்களுக்கு ஆறுதல் அளிப்பதாகக் கூறுபவர்களையும் மனதளவில் நிம்மதி தருபவர்களையும் குரு என்று அழைக்காதீர்கள். ஏனென்றால் அவர்கள் உங்களை மேலும் அறியாமையில்தான் மூழ்கச் செய்கிறார்கள். எப்போது உங்கள் குருவுடன் இருக்கும் போது மிகவும் வசதியாக உணர்கிறீர்களோ, அப்போது அவர் உங்கள் குருவாக இருக்க முடியாது. ஏனென்றால் அவர் உங்கள் எல்லைக்கு உட்பட்ட தன்மைக்கு ஆதரவாக இருக்கிறார், அச்சுறுத்தலாக இல்லை. நீங்கள் அவருடன் உட்காரும்போது உங்கள் எல்லைக்குட்பட்ட தன்மை எப்போது அச்சுறுத்தலுக்கு ஆளாகிறதோ, அவர் முன்னிலையில் எப்போது உங்கள் தன்மையில் ஒரு தேவையை உணர்கிறீர்களோ, அல்லது உங்கள் உடலில் ஒரு நடுக்கம் ஏற்படுகிறதோ, அப்போது அவர்தான் உங்கள் குரு. அவர் முன்னால், உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றே தெரிவதில்லை. ஆனால் எல்லாமே அப்போது மிகமிக இயல்பாக நிகழ்கிறது. அப்போது நிச்சயமாக அவர்தான் உங்கள் குரு.

இது நீங்கள் மதிப்பீடு செய்யக்கூடியது அல்ல. ஆனால் இப்போது அவ்வாறு பலர் இருப்பதால், மதிப்பீடு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் உங்கள் தொலைக்காட்சி

வழியாக உங்கள் வீட்டிற்குள் நுழைந்து எல்லாவற்றையும் தருவதாக உறுதி அளிக்கின்றனர். பல சமயங்களில் ஆறுதல் அளிக்கிறேன் என்ற போர்வையில் உங்கள் எல்லைக்குட்பட்ட தன்மையிலேயே உங்களைத் தொடர ஊக்கப்படுத்துகின்றனர். யார் உங்கள் எல்லைக்குட்பட்ட தன்மையை வளர்த்து அதற்குள் இருப்பதையே வசதியாக உணரச் செய்கிறாரோ அவர் நிச்சயமாக உங்கள் குருவாக இருக்க முடியாது. குரு என்பவர் உங்கள் தன்மையை அச்சுறுத்துபவராகவும், உங்களின் 'நான்' என்ற நினைப்பையே அழிப்பவராகவும் செயல்பட்டு, படைத்தவன் உங்களை எப்படி இருக்கவேண்டும் என்று நினைத்தானோ அப்படி மாற்றி விடுவார்.

முதலில் நீங்கள் குருவைத் தேடவோ, தேர்வு செய்யவோ தேவையில்லை. உங்களுக்குள் மிக ஆழமான தேடுதலை உருவாக்கிக் கொண்டால் ஒரு குருவே உங்களை நாடி வருவார். நீங்கள் குரு என்று எதை அழைக்கிறீர்களோ அது உங்களுக்குள்ளேயே நிகழும். ஏனென்றால் குரு என்பது ஒரு தனிநபர் அல்ல. குரு என்பவர் ஒரு குறிப்பிட்ட தன்மை, ஒரு சக்திநிலை. அது உங்களுக்குள் நிகழ்வதாகத்தான் இருக்க முடியும். அது நீங்கள் சந்திக்கும் ஒரு நபரோ, உங்களுடன் கைகுலுக்கும் ஒரு நபரோ, நீங்கள் வேண்டி வணங்கும் ஒரு நபரோ அல்ல. இது வேண்டும், அது வேண்டும் என்று நீங்கள் கைகட்டி யாசிக்கக்கூடிய நபரும் அல்ல. எப்போது குரு என்று குறிப்பிடப்படும் அந்தத் தன்மை, அந்தச் சக்திநிலை உங்களுக்குள் நிகழ்கிறதோ அப்போது அது உங்களை மூழ்கடித்து விடும். உங்களின் இப்போதைய எல்லைக்குட்பட்ட தன்மையை அழித்துவிடும். அதன் மூலம் நீங்கள் எல்லையற்ற தன்மையை அடைய முடியும். உங்களைப் படைத்தவன் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என நினைத்தானோ அப்படி நீங்கள் இருக்க முடியும்.

கேள்வியாளர்: *நீங்கள் சைவ மதத்தைச் சேர்ந்தவரா? எல்லாக் கடவுள்களையும், மற்ற எல்லோரையும் உங்கள் வழி ஏற்றுக் கொள்கிறதா?*

சத்குரு: *நீங்கள் சைவரா? வைஷ்ணவரா? என்று கேட்கிறீர்களா? நான் எப்படி என்றால் எந்தப் பிரிவுமே*

என்னை விரும்புவதில்லை(சிரிக்கிறார்). ஏனென்றால் எல்லாப் பிரிவினருக்குமே நான் ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கிறேன். முதலில், நீங்கள் ஏன் ஒரு பிரிவை அமைக்க விரும்புகிறீர்கள்? உங்கள் தன்மையில் உள்ள ஒரு குறைபாட்டினாலேயே உங்களுக்கு ஒரு பாகுபாடு, பிரிவு உருவாக்கும் எண்ணம் தோன்றுகிறது.

உங்களுக்குள் ஒரு முழுமையான தன்மை இல்லாததால்தான் நீங்கள், குடும்பம் சார்ந்த பாகுபாட்டையோ, மதம் சார்ந்த குழுவையோ, சாதி சார்ந்த பிரிவையோ அல்லது வேறேதேனும் சார்ந்த சங்கத்தையோ ஏற்படுத்த முயற்சி செய்கிறீர்கள். உங்களுக்குள் பொருள் பொதிந்த எதையும் நீங்கள் இன்னும் கண்டுபிடிக்க வில்லை. அதனால்தான் ஒரு குழுவை ஏற்படுத்த முயற்சி செய்கிறீர்கள். நீங்கள் யார் என்பதையோ, உங்கள் உயிர்த்தன்மையை அனுபவபூர்வமாக உணரவோ நீங்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எனவேதான் நீங்கள் ஒரு குழுவை உருவாக்குகிறீர்கள்.

மக்கள் தங்களுக்கு உள்ளே உள்ள தெய்வீகத் தன்மையை அனுபவபூர்வமாக உணர உதவி புரிவதே என் வாழ்க்கை மற்றும் செயல்பாடுகளின் குறிக்கோளாக உள்ளது. எப்போது நீங்கள் உங்களுக்கு உள்ளே உள்ள தெய்வீகத் தன்மையை உணர்கிறீர்களோ, அதற்குப் பின் உங்களுக்கு எந்தக் குழுவையும் சேரவேண்டிய அவசியம் இருக்காது. வாழ்க்கையில் உள்ள மற்ற உயிரினங்களிலிருந்து உங்களை வேறுபடுத்தி மனிதப் பிறவியாக அடையாளப் படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமும் இருக்காது. வாழ்க்கை ஏற்கனவே நிறைவான தன்மையில்தான் நடந்து கொண்டிருக்கிறது. அதில் நீங்கள் சைவராகவோ, வைஷ்ணவராகவோ, இந்துவாகவோ, முஸ்லீமாகவோ இருக்க வேண்டிய தேவையில்லை. நீங்கள் இங்கே உட்கார்ந்தால் இந்த உயிர்த்தன்மையே போதுமானது.

மக்கள் வெளிச் சூழலை வைத்து தங்களை மதிப்பிட முயற்சிக்கின்றனர். இவ்வாறு இருப்பது மக்களுக்கு எப்போதுமே போராட்டமாகத்தான் இருக்கிறது. அவர்கள் எப்போதுமே கல்வியின் மூலமோ, அணியும் ஆடைகளின் மூலமோ, அணிந்திருக்கும் நகைகள் மூலமோ அல்லது அவர்கள் எடுத்துச் செல்லும் அறிமுக அட்டைகள் மூலமோ தங்கள் வாழ்க்கைக்கு

கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு முன் அவருக்கு அந்த அனுபவம் நிகழ்ந்ததிலிருந்து, மனிதர்கள் தங்கள் உச்ச நிலையை உணர உதவுவது அவரது இயல்பாகவே அமைந்துவிட்டது.

“ஒரு மரம் தன்னுடைய மலர்கள் மூலம் நறுமணத்தைப் பரப்பி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதாக மற்றவர்கள் நினைக்கலாம். ஆனால் மரம் அப்படி ஏதும் நினைப்பதில்லை. நானும் அப்படித்தான், என் இயல்பே இப்படித்தான் இருக்கிறது.”

மேலும் மதிப்பூட்டவே முயற்சி செய்கின்றார்கள். உங்கள் இயல்பான தன்மையை நீங்கள் இன்னமும் அனுபவ பூர்வமாக உணராததால்தான் இதையெல்லாம் செய்கின்றீர்கள். அந்தத் திசையில் இதுவரை நீங்கள் முயற்சி செய்யவே இல்லை. எந்த ஒரு குழுவில் சேர்வதும் உங்கள் உள்நோக்கிய வளர்ச்சியை பின்னோக்கியே கொண்டு செல்கிறது. நீங்கள் ஈஷா சேர்ந்த குழுவை உருவாக்கினாலும் சரி. அதுவும் உங்கள் உள்நோக்கிய வளர்ச்சியை பின்னோக்கித்தான் எடுத்துச் செல்லும்.

நாங்கள் ஈஷா என்ற பெயரை மிகவும் கவனமாகத் தேர்வு செய்ததற்குக் காரணமே ஈஷா என்றால் வடிவற்ற தெய்வீகத் தன்மை என்பதுதான். நீங்கள் அதை அனுபவ பூர்வமாக உணரமுடியுமே தவிர உங்களை அதனுடன் அடையாளப் படுத்திக் கொள்ள முடியாது. எனவே என் மனதில் ஒரு குழுவுடன் சேர்ந்து கொள்வதோ அல்லது பல்வேறு குழுக்களுடன் சேர்ந்து கொள்வதோ தோன்றுவதே இல்லை. எப்போது நீங்கள் ஒன்றை உங்களிடம் இருந்து வேறுபடுத்திப் பார்க்கின்றீர்களோ அப்போதுதான் அவற்றை உங்களுடன் சேர்த்துக் கொள்ளும் கேள்வி உருவாகும். எப்போது நீங்கள் உங்கள் முன்னால் இருப்பதை உங்களில் இருந்து வேறுபடுத்தி உணரவில்லையோ அப்போது அதை உங்களுடன் சேர்த்துக் கொள்வது என்ற கேள்விக்கே இடமில்லை. ஆன்மீகத் தன்மையின் அடிப்படையே இதுதான். எப்போது நீங்கள் எல்லாவற்றையுமே உங்களில் ஒரு பகுதியாக அனுபவபூர்வமாக உணரத் தொடங்குகிறீர்களோ அப்போதுதான் நீங்கள் ஆன்மீகத்தை உணர்கிறீர்கள்.

இன்றைய விஞ்ஞானம் இந்த உலகம் முழுமையுமே ஒரே சக்திதான் என்பதை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துள்ளது. அதில் எந்த சந்தேகமும் இனி இல்லை. எந்த சக்தி தன்னை இங்கே மண்ணாக வெளிப்படுத்திக் கொள்கின்றதோ அதே சக்திதான் அங்கே மரமாக நிற்கின்றது, ஒரு நாயாக குரைக்கிறது, இங்கு உட்கார்ந்திருக்கும் நீங்களாகவும் இருக்கிறது, நீங்கள் வணங்கும் கடவுளாகவும் உள்ளது.

உங்கள் மதங்கள், நீங்கள் எந்த மதத்தில் இருந்து வந்தாலும் சரி, இதையேதான் கடவுள் எங்கும் இருக்கிறார் என்று உரக்கச் சொல்கின்றன. கடவுள் எங்கும் இருக்கின்றார் என்பதும், எல்லாமே ஒரே சக்திநிலைதான் என்பதும், ஒன்றுதானே, இல்லையா? இதைத்தான் ஐன்ஸ்டீன் 'E' என்று சொன்னார், நாம் 'ஈஷ்வரா' என்று சொல்கிறோம். அவை வேறுபட்டதல்ல.

எனவே எல்லாமே ஒன்று என்னும்போது நீங்கள் ஏன் அதை அனுபவபூர்வமாக உணர முடியவில்லை? மற்றவற்றுடன் ஒப்பிட்டு உணரும் ஐம்புலன்களின் தன்மைக்கு நீங்கள் அடிமையாக இருப்பதால்தான் அதை உங்களால் உணரமுடியவில்லை. இருட்டைப் பார்த்த பின்னர்தான் வெளிச்சத்தை உணர முடியும். அது கண்களின் இயல்பான தன்மை. சத்தமில்லாத சூழ்நிலையை நீங்கள் உணர்ந்தால்தான் இப்போது நீங்கள் சத்தத்தைக் கேட்க முடியும். என் உடல் வெப்பமாக இருப்பதால்தான் இந்தக் கம்பி குளிர்ச்சியாக இருப்பதை என்னால் உணர முடிகிறது. உங்கள் அனுபவத்தில் ஐம்புலன்களின் வாயிலாக உணரும் எது ஒன்றுமே வேறேதோ ஒன்றுடன் ஒப்பிடும் தன்மையில்தான் உள்ளது. எப்போது நீங்கள் ஐம்புலன்களின் உணரும் தன்மைக்கு அடிமையாகி விட்டீர்களோ அப்போது நீங்கள் இந்த உலகத்தை லட்சக் கணக்கான துண்டுகளாகத்தான் உணரமுடியும். நீங்கள் படைப்பின் ஒன்றுபட்ட தன்மையைப் பார்க்க முடியாது.

இப்போது நீங்கள் ஐம்புலன்களின் தன்மையைக் கடந்து விட்டீர்கள் என்றால் இயல்பாகவே எல்லாவற்றையும் உங்களில் ஒரு பகுதியாக உங்களால் அனுபவபூர்வமாக உணரமுடியும். எப்போது நீங்கள் எல்லாவற்றையும், எல்லோரையும் உங்களில் ஒரு பகுதியாக உணர்கிறீர்களோ அப்போது இங்கு நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்று உங்களுக்கு யாரும் சொல்லித் தர வேண்டியது இல்லை. நல்லவராக எப்படி இருக்க வேண்டும் என்றும் யாரும் சொல்ல வேண்டியது இல்லை. நீங்கள் பிறந்ததிலிருந்தே மக்கள் உங்களுக்கு நல்லவனாக இரு, அவருக்குக் கெடுதல் செய்யாதே, அவரைக் கொலை செய்யாதே, அவரிடம் திருடாதே என்றெல்லாம் நீதி போதனைகளைச் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள். நீங்கள் எப்போது மக்கள் எல்லாரையும் உங்களில் ஒரு பகுதியாக உணர்கிறீர்களோ அப்போது உங்களுக்கு மற்றவர்களின் நீதிபோதனை தேவையா? அதுதான் ஆன்மீகம்.

> “சத்சங்கம் என்பது, அன்பு-வெறுப்பு, பிடிக்கும் - பிடிக்காது போன்ற இருமை நிலைகளைத் தாண்டி செல்வதற்காக ஒரு ஞானியின் ஒளியில் திளைப்பதற்காக நடத்தப்படுகிறது.”

சத்குரு சத்சங்கத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். சத்குரு, கேள்விகளைப் பொறுத்து, சத்சங்கத்தில், தமிழ் மற்றும் ஆங்கிலம் 2 மொழிகளிலும் பேசுகிறார். சத்சங்கத்தில் பேசும்போது பகவத் கீதையையோ, உபநிஷதத்தையோ அல்லது வேறு புனிதநூல்களையோ மேற்கோள் காட்டுவதில்லை. அல்லது நீண்ட போதனைகளையும் தருவதில்லை. அல்லது உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இப்படித்தான் நடக்கவேண்டும் என்று திட்டங்கள் வகுத்துத் தருவதுமில்லை.

இருப்பினும், அன்று அவர் பேசும் போது, அனைவரும் மிக்க கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் வேடிக்கையாய் பேசிய போது அரங்கமே அதிர்ந்தது, அவர் எதிர்கேள்வி கேட்கும் போது அனைவருமே சிந்தனையில் ஆழ்ந்தனர். அவர்களுடைய முட்டாள்த்தனங்களை கேலி செய்த போது, கைதட்டி ஆரவாரம் செய்தனர். அவர்களுடைய மூட நம்பிக்கைகளையும், தவறான அபிப்பிராயங்களையும் தரைமட்டமாக ஆக்கியபோது நிராயுதபாணிகளாக நின்றனர்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக, அவர் கண் மூடி அமைதியாய் அமர்ந்த போது, அவர்களும் உள் நிலையில் தாக்குண்டவர்களாய், அந்த அமைதியான நிசப்தத்தில் சங்கமித்தனர். கண்ணீர் வழிந்தோட, காரணமே இல்லாமல் அனைவரும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் திளைத்தனர்.

சத்சங்கில் இருந்து விடை பெறும்போது, அனைவரும் மனம் லேசாகி, ஒரு புதிய வெளிச்சம் கண்டவர்களாக, ஒரு ஆழமான அனுபவத்தில் திளைத்தவர்களாக காணப்பட்டனர்.

உங்கள் உடல் சார்ந்த தன்மையைத் தாண்டி உணர்ந்தபின் நீங்கள் எந்தக் குழுவையும் சார்ந்தவராக இருக்கமுடியாது. எது எல்லா இடத்திலும் இருக்கிறதோ அதனுடன் நீங்கள் எதனை ஒப்பிட முடியும்? எப்போது அதை எதனுடனும் ஒப்பிட முடியாதோ அப்போது அதை ஐம்புலன்களின் துணை கொண்டு நீங்கள் உணர முடியாது.

ஒரு சமயம் தத்துவ மீன் ஒன்று இருந்தது. என்ன? தத்துவம் பேசும் மீனா? ஆம். ஒரு தத்துவ மீன்தான். எல்லோரும் தத்துவம் பேசுபவர்கள்தான். உங்களையே எடுத்துக் கொண்டால் நீங்களும் ஒரு பெரிய தத்துவவாதிதான். தெருவில் செல்லும் ஒரு குடிகாரனை நிறுத்தி நீ ஏன் குடிக்கிறாய் என்றால் அவன் குடிப்பதற்காக ஒரு பெரிய தத்துவ விளக்கத்தையே சொல்வான். ஒரு திருடனிடம் ஏன் திருடுகிறாய் என்றால் அவனிடமும் ஒரு தத்துவ விளக்கம் இருக்கும். இந்த உலகத்தில் ஒவ்வொருவரிடமும் தான் வாழ்க்கையில் செய்யும் எல்லா முட்டாள்தனங்களுக்குமே சரியான தத்துவ விளக்கம் இருக்கும். எந்த ஒரு தத்துவமும் இல்லாமல் உங்களால் உங்கள் முட்டாள்தனங்களைத் தொடர முடியாது. உங்களிடம் தத்துவம் இல்லையென்றால் உங்கள் முட்டாள்தனமும் நிலைத்து இருக்காது. ஒவ்வொரு ஷணத்திலும் விழிப்புணர்வுடன் இருப்பீர்கள். ஒவ்வொரு ஷணத்திலும் நான் ஏன் இதைச் செய்ய வேண்டும்? என்று சிந்திப்பீர்கள். ஆனால் தத்துவம் உங்களிடம் இருக்கும் போதெல்லாம் உங்களால் முடிவில்லாமல் முட்டாள்தனங்களைத் தொடரமுடியும்.

ஒரு நாள் தத்துவ மீன் ஒரு இடத்தில் மிகவும் சோகமாக பெரும் வருத்தத்துடன் உட்கார்ந்து இருந்தது. அந்த வழியில் சென்ற மற்றொரு மீன் "தத்துவவாதியே, ஏன் இப்படி உட்கார்ந்து இருக்கிறாய்? நீ மிக்க துயரத்தில் இருக்கிறாய். உன் துயரத்துக்கு என்ன காரணம்?" என்று அதனிடம் கேட்டது. தத்துவ மீன் "எனக்குத் தொல்லை கொடுக்காதே. நான் உண்மையாகவே சிக்கலில் இருக்கிறேன்" என்றது. "உனக்கு என்ன சிக்கல், என்னிடம் சொல்". தத்துவமீன் சொன்னது: "நான் செல்லும் இடமெல்லாம் மக்கள் சமுத்திரங்களைப் பற்றிப் பேசுகின்றார்கள். நான் சமுத்திரத்தைப் பார்க்க விரும்பி எல்லாத் திசைகளிலும் பயணம் செய்தேன். ஆனால் என்னால் சமுத்திரத்தைக் காண முடியவில்லை. அது எங்கே இருக்கிறது?."

இதில் பிரச்சினை என்னவென்றால் அந்த மீனும் சமுத்திரத்தின் ஒரு பகுதியாக இருப்பதுதான். அதுதான் சிக்கல். அது சமுத்திரத்திற்கு வெளியே இருந்தால் அருகில் சென்று சமுத்திரத்தைப் பார்த்திருக்கலாம். இப்போது அதுவே சமுத்திரத்தின் ஒரு பகுதியாக இருப்பதால் அதனால் சமுத்திரத்தை உணரமுடியவில்லை. இப்போது தெய்வீகத்துடனான உங்கள் பிரச்சினை, கடவுளுடனான உங்கள் பிரச்னை என்னவென்றால் நீங்கள் அதையே சுவாசிக்கிறீர்கள், அதையே சாப்பிடுகிறீர்கள், அதிலேயே நடக்கிறீர்கள். எனவே அது உங்களுக்குத் தெரியவில்லை. உங்கள் உணரும் தன்மை ஐம்புலன்களுக்கு உட்பட்டு இருப்பதால் அதற்கு ஒரு ஒப்பீடு, ஒரு பின்னணி தேவைப்படுவதால் அதை உங்களால் உணரமுடியவில்லை. எப்படி உணர்வது என்றும் தெரியவில்லை.

கேள்வியாளர்: மதம் என்ற பெயரில் பல சண்டை சச்சரவுகள் நடந்து விட்டன, எனவே இவ்வளவு மதங்கள் தேவையா? உலகத்திற்கே பொதுவாக ஒரு மதம் இருந்தால் போதாதா?

சத்குரு: எதற்காக உலக மதம் என்று ஒன்று இருக்க வேண்டும்? இந்த உலகில் 600லிருந்து 700 கோடி மக்கள் இருக்கிறார்கள். அதே போல் அவ்வளவு மதங்கள் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அப்போதுதான் அது உங்களுக்கு வேலை செய்யும். ஏனெனில் மதம் என்பது உள்நோக்கிப போவதற்கான ஒரு செயல்முறை. மதம் என்பது தெருவில் செயல் செய்வதற்கல்ல. நீங்கள் உங்களை உணர வைப்பதற்கான ஒரு கருவி அது. எனவே ஒரு மதம் அல்ல, பல நூறு கோடி மதங்கள் வேண்டும். அப்போதுதான் தனக்கு உகந்த கருவி எது என்று ஒவ்வொருவரும் தேடிக் கண்டுபிடிக்க முடியும். எனவே ஐந்தோ, பத்தோ அல்லது இலட்சம் மக்களோ கொண்ட ஒரு குழுவை மதம் என்ற பெயரால் உருவாக்குவது அர்த்தமில்லாதது.

கேள்வியாளர்: என்னை மிகவும் எரிச்சல் படுத்துபவரையும் நான் எப்படி நேசிப்பது?

சத்குரு: (சிரிக்கிறார்)உங்களை வெறுப்பேற்றும் மனிதரின் மேல் எப்படி பாசம் வைப்பதா? அவர்களை பிடித்திருப்பது

போல் நீங்கள் பாசாங்கு செய்ய வேண்டாம். அவர்கள் உங்களை எரிச்சலூட்டுகிறார்கள் என்பதை உணருங்கள். அவர்களின் இருப்பு, அவர்களின் செய்கைகள் ஏன் உங்களுக்கு எரிச்சலூட்டுகிறது? ஏனென்றால் நீங்கள் விரும்பும் வகையில் அவர்கள் இல்லை. இவ்வாறு நீங்கள் நினைக்கும் இக்கணத்தில், நீங்கள் கடவுளின் மேல் நம்பிக்கை வைத்திருப்பதாகவும் சொல்கிறீர்கள். நீங்கள் கடவுளை நம்பினால், அதே கடவுள் தான் நீங்கள் வெறுக்கும் அந்த நபரையும் படைத்தார் என்பதை உணர்கிறீர்களா? அந்த நபர் எப்படிப்பட்ட அற்புதமான படைப்பென்றால், உங்களை ஊடுருவி எரிச்சலூட்டும், அளவிற்கு தன்மை உடையவர்.(சிரிக்கிறார்). அப்படித்தானே? எனவே உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம்.

நீங்கள் ஒவ்வொன்றையும் இது சரி அது தவறு என்று முடிவெடுத்திருக்கிறீர்கள். நீங்கள் தவறு என்று நினைக்கும் ஒன்றை இன்னொருவர் செய்யும்போது அது உங்களுக்கு வெறுப்பைத் தருகிறது. உங்கள் முடிவுக்கு மாறான வழியில் ஒருவர் செல்லும்போது, அவர் உங்களுக்கு எரிச்சலைத் தருகிறார். அவர் மீது உங்களுக்குக் கோபம் ஏற்படுகிறது. பிறகு அவரை வெறுக்கிறீர்கள். அவரைத் தாக்கவும் கூட யோசனை வருகிறது. பல நேரங்களில் இப்படி உங்களுக்கு நடக்கிறது. ஏனெனில் இந்த உலகில் ஒவ்வொருவரும் உங்களைப் போலவே இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள். இந்த உலகில் ஒவ்வொருவரும் உங்களைப் போல் இருந்தால் முதலில் உங்களால் இந்த உலகில் இருக்க முடியுமா? உங்கள் சொந்த வீட்டிலேயே உங்களைப் போல் இன்னொருவர் இருந்தால் அந்த வீட்டில் மேற்கொண்டு உங்களால் வசிக்க முடியுமா?

இந்த உலகில் ஒவ்வொருவரும் அவரவர் வழியில் இருப்பதே மிகவும் சிறந்தது. இந்த உலகில் உள்ள அத்தனைக் கோடிப் பேர்களிலும் ஒருவர் கூட மற்றொருவரைப் போல் கிடையாது. ஒவ்வொருவரும் தனிக் குணாதிசயத்துடன் இருக்கிறார். உங்களோடு தற்போது இருக்கும் ஒருவர் மிகவும் தனித் தன்மையானவர், அவரைப் போல் யாரும் இதற்கு முன்பும் இல்லை, இப்போதும் இல்லை, இனிமேல் இருக்கப் போவதும் இல்லை என்று நீங்கள் முழுமையாக அறிந்தால், அவர் மீது உங்களுக்கு எப்படி எரிச்சல் வரமுடியும்?

ஒருவர் விளையாட்டு போட்டிகளில் பங்கு பெறுவது உடல் மற்றும் மன நலன்கள் பெற மிகவும் உதவியாக இருக்கும். இன்னும் சொல்லப் போனால், ஒரு விளையாட்டை எப்படி விளையாடுவது என்று தெரிந்திருப்பது ஆன்மீக வளர்ச்சிக்குக் கூட உதவும் என்று சொல்வேன்.

யாருமே ஒரு விளையாட்டில் அரைகுறையான ஈடுபாடுடன் பங்கேற்க முடியாது. ஒரு வேலையை அரை மனதோடு செய்யலாம், குடும்ப வாழ்க்கையில் கூட அரை மனதோடு ஈடுபடலாம், ஆனால் ஒரு விளையாட்டை முழு ஈடுபாட்டுடன்தான் விளையாட முடியும். இது தான் அதன் சிறப்பு.

முழுமையாய் ஈடுபட்டால் அது விளையாட்டாய் இருக்கும். இல்லையென்றால் அது துன்பம் தான். வாழ்க்கையும் கூட அப்படித்தான்.

நீங்கள் வாழ்க்கையின் உண்மைகளைப் புரிந்து கொள்ளவில்லை. அதனால்தான் நீங்கள் இன்னொருவரிடம் எரிச்சல் அடைய முடிகிறது. அனைவரும் படைத்தவனின் பல்வேறு படைப்புகள். ஒவ்வொரு படைப்பும் தனித்தனி குணாதிசயங்கள் கொண்டதாக இருக்கிறது. எந்த ஒரு படைப்பும் மற்றொன்று போல் இதற்கு முன்பு இருந்ததும் இல்லை, இனி இருக்கப்போவதும் இல்லை என்னும் வாழ்க்கை உண்மையை, ஆழமாகப் புரிந்திருந்தால் யார் உங்களை எரிச்சல் படுத்த முடியும்?

கேள்வியாளர்: நவீன வாழ்க்கையில் மன அழுத்தம் என்பது சாதாரணமாக இருக்கிறது. இதற்கு ஈஷா யோகா எப்படி உதவ முடியும்?

சத்குரு: (சிரிக்கிறார்) இந்தக் கேள்வி நவீன காலத்திற்கு மட்டும்தான் பொருந்தும் என்று நினைக்காதீர்கள். எப்போதெல்லாம் மக்களுக்கு தங்கள் உள்நிலை மீது கட்டுபாடு இல்லையோ அப்போதெல்லாம் அவர்கள் இயல்பாகவே மன அழுத்தத்தில் இருந்தார்கள். உங்கள் மனம், உங்கள் உடல், உங்கள் உணர்வுகள், உங்கள் சக்திநிலை உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. அதனால்தான் மன அழுத்தத்தில் இருக்கிறீர்கள். நிச்சயமாக, இந்த விஷயத்தில், ஈஷா யோகா உங்களுக்கு அற்புதமாக உதவி செய்யும்.

கேள்வியாளர்: மனதிற்கும் ஆத்மாவிற்கும் என்ன வித்தியாசம்?

சத்குரு: ஓ! (சிரிக்கிறார்) எந்த ஆத்மா பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்? எந்த ஆத்மாவை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள்? மனம் எப்படி செயல்படுகிறது என்பது பற்றி உங்களுக்கு ஓரளவு தெரியும். ஆனால் ஆத்மா பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? மற்றவர்கள் சொன்ன கதைகளைத்தான் இப்போது நீங்கள் பேசுகிறீர்கள். அப்பட்டமாக சொல்வதென்றால், உங்கள் அனுபவத்தில் இல்லாத ஒன்றை நீங்கள் பேசத் துவங்கும்போதே, உங்களுக்கு நீங்களே பொய் பேச ஆரம்பித்து விட்டீர்கள், அப்படித்தானே? உங்கள் வாழ்க்கை அனுபவத்தில் உண்மையாக இல்லாத, நடக்காத, ஒன்றை நீங்கள் பேசுகிறீர்கள் என்றால் அது பொய் பேசுவதாகத்தானே இருக்கிறது? எனவே ஆத்மா பற்றி பேசாதீர்கள்.

ஆத்மாவை நீங்கள் இப்போது பார்க்க முடியாது. அப்படியென்றால் ஆத்மா என்பதே இல்லையா? அது இருக்கிறதோ இல்லையோ, இப்போது அது உங்கள் அனுபவத்தில் இல்லை, அவ்வளவுதான். பொருள்தன்மைக்கு அப்பாற்பட்ட ஒன்றை நீங்கள் உணர விருப்பப்பட்டீர்கள் என்றால், ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட வாழ்க்கையை உணரக்கூடிய, புரியக்கூடிய ஒரு வழி உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதுதான் யோகாவே. பொருள் தன்மைக்கு அப்பால் உள்ளவற்றிலும் உங்கள் புரிதலை அதிகப்படுத்திக் கொள்வதுதான் யோகா. எப்போது பொருள்தன்மை தாண்டியவற்றையும் உங்களால் உணர முடிகிறதோ அப்போது நீக்ங்ள் ஆன்மீகத் தன்மையில் இருக்கிறீர்கள் என்று சொல்லலாம். மற்றபடி, அதையும் இதையும் நம்புவதாலோ, கோவிலுக்கோ மசூதிக்கோ மாதா கோவிலுக்கோ செல்வதாலோ, நீங்கள் ஆன்மீகத் தன்மையில் இருப்பதாக எடுத்துக் கொள்ள முடியாது. எப்போது உங்களுக்கு பொருள்தன்மை தாண்டியவற்றிலும் அனுபவங்கள் நிகழ்கிறதோ அப்போதுதான் உங்களுக்கு ஆன்மீகம் நிகழ்கிறது. அதற்கு நாம் பெயர் கொடுக்க வேண்டாம். இப்போதைக்கு அது நம் அனுபவத்தில் இல்லை என்று மட்டும் பார்த்தால் போதும். எனவே தற்போதுள்ள எல்லையையும் தாண்டி வாழ்க்கையை நான் உணர வேண்டும் என்னும் தாகத்தை மட்டும் இப்போதைக்கு நீங்கள் உருவாக்கிக் கொள்ளுங்கள். பிறகு இயல்பாகவே, அதற்கான வழி உங்களுக்கு கிடைக்கும்.

கேள்வியாளர்: தியானம் என்றால் என்ன? பூசை மற்றும் வழிபாட்டிலிருந்து அது எவ்வாறு வேறுபடுகிறது? சடங்குகள் செய்வதால் கிடைக்கும் பலன் போல் தியானம் செய்வதால் நாம் விரும்பியவாறு நல்ல நிலையை அடைய முடியுமா?

சத்குரு: கேள்வியிலேயே ஒரு தூண்டில் உள்ளது. 'நாங்கள் விரும்பும் நல்லவற்றை அடைய முடியுமா?' இதுதான் மக்களிடையே உள்ள பிரச்சினை. அவர்களுக்கு நல்ல நிலை மட்டும் போதாது. அந்த நல்ல நிலை அவர்கள் விரும்பியவாறும் வேண்டும். தற்போது உங்கள் வாழ்க்கையில் உள்ள ஒரே பிரச்னை என்னவென்றால் வாழ்க்கை நீங்கள் விரும்பியவாறு நடக்கவில்லை என்பதுதான். அதே நேரத்தில் நீங்கள் கடவுளை

நம்புவதாகவும் சொல்லிக் கொள்கிறீர்கள். உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டு என்றால், கடவுளின் விருப்பப்படிதான் உங்கள் வாழ்க்கையும் நடக்கிறது என்று அர்த்தம், இல்லையா? அப்படி என்றால் நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாகத்தானே இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் மகிழ்ச்சியாக இல்லை. உங்கள் நம்பிக்கைகள் மேலோட்டமாக இருப்பதால்தான் அவை உங்களுக்கு வேலை செய்யவில்லை.

இப்போது தியானம் என்றால் என்ன என்று பார்ப்போம். தியானம் என்பது உங்கள் உடல் மற்றும் மனம் ஆகியவற்றின் எல்லைக்கு அப்பாற்பட்டு இருத்தல். எப்போது நீங்கள் உடல் மற்றும் மனம் ஆகியவற்றுடன் இருக்கிறீர்களோ அப்போது உங்கள் துயரம் தவிர்க்க முடியாதது. இந்த நிலையிலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்றால் அது ஒரு விபத்தாகத்தான் இருக்கக் கூடும். ஏனெனில் உங்கள் உடல் மற்றும் மனம் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. அவை எப்போதுமே இருமை சக்திக்கு உட்பட்டது. எனவே நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதோ, துயரமாக இருப்பதோ, அமைதியாக இருப்பதோ, அமைதியற்றிருப்பதோ, எதுவும் உங்கள் வசம் இல்லை. வெறும் சூழல்தான் அதை முடிவு செய்கிறது.

உங்கள் உடலும் உங்கள் மனமும் நீங்கள் யார் என்பதை நிர்ணயிப்பதில்லை. தியானம் என்பது உடல் சார்ந்த நிலை, மனம் சார்ந்த நிலை ஆகிய இரண்டையும் கடந்து செல்வது, அல்லது, உடல் மற்றும் மனம் ஆகிய இரண்டுக்குமே அடிப்படையான, படைப்பின் மூலத்துடன் தொடர்பு கொள்வது. நீங்கள் எதைத் தெய்வீகம் என்று குறிப்பிடுகிறீர்கள்? எதை நீங்கள் அல்லா என்றும், ஷிவா என்றும், கடவுள் என்றும் மற்றெல்லாமாகவும் கூறுகிறீர்கள்? எது இந்தப் படைப்புக்கெல்லாம் அடிப்படையாக இருக்கிறதோ அதைத்தான் நீங்கள் கடவுள் என்று குறிப்பிடுகிறீர்கள்.

எனவே தியானம் என்பது, உடல், மனம் எதுவுமே இல்லாத நிலையில் இருப்பதாகும். உடல், மனம் எல்லாமே வெளியிலிருந்து சேகரிக்கப்பட்டவை. அவை வாழ்வின் மேலோட்டமான நிலைதான். நமது இருப்பின் வெளித் தோற்றமானது உண்மையில் பழத்தின் மேலுள்ள தோலைப்போன்றது. பழத்தின் மேலுள்ள



> என்னிடம், "ஏன் இந்த படைப்பு" என்று கேட்பதை விட, "இந்த படைப்பின் சுழற்சியில் இருந்து விடுபடுவது எப்படி?" என்று கேட்டால், அதற்கு என்னிடம் வழி உள்ளது, இந்த படைப்பையும் தாண்டி செல்வதற்கு என்னிடம் பல வழிகள் உள்ளன.

தோல், பழத்தை பாதுகாப்பாக வைத்திருக்கிறது. அதைத் தவிர்த்து அதற்கென்று தனிப்பட்ட தன்மையோ, பயனோ எதுவும் இல்லை. எடுத்துக்காட்டாக, நீங்கள் உட்கார்ந்திருக்கும் இந்தக் கணத்தில், இந்த உடல் மிகவும் முக்கியமானது. அதற்கு உண்ண வேண்டும். ஆடை வேண்டும். அலங்கரிக்க வேண்டும். வேறு பல வகைகளிலும் அதன் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். ஆனால் இந்த உடலினுள் உள்ள எதுவோ ஒன்று நீங்கள் இதுவரை உங்கள் அனுபவத்தில் உணராதது அது உங்கள் உடலை விட்டுச் சென்று விட்டால் பின்னர் யாரும் இந்த உடலைப் பற்றி ஆர்வம் காட்ட மாட்டார்கள். பழம்

வெளியே சென்று விட்டால் மேலுள்ள தோலைப் பற்றி எவரும் கவலைப்பட மாட்டார்கள். பழம் உள்ளே உள்ள வரைதான் மேலே உள்ள தோலை நாம் மதிக்கிறோம். ஆனால் இப்போது நீங்கள் தோலின் மேல் கொண்டுள்ள ஆழமான ஈடுபாட்டினால் உள்ளே உள்ள பழத்தையே மறந்து விட்டீர்கள். நீங்கள் வாழ்க்கையின் மேற்புறத் தோலை மட்டுமே சாப்பிட்டால், வாழ்க்கை எப்படி இருக்கும்? அது கசப்பாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் தோலின் பிரச்சினை என்னவென்றால் அது அங்கங்கே சில இடங்களில் இனிப்பாக உள்ளது. பழத்துடனான அதன் தொடர்பினாலேயே அந்த இனிப்புத் தன்மை அதற்கு வாய்த்துள்ளது. ஆனால் தோலிலே உள்ள அந்த இனிப்பான சிறு பகுதிகளைத் தேடுவதாகத்தான் தற்போது உங்கள் முழு வாழ்க்கையுமே உள்ளது.

எப்போது நீங்கள் தோலைக் கடந்து பழத்தைச் சுவைக்கிறீர்களோ, அப்போது உங்கள் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டுவிடும். நீங்கள் தோலுடனான தொடர்புடன் மட்டுமே நிறுத்திக் கொண்டால், வாழ்க்கையின் மேலோட்டமான அளவில்தான் உங்கள் வெளிப்பாடு இருக்கும்.

இப்போது உங்கள் ஐம்புலன் வழித் தொடர்புகள் மூலமே வாழ்க்கையை அனுபவ பூர்வமாக உணர்வதால் உங்கள் வாழ்க்கையின் முழு அனுபவமே உடல் தன்மை சார்ந்த அளவில்தான் உள்ளது. ஆனால் ஐம்புலன்கள் வழியாக உடல் தன்மை சார்ந்தவற்றை மட்டுமே உணர முடியும். அவற்றால் உடல் தன்மை சாராத வேறெதையும் உணர முடியாது.

நாம் இங்கு வெறும் உண்பதற்காகவும், உறங்குவதற்காகவும், இனப்பெருக்கம் செய்வதற்காகவும், பின்னர் மடிந்து போவதற்காகவும் மட்டுமே வந்திருந்தால், இத்தகைய கூர்ந்த அறிவுத்திறனோ அல்லது இத்தகைய உடலோ தேவையில்லை. நீங்கள் ஒரு பூச்சியாகவோ, புழுவாகவோ, விலங்காகவோ, பறவையாகவோ பிறந்திருந்தாலே இவற்றையெல்லாம் எந்த ஒரு மனிதப் பிறவியை விடச் சிறப்பாகச் செய்திருக்க முடியும். ஒரு மனிதப் பிறவியாக இவற்றில் நீங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட முடியாது.

ஒவ்வொரு மனிதருமே உடல் சார்ந்த தன்மை கடந்து, வாழ்க்கையைத் தனிப்பட்ட சாத்தியத்துடன் அறியவும் அனுபவிக்கவும் வாய்ப்பு பெற்றுள்ளார். தியானம் என்றால், வாழ்க்கையை ஐம்புலன்களின் எல்லைக்குட்பட்ட தன்மையைத் தாண்டி அறிதல், உடல் சார்ந்த தன்மையைத் தாண்டி வாழ்க்கையை உணர்தல், வாழ்க்கையை மேலோட்டமாக இல்லாமல் படைப்பின் பார்வையில் அறியவும் அனுபவிக்கவும் செய்தல்.

'நான் வழிபாடு செய்தால் மட்டும் போதாதா?' பெரும்பான்மையான நேரங்களில் 99% வரை உங்கள் அச்சம், மற்றும் பேராசையின் வெளிப்பாடாகவே உங்கள் வழிபாடு அமைந்து விடுகிறது. அதற்கும் தெய்வீகத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதற்கும் வாழ்வின் அடிப்படையான படைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அது வெறும் மேலோட்டமான நிகழ்வாகவே, உங்களிடம் இல்லாததை அடைவதற்காகவே, நீங்கள் தேடுவதையும் விரும்புவதையும் அடைவதற்காகவே, அவற்றைக் கடவுள் உங்களுக்குத் தருவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே உள்ளது. நீங்கள் உங்கள் வாழ்க்கையை இலவசமாகப் பெற்று விடலாம் என்று நம்புகிறீர்கள். அல்லது வாழ்க்கையை ஒரு சுமாரான விலை கொடுத்தாவது பெற்று விடலாம் என்று நம்புகிறீர்கள். ஆனால் அது வேலை செய்ய வில்லை. நீங்கள் அச்சத்தோடும் அமைதியற்ற மனத்தோடும் வாழ்கிறீர்கள்.

வழிபாட்டுக்கும் தியானத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு என்னவென்றால், வழிபாட்டின்போது நீங்கள் மட்டுமே பேச முயற்சி செய்கிறீர்கள். கடவுளைப் பேசவே விடுவதில்லை. நீங்கள் உங்கள் நண்பரின் வீட்டுக்குச் செல்லுங்கள். அங்கே உட்கார்ந்து, அரை மணி நேரத்திற்கு அவரை ஒரு வார்த்தையும் பேச விடாமல் நீங்களே தொடர்ந்து பேசிக் கொண்டிருங்கள். பிறகு என்ன நடக்கிறது என்று பாருங்கள். அடுத்த முறை அவர் வீட்டுக் கதவைத் தட்டினால் அவர் வீட்டில் இருந்தாலும் வீட்டில் இல்லை என்று அவரே பதில் சொல்லி விடுவார் (சிரிக்கிறார்). நீங்கள் பத்து விஷயங்களைப் பற்றிப் பேசினாலும், உங்கள் நண்பரைக் குறைந்த பட்சம் ஒரு

விஷயத்தையாவது பேச அனுமதித்தால் மட்டுமே அங்கே உறவு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. ஆனால் நீங்கள் மட்டுமே தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால், உங்கள் நண்பருக்கு உங்களுடன் எந்த வேலையும் இல்லை.

அதுதான் உங்களுக்கும் கடவுளுக்குமிடையே நடந்திருக்கிறது. கடவுள் அங்கே முழுமையாக இருந்தாலும் உங்களுடன் இருக்கும்போது அவர் இல்லாதது போல் காணாமல் போய் விடுகிறார். ஏனென்றால் நீங்களே எல்லாவற்றையும் பேசிவிடுவதால் அவர் உங்களைக் கண்டு பயப்படுகிறார். (சிரிக்கிறார்).

எனவே தியானம் என்பது உங்கள் முட்டாள்தனங்களை எல்லாம் நிறுத்தி விட்டுக் கேட்கத் துவங்குவதுதான். இது நீங்கள் பேசுவதற்கான நேரம் அல்ல. நீங்கள் நாள் முழுவதும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு நாளின் சில மணி நேரமாவது கடவுளைப் பேச அனுமதியுங்கள். கடவுள் என்னதான் சொல்கிறார் என்பதைக் கேட்போம்.

அத்தியாயம் 2

ஞானோதயம்

***ஞா**னோதயம் குறித்த மிகவும் கடினமான விஷயமே அது மிகவும் எளிமையாக இருப்பதுதான். ஞானோதயம் குறித்து ஏற்கனவே தானாக ஆர்வம் கொண்டவர்களுக்கும் சரி, அல்லது பலரும் பலவிதமாக சொல்வதைக் கேட்டு அதில் ஆர்வம் வந்தவர்களுக்கும் சரி, அல்லது ஒரு ஞானியை சந்தித்த பிறகு அதில் ஆர்வம் ஏற்பட்டவர்களுக்கும் சரி, அடுத்து தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெளிவாகத் தெரிவதில்லை. எப்படி ஒருவர் ஞானோதயம் அடைகிறார்? ஞானோதயம் பெறுவது எப்படி சாத்தியமாகிறது? அதற்கு எவ்வளவு நாள் தேவை? என்னாலும் அது முடியுமா? அது மிகவும் கடினமா? என்று பல கேள்விகள் அவர்களுக்கு எழுகின்றன.*

இக்கேள்விகள் அனைத்திற்கும் சத்குருவிடம் விடை கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்கள். இது இயல்புதான். ஏனெனில் அவர்தானே இவர்களிடம் ஞானோதயம் பற்றிய ஆர்வத்தைத் தூண்டியது? ஆனால் சத்குரு எப்போதுமே சொல்வார், "உங்கள் தற்போதைய அனுபவத்தில் இல்லாத ஒன்றை நான் சொன்னால் ஒன்று நீங்கள் என்னை நம்புவீர்கள்,

அல்லது நம்பாமல் இருப்பீர்கள். ஆனால் இரண்டுமே உங்களை உண்மைக்கு அருகில் கொண்டு செல்லாது".

கீழ்க்கண்ட உரையாடலில், ஞானோதயம் பற்றிய சில ஆழமான கேள்விகளுக்கு சத்குரு பதிலளிக்கிறார். ஞானோதய அனுபவம் இருந்தும்.., இல்லை அந்த அனுபவம் இருப்பதால் தானோ, என்னவோ, சத்குரு தன்னால் ஞானோதயம் பற்றி பேச முடியாது என்றும், அதைச் சுற்றி வேண்டுமானால் பேச முடியும் என்றும் கூறுகிறார். தங்களுக்கு அதிகம் பிடிபடாத இந்த ஞானோதயம் குறித்து, மக்கள் பல தீர்க்கமான கேள்விகளை சத்குருவிடம் கேட்டபோது அவர் அளித்த விளக்கமான பதில்கள் இங்கே வழங்கப்படுகின்றன.

கேள்வியாளர்: *ஞானோதயம் என்பது என்ன மாதிரியான உணர்வு நிலை?*

சத்குரு: *எப்படிப்பட்ட உணர்வு அது? (அருகிலிருந்த நீர் நிரம்பிய தம்ளரைக் காட்டி) இதில் தண்ணீர்தான் இருக்கிறது, வேறு மாயத்திரவமில்லை. இந்தத் தண்ணீரை அருந்திய அனுபவம் உங்களுக்கு இதற்கு முன்னர் ஏற்பட்டதேயில்லை, ஆனால் நான் அருந்தியுள்ளேன் என்பதாக வைத்துக்கொள்வோம். தண்ணீரை அருந்தினால் எப்படியிருக்கும் என்பதை உங்களுக்கு நான் எவ்வளவுதான் தெளிவாகக் கூறினாலும், உங்களுக்குப் புரிய வைக்க முடியுமா?*

நீர் அருந்திய அனுபவமே இல்லாத ஒருவருக்கு, அதை அருந்தினால் எப்படி இருக்கும் என்பதை உண்மையில் புரியவைக்க முடியாது, இல்லையா? அதுபோலத்தான் இதுவும். உங்கள் அனுபவத்தில் இல்லாத எது ஒன்றைப் பற்றி எவ்வளவுதான் தெளிவாக, வெளிப்படையாகப் பேசினாலும், அதைத் தவறாகத்தான் புரிந்துகொள்வீர்கள். எனவே ஞானோதயம் எந்தவிதமான உணர்வு நிலை என்பது பற்றி நாம் பேசவேண்டாம். ஞானோதயம் என்றால் என்ன என்பது பற்றி வேண்டுமானால் பேசலாம்.

நான் எதைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் காரணரீதியாக உங்களிடம் பேச வேண்டியுள்ளது. நீங்கள் ஞானோதயம் என்று எதைக் குறிப்பிடுகிறீர்களோ, அது காரணரீதியானதல்ல, அதையும்

கடந்தது. இங்கே நான் காரணரீதிக்கு அப்பாற்பட்டவற்றைப் பற்றிப் பேசினால் என்னோடு அமர்ந்திருக்கமாட்டீர்கள், இல்லையா? அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள் எழுந்துபோகவே விரும்புவீர்கள். நான் காரணரீதியாகப் பேசினால்தான் இங்கே அமர்ந்திருப்பீர்கள்.

ஞானோதயம் என்று எதைக் குறிப்பிடுகிறோம்? ஒவ்வொரு மனிதருக்கும் அனுபவம் என்பது பல நிலைகளில் இருக்கிறது. சில மனிதர்கள் உணவையும், தூக்கத்தையும் மட்டுமே அறிந்திருக்கிறார்கள். சிலர் உருவாக்கவும், சிலர் செயல்புரியவும், சிலர் கலைநுணுக்கங்களையும், சிலர் இசைப்பதையும் அறிந்திருக்கின்றனர். சிலர் போதைப் பொருள், பாலுணர்வு போன்ற விஷயங்களை அறிந்திருக்கின்றனர். ஆனால் நீங்கள் கவனித்துப் பார்த்தால், எப்போதுமே ஒரு மனிதர், தற்போது வாழ்க்கையை உணர்ந்திருப்பதைக் காட்டிலும் மேலும் கூடுதலாகத்தான் தேடிக் கொண்டிருக்கிறார். அவர் பணம் சேர்ப்பதில் விருப்பமுள்ளவரோ அல்லது உல்லாசமாக இருப்பதில் விருப்பமுள்ளவரோ அல்லது அவர் சொர்க்கத்திற்குச் செல்ல விரும்புபவரோ, அது முக்கியமல்ல. அவர் கோவிலுக்குச் செல்ல விரும்பினாலோ அல்லது மதுபானக் கடைக்குச் சென்றாலோ, எதுவாயிருப்பினும், தற்போது இருப்பதைக்காட்டிலும் சற்று அதிகமான வாழ்க்கை அனுபவத்தைப் பெறுவதற்கே முயற்சி செய்கிறார். அதுதான் ஒரே நோக்கமாக உள்ளது.

நீங்கள் வாழ்வின் அனுபவங்களை பகுதிகளாக மட்டுமே பெற்றிருக்கிறீர்கள். சில அனுபவங்கள் நன்றாக இருந்திருக்கும். சில அனுபவங்கள் கசப்பாக இருந்திருக்கும். ஆனால் ஒரு அளவிற்கு மட்டுமே அனுபவங்களைப் பெற்றிருக்கிறீர்கள். ஒருவேளை ஒட்டுமொத்த அனுபவங்களையும் அடைந்திருந்தால், அப்போது அந்த நிலையை ஞானோதயம் என்று நான் கூறுவேன். அனுபவத்தைப் பகுதியாகத் தேடாமல், பேராசைக்காரராகி ஒட்டுமொத்த அனுபவத்தையும் விரும்புகிறீர்கள். அறியக்கூடிய அனைத்தையும் இந்தக் கணத்திலேயே அனுபவங்களாக அடைய விரும்புகிறீர்கள். அப்படிப் பெறுவதில் நீங்கள் வெற்றி பெற்றுவிட்டால், அதுவே ஞானமடைதல் ஆகும்.



“யாரை வழிபடுகிறீர்கள் என்பது பொருட்டல்ல. எப்படி வழிபடுகிறீர்கள் என்பது கூட பொருட்டல்ல. எவ்வளவு ஆழமாக உணர்ந்து ஈடுபடுகிறீர்கள் என்பதுதான் முக்கியம்.”

அது மிகவும் கடினமானதா? இல்லவே இல்லை. ஞானோதயம் குறித்த கடினமான விஷயமே அது மிகவும் எளிமையாகவும், தெளிவாகவும் இருப்பதுதான். அது எங்கேயோ உயரத்தில், நிலவில் இருந்திருந்தால், இந்நேரம் எல்லோரும் அதனை அடைந்திருப்பார்கள். ஆனால் அது இங்கேயே, உங்களுக்குள்ளேயே இருப்பதுதான் பிரச்சினையாக உள்ளது. உங்களுடைய ஒட்டுமொத்த கவனமும் வெளியில் இருப்பதுதான் பிரச்சினையாக உள்ளது. உங்களின் கவனம் வெளியிலேயே இருப்பது ஏனென்றால், இப்போதைக்கு ஐம்புலன்களின் மூலமாக மட்டுமே உங்கள் வாழ்க்கையின் புரிதல் இருக்கிறது. நீங்கள் அறிந்திருக்கும் அனைத்தும் - கேட்டல், பார்த்தல், முகர்தல், சுவைத்தல் மற்றும் தொடுதல் - இவைகளின் மூலமாகத்தான் உங்களை அடைந்திருக்கின்றன.

நீங்கள் உலகத்தை அறிந்துகொள்வதற்கு இந்த ஒரு வழிதான் இருக்கிறது, இல்லையா?

இந்த ஷணத்தில் இந்த ஐம்புலன்களின் வாயில்களையும் நீங்கள் அடைத்துவிட்டால், உங்களுக்கு வாழ்க்கை அனுபவங்களோ அல்லது உங்களைப் பற்றிய உணர்வோ இருக்காது. நீங்கள் உறக்கத்தில் இருக்கும்போது இதுதான் நடக்கிறது. நீங்கள் உறக்கத்தில் ஆழ்ந்தும்கூட, இந்த உடல் உயிர்ப்புடன் இருக்கிறது. மனம் தன் வேலையைச் செய்கிறது. உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆயினும் ஐம்புலன்களும் அடைபட்டுவிட்டதால் உங்களுடைய அனுபவத்திலிருந்து மற்ற எல்லாமே விடுபட்டுள்ளன, அவ்வளவுதான். எனவே, இப்போதைக்கு இந்த ஐம்புலன்கள் மட்டும்தான் உங்களுடைய உணர்தலுக்கான வழிகளாக உள்ளன. மேலும், இயல்பாகவே ஐம்புலன்களும் வெளிப்புற விஷயங்கள் சம்பந்தப்பட்டவைதான்.

இந்த மின்விசிறியின் ஓசையை உங்களால் கேட்கமுடியும், சிறிய குண்டூசி விழும் ஓசையைக்கூட உங்களால் கேட்கமுடியும். ஒரு எறும்பு உங்கள்மீது ஊர்ந்தாலோ, இந்த மின்விசிறியிலிருந்து எழும் காற்றையோ உங்களால் உணரமுடியும். ஆனால், இந்த உடம்பினுள்ளே எவ்வளவோ செயல்பாடுகள் நடக்கிறதே, அவற்றை உணரமுடிகிறதா? இல்லை. உள்ளே எவ்வளவு இரத்தம் பாய்ந்து கொண்டிருக்கிறது, அதை உங்களால் உணரமுடிகிறதா? இல்லை. எனவே, புலன் உறுப்புகள் வெளிப்புற விஷயங்கள் சம்பந்தப்பட்டவைதான்.

நீங்கள் புரிந்துகொள்வது புலன்களைச் சார்ந்ததாக இருக்கிறது. எனவே உள்முகமாகத் திரும்புதலும், உள்நிலைப் பரிமாணங்களை அறிந்துகொள்வதும் அடையமுடியாதது போல் தெரிகிறது. உள்முகமாகத் திரும்புவதற்குச் சரியான கருவியோ, வாகனமோ, உங்களிடம் இல்லை. இது எப்படியென்றால், உங்களுக்கு ஒரு லட்டு சாப்பிடவேண்டுமென்று ஆசை. ஆனால் அதை உங்கள் காதுகளின் மூலம் சாப்பிட ஆசை. அதற்கு சாத்தியமே இல்லை, இல்லையா? வாயின் மூலமாகத்தான் சாப்பிடமுடியும், காதுகளின் வழியே சாப்பிட முடியாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, ஞானமடைதல் என்பது அந்த விதத்தில் கடினமானதுதான்.

நீங்கள் இரண்டு காதுகளையும் உபயோகித்தாலும் லட்டு உள்ளே போகாது. சிறிதளவு கூடப் போகாது. அந்த வகையில் அது கடினமானது என்றுதான் கூறுகிறேன். ஆனால், நீங்கள் சரியான வழியை உபயோகித்துவிட்டால் அது உள்ளே போய்விடுகிறது. மனிதர்கள், எது சரியான வழி என்று கண்டுபிடிக்கத் தேவையான முயற்சியை மேற்கொள்ளவில்லை. அவர்களுக்குத் தெரிந்தவழியில் போய்விட விரும்புகின்றனர். அது நடப்பதற்குச் சாத்தியமேயில்லை. மாட்டுவண்டியை வைத்துக்கொண்டு நிலவுக்குச் செல்ல விரும்புவதுபோல இது உள்ளது. யாராவது ஒரு சாட்டையைக் கொடுத்து, எருதுகளுக்குச் சாட்டையடி கொடுங்கள், நீங்கள் அங்கே சென்றடைந்துவிடுவீர்கள் என்றாலும், உங்களால் அடையமுடியாது. எருதுகள் வேண்டுமானால் அடிவாங்கி இறந்துபோகக்கூடும்.

'ஞானமடைதல்' இவ்வளவு கடினமாகிவிட்டதன் காரணம், அளவுக்கதிகமாய் அர்த்தமற்ற பிதற்றல்கள் இது பற்றிக் கூறப்பட்டுவிட்டன. அது குறித்து யாரும், எதுவும் கூறாமலிருந்திருந்தால், பல மனிதர்கள் அதற்கான வழியைக் கண்டுபிடித்திருப்பார்கள். அதுபற்றி அர்த்தமற்றவை ஏராளமாகக் கூறப்பட்டுள்ளதால் குழப்பம் உருவாகிவிட்டது. அதை என்னவென்று அறியாமலேயே மக்கள் அதுகுறித்து நிறைய விஷயங்களைப் படித்துவிட்டனர், எழுதிவிட்டனர். தாங்கள் எதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் அதுகுறித்து மிக அதிகமாய் பேசிவிட்டதால், மக்களை அது ஒரு முழுமையான குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது. உணராத மக்கள் குறைந்தபட்சம் தங்கள் வாயை மூடிக்கொண்டால், மனிதனுக்கே உரிய புத்திசாலித்தனம் அதனை அறிந்துகொள்ளும். எதனுடனும் அடையாளம் கொள்ளாமல், புத்திசாலித்தனம் செயல்படும்போது, உள்நிலைப் பரிமாணத்தினை அறிந்துகொள்வதென்பது இயல்பாக நடந்துவிடுகிறது. ஆனால் இப்போது அதற்கான சாத்தியம் இல்லாமலே போய்விட்டது. ஏனென்றால் ஒரு குழந்தை பிறந்த முதல் நாளிலிருந்து பெற்றவர்கள், அந்தக் குழந்தையை அவர்களுடைய குடும்பத்தோடும், அவர்களின் மூடத்தனமான மதிப்பீடுகளோடும், இன்னும் பிறவற்றோடும்

அடையாளப்படுத்திவிட கடுமையாக முயற்சிக்கின்றனர். ஆசிரியர்களோ இன்னும் பிரமாதமாக முயற்சி செய்கின்றனர்.

ஒரு நாள் ஒரு எருது, உணவு தேடி காட்டுக்குள்ளேயே சென்றுவிட்டது. பசுமையான, செழித்து வளர்ந்திருந்த புல்வெளியை கண்டு, அதை மேய்ந்தவாறு சில வாரங்கள் அங்கேயே தங்கிவிட்டது. ஒரு வேலையுமில்லாத எருது, தின்று, தின்று பெருத்துக் கொழுத்துப் போனது. காட்டு விலங்குகளை வேட்டையாட சிரமப்பட்ட ஒரு வயது முதிர்ந்த சிங்கம், இந்தக் கொழுத்த எருதினைக் கண்டது. ஒரு மானைக் கொல்வதைக் காட்டிலும் ஒரு எருதைக் கொன்றுவிடுவது எளிதானது என்பதை நீங்களே அறிவீர்கள். ஆகவே, சிங்கம் அதற்குரிய தருணம் பார்த்து, அந்த எருதின்மீது பாய்ந்து, கொன்று சாப்பிட்டுவிட்டது. வயிறு நிறைந்துவிட்ட திருப்தியில் அது கர்ஜனை செய்தது. அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த சில வேடர்கள், அந்த கர்ஜனையைக் கேட்டு, அதன் அடிச்சுவடுகளைக் கண்டுபிடித்து சிங்கத்தைச் சுட்டுவீழ்த்தினர். இந்தக் கதையின் பாடம் என்னவென்றால், நீங்களே தெளிவில்லாமல் இருக்கும்போது வாயைத் திறக்காமல் இருப்பதே நல்லது. ஆனால் எல்லா நேரங்களிலும், இந்த மக்கள் தங்கள் வாயைத் திறந்துகொண்டே இருக்கிறார்கள்.

தற்போது, அவர்கள் எதற்குமே உடனடித் தீர்வுகளை கூறி ஞானமடைவதின் சாத்தியத்தையே அழித்துவருகின்றனர். ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்ப்பதுதான் உங்கள் இயல்பு, இல்லையா? பிறகு ஏன் உங்களையே நீங்கள் ஆராயாமல் இருக்கிறீர்கள்? ஏன் என்றால், தங்களுக்குள் கடவுளைப் பார்க்காதவர்கள், உங்களையும் கடவுளை மேல்நோக்கிப் பார்க்கச் சொல்லிவிட்டார்கள். இந்தக் காரணத்தால்தான், ஞானோதயம் என்ற நிலை சொர்க்கத்திற்கு ஏற்றுமதியாகிவிட்டது அல்லது கடத்தப்பட்டுவிட்டது. மற்றபடி அது எளிமையானது, மிகவும் தெளிவானது.

நீங்கள் அர்ஜுனனைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். கிருஷ்ணன், எப்போதும் உண்மை, உண்மை என்றே கூறிக்கொண்டிருந்தபோது, அர்ஜுனன், நீ கூறிக்கொண்டே இருக்கும் இந்த உண்மை எங்கேதான் உள்ளது? ஒருமுறை

இங்கேயும் இல்லை, அங்கேயும் இல்லை என்கிறாய், இன்னொருமுறை இங்கேயும் இருக்கிறது, அங்கேயும் இருக்கிறது என்கிறாய், இது என்ன பிதற்றல்? அது எங்கே இருக்கிறது? எங்கே என்று கூறினால் நான் போய்க்கொண்டு வருகிறேன் என்றானாம். அவன் ஒரு க்ஷத்திரிய வீரன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகவே, கிருஷ்ணர் சிரித்துவிட்டுக் கூறினார், "அது உன் மூக்கின் நுனியில் இருக்கிறது". இதனால் தற்போது மூக்கின் நுனியில் தங்கள் கவனத்தை தீவிரப்படுத்தக் கற்றுக்கொடுக்கும் நிறைய யோகப் பயிற்சிப்பள்ளிகள் இருக்கின்றன. (சிரிக்கிறார்)

உங்கள் மூக்கு நுனியில் கவனத்தைக் குவிக்க நீங்கள் முயற்சி செய்து பாருங்களேன். இரண்டு நிமிடங்களுக்குள், உங்களுக்குத் தலைவலி வேண்டுமானால் வரும், ஞானோதயம் வராது. எனவே, கிருஷ்ணர் கூறுவதெல்லாம், அது மிகவும் தெளிவாக உள்ளது என்பதைத்தான். பிரச்சினை என்னவென்றால், அது இங்கே இருக்கிறது (உள்ளே என்று சுட்டிக்காட்டி) ஆனால் உங்களுடைய புலன்கள் அங்கே உள்ளன (வெளியே சுட்டிக்காட்டி). அதனால் சிறிதளவு உள்முகமாகத் திரும்ப வேண்டியதுதான் உங்களுக்குத் தேவை.

கேள்வியாளர்: பைபிளில் இருக்கிற ஒரு வரி 'அதிகமானோர் அழைக்கப்படுகிறார்கள், ஆனால் ஒரு சிலரே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்'. இது ஆன்மீகப்பாதையில் மிகவும் நியாயமற்றதாகத் தெரிகிறது. ஜனநாயகத்துக்குப் புறம்பான முறையாகத் தெரிகிறது.

சத்குரு: ஒரு சிலர்தான் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்பதை விட ஒரு சிலர்தான் அப்பாதையை ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் கூறமுடியும். எனவே நான் இப்படித்தான் கூறுவேன், அநேகர் அழைக்கப்படுகின்றனர், ஆனால் ஒரு சிலர் மட்டுமே அந்த அழைப்பை ஏற்கின்றனர். (சிரிக்கிறார்).

இதற்காக எத்தனை அடிகள் நான் எடுத்து வைக்க வேண்டுமென மக்கள் என்னிடம் கேட்கிறார்கள். எடுத்து வைக்க வேண்டியது ஒரு அடிதான், ஒரு அடி மட்டும்தான் என்று நான் கூறுவதுண்டு. நீங்கள் வெளியுலகை நோக்கி கோடானுகோடி அடியெடுத்து வைத்திருக்கிறீர்கள்.

"உயிருடன் இருப்பது ஒன்றும் சிறிய காரியம் அல்ல. இது மிக அற்புதமான விஷயம். இவ்வுலகத்தில் மட்டுமல்ல, இந்த முழு பிரபஞ்சத்திலேயே கூட."

உள்நோக்கி ஒரே ஒரு அடி எடுத்து வையுங்கள், அதுவே போதுமானது. ஆனால், இந்தத் திசையிலிருந்தே உங்களால் உள்நோக்கி அடியெடுத்து வைக்கமுடியாது. நீங்கள் திரும்பி நின்று, பிறகுதான் உள்நிலை நோக்கிச் செல்லவேண்டும். ஆனால், நீங்கள் வெளியில் மூலதனங்களைச் செய்துவிட்ட காரணத்தினால், உள்நிலைநோக்கித் திரும்புவதற்கு உங்களுக்கு விருப்பமில்லாமல் இருக்கிறது. உள்நோக்கி திரும்பினால், வெளியிலுள்ளவற்றை நீங்கள் இழந்துவிடமாட்டீர்கள். அது அநாவசியமான பயம். மறுபடியும் கூறுகிறேன், ஆன்மீகம் குறித்த தவறான புரிதல்கள்தான் இந்த பயத்தை ஊட்டி வளர்த்துள்ளது.

நீங்கள் ஆன்மீகவாதியாக மாறினால், எல்லாவற்றையும் விட்டு விலகிவிடுவீர்கள் என்று மக்கள் எப்போதுமே கூறி வந்திருக்கிறார்கள். மேலும், ஆன்மீகத்திற்கு மாறிவிட்டால் நீங்கள் மும்பையில் இருக்கமுடியாது, இமயமலையின் குகையில் எலிகளுடன்தான் இருக்கவேண்டும் என்றெல்லாம் கூடக் கூறுவர். உள்நிலை நோக்கி அடியெடுத்து வைப்பதற்கும், இமயம் அல்லது மும்பையில் இருப்பதற்கும் சம்பந்தமில்லை. இருப்பிடம் இமயமா அல்லது மும்பையா என்பது வெளிப்புற விஷயம், அது உங்கள் ஆன்மீகத்தன்மையில் எந்த மாற்றத்தையும் நிகழ்த்தாது. நீங்கள் மலைகளில் வாழ விரும்புவது, உங்களைப் பொறுத்த விஷயம். அதில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. அதேபோல் நீங்கள் மும்பையில் வாழ விரும்புகிறீர்களா, அதுவும் உங்களைப் பொறுத்த விஷயமே. அதிலும் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு, இல்லையா? இந்த தவறான புரிதல் ஏன் ஏற்பட்டது என்றால், இந்தியாவில் விவாகரத்து என்ற ஒன்று இல்லாமல் இருந்ததால் வெகுகாலமாகவே குடும்பத்தை விட்டு விலக விரும்பிய எத்தனையோ மக்கள், அதற்கு ஆன்மீகவழியில் செல்வதை ஒரு காரணமாக்கிக் கொண்டனர் (சிரிக்கிறார்). இல்லறத்தை விட்டு விலகுவதற்கு வேறு எந்த கௌரவமான காரணத்தையும் கூற முடியவில்லை. எனவே வெகுகாலமாகவே, நிறைய பேர் இந்தக் காரணத்தையே சமாதானமாகச் சொல்லி வந்துள்ளனர்.

கேள்வியாளர்: ஆனால், எனக்குள்ளே நான் நன்றாக இருப்பதாகத் தெரியவில்லையே?

சத்குரு: இதுவரை உங்களுக்குள்ளே நீங்கள் பார்க்கவே இல்லை. இப்போது உங்களது உள்ளே என்று நீங்கள் அழைப்பது உங்களுடைய மனதை மட்டுமே. உங்கள் மனம் என்பது உள்ளே இருப்பதல்ல. உங்கள் மனம் என்பது சமூகத்தின் குப்பைத்தொட்டி தான், இல்லையா? உங்கள் மனதில் இருக்கும் ஒவ்வொன்றும், வெளியிலிருந்து நீங்கள் சேகரித்தது. எனவே உங்கள் மனம் என்பது உள்ளே இருப்பதல்ல, வெளியில் இருப்பது.

கேள்வியாளர்: நாங்கள் எதை செய்ய வேண்டும் என்பதை அந்த மனம் கொண்டு தானே ஆராய்கிறோம்? இப்பொழுது நீங்கள் பேசுவதை கேட்க வரவேண்டுமென்று நான் தான் முடிவு செய்தேன். இங்கு வராமலிருக்க வழி இருந்தும் அதை நான் ஏற்கவில்லை. அப்படியென்றால் எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் எதைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று நாங்கள் பிரித்தறிகிறோம் தானே?

சத்குரு: ஆமாம், ஆனால் உங்களுக்குள் எதனைக் கொண்டுசெல்வது என்பது பற்றிய தேர்வு உங்கள் வசம் இல்லை. எதைப் பயன்படுத்திக் கொள்ளலாம், எதைப் பயன்படுத்தக் கூடாது என்பதைப் பற்றிய தேர்வு உங்கள் வசம் இருக்கிறது, ஆனால் உண்மையில் அந்தத் தேர்வு கூட உங்கள் வசம் இல்லை. ஏனென்றால், ஏற்கனவே உங்களுக்குள் சென்றவற்றைப் பொறுத்துதான் அந்தத் தேர்வும் இருக்கிறது. அதனால், உண்மையான தேர்வாக அது இல்லை. உங்கள் தலைக்குள் இருக்கும் விஷயங்களும், உங்கள் உடலில் இருக்கும் விஷயங்களும் இரண்டுமே வெளியிலிருந்து சேகரிக்கப்பட்டவை.

எப்படி இந்த உடம்பைச் சிறுகச்சிறுக சேகரித்தீர்கள்? உணவைச் சாப்பிட்டுத்தான், இல்லையா? உங்கள் மனதில் உள்ள விஷயங்களும்கூட நீங்கள் சேகரித்தவைதான். அவை இதுவரை ஐம்புலன்கள் மூலமாக உங்களுக்குள் இடம்பிடித்த எண்ணப் பதிவுகள் தானே தவிர வேறெதுவும் இல்லை. மேலும் இதைச் சேகரிப்பதற்கு நீங்கள் உபயோகிக்கும் ஐம்புலன்கள் என்னும்

வாயில்கள் நம்பத் தகுந்ததே அல்ல. கண்ணால் காண்பது நம்பக்கூடியது என மக்கள் நம்பி வருகிறார்கள். அதையும் நம்பமுடியாது என்றுதான் கூறுகிறேன். ஒவ்வொருவரும் தாங்கள் எதைக் காண விரும்புகிறார்களோ அதைத்தான் காண்கின்றனர் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும், இல்லையா? ஒவ்வொருவரும் அங்கே என்ன இருக்கிறதோ அதைக் காண்பதில்லை. ஒவ்வொருவரும் அவர்கள் எதைக் காண வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதைத்தான் காண்கின்றனர். அப்படிப்பார்த்தால் நம் பார்வை கூட முற்றிலும் நம்பத் தகுந்ததல்ல.

மிகவும் அடிப்படையானதும்கூட ஏன் இப்படி கேள்விக்குரியதாகிறது? உயிர் பிழைத்திருக்க உதவுவதற்காகத்தான் புலன் உறுப்புகள் படைக்கப்பட்டுள்ளன. அவை யாவும் பிழைப்பிற்கான சாதனங்கள்தான். அதையும் கடந்து, ஞானமடைதல் பற்றிய தேடல் துவங்கிவிட்டால், அந்தத்தேடலுக்கு புலன் உறுப்புகள் உபயோகப்படாது. உங்கள் புரிதல் வேறொரு பரிமாணத்தில் இயங்க வேண்டியுள்ளது. எனவே ஆன்மீகத் தன்மையின் முழு செயல்பாடும் உங்களுடைய புரிதலானது மேம்பாடு அடைவதில்தான் உள்ளது. துரதிருஷ்டவசமாக நான் ஆன்மீகம் என்ற சொல்லை உபயோகித்தாலே, மக்கள் ராம்ராம் என்று சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்றோ, கோயில், தேவாலயம், மசூதி என்று போய் உட்கார்ந்துகொள்ள வேண்டுமென்றோ, உணவு உண்பதையோ, உடை உடுத்துவதையோ விட்டுவிட வேண்டுமென்றோ அல்லது வேறெதையாவது அவர்கள் விட்டுவிட வேண்டியிருக்குமோ என்று நினைத்துவிடுகிறார்கள். ஆனால் ஆன்மீக செயல்பாடு என்பது அதைப்பற்றி அல்ல. அது உங்கள் புரிதலை மேம்படுத்துவது பற்றியது.

அதை அறிந்துகொள்வதற்கான ஒரே வழி, உங்கள் புரிதலை உயர்நிலைக்குக் கொண்டு செல்வதுதான். மற்றது அனைத்தும் வெறும் நம்பிக்கைதான், இல்லையா? அந்த நம்பிக்கைகளை தூக்கி வெளியில் வீசுங்கள். அது எதற்கும் பயனற்றது. சற்று அதிகமாக நாங்கள் முயற்சி செய்தோமானால் எந்த இயல்பற்ற கட்டுக்கதையையும் உங்களை நம்ப வைத்துவிட முடியும். இதை

> அனைவருமே கடவுளை நேசிக்கலாம், ஏனெனில் அவர் உங்களிடம் ஏதும் கேட்பதில்லை. ஆனால் உங்கள் அருகில் இருப்பவரை நேசிக்க வேண்டுமென்றால் உயிரே போகிறது. அதற்கு அதிக துணிச்சல் தேவைப்படுகிறது.

உங்கள் குழந்தை பருவத்திலிருந்தே ஆரம்பித்தோமானால், சொல்லவே வேண்டாம். இல்லையா? உங்களை சுற்றி நீங்கள் இதுவரை பார்த்தது, இதை உங்களுக்கு உணர்த்தி இருக்கிறதல்லவா?(சிரிக்கிறார்).

எனவே, நீங்கள் நம்பிக்கொண்டிருப்பது எதுவாக இருந்தாலும், உயிர்த்தன்மையின் பார்வையில் அது பயனற்றது. அவை சமூகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம். ஆனால் நீங்கள் ஞானோதயம் பற்றிப் பேசும்போது, சமூக

வாழ்க்கை அல்லது சொந்த வாழ்க்கை பற்றிய பரிமாணம் குறித்துப் பேசவில்லை. அக வாழ்க்கையின் பரிமாணங்களைக் குறித்தே பேசுகிறீர்கள். நீங்கள் திறந்த மனதுடன் இருக்க வேண்டுமென்றால், வாழ்க்கையை அது எப்படி இருக்கிறதோ அப்படியே அறிந்துகொள்ள வேண்டுமென்றால், அதற்கான ஒரே வழி உங்களின் புரிதலை மேம்படுத்திக் கொள்வதுதான். அதுபற்றி சிந்திப்பதோ, அதை தத்துவமாக்குவதோ, நம்புவதோ, விவாதிப்பதோ சரியான வழிகள் அல்ல. மேம்பட்ட புரிதலுடன் மட்டுமே நீங்கள் உயிர்த்தன்மையை உள்வாங்க முடியும், அறிந்துகொள்ள முடியும், வேறுவழி இல்லை.

ஆகவே, ஞானமடைதல் என்றால், உச்சபட்ச புரிதல். உங்களுடைய புரிதல் முழுமையான நிலையில் இருந்தால், உள்வாங்க முடிந்த ஒவ்வொன்றையும் உள்வாங்கி, உயிர்த்தன்மையை அதன் முழுமையில் உணரலாம். அதைத்தான் நாம் ஞானமடைதல் என்று கூறுகிறோம்.

அது எப்படிப்பட்ட உணர்வைத் தரும் என்று நீங்கள் கேட்டீர்கள். அதை நேரிடையாக விளக்கமுடியாததால், அதை சுற்றி விவரிக்க முயற்சி செய்கிறேன். இப்போது, நீங்கள் இங்கே அமர்ந்தால், உங்களுடைய உடல் இங்கிருக்கிறது, உங்களுடைய மனம் என்பது எங்கோ வெளியில் இருக்கிறது. நான் என்று கூறப்படுவது எப்போதும் இந்த இரண்டிலிருந்தும் விலகி இருக்கிறது. உங்களால் உடலினை உபயோகிக்க முடியும், மனதினை உபயோகிக்க முடியும். ஆனால் நான் எனப்படுவது எப்போதுமே இந்த இரண்டிலிருந்தும் சற்றே விலகி இருக்கும்.

வாழ்க்கை அனுபவங்களைப் பார்க்கும்போது, தற்போது உங்களுடைய உடல் மற்றும் மனம் இரண்டும் உங்களை மிகவும் கட்டுப்படுத்துகிறது. ஆனால் இங்கே, இவ்வுலகில் உங்கள் இருப்புக்கான ஒரே வாய்ப்பும் உங்களுடைய உடலும் மனமும் தான். எந்த ஒரு மனிதருக்கும் அவர் அறிந்துள்ள துன்பங்களின் காரணமாக அவரின் உடலும், மனமும்தான் இருக்கிறது, இல்லையா? வேறுவகையான துன்பங்கள் இருக்கிறதா? இந்த பூமியில் மனிதர்களின் எல்லாத் துன்பங்களையும் மனம்தானே உற்பத்தி செய்கிறது? அப்படித்தானே? உடல் மற்றும் மனத்திலிருந்து நீங்கள் விலகி இருந்தால், அவை வேறு, நான் வேறு, என்ற

தெளிவான அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டுவிட்டதென்றால், நீங்கள் துன்பத்திலிருந்து விடுபட்டுவிடுவீர்கள்.

துன்பம் கொள்வதைப் பற்றிய அச்சம் உங்களிடமிருந்து விலகிவிட்டால், நீங்கள் இங்கே நன்றாக வாழ்வீர்கள் அல்லவா? இப்போதைக்கு நீங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும், அரைகுறையாகத்தான் உள்ளது. எனக்கு என்ன நடந்துவிடுமோ என்ற அச்சம் உங்களுக்கு இருந்துகொண்டே இருக்கிறது. பெரும்பாலான மக்கள், அவர்களின் 90 சதவீத வாழ்க்கையை பாதுகாப்பு உணர்விற்கே அர்ப்பணித்து இருக்கிறார்கள் என்றே நான் கூறுவேன். அவர்களின் வாழ்க்கையில் அவர்கள் எடுத்திருக்கும் ஒவ்வொரு அடியும், ஆனந்தம், அன்பு ஆகியவற்றைத் தேடியா இருந்திருக்கிறது? அது எப்போதும் ஒரு பாதுகாப்பைத் தேடிதானே இருந்திருக்கிறது?

நீங்கள் எப்போதுமே பாதுகாப்பைத் தேடுபவராகவே இருக்கும்போது, நீங்கள் மரணத்தைத் தேடுபவர் ஆகிறீர்கள். ஏனென்றால் வாழ்க்கை பாதுகாப்பானதே அல்ல. நீங்கள் எந்தநிலையில் இருக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல. எவ்வளவுதான் நீங்கள் காப்பீடு செய்திருந்தாலும், எவ்வளவு ஆயிரம் மக்கள் உங்களைச் சூழ்ந்து இருந்தாலும், நாளை காலையில் நீங்கள் இறந்துபோக நேரலாம். நாம் அதனை விரும்பவில்லை என்றாலும் அது நடக்கமுடியும், இல்லையா? இது பல பேருக்கு நடந்து கொண்டிருக்கிறது என்றால், நாளை காலை உங்களுக்கும், எனக்கும் கூட நேரலாம் இல்லையா? நீங்கள் உடல்தன்மையிலேயே நிலைத்திருக்கும்வரை, உங்கள் உணரும் தன்மை உடல் மற்றும் மனம் என்ற எல்லைகளுக்குள் இருக்கும்வரை, அச்சத்துடன் வாழ்வதும், எப்போதும் பாதுகாப்பு தேடி ஓடிக்கொண்டிருப்பதும் தவிர்க்க முடியாதது. உங்களால் அப்படித்தான் வாழமுடியும். எனவே, உயிர்த்தன்மையை நீங்கள் உடல், மனம் என்னும் எல்லையைக் கடந்து உணரும்போது, உடல் மற்றும் மனம் சார்ந்த உணர்வுகள் உங்கள் வாழ்வில் இடம் பெற்றாலும், அவை உங்களை பாதிக்காது. உடலையும் மனதையும் நீங்கள் பயன்படுத்தமுடியும், அனுபவிக்க முடியும், ஆனால் நீங்கள் அதுவாகவே ஆகிவிடமாட்டீர்கள். இந்த விடுதலையை நீங்கள் அடைந்துவிட்டால், நீங்கள் எப்படி வாழ்வீர்கள்

என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? கடிவாளமற்ற வாழ்க்கை, இல்லையா? நீங்கள் விரும்பும்விதமாக வாழ்க்கையுடன் நீங்கள் விளையாடினாலும், அது உங்கள் மீது ஒரு சிறு கீறலைக்கூட ஏற்படுத்தாது.

ஞானமடைதலைப் பற்றிய இந்த விளக்கம் தெளிவாக உள்ளதா?

கேள்வியாளர் : *இது கேட்பதற்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஒருவர் ஞானமடைந்துவிட்டால் பிறகு ஒவ்வொருவரையும் பார்க்கும்போது, இது எல்லாமே மாயை என்றும் மாயத்தோற்றம் என்றும்தான் பார்ப்பாரா? மேலும் நான் நேசிக்கும் ஒருவர் ஞானமடைந்துவிட்டால், பிறகு அவர் என்னைப் பார்க்கும்போது ஒரு ஆவி போலவும் மாயை என்றும்தான் உணர்வாரா?*



சத்குரு: *என்னைச் சுற்றியிருப்பவர்களை நான் நேசிக்கிறேனா என்பதைப் பற்றியும், அவர்களிடம் மற்றவர்கள் காட்டும் ஈடுபாட்டைவிட நான் காட்டும் ஈடுபாடு அதிகமா குறைவா என்பதைப் பற்றியும் நீங்கள் அவர்களிடம் கேட்டுப்பாருங்கள். ஆயிரக்கணக்கான மக்களுடன், நான் மிகவும் ஆழமான, மிகத் தீவிரமான ஈடுபாடுடன் இருக்கிறேன்.*

நீங்கள் துன்பத்திலிருந்து விடுதலையானவர் என்றால், துன்பமடைந்து விடுவோமா என்ற அச்சத்திலிருந்து விடுதலையானவர் என்றால், வாழ்க்கையில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ள தயங்குவீர்களா அல்லது வாழ்க்கைக்குள்

பல ஞானிகளின் கனவான தியானலிங்கத்தை, இவரது குரு இவரது பொறுப்பில் விட்டபிறகு, சத்குரு வாழ்க்கையின் ஒவ்வொரு படியும் தியானலிங்கத்தை நிறைவு செய்வதை நோக்கியே இருந்தது.

இன்று ஈஷா யோகா மையத்தில் தியானலிங்கம் முழுமையடைந்து கம்பீரமாய் நிற்கிறது. தியானலிங்கம் எந்த ஒரு மதத்தையும் வழிமுறையையும் சாராமல் இருக்கிறது. இதற்கு சடங்குகளோ வழிபாடுகளோ கிடையாது. தியானம் என்றால் என்னவென்றே தெரியாதவரும் கூட தியானலிங்கத்தின் எல்லைக்குள் அமைதியாக அமர்ந்திருக்கும்போது, ஆழ்ந்த தியானத் தன்மையை உணர்கிறார். தியானலிங்கத்தின் எல்லைக்குள் வருபவர்கள் தங்களுக்குள் ஆன்மீக விதை விதைக்கப்படுவதிலிருந்து தப்பிக்க முடியாது என்று சத்குரு சொல்கிறார். இது போன்ற சக்திநிலை நிறைந்த இடங்களை உருவாக்குவதுதான் தனக்கு சிறப்பாக வரும் என்று சத்குரு சொல்கிறார்.

முழுவீச்சில் இறங்குவீர்களா? இப்போது நீங்கள் தயங்குகிறீர்கள். உங்களில் பெரும்பாலானோர் இப்படி ஆகிவிட்டீர்கள். எவராவது வீதியில் உங்களைப் பார்த்துப் புன்னகைத்தால் நீங்கள் தயங்குகிறீர்கள். இந்த மனிதர் ஏன் என்னைப்பார்த்துப் புன்னகைக்கிறார் என்று நினைக்கிறீர்கள். ஏனென்றால், அதன் பின்விளைவு என்னவாக இருக்கும் என்று நீங்கள் அச்சப்படுகிறீர்கள். நாளைக்கு உங்களை அது வருத்தத்தில் ஆழ்த்திவிடுமோ என்று பயப்படுகிறீர்கள்.

துன்பம் நேருமோ என்ற பயத்தின் காரணமாக, நீங்கள் உங்களை வாழ்க்கைக்குள் ஈடுபடுத்திக்கொள்ள எப்போதுமே தயங்குகிறீர்கள். துன்பம் நேரிடுமோ என்ற பயத்தை நீக்கிவிட்டால், நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றிற்கும் உங்களை முழுமையாகத் தரமுடியும், இல்லையா? இந்த வழியில் பார்த்தால், நீங்கள் அதிகமாக நேசிப்பீர்களா அல்லது குறைவாகவா?

கேள்வியாளர்: நீங்கள் சொல்வதை தர்க்க ரீதியாக யோசித்தால் என்னைச் சுற்றியுள்ள மக்களை அதிகமாகத்தான் நேசிப்பேன் எனக் கருதுகிறேன்.

சத்குரு: நான் உங்களிடம் தர்க்கரீதியாக மட்டுமே பேசமுடியும். தர்க்க ரீதியற்ற வேறு ஒரு மொழியில் நான் உங்களிடம் பேசவேண்டும் என நினைக்கிறீர்களா? தர்க்க ரீதியாக பேசுவதற்கு இரண்டு பேர் தேவை. ஆனால் ஞானமடைதல் என்னும்போது அங்கு ஒருவர் மட்டுமே இருக்கிறார். நவீன விஞ்ஞானம் தர்க்கரீதியின் அடிப்படையில்தான் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆனால் இன்றைய பௌதீகம் இனிமேலும் தர்க்கரீதியாக பேசமுடியாத ஒரு நிலையை அடைந்திருக்கிறது. தாங்கள் தர்க்கரீதிக்கு மாறான நிலையில் இருக்கிறோம் என்பதை விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். தர்க்கரீதி என்பதில் அவர்கள் அளவுக்கதிகமான முதலீடு செய்திருப்பதால் தர்க்கரீதிக்கு மாறாக பேசும்போது, அதற்கு அவர்கள் 'தெளிவற்ற தர்க்கரீதி'(fuzzy logic) என்று பெயர் கொடுக்கிறார்கள். தர்க்கரீதியான தங்கள் வழிகளுக்கு இனிமேல் வாய்ப்பில்லை என அவர்கள் பயப்படுகிறார்கள்.

நீங்கள் தெளிவற்று இருக்கும்போது, எப்படி உங்களால் தர்க்கரீதியாக பேசமுடியும்? தர்க்கரீதியாகப் பேசுவது என்றால் நீங்கள் ஒரு கத்தி போல் கூர்மையாக இயங்கவேண்டும். ஒவ்வொன்றையும் கூறு போட்டு விளக்க வேண்டும். எனவே 'தெளிவற்ற தர்க்கரீதி' என்னும் வார்த்தையே கூட தர்க்கரீதிக்கு எதிரான சொல்தான்.

எதையும் தர்க்கரீதியாக அணுகுவதற்கும் ஒரு எல்லை இருக்கிறது என்பதை தற்போது விஞ்ஞானம் உணர ஆரம்பித்திருக்கிறது. இது ஒரு நல்ல விஷயம்தான். ஆனால் தர்க்கரீதி என்பதில் அவர்கள் அளவற்ற முதலீடு செய்துவிட்டார்கள். இப்போது அதை மாற்றி சொல்வதற்கு பயப்படுகிறார்கள். அவர்கள் இதுவரை சொன்ன அனைத்துமே அர்த்தம் இல்லாததாக ஆகிவிடுமோ என்று தயங்குகிறார்கள். நீங்கள் சொன்னது போல் விஞ்ஞானத்தின் கூற்றுக்கள் அனைத்தும் மாயை என்றாகிவிடக்கூடும். மாயை என்று நான் சொல்லவில்லை, நீங்கள் சொன்னதை வைத்து நான் பதில் சொல்கிறேன். அப்படியே மாயை ஆக இருந்தாலும் அப்படியே பார்த்துக் கொள்ளலாமே? உங்களுக்கு அருகிலுள்ள ஒருவர் ஒரு காற்றுக்குமிழி போல் இருக்கிறார் என்றால் அவரை அதே போல் பார்த்துக் கொள்ளலாமே? அதில் உங்களுக்கு என்ன பிரச்சினை? பிரச்சினை என்னவென்றால் நீங்கள் அந்த நபர் மீது அளவுக்கதிகமான முதலீடு செய்துவிட்டீர்கள். அதனால் அவரை வெறும் காற்றுக்குமிழி என்று ஏற்க உங்கள் மனம் மறுக்கிறது. இதுபோன்ற முரண்பாடான நிலையில் நீங்கள் இருந்தால் நீங்கள் ஞானமடைதல் பற்றி பேசக்கூடாது. நீங்கள் தெளிவாக தைரியமாக உண்மையை ஏற்க மனவுறுதி கொண்டிருந்தால் மட்டுமே நீங்கள் ஞானோதயத்தைப் பற்றி பேசலாம்.

"எனக்கு அருகிலுள்ள நபர் ஒரு காற்றுக் குமிழியாக இருந்தாலும் அவர் தங்கத்தால் ஆக்கப்பட்டவர் என்று நினைக்கவே நான் ஆசைப்படுகிறேன்" என்று நீங்கள் சொல்வதாக இருந்தால் அதை நான் எதிர்க்க மாட்டேன், ஆனால் அதன் பிறகு உங்களிடம் ஞானோதயம் பற்றி பேச மாட்டேன். ஏனெனில் வாழ்க்கையை அதன் உண்மை நிலையில் பாக்க நீங்கள் தயாராக இல்லை.

வாழ்க்கையை அதன் தன்மையிலேயே பார்ப்பதற்கு நாம் ஏன் பயப்படுகிறோம்? படைப்பின் தன்மையானது நீங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு நன்றாக இல்லையா? அப்படியென்றால் உங்களுடைய எண்ணம் முட்டாள்தனமானது. ஏனென்றால் நீங்களே படைப்பின் ஒரு துளிதான். வாழ்க்கையைப் பற்றிய உங்களின் கற்பனை என்னவாக இருந்தாலும், உங்கள் கற்பனையைக் காட்டிலும் மிகவும் அழகான விதத்தில்தான் படைப்பு இருக்கிறது, இல்லையா? படைப்பின் மிகச்சிறிய புள்ளியாகிய உங்களாலேயே இவ்வளவு நினைக்க முடியுமென்றால், உங்களைப் படைத்தது எதுவோ அதன் யோசனை மிகமிக அதிகமானதாக இருக்க வேண்டும், இல்லையா?

கேள்வியாளர்: ஆமாம், ஆனால் என்னுடைய மனதின் ஒரு பகுதி பிளவுபட்டும், முறிந்தும், வன்முறையை அதிகம் தூண்டுவதாகவும் இருக்கிறது. அதனால், எனக்குத் தெரிந்தமட்டில் என்னுடைய படைப்பாளி ஒரு பைத்தியக்காரராக இருப்பாரோ என்றும், இந்த முழுப்படைப்புமே இரக்கத்திற்கு உட்படாததோ என்றும் என் மனதில் எண்ணங்கள் தோன்றி என்னை அச்சுறுத்துகிறது.

சத்குரு: (சிரிக்கிறார்) இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கையின் அடிப்படைகள் மட்டுமே நீங்கள் 'படைத்தவர்' என்று குறிப்பிடப்படுபவரால் படைக்கப்பட்டது. வாழ்க்கையின் மற்ற அம்சங்கள் உங்களுடைய படைப்பு. எந்த ஒரு விஷயம் உங்களை வந்தடைந்தாலும், அதனை உங்களுக்கு விருப்பமான விதமாகப் பரிசீலிக்கும் வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. எனவே இப்போது உங்கள் மனம் வன்முறைக்குத் தள்ளப்பட்டிருந்தால், இது யாருடைய படைப்பு? இது உங்களுடைய படைப்பு, இல்லையா? உங்களின் இந்த நிலைக்கும் படைத்தவருக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. தற்போதைக்கு உங்களைச் சுற்றியிருக்கும் எதுவும், நீங்கள் பார்ப்பவை யாவும் உங்களுடைய புத்திசாலித்தனத்திற்கும் கற்பனைக்கும் அப்பாற்பட்டது இல்லையா? ஒரு சின்னஞ்சிறு அணுவாகவே இருந்தாலும், அது உங்களுடைய அறிதலுக்கும் புரிதலுக்கும் புத்திசாலித்தனத்திற்கும் அப்பாற்பட்டது தானே? ஒரு பிரம்மாண்டமான படைப்பின் மிகச்சிறிய துகளைக்கூட உங்களால் புரிந்துகொள்ள இயலவில்லையென்றால், அந்த படைப்பு தவறாக இருக்கமுடியுமா? இந்த சரி, தவறு என்பதெல்லாம் உங்களுடைய கருத்துதான், இல்லையா?

பிரபஞ்சத்தோடும், படைப்போடும் ஒரே லயத்தில் இருப்பது ஒன்றுதான் நீங்கள் செய்யவேண்டிய சரியான செயல். இப்போது நீங்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை, வாழும் ஓர் உயிராக நீங்கள் இல்லை. ஏனென்றால் 95 சதவீத நேரமும் நீங்கள் வாழ்க்கையைப் பற்றி நினைத்துக்கொண்டு மட்டுமே இருக்கிறீர்கள். வாழ்க்கையை வாழவில்லை. உங்கள் எண்ணங்கள் வாழ்க்கையல்ல. இன்னும் சொல்லப்போனால் உங்கள் எண்ணத்திற்கும் வாழ்க்கைக்கும் தொடர்பேயில்லை. உங்கள் விருப்பப்படி நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளலாம், ஆனால் அவற்றுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பே இல்லை.

கேள்வியாளர்: இப்படிப்பட்ட பரவசமும், பேரானந்த அனுபவமும் கிடைப்பதற்கு என்ன யோகப் பயிற்சிகளைச் செய்தீர்கள்?

சத்குரு: நீங்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு பெரிதாக ஒன்று நடக்க வேண்டுமென்றால், நீங்கள் முழுமையாய் சீரான நிலையில் இருக்க வேண்டும். நீங்கள் 'நான்' என்று நினைத்துக் கொண்டிருப்பது உங்களுடைய உடல், மனம், உணர்ச்சிகள் மற்றும் அவற்றை செயல்படச் செய்கின்ற உயிர்சக்தி ஆகிய நான்கும் தான். இந்த நான்கும் சேர்ந்திருப்பதைத்தான் நீங்கள் "நான்" என்று சொல்லிக்கொள்கிறீர்கள். ஏதாவது பெரிதாக உங்களுக்கு நிகழவேண்டுமென்றால், இந்த நான்கினையும் ஒரு முறையான ஒருங்கிணைப்பில் இயங்கச்செய்ய வேண்டும். இந்த நான்கு பரிமாணங்களையும் முழுமையான ஒழுங்குமுறைக்குள் கொண்டு வருவதற்காகவே அனைத்து யோகப் பயிற்சிகளும் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு பரிமாணங்களாகிய உடல், மனம், உணர்ச்சி மற்றும் சக்திநிலை ஆகியவற்றை, தலை, இதயம், கைகள், சக்தி ஆகிய நான்கிற்கும் ஒப்பாக எண்ணலாம். இங்கு யாரேனும் வெறும் தலை மட்டுமாக, இதயம், கைகள், சக்தி இல்லாமல் இருக்கிறீர்களா? இந்த நான்கின் கலவைதானே நீங்கள்? அதனால்

உங்களுக்கு நான்கு அடிப்படை யோகங்களும் தேவை. இங்கே நான்கு வகை யோகங்கள் உள்ளன. அவை, ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம் மற்றும் கிரியா யோகம். நீங்கள் உங்களுடைய புத்திசாலித்தனத்தை உபயோகித்து உச்சநிலையை அடைந்தால், அது ஞானயோகம் என்று அழைக்கப்படுகிறது. உணர்வுநிலையை உபயோகித்து உச்சநிலையை அடையும்போது பக்தியோகம் என்றும், உடலை உபயோகித்து அல்லது செயல் மூலமாக உச்சநிலையை அடையும்போது கர்மயோகம் என்றும், உள்நிலை சக்திகளை சீராக்குவதன் மூலமாக உச்சநிலையை அடையும் போது கிரியாயோகம் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த நான்கின் கலவையாகத்தான் நீங்கள் இருக்கிறீர்கள். சரியான விகிதத்தில் நீங்கள் அவற்றை உபயோகிக்க வேண்டும். ஒரு மனிதருக்கு புத்திசாலித்தனம் ஆதிக்கம் செலுத்தும். இன்னொரு மனிதருக்கு இதயம் ஆட்சி செலுத்தும், இன்னொருவருக்கு உடல்தன்மை மேலோங்கி இருக்கும். அதற்கேற்றாற்போல், ஒரு சரியான கலவை உருவாக்கப்பட வேண்டும், இல்லையென்றால் எதுவும் நடக்காது.

யோகக் கலாச்சாரத்தில் மிக அழகான ஒரு கதை உண்டு. ஒருநாள் காட்டில் நான்கு மனிதர்கள் நடந்துகொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் ஞானயோகி, இன்னொருவர் பக்தியோகி, மற்றொருவர் கிரியா யோகி, வேறொருவர் கர்மயோகி. வழக்கமாகவே, இந்த நான்கு பேருக்கும் ஒருமித்த கருத்து இருப்பதேயில்லை.

தன்னுடைய புத்திசாலித்தனத்தை உபயோகிக்கும் ஞானயோகி, மற்ற ஒவ்வொருவரிடமும் அலட்சியபாவம் கொண்டிருப்பவர். மற்றவர்களை, குறிப்பாக மேலேயே பார்த்துக்கொண்டு ராம் ராம் என்று கூறியவாறு இருக்கும் இந்த பக்திப்பரவச மக்களை முழுமையான முட்டாள்கள் என்று நினைப்பவர். அவரால், அவர்களுடன் ஒன்றியிருக்கவே முடியாது.

பக்திசார்ந்த மனிதர்களுக்கு, எல்லோரிடமும் அனுதாபம் உண்டு. கடவுள் இங்கே இருக்கும்போது அவர் கரம் பிடித்து நடப்பதைவிட்டு, தலையால் நிற்கும் யோகப்பயிற்சியுடனும், மூச்சை நிறுத்திக்கொண்டு உடம்பை வளைத்து யோகம் செய்வதும் வெறும் அர்த்தமற்ற செயல்கள் என்று நினைப்பவர்கள்.

இந்த முட்டாள்கள் எல்லோரும் சோம்பேறிகள் என்று கர்மயோகி நினைக்கிறார். அவர்களுடைய சோம்பேறித்தனத்தை மூடி மறைப்பதற்காக இந்த மூடத்தனமான யோக ஆசனங்களை கண்டுபிடித்து விட்டனர் என்பது அவர் கணிப்பு.

கிரியா யோகிக்கு, மற்ற ஒவ்வொருவரையும் கண்டு அலட்சியம். ஏனென்றால், முழு வாழ்க்கையுமே சக்திநிலையினை மையப்படுத்தி இருக்கும்போது, அந்த சக்தியை நீங்கள் மாற்றம் செய்யவில்லையென்றால், வேறு எங்கேதான் வழி இருக்கிறது என்று நினைக்கிறார்.

ஆகவே இந்த நான்கு மனிதரும் ஒருமித்துச் செல்லவே முடியாது. ஆனால் அன்று அவர்கள் ஒன்றாக நடந்து கொண்டிருந்தனர். திடீரென்று, ஒரு புயல் மழை பொழியத் தொடங்கியது. நால்வரும் பாதுகாப்பான இடம் தேடத் துவங்கினர். பக்தி யோகி, கோவில்களிருக்கும் இடம் குறித்து அறிந்திருப்பதால், காட்டின் அந்தத் திசையில் ஒரு புராதன கோவில் இருப்பதாகவும், அங்கே சென்றால் பாதுகாப்பாக இருக்கலாம் என்றும் கூறினார். அவர்கள் அனைவரும் அங்கே ஓடினர். கோவிலையும் கண்டனர். கோவில் மிகவும் சிதிலமடைந்த நிலையில், கூரை நான்கு தூண்களுடன் மட்டுமே இருந்தது. வெகுகாலத்திற்கு முன்பே சுற்றுச்சுவர் இடிந்துவிட்டிருந்தது. புயல் மிகவும் வலுவடைந்த வண்ணமிருந்ததால், நான்கு திசைகளிலிருந்தும் காற்றும் மழையுமாக இருந்தது. எனவே அவர்கள் மைய மண்டபத்திற்குள் சென்றனர். மைய மண்டபத்தில் ஒரு லிங்கம் இருந்தது. புயலிலிருந்து தப்பிப்பதற்கு வேறு வழி இல்லாததால், அவர்கள் அனைவரும் அந்த லிங்கத்தினை ஆரத் தழுவியவாறு அமர்ந்திருந்தனர். கடவுளின் மேல் ஏற்பட்ட அன்பினாலோ அல்லது வேறு எதனாலோ அல்ல, புயலிலிருந்து தப்பிப்பதற்காகவே அப்படி அமர்ந்திருந்தனர்.

எதிர்பாராத விதமாக ஐந்தாவதாக ஓர் பிரம்மாண்டமான இருப்பு அங்கே நிகழ்வதை உணர்ந்தனர். அவர்கள் அனைவரின் மனதிலும் இவ்வளவு நாளாக இல்லாமல் இப்போது இங்கு ஏன் இது நிகழ்கிறது? என்ற கேள்விதான் உடனே எழுந்தது. எவ்வளவோ யோகப்பயிற்சி செய்தோம், சாதனை செய்தோம், அப்போதெல்லாம் இல்லாமல், இப்போது நாம் புயலிலிருந்து

“எந்த உயிரும் உண்மையில் ஏங்கினால், இந்த பிரபஞ்சம் பதிலளிக்கிறது. உங்களுள் இருக்கும் தாகம் தீவிரமாக இருந்தால், கடவுள் நிச்சயம் பதிலளிப்பார்.”

காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியில் இருக்கும்போது ஏன் இப்படி நிகழ்கிறது என்று நினைத்தனர். அப்போது கடவுள், “நான்கு முட்டாள்களும் கடைசியில் ஒன்று சேர்ந்துவிட்டீர்கள். நான் நெடுங்காலமாக இந்த ஷணத்திற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன்” என்று கூறினார். (சிரிக்கிறார்)

இதுதான் பிரச்சினையே. இந்த நான்கு பரிமாணங்களும் ஒரு ஒழுங்குமுறைக்குள் வரவில்லையென்றால், பெரிதாக எதுவும் நடக்க முடியாது. நீங்கள் ஒரு மோட்டார் வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கும்போது ஒரு சக்கரம் இந்த பக்கம் செல்ல, இன்னொரு சக்கரம் வேறு பக்கம் செல்ல, எப்படிப்பட்ட

அவஸ்தையில் நீங்கள் இருப்பீர்கள்? அப்படிப்பட்ட அவஸ்தையைத்தான் இப்போது நீங்கள் பல மனிதர்களிடையே பார்க்கிறீர்கள். அவர்களுடைய மனம் இந்தத் திசையில் இயங்குகிறது, எண்ணம் வேறு திசையில் போகிறது, உடல் வேறு எங்கேயோ நிலைகொள்கிறது, சக்திநிலை வேறு எங்கோ இருக்கிறது. தடங்கல் இல்லாமல் சுமூகமாகப் பயணம் செய்து, எந்த இலக்கினை அவர்களால் அடையமுடியும்?

‘உள்நிலை பொறியியல்’ என்று நாம் குறிப்பிடுகிற யோகாவின் மூலம், இந்த நான்கு சக்கரங்களையும் ஒரு ஒழுங்குமுறைக்குள் கொண்டு வருவதால் நீங்கள் சுலபமாக பயணம் செய்கிறீர்கள். உங்கள் பயணம் இப்போது நரகத்தின் திசையில் இருந்தாலும்கூட பரவாயில்லை. உங்கள் வாகனம் சரியாகப் பயணிக்கத் துவங்கிவிட்டால் நீங்கள் உடனடியாக அப்படியே மறுபக்கம் திரும்பிவிடலாம் (ஒரு ‘U’ திருப்பம் செய்துவிடலாம்), இல்லையா? ஆனால், உங்களுடைய வாகனத்தின் நான்கு சக்கரங்களும் நான்கு திசைகளை நோக்குவதுதான் உங்களுக்கிருக்கும் தொல்லை. இப்படியிருக்கும்போது நீங்கள் எங்குமே சென்றடைய முடியாது. உங்கள் பாதையை உங்களால் முடிவு செய்யமுடியாது. நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழல்கள்தான் உங்கள் பாதையை நிர்ணயிக்கும். அது ஒரு அடிமையின் வாழ்க்கையாகும், இல்லையா?

கேள்வியாளர்: மனிதர்களின் ஞானமடையும் வாய்ப்பு பற்றி ஏன் இந்த அளவு பேசப்படுகிறது? இந்தப் பிரபஞ்சத்தில் மற்றவை யாவும் பிறருக்கு உபயோகமாக இருக்கும்போது, மனிதனுக்கு மட்டும் சுயநலமாக இருக்க இவ்வளவு வாய்ப்பு ஏன் தரப்படுகிறது?

சத்குரு: மனிதர்கள் மட்டுமல்ல, இங்கிருக்கும் எல்லா உயிரினங்களும், பிறருக்கு சேவை செய்யும் விதமாக படைக்கப்படவில்லை. மண்புழுகூட தான் மற்றவர்களுக்கு உபயோகமாக இருக்கவேண்டும் என்று நினைப்பதில்லை, தான் பிழைத்திருக்கத்தான் பேராசை கொள்கிறது. தன்னால் இயன்ற அளவு சாப்பிடவேண்டும், இயன்ற அளவு இனப்பெருக்கம் செய்யவேண்டும் என்றுதான் விரும்புகிறது. அதற்குத் தெரிந்தது

குறைவாகவே இருந்தாலும், அந்த அளவுக்கு சுயநலமாகத்தான் இருக்கிறது. ஏதோ ஒருவிதத்தில், நம்முடைய சுயநலத்திற்காக, அதனுடைய சுயநலத்தை உபயோகப்படுத்திக் கொள்கிறோம்.

வெளியிலிருக்கும் மரம் கூட, நீங்கள் உங்களுடைய பூஜை அறையில் வைத்து பூஜை செய்ய வேண்டும் என்றோ அல்லது அதை முகர்ந்து பார்த்து அந்த வாசனையை நீங்கள் உணர வேண்டும் என்றோ பூக்களைத் தர முயற்சிக்கவில்லை. அதற்கு நீங்கள் ஒரு பொருட்டே அல்ல. அது வண்டுகளையும், பறவைகளையும் கவர்ந்து, அதன் வாயிலாக தன் சந்ததியைப் பெருக்க முயல்கிறது. அது, தான் உயிர் வாழ்ந்திருக்கவும், தன் உற்பத்தியைப் பெருக்கவுமே பாடுபடுகிறது, அப்படித்தானே? உங்கள் மூளை தான், அதற்கு எல்லாவகையான அர்த்தங்களையும் கற்பிக்கிறது. எல்லா உயிரினமும், ஒவ்வொரு படைப்பும், எந்த ஒரு செடியும், விலங்கினமும் அல்லது புழு, பூச்சியும் அவை உயிர்வாழவே போராடுகின்றன. ஆனால் படைப்பானது எப்படி இருக்கிறதென்றால், ஏதோ ஒன்று இன்னொன்றினை சாப்பிட்டு, அதன் விளைவாக தான் பிழைத்திருக்கிறது. முழு செயல்பாடும் சங்கிலியாகப் பின்னப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. உணவுச் சங்கிலி பற்றிய விஷயங்களையெல்லாம் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

நாம் மனிதராக இருப்பதால், மனித வாழ்க்கைக்கு இவ்வளவு கவனிப்பு தேவைப்படுகிறது. இப்போது மண்புழுக்கள்கூட ஒரு கூட்டம்போட்டு, அவற்றின் ஞானமடைதல் பற்றி பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால் அவைகளுக்கான முறைகள் உங்களுக்கு உபயோகப்படாது. நாம் மனிதர்களாக இருப்பதால், இங்கே உட்கார்ந்துகொண்டு மனிதர்கள் ஞானமடைதல் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே நாம் மட்டும்தான் வாழ்க்கையைக் குறித்து இவ்வளவு கவனம் செலுத்துகிறோம் என்பதில்லை. அவைகளும்கூட அவற்றின் வாழ்வுக்காக அளப்பரிய கவனம் செலுத்துகின்றன. ஆனால் அவற்றின் வாழ்க்கை மிகவும் குறுகிய எல்லைக்குட்பட்டது என்பதுதான் நமக்கும் அவைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு.

யோகாவில், வாழ்க்கை மூன்றுவிதமான பரிமாணங்களில் நடைபெறுவதாகப் பார்க்கப்படுகிறது. அவை மிருக

இயல்பு, மனித இயல்பு மற்றும் தெய்வீக இயல்பு. மிருக இயல்பு நிரூபணமாகியுள்ளது. தெய்வீக இயல்பும் நன்கு நிரூபணமாகியுள்ளது. மனித இயல்பு என்று அழைக்கப்படுவதுதான் சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. இந்த ஷணத்தில் உங்களால் கடவுள் போல இருக்கமுடியும். அடுத்த ஷணத்தில் நீங்கள் மிருகத்தனமாக இருக்கமுடியும். இரண்டிற்குமிடையே நீங்கள் ஊசலாடுகிறீர்கள். ஒரு நாளில், 24 மணி நேரத்தில் எத்தனை ஊசலாட்டங்களுக்கு நீங்கள் ஆட்படுகிறீர்கள் என்று உங்களையே நீங்கள் கவனித்துப் பாருங்கள். இந்த ஷணம் நீங்கள் மிகவும் அருமையானவர், அடுத்த ஷணம் ஆபத்தானவர், அதற்கடுத்த ஷணமே நீங்கள் அழகானவர், அடுத்ததில் அவலட்சணமானவர். உங்களுக்கு இது நடக்கிறதா? இல்லையா? நீங்கள் எப்போதும் ஊசலாடியவாறே இருக்கிறீர்கள். 'இதுதான் மனித இயல்பு' என்று குறிப்பிட்டு சொல்லும்படியாக எதுவுமில்லை. மனித இயல்பானது மாறக்கூடியது. அவர்கள் எவ்விதமாக இருக்க விரும்பினாலும் அவ்விதமே இருக்கமுடியும். வேறு எந்த விலங்கிற்கும் இந்த சுதந்திரம் இல்லை.

முன்பு சில மிருக குணங்களைக் கொண்டிருந்த மனித உயிர், தற்போது அதுபோன்ற எந்த வரையறைக்குள்ளும் இல்லாதபடி பரிணமித்திருக்கிறது. இப்போது விரும்பியவிதமாக உருவாக முடியும். இது ஒரு சுதந்திரம். ஆனால், இதனால்தான் மனிதர்கள் இப்போது துன்பப்படுகிறார்கள். அவர்களுடைய அடிமைத்தனத்தால் மக்கள் துன்பம்கொள்ளவில்லை. அவர்களுடைய சுதந்திரத்தினால்தான் துன்பம் அடைகிறார்கள். அதனால்தான் அது பரிதாபகரமாக உள்ளது. உங்களுடைய அடிமைத்தனத்தால் நீங்கள் துன்பமடைந்தால் அது பரவாயில்லை, ஆனால் உங்கள் சுதந்திரத்தினால் அல்லவா நீங்கள் துன்பம் கொள்கிறீர்கள்? ஒரு வேளை விலங்குகளுக்கு இருப்பதுபோல், மனித இயல்பும் நிலையானதாக இருந்துவிட்டால் இந்த அளவுக்கு துன்பப்படமாட்டீர்கள், இல்லையா?

உதாரணத்திற்கு, ஒரு புலி பிறந்துள்ளது என்று வைத்துக்கொண்டால், அது உட்கார்ந்துகொண்டு, தான் எப்படி ஒரு நல்ல புலியாக உருவெடுப்பது என்று திட்டமிட்டுக்கொண்டும்,

கணக்குப் போட்டுக்கொண்டும் இருப்பதில்லை. போதுமான அளவு உணவு கிடைத்தாலே, அது ஒரு நல்ல புலியாக உருவாகிவிடும். தன்னால் இயன்றவரை உணவை விழுங்கினால் அது ஒரு நல்ல புலியாகிவிடும். 'நான் புலியாக உருவாவேனா அல்லது வீட்டுப் பூனையாகப் போய்விடுவேனா?' என்பது போன்ற அச்சங்களும், பாதுகாப்பின்மையும் அதற்கு இல்லை. நீங்கள் மனிதராகப் பிறந்திருக்கிறீர்கள் என்னும்போது, ஒரு நல்ல மனிதராக உருவாக விருப்பப்பட்டால், அதற்கு எவ்வளவு விஷயங்களைச் செய்யவேண்டும் என்பதைக்கூட இன்னமும் நீங்கள் அறிந்திருக்கவில்லை. அதைவிட, உங்கள் நிலை எது என இன்னமும் உங்களுக்குத் தெரியவில்லை, அப்படித்தானே? இன்னொரு மனிதரோடு ஒப்பீடு செய்து 'சரிதான், அவரைவிட நான் மேலானவன்' என்று நீங்கள் கூறிக்கொள்ளலாம். ஆனால் உங்களுக்குள், நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது. ஏனெனில், மனிதர் என்று நிர்ணயிக்க ஒரு வரையறை வகுக்கப்படவில்லை. இயற்கையால், நீங்கள் சுதந்திரமாக விடப்பட்டிருக்கிறீர்கள். இது ஒரு மாபெரும் வாய்ப்பு.

இயற்கையாகவே நீங்கள் கீழானவற்றை விடுத்து, மேன்மையானவற்றைத்தான் தேடுவீர்கள் என்ற உங்களுடைய புத்திசாலித்தனத்தின் மீது நம்பிக்கை வைத்துதான் இயற்கை உங்களைச் சுதந்திரமாக உலவவிட்டிருக்கிறது. நீங்கள் எதை அறிந்திருக்கிறீர்களோ, அதில் உச்சத்தை எட்டியாக வேண்டுமென்று உங்களுக்குள் எதுவோ ஒன்று எல்லாநேரமும் முயன்று கொண்டிருக்கிறது, இல்லையா? நீங்கள் அறிந்திருப்பது பணம் என்றால், உலகிலேயே முதல் செல்வந்தராக வேண்டுமென்று விரும்புகிறீர்கள். நீங்கள் அறிந்திருப்பது அதிகாரம் என்றால், உலகிலேயே மிகவும் அதிகாரமிக்க மனிதராக வேண்டுமென்று விரும்புகிறீர்கள். நீங்கள் ஒரு கலைஞர் என்றால், உலகிலேயே மிகப்பெரும் கலைநிபுணராக வேண்டுமென்று விரும்புகிறீர்கள். வாழ்க்கை என்பதில் நீங்கள் அறிந்திருப்பது என்னவாக இருந்தாலும், அதில் உச்சத்தைத் தேடுவது இயல்பான ஒன்றுதான் இல்லையா? உங்களை நீங்கள் எந்த ஒன்றில் வெளிப்படுத்தினாலும் அதில் உயரே போக விரும்புகிறீர்கள். இதுதான் இயற்கையின் உந்துதல். இந்த

உந்துதல் உங்களுக்குள் விதைக்கப்பட்டு, நீங்கள் விரும்பும் விதமாக எப்படியாவது மிக உயர்ந்தநிலைக்குச் செல்வீர்கள் என்ற நம்பிக்கையில்தான் நீங்கள் சுதந்திரமாக விடப்பட்டீர்கள். ஆனால் அந்த நம்பிக்கையை பொய்யாக்கும் விதமாகத்தான் இப்போது மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உங்களுக்கான வாழ்க்கை நிர்ணயிக்கப்படாதிருப்பதால்தான் ஞானமடைதல் பற்றிய பேச்சு எழுந்துள்ளது. மற்ற படைப்புகளுக்கு இருப்பது போல உங்கள் வாழ்வும் கட்டுக்குள் அமைக்கப்பட்டிருந்தால், உங்களிடம் ஞானமடைதல் பற்றிப் பேசவேண்டி இருக்காது. பிழைப்பு, பிழைப்பு என்பது குறித்தே பேசிக்கொள்ளலாம். ஆனால் இப்போது உங்கள் வாழ்க்கை ஓரளவு நிர்ணயிக்கப்படாதிருப்பதால், நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அப்படி உங்களை உருவாக்கிக் கொள்ளலாம். உங்களை நீங்கள் அமைதியாகவும், ஆனந்தமயமாகவும் உருவாக்கிக் கொள்ளலாம். அல்லது அமைதியற்றவராகவும் உருவாக்கிக்கொள்ள முடியும், இல்லையா? எனவே, தேர்ந்தெடுத்தல் என்பது ஒவ்வொரு ஷணமும் இருந்து கொண்டிருக்கிறது. பல நேரங்களில், நீங்கள் இந்தத் தேர்ந்தெடுக்கும் உரிமையை சோதித்துப் பார்ப்பதேயில்லை. ஏனென்றால், உங்களைச் சுற்றிலுமுள்ள நிறைய விஷயங்களின் விளைவாக நீங்கள் ஒரு நிர்பந்தத்திற்குட்பட்ட பாதையிலேயே சென்று கொண்டிருக்கிறீர்கள்.

அத்தியாயம் 3

ஆளுமை கரைதல்

இந்த உயிர்த்தன்மை ஏதோ ஒன்றிற்காக ஏங்குகிறது. அதன் ஏக்கம் ஏதோ ஒரு ஆசை குறித்தல்ல. அது, தான் சென்றடைய வேண்டிய இடத்திற்காகவே ஏங்குகிறது. குழந்தைப் பருவத்திலிருந்தே, நாம், வலிமையான ஆளுமைக் குணங்கள் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லி வளர்க்கப்படுகிறோம். கடுமையான ஆளுமை குணம் கொண்டிருந்தவர்களை, அவர்களின் செயல்களால் ஒரு பகுதி மனித இனமே அழிந்திருந்தாலும் கூட, வரலாறு அவர்களை சிறப்பித்தே பேசுகிறது. பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள "ஆளுமை வளர்ச்சி" வணிக வாய்ப்பு, இந்த நம்பிக்கையில் தான் விருத்தியடைந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஆன்மீக குருமார்களோ ஆளுமையைக் கரைப்பதையே உயரிய இலட்சியம் என்று கருதினர்.

அடிப்படைகளைப் பற்றி பேசும் சத்குரு, இன்றிருக்கும் கருத்துக்களை அடியோடு மறுப்பது மட்டுமல்லாமல், உள்ளவற்றை உள்ளவாறு நம்மால் பார்க்க முடியாததும், நம்முடைய உண்மையான தன்மையை நம்மால் உணர முடியாமல் போவதும்,

நாம் கஷ்டப்பட்டு வளர்த்துக் கொண்டிருக்கும் இந்த ஆளுமையால் தான் என்கிறார். உயிர்த்தன்மைக்கும் ஆளுமைத்தன்மைக்கும் உள்ள உறவுமுறை பற்றியும், ஆளுமைக் குணங்களை நாம் உருவாக்கிக் கொள்ளும் விதம் பற்றியும், தேவைக்கேற்ப பல ஆளுமைகளை உருவாக்கிக் கொண்டு, பின்னர் அவற்றை எப்படி முழுமையாக கரைத்துக் கொள்வது என்பது பற்றியும், வாழ்க்கையின் தன்மையை நாம் உணர்வதற்கு, ஒரே தடையாய் இருக்கக் கூடியதைப் பற்றியும் சத்குரு இங்கு விவரிக்கிறார்.

ஆன்மீகத்தைப் பலரும் பலவிதமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சிலருக்கு ஆன்மீகம் என்றால் சொற்பொழிவுகள்தான். சில பெண்களுக்கோ ஆன்மீகம் என்பது சமையலில் இருந்தோ, மாமியாரிடம் இருந்தோ தப்பிப்பது. சிலருக்கு இது ஒரு புத்திசாலித் தனமான பொழுதுபோக்கு. சிலருக்கு ஆன்மீகம் என்றால் புதிதாய் எதையோ கற்றுக்கொள்வது. சிலருக்கு ஆன்மீகம் என்றால் தங்கள் வாழ்வில் புதிய மாற்றங்களைக் கொண்டுவருவது. சிலரைப் பொறுத்தவரை ஆன்மீகம் என்றால் இன்னும் கொஞ்சம் அமைதியாகவும், அன்பாகவும் மாறுவது. சிலர் ஆன்மீகத்தின் மூலம் தங்கள் வாழ்வில் சில மாற்றங்களைக் கொண்டுவர விரும்புகிறார்கள். சிலரோ ஆன்மீகத்தின் மூலம் தங்கள் வாழ்வில் ஒரு புத்துருவாக்கத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். மாற்றத்திற்கும் புத்துருவாக்கத்திற்கும் உள்ள வேறுபாடு உங்களுக்குத் தெரியுமா? மாற்றம் என்றால் முன்னர் இருந்ததைவிட சற்றே மேம்படுவது. புத்துருவாக்கம் என்றால் பழைய அம்சங்கள் எதுவும் மிஞ்சாமல் முழுமையாக மாறுவது. சிலர் முழுமையாக அதிலேயே கரைந்து போக விரும்புகிறார்கள்.

எனவே, ஒரு விஷயத்தை அணுகுவதற்கு பல வழிகள் உள்ளன. எது சிறந்த வழி என்று சொல்வதல்ல என் நோக்கம். அது ஒவ்வொரு மனிதரின் தேவையையும், தேடலுக்கு அவர் மேற்கொண்ட முறைகளையும் ஒட்டி, மனிதருக்கு மனிதர் மாறுபடுகிறது. பொதுவாகவே மனித இயல்பு என்னவென்றால் அவர்களிடம் என்ன இல்லையோ அதைத் தேடுவார்கள். சிலருக்கு ஆரோக்கியம் இல்லையென்றால் ஆரோக்கியத்தை அடைவதுதான் வாழ்வின் உச்சம் என்பதைப் போல தீவிரமாகத் தேடுவார்கள். சிலரிடம் செல்வம் இல்லையென்றால் பணம்

அமெரிக்காவில் உள்ள ஈஷா உள்நிலை விஞ்ஞான மையம். மேற்கத்திய ஆன்மீக வளர்ச்சிக்கான புகலிடமாகவும், யோக விஞ்ஞானத்தை அதன் முழு பரிமாணத்தில் உணர்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் இந்த அமைப்பு திகழ்கிறது. முக்கியமாக, பல ஆன்மீக வேட்கை உடையவர்கள், ஒருவாழும் குருவின் வழி நடத்துதலில், தங்களுடைய நாட்டத்தை இன்னும் தீவிரமாக்கிக் கொள்வதற்கான ஒரு புனிதத்தலமாக இருக்கிறது. இங்கு அமைக்கப் பட்டிருக்கும் 39,000 சதுர அடி உள்ள "மஹிமா" தியான மண்டபம், சத்குரு அவர்களால், பல ஆன்மீக செயல்முறைகளின் உதவியால் சக்தியூட்டப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு 1,200 ஏக்கர் பரப்பளவில், அமெரிக்காவின் தெற்கே உள்ள டென்னஸி மாநிலத்தின், இயற்கை வளமிக்க, "கம்பர்லாண்ட் பரப்பில்" உள்ளது.

ஒன்றே வாழ்வின் உச்சம் என்பது போன்ற தீவிரத்தோடு அதற்கான தேடலில் ஈடுபடுவார்கள். சிலருக்கு அன்பு தேவைப்படுகிறதென்றால் அது ஒன்றே வாழ்வின் குறிக்கோள் என்பதுபோல் தேடுவார்கள். எது தன்னிடம் இல்லையோ அதைத் தேடுவதே மனித இயல்பு.

ஒருமுறை ஒரு பள்ளியில் ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து "கடவுள் உங்களுக்கு முன்பு தோன்றினால் என்ன கேட்பீர்கள்?' என்று கேட்டார். ஒரு மாணவன் "சைக்கிள் வேண்டும் என்று கேட்பேன்" என்றான். இன்னொருவன் "கார்" கேட்பதாகச் சொன்னான். இன்னொருவன் "பத்து லட்சம்" பணம் கேட்கப்போவதாகச் சொன்னான். ஆசிரியருக்குக் கோபம் வந்தது. "அட முட்டாள்களே! கடவுளிடம் இதையெல்லாமா கேட்பது? என் முன் கடவுள் தோன்றினால் நிறைய அறிவும் ஞானமும் வேண்டும் என்று கேட்பேன்" என்றார். ஒரு மாணவன் அமைதியாக எழுந்து "ஆமாம் ஐயா! யாரிடம் என்னென்ன இல்லையோ அதைத்தானே கேட்க முடியும்" என்றான்.

தன்னிடம் இல்லாததைத் தேடுவதையே ஆன்மீகம் என்று பலரும் கருதுகிறார்கள். இப்படித் தேடிக்கொண்டே போனால் அதற்கு எல்லையே இல்லை. ஏனெனில் உங்களிடம் இருப்பவை மிகக்குறைவு. உங்களிடம் இல்லாதவற்றைத் தேடத் தொடங்கினால் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் போதாது. உங்களை நீங்களே தோற்கடிக்கிற விஷயமாகத்தான் அது ஆகும். இறுதியில் நீங்கள் எதிலும் போய் சேர மாட்டீர்கள். அதே நேரத்தில் நீங்கள் தேடாமல் இருந்தாலோ, எதற்கும் நீங்கள் ஆசைப்படா விட்டாலோ, அப்போதும் எங்கும் போய் சேர மாட்டீர்கள். தேடுவதற்கு என்று எதுவும் இல்லாத

போது, ஏன் ஒரு இடத்திற்குப் போகிறீர்கள்? ஆனால் உங்கள் செயல்களின் அடிப்படையே தேடுவதிலேயே இருக்கிறது. எதற்கோ ஆசைப்பட்டு அதன் பின்னாலேயே போவது, இல்லையா? ஆசைப்படும் பொருட்கள் மாறலாம். இதைவிட அது சிறந்தது என்று நினைக்கலாம், ஆனால் அப்படிக் கிடையாது.

நீங்கள் பணத்தைத் தேடினாலும், வீட்டைத் தேடினாலும் அல்லது அறிவைத் தேடினாலும் அல்லது கடவுளையே தேடினாலும், எதன் மேல் ஆசைப்பட்டாலும் ஆசை ஆசைதான். நீங்கள் ஆசைப்படும் பொருள் மாறும்போது உங்கள் தேடுதலின் பாதை மாறலாம். ஆனால் உங்கள் வாழ்க்கை மாறுவதில்லை. இத்தனையையும் தேடி வாழ்க்கையை விட்டுவிடுகிறீர்கள். வாழ்க்கையின் முடிவில் நீங்கள் எங்கு சென்றீர்கள் என்பது பொருட்டல்ல. வாழ்க்கையை எப்படி உணர்ந்தீர்கள் என்பதே முக்கியம்.

ஆகவே, வாழ்க்கையை இன்னும் மேம்பட்ட முறையில் அனுபவிக்க வேண்டுமென்றால் நீங்கள் விரும்பும் பொருட்களை மாற்றிக்கொண்டே போவதால் பயனில்லை. வாழ்க்கையைக் கையாளும் விதத்தில்தான் வித்தியாசம் இருக்க வேண்டும். மனிதர்கள் ஒவ்வொருவருக்குமே வாழ்க்கை அமைதியானதாகவும் அழகானதாகவும் மாறினால்கூட அப்போதும் உங்களுக்குள் ஏதோவொரு தேடல் இருந்துகொண்டே இருக்கும். ஒரு போதாமையை உணர்வீர்கள். நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியாய் இருந்தால்கூட சிறிதுநேரத்தில் அது போதாது என்பதை உணர்வீர்கள்.

எனவே, உங்கள் உயிர் ஏதோவொன்றிற்காக எல்லா நேரமும் ஏங்கிக்கொண்டே இருக்கிறது. அது குறிப்பிட்ட இடத்தை சென்றடைய வேண்டும் என்கிற ஏக்கம். அதை நோக்கி விழிப்புணர்வோடு நகர்கிறீர்களா? விழிப்புணர்வின்றி நகர்கிறீர்களா? என்பதுதான் உங்களுக்கிருக்கிற ஒரே தேர்வு. எப்படியும் அதை நோக்கி நகர்கிறீர்கள். விழிப்புணர்வோடு நகர்கிறீர்களா? என்பது தான் விஷயம். விழிப்புணர்வில்லாத நிலையில் நீங்கள் சொர்க்கத்தை நோக்கி இழுக்கப்பட்டால்கூட அது உங்களுக்கு துன்பமாகத்தான் இருக்கும். இப்போது

உங்களை தரதரவென்று இழுத்துச் செல்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். எங்கே போகிறோம் என்று உங்களுக்குத் தெரியாதபட்சத்தில் அது மிகப்பெரிய வேதனையாகத்தான் இருக்கும். உங்களைக் கொண்டு போய் விடுகிற இடம் ஓர் அழகிய கடற்கரையாகக்கூட இருக்கலாம். ஆனால் அந்தப் பயணம் நரக வேதனையைக் கொடுக்கும்.

ஆதலால் வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கி உங்களை நகர்த்துகிறபோது அது குறித்து உங்களுக்குத் தெரியவில்லை என்றால் நீங்கள் மிகுந்த துன்பமடைகிறீர்கள். விழிப்புணர்வோடு நகர்கிறீர்களென்றால் அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தத் தேர்வுதான் உங்களுக்கு இருக்கிறது. விழிப்புணர்வோடு ஒன்றைச் செய்கிறபோது அது இன்னும் விரைவாக நடைபெறுகிறது.

நீங்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். எது குறித்தெல்லாம் உங்களுக்கு விழிப்புணர்வில்லையோ அவையெல்லாம் உங்கள் துன்பத்திற்குக் காரணங்கள். வீதியில் வாகனத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குப் பின்பக்கமாக என்ன வருகிறது, முன்னால் என்ன வருகிறது என்று விழிப்புணர்வு இல்லையென்றால் நீங்கள் துன்பப்படப் போகிறீர்கள் என்று அர்த்தம். உடலுக்கு என்ன நேர்கிறது என்பது தெரியாவிட்டால் ஒருவகை துன்பம். மனதிற்கு என்ன நேர்கிறது என்பது தெரியாவிட்டால் இன்னொருவகை துன்பம். குடும்பத்திற்கு என்ன நேர்கிறது என்று தெரியாவிட்டால் வேறுவகையான துன்பம். எனவே அறியாமையில் இருக்கிறபோதெல்லாம் நீங்கள் துன்பத்திற்கு ஆளாகிறீர்கள்.

ஒரு கடல் கொள்ளையன் இருந்தான். ஒரு மதுபானக் கடைக்கு வழக்கமாக வருவான். ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு அவன் வந்தான். “உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? ஏன் இப்படி இருக்கிறீர்கள்?” என்று மதுபானக் கடைக்காரர் கேட்டார். “ஒன்றுமில்லை, நான் நலமாகத் தான் இருக்கிறேன்” என்று பதிலளித்தான். ஆனால் மரத்தால் ஆன செயற்கைக்கால் பொருத்தியிருந்தான். “இது என்ன?” என்று கேட்டதற்கு “எதிரிகளோடு சண்டையிட்டபோது பீரங்கி குண்டு தாக்கி கால் போய்விட்டது. ஆனால் நன்றாக இருக்கிறேன்” என்றான்.

இடது கைக்கு பதிலாக இரும்பு கொக்கி பொருத்தப்பட்டிருந்தது. அதைப்பற்றி விசாரித்ததற்கு, "விளையாட்டாக வாள்வீச்சில் ஈடுபட்டபோது இடது கை துண்டாகிவிட்டது. ஆனால் நன்றாக இருக்கிறேன்" என்றான். அவனுக்கு ஒரு கண்ணும் போயிருந்தது. அதுபற்றிக் கேட்டபோது "அதுவா? நான் அன்று வான் நோக்கி பார்த்திருந்த போது, கண்ணுக்குள் பறவையின் எச்சம் விழுந்துவிட்டது" என்றான். மதுபானக் கடைக்காரர் நம்பாமல், "பறவை எச்சம் விழுந்து கண் குருடாகுமா? உண்மையைச் சொல்லுங்கள்" என்று கேட்டார். "இல்லை, அன்றுதான் கைக்குப் பதிலாக இரும்புக் கொக்கி பொருத்தியிருந்தேன்" என்று பதிலளித்தான். என்ன நடக்கிறதென்ற விழிப்புணர்வு இல்லாவிட்டால் இப்படித்தான்.

அதனால்தான் விழிப்புணர்வு குறித்தே எப்போதும் நாம் பேசுகிறோம். விழிப்புணர்வு என்பது நீங்கள் செய்கிற செயல் அல்ல. சொல்லப்போனால் குறைவாக செயல்படுகிறபோதுதான் உங்களுக்குள் விழிப்புணர்வு அதிகரிக்கிறது. உங்கள் உள்நிலையில் செயல்பாடுகள் குறையக்குறைய, 'நான்' என்கிற உங்கள் உள்தன்மை குறையக்குறைய உங்கள் விழிப்புணர்வு கூடுகிறது.

ஆன்மீகம் என்பது செயல்களைக் குறிக்காது. நீங்கள் செய்யும் முட்டாள்தனங்களையெல்லாம் நிறுத்தும்போது நீங்கள் ஆன்மீகத் தன்மையில்தான் இருப்பீர்கள். அதில் நீங்கள் செய்வதற்கோ, உருவாக்குவதற்கோ ஒன்றும் இல்லை. "அப்பொழுது நான் ஏன் கிரியா(ஆன்மீகப்பயிற்சி) செய்ய வேண்டும்?" என்று நீங்கள் கேட்கலாம். அது, இடையூறின்றி எப்பொழுதும் ஓடிக்கொண்டேயிருக்கும் உங்கள் எண்ணங்களிலிருந்தும், செயல்பாடுகளிலிருந்தும், ஒரு ஓய்வு ஏற்படுத்தி, உங்கள் கவனத்தை திசை திருப்ப, கிரியா உதவுகிறது. ஒரு காலகட்டத்திற்குப் பிறகு இந்தப் பயிற்சிகளால் உங்கள் சக்திநிலை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உயர்ந்து உங்கள் செயல்பாடுகளை முக்கியமற்றவையாக மாற்றுகிறது. செயல்பாடுகள் இருந்து கொண்டிருக்கும். ஆனால், அவற்றிற்கான முக்கியத்துவம் போய்விடும். இதனை சூன்ய தியானத்தின்போது உணர்ந்திருப்பீர்கள். நீங்கள் சூன்ய தியானத்தில் அமர்ந்திருக்கும்போது எல்லா செயல்களுமே தொடரும். ஆனால் அவை முக்கியமானவையாக இராது. உங்கள்

மீதான அதன் தாக்கம் அகன்றிருக்கும். "உங்களை" உங்கள் அகங்காரத்தை, விருப்பு வெறுப்புகளை, எண்ணங்களை அது உருவாக்கிக் கொண்டிருக்காது. உங்கள் தன்மையின் மீதான செயல்திறனின் பாதிப்பு அகன்றுவிடும்.

உங்கள் ஆளுமையை தக்கவைத்துக் கொள்ள நீங்கள் எவ்வளவோ காரியங்களில் ஈடுபடவேண்டியிருக்கிறது, இல்லையா? அவை பெரும்பாலும் விழிப்புணர்வில்லாத நிலையில்தான் நடைபெறுகின்றன. அந்த காரியங்கள் குறைகிறபோது விழிப்புணர்வு கூடுகிறது. எனவே, விழிப்புணர்வு என்பது செயல் சார்ந்ததல்ல. வாழ்வின் அடிப்படையே விழிப்புணர்வுதான். நீங்கள் சிறிதேனும் விழிப்புணர்வோடு இருப்பதால்தான் நீங்கள் உயிரோடிருப்பதே உங்களுக்குத் தெரிகிறது. உங்களுக்குள் விழிப்புணர்வு மறைகிறபோது அது மரணம் எனப்படுகிறது.

உங்கள் வாழ்க்கைக்கு நீங்கள் செய்துவரும் பெரிய சிதைவே உங்கள் ஆளுமையை உருவாக்குவதுதான். உங்கள் ஆளுமையின் சிறுபகுதி விழிப்புணர்வோடு உருவாகியிருக்கலாம். ஆனால் அதன் பெரும்பகுதி விழிப்புணர்வில்லாமல்தான் உருவாகியிருக்கிறது. நீங்கள் உங்கள் ஆளுமையை வளர்த்துக்கொள்வது, இந்த பிரபஞ்சம் உங்களை சரியாகப் படைக்கவில்லை என்று உங்களுக்குள் எங்கோ தோன்றியதால் தான். அதனால்தான் உங்களை சரிப்படுத்திக் கொள்ள நினைக்கிறீர்கள். இவ்வளவு பிரம்மாண்டமான பிரமாதமான படைப்பு போதியமுறையில் உருவாகவில்லை என்று ஏன் கருதுகிறீர்கள்?

தன்னை தற்காத்துக்கொள்ள வேண்டும் என்கிற பாதுகாப்புணர்வு ஒவ்வொரு உயிருக்குள்ளும், ஏன் ஒவ்வொரு புழு பூச்சிக்குள்ளும் கூட இருக்கிறது. நம் உடலிலும் கூட, ஒவ்வொரு அணுவிலும் அந்த உணர்வு இருக்கிறது. நமக்கு இதை எந்த அளவோடு நிறுத்த வேண்டும் என்று புரியாமல், எல்லாவற்றிலும் பரவ விட்டுவிட்டோம். பாதுகாப்பு என்பது உடலுக்குதான் தேவைப்படுகிறது. ஆனால் ஒரு அளவோடு நிறுத்திக் கொள்ளாமல், இது எல்லாவற்றிலும் பரவிவிட்டது. எனவேதான் உங்களுடைய 'நான்' என்னும் தன்மையை ஒரு சிறிய மனிதனாக உருவாக்கி எப்போதும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் உருவாகியிருக்கிறது.

பருந்துப் பார்வையில் ஈஷா யோக மையம். நீலகிரித் தொடரில் உள்ள வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில், 150 ஏக்கர் பரப்பளவில், ஏராளமான வனவிலங்குகள் நிறைந்த அடர்ந்த காடுகள் சூழ, ஈஷா யோக மையம் அமைக்கப்பட்டுள்ளது.

உள்நிலை வளர்ச்சிக்கான சக்திவாய்ந்த இடமாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த இடம், உலகெங்கிலும் உள்ள பலரை ஈர்த்து வருகிறது. இந்த மையம், தனித்துவமாக, நான்கு வகை யோகங்களையும் ஞான, பக்தி, கர்ம, கிரியா வழங்கி வருகிறது.

இந்த மையத்தில், கட்டடக் கலையில் தனித்துவம் வாய்ந்த பல கட்டிடங்கள் உள்ளன. இங்கிருக்கும் ஸ்பந்தா ஹால் எனப்படும் தியான மண்டபம் மற்றும் அதை சுற்றி இருக்கும் தோட்டம் 64,000 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தங்கிப் பயிற்சி பெறும் வசதியுடன் பல வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தியானலிங்கம், தனித்துவமான சக்தி வடிவமாக, 250,000 செங்கற்கள் கொண்டு, தூண் இல்லாமல் உருவாக்கப்பட்ட அரைக்கோள வடிவ மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இங்கு 35 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தீர்த்தகுளம் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு நீர்நிலைஆகும். மேலும் இதே வளாகத்தில், தங்கி கல்வி பெறும வசதி கொண்ட ' ஈஷா ஹோம் ஸ்கூல்', விஞ்ஞானப்பூர்வமான சிகிச்சை முறைகள் மற்றும் மசாஜ்கள் கொண்ட ஈஷா புத்துணர்வு மையம் ஆகியவை உள்ளன.

ஒவ்வொரு நாளும் உங்கள் ஆளுமையை மெல்ல மெல்ல சிதைத்துக் கொண்டிருந்தால் மறுநாள் வேறொன்றை உருவாக்கிவிடுவீர்கள். உங்களுக்காக நாங்கள் அதை இங்கு மென்மையாக செய்கிறோம், நாங்கள் அதை கடினமாக செய்தால், நீங்கள் இங்கிருந்து ஓடிப் போய் விடுவீர்கள்! (சிரிக்கிறார்) நாங்கள் அதை மிகமிக மென்மையாகச் செய்வதால் உங்கள் ஆளுமை வளையும் தன்மை உடையதாய் ஆகிவிடுகிறது. இந்த உலகில் வாழ்வதற்கு, உங்கள் காரியங்களைக் கையாள்வதற்கு ஆளுமை வேண்டும். இப்போது அது ஒரு பாறைபோல் உங்கள் தலையை அழுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்றார் போல் ஏதும் நடக்கவில்லை என்றால், நீங்கள் துன்பத்திற்கு ஆளாகிறீர்கள். இதுவே அது வளைக்கக்கூடிய

ஒன்றாக ஆகும்போது, தேவைக்கேற்ப அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

'நீங்கள்' எனப்படும் இந்த ஆளுமை கேலிச்சித்திரத்தை வரைந்தது யார்? நிச்சயமாக நீங்கள்தான். ஆனால் அதில் மற்ற பலரின் தாக்கமும் இருக்கிறது. உங்களுக்கு பதினைந்து, பதினாறு வயதிருந்தபோது அமிதாப்பச்சன் நடித்த படத்தைப் பார்த்துவிட்டு அவரைப் போலவே நடப்பதற்கு முயற்சி செய்திருப்பீர்கள். சிலநேரம் விழிப்புணர்வோடும், சிலநேரம் விழிப்புணர்வின்றியும் இந்த முயற்சி நடந்திருக்கும். எனவே, நீங்கள் எங்கெங்கோ சேகரித்த துண்டு துணுக்குகளின் சேர்க்கைதான் 'நீங்கள்' எனப்படும் கேலிச்சித்திரமாய் உருக்கொண்டது.

நான் பள்ளியில் படித்தபோது இது நடந்தது. என் வகுப்புத் தோழன் ஒருவனுக்கு கேலிச்சித்திரங்கள் வரைவது கைவந்த கலையாய் இருந்தது. யாரைப்போலவும் உடனடியாக கேலிச்சித்திரத்தை தீட்டுவது அவனது வழக்கம். எங்கள் எல்லோராலும் வெறுக்கப்பட்ட பூகோள ஆசிரியர் ஒருவர் இருந்தார். ஒருநாள், அவர் வகுப்பிற்குள் நுழைந்தபோது அவரது கேலிச்சித்திரம் பூதாகரமாக கரும்பலகையில் வரையப்பட்டிருந்தது. அது அவர்தான் என்று பார்க்கிற யாராலும் எளிதில் சொல்லிவிடமுடியும். அந்த ஆசிரியர் எப்போதுமே கோபமாகத்தான் வகுப்பிற்குள் நுழைவார். அமெரிக்காவின் புல்தரைகளைப் பற்றி பேசுவதாக இருந்தாலும் சரி, ஆப்பிரிக்காவின் பாலைவனங்களைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் சரி சிடுசிடுவென்றுதான் இருப்பார். வகுப்பிற்குள் நுழைந்தவருக்கு அந்தக் கேலிச்சித்திரத்தைப் பார்த்ததும் கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது. அதைச் சுட்டிக்காட்டி "இந்த அநியாயத்திற்கு யார் காரணம்?" என்று கோபமாகக் கேட்டார். உடனே மாணவர்கள் எல்லோரும் வெகு அக்கறையாக பூகோளப் பாடத்தை பிரித்து வைத்துக்கொண்டு படிக்கத் தொடங்கினார்கள். அவர் மீண்டும் உரத்தக் குரலில் கேட்டார். "யார் இந்த அநியாயத்திற்குக் காரணம்?" எங்களில் ஒருவர் மெதுவாக எழுந்து சொன்னார். "எங்களுக்குத் தெரியாது ஐயா. அநேகமாக அவருடைய பெற்றோர்தான் காரணம்" (சிரிக்கிறார்)

ஆனால், 'நீங்கள்' எனப்படும் அநியாயத்திற்கு உங்கள் பெற்றோர் காரணமல்ல. நீங்கள்தான் காரணம். 'நீங்கள்'

எனப்படும் தன்மைக்கு ஓர் எல்லையில்லாத வாய்ப்பு வழங்கப்படும்போது, உங்களை நீங்களே ஒரு மிகச்சிறிய வாய்ப்புக்குள் சுருக்கிக் கொள்ளும் அநியாயத்தை நீங்கள்தான் செய்கிறீர்கள். நீங்கள் கேலிச் சித்திரம் ஆவதை நீங்கள்தான் தடுக்கமுடியும். ஏனெனில், உங்கள் ஆளுமை என்கிற கேலிச்சித்திரம் உங்கள் உதவியில்லாமல் ஒருநாள்கூட தாக்குப்பிடிக்க முடியாது. எல்லாநேரமும் நீங்கள்தான் அதைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

தியானம் என்பது ஒரு வகையில் உங்கள் ஆளுமைக்கு நீங்கள் தருகிற ஆதரவை விலக்கிக் கொள்வதுதான். அப்படிச் செய்யும்போது உங்கள் ஆளுமை உடனே நொறுங்கிவிடுகிறது. இருப்பு மட்டும் நிகழ்கிறதே தவிர அந்த மனிதர் அங்கே இல்லை. இதே தன்மையில் நீங்கள் வீதிகளில் நடக்கமுடியுமென்றால், மற்றவர்களுடன் பழக முடியுமென்றால் உங்களுக்கு ஆளுமை என்ற ஒன்றே இராது. அப்போது, ஒரு மனிதரைச் சந்திக்கிறபோது அவருக்கேற்ற ஆளுமையை தேவையான வகையில் உருவாக்கிக் கொள்வீர்கள். இன்னொரு மனிதரைச் சந்திக்கிறபோது வேறுவிதமான ஆளுமையை உருவாக்கிக் கொள்வீர்கள். தினம்தினம் இப்படி புதியபுதிய உருவகங்களை தேவைக்கேற்ற போல் வரைந்துகொண்டால் அது மிகவும் குதூகலமானதாக இருக்கும். ஒரே ஒரு உருவகத்தில் அடங்கிக் கொள்ளும்போது அது விகாரமாகவும, பெரும் தொல்லையாகவும், பல சமயங்களில் ஒரு ஊனம் போல் வதைப்பதாயும் இருக்கிறது. இந்த இரண்டுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் இதுதான்.

கேள்வியாளர்: சத்குரு, வாழ்க்கைத் துணைவர் என்கிற ஆளுமை, பெற்றோர் என்கிற ஆளுமை, பணியிடத்தில் வேறொரு ஆளுமை என்று தினசரி வாழ்வில் விதவிதமான ஆளுமைகளை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. சாதாரண வாழ்க்கையில் இப்படி ஆளுமைகளை மாற்றிக் கொள்வது மிகவும் கடினமாக இருக்கிறது.

சத்குரு: நீங்கள் சொல்வதில் உண்மையில்லை. நீங்கள் அப்படி மாறுவதை உங்களைச் சுற்றியிருப்பவர்கள் தடுக்கிறார்களா என்ன?

உதாரணமாக நீங்கள் வேலைக்குப் போவதை எடுத்துக்கொள்வோம். காலையில் வேக வேகமாக யாரைத் தாண்டும் போதும், "குட் மார்னிங்" என்று சொல்லி நகர்கிறீர்கள். நிஜமாகவே அவர்களுக்கு நாள் நன்றாக இருக்க வேண்டும் என்றா சொல்கிறீர்கள்? இப்போதெலாம் இதை நீங்கள் சொல்வதைப் பார்த்தால், "இரு இரு, இன்றைக்கு உன்னை கவனித்துக் கொள்கிறேன்" என்று சொல்வதைப் போல இருக்கிறது (சிரிப்பலை). நாளை காலை நீங்கள் அலுவலகம் செல்கிறபோது,அவர்கள் வணக்கம் சொன்னவுடன் நீங்கள் அவரிடம் போய் ஒரு புன்னகையுடன் பதில் வணக்கம் சொல்லி தனிப்பட்ட முறையில் உரையாடினால், அதற்கு சில நிமிடங்கள்தான் செலவாகும். ஆனால், உங்களை சுற்றியிருப்பவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால் அவர்கள் தங்களால் முடிந்த அளவு சிறப்பாக பணிபுரிவார்கள். அதனால், உங்களுக்கு நிறைய நன்மைகள் ஏற்படும். மாறாக, நீங்கள் கடுகடுப்பாக அமர்ந்திருந்தால் அவர்கள் உங்கள் நாளை மேலும் சிக்கலுள்ளதாக ஆக்குவார்கள். அவர்களோடுதான் உங்கள் வாழ்க்கை நடந்தாக வேண்டும். அவர்கள் அதிருப்தியோடு இருந்தால் பல வழிகளில் உங்களுக்குத்தான் சிரமம்.

உங்கள் தன்மைகள் தினம்தோறும் மாறுவதால் மற்றவர்கள் குழப்பமடைய மாட்டார்களா? நிச்சயமாக மாட்டார்கள். மாறாக, மகிழ்ச்சியடைவார்கள். "இது என்னுடைய வேலைத்திறனை பாதிக்காதா?" நிச்சயமாக இல்லை. சூழ்நிலைகளின் கட்டாயத்தாலேயே நீங்கள் ஒரே வகையான ஆளுமையின் தன்மையில் சிக்கிக்கொண்டுவிட்டீர்கள். உங்கள் ஆளுமையையே விழிப்புணர்வு இல்லாத தன்மையில் உருவாக்கியிருக்கிறீர்கள். அதனால்தான் ஒரே வகையான ஆளுமையில் சிக்கிக் கொண்டீர்கள்.

இப்போது நீங்கள் கூறினீர்கள், "எங்களுக்கு வீட்டில் ஒருவிதமான ஆளுமை இருக்கிறது. குழந்தைகளிடம் மற்றொரு விதமாய் இருக்கிறது. வேலையில் ஒரு விதமாய் மற்றும் வெளியே இன்னொரு விதமாய் இருக்கிறது." நீங்கள் கவனித்துப் பார்த்தால் அது உண்மையல்ல என்று அறியலாம். நீங்கள் வெவ்வேறு இடங்களில், அந்த இடங்களுக்குத் தகுந்தாற்போல் இயங்கலாம். ஆனால் அடிப்படையான ஆளுமை எல்லா இடங்களிலும்

உலகெங்கும் அரிய சொற்பொழிவாளராக அறியப்பட்டிருக்கும் சத்குரு, ஆன்மீகப்பயிற்சிகள் மூலம், பல்லாயிரக் கணக்காண மக்களின் உள்நிலை வளர்ச்சியில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்த்தி வருகிறார்.

உள்நிலை விஞ்ஞான வகுப்புகள், அனைவருக்கும், தங்களை சீரமைத்துக் கொள்வதற்கான கருவிகளைத் தருகின்றது. "இங்கு என்னுடைய வேலை பழங்காலத்து தொழில்நுட்பத்தை தூய்மை செய்து எவ்வித குழப்பமும் இல்லாமல் உங்களுக்கு வழங்குவதுதான்" என்கிறார் சத்குரு.

"உள்நிலை விஞ்ஞானம்'' வகுப்புகளில் பங்கேற்கும் பங்கேற்பாளர்களுக்கு தொன்மை வாய்ந்த யோகக் கலையான ஷாம்பவி மகாமுத்ராவில் தீட்சை வழங்கப்படுகிறது. இப்பயிற்சியை தினசரி 21 நிமிடங்கள் செய்துவரும் போது, முற்றிலும் வேறான வாழ்க்கை அனுபவங்களைத் தருவதோடு, ஒருவரை ஆன்மீகத்தில் வேரூன்றவும் செய்கிறது.

ஈஷா யோக மையத்தில் அமைந்துள்ள நாளந்தா கருத்தரங்கு மையத்தில் உள்நிலை விஞ்ஞான வகுப்புகள் நடைபெறுகின்றன. இங்கு நிர்வாகக்குழு கூட்டங்கள் நிகழ்த்தத் தேவையான அனைத்து தற்கால வசதிகளும், தனிமையான அமைதியான ஆக்கப்பூர்வமான சூழ்நிலையும், அதற்கு பக்கபலமாக யோகாவும், புத்துணர்வூட்டும் நிகழ்ச்சிகளும் இங்கு உண்டு.

ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். உங்களால் அதையும் மாற்ற முடியும். மேலும் இதை மாற்றிக் கொள்வது உங்களுக்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும். ஏனெனில் எல்லா நேரங்களிலும் உங்களுக்குள் ஒரு புதிய நபரை அனுபவிக்க முடியும். எப்படியோ, இது உங்களுடைய படைப்புதான். எனவே எதற்காக ஒரு வழியில் மட்டும் வரையறுத்துக் கொள்ள வேண்டும்?

கடவுள் உங்களுக்காக ஒரு ஆளுமையை முடிவு செய்திருந்தால், அது மட்டுமேதான் இருக்கும். ஆனால் ஆளுமையை எப்போது நீங்கள் உருவாக்கினீர்களோ, இதனை நீங்கள் ஒவ்வொரு நாளும் உங்கள் உடைகளை மாற்றிக் கொள்வது போல் மாற்றிக் கொள்ள முடியும், அப்படித்தானே? பெரும்பாலான மக்கள் உடைகளில் கூட மாற்றம் ஏற்படுத்துவதில்லை. ஒரே விதமான உடைகள் அணிவதையே பழக்கமாக வைத்திருக்கிறார்கள். நீங்கள் உங்களை சற்று இளக்கமாக வைத்திருக்க வேண்டும். வாழ்க்கையின் தன்மையை உணராமல் இன்று நாம் துன்புற்றிருப்பதற்கு காரணம், நாம் இறுகிப்போயிருப்பதுதான்.

சில ஆன்மீகவாதிகள், மற்றவர்களை விட இன்னும் அதிகமாக இறுகிப்போயிருக்கிறார்கள், இல்லையா? (சிரிக்கிறார்)

இப்போது நீங்கள் ஒரு ஆளுமையிலேயே சிக்கியுள்ளீர்கள். சூழ்நிலைகள் வேறாக இருக்கும்போது, உங்கள் செயல்கள் வேண்டுமானால் வேறாக இருக்கலாம். ஆனால் உங்கள் ஆளுமை மாறவில்லை. அதே ஆள்தான். ஏனெனில் உங்களுக்கும் உங்கள் ஆளுமைக்கும் வேறுபாடு இல்லை, இல்லையா? நீங்கள் அதுவாகவே ஆகிவிட்டீர்கள். இந்த முகமூடி இப்போது உங்கள் முகத்தில் கெட்டியாக ஒட்டிக் கொண்டிருக்கிறது. உங்களால் இந்த முகமூடியை எடுக்க முடியவில்லை. முகமூடியைக் கழற்ற வேண்டுமென்றால், அதனோடு ஒட்டியிருக்கும் பசையை தளர்த்த வேண்டும். இந்த பசைதான் உங்கள் அடையாளம். எனவே உங்கள் அடையாளங்கள் கரைவதற்கான பல்வேறு சூழ்நிலைகளை நாங்கள் இங்கு உருவாக்குகிறோம்.

எனவே, தியானம், யோகப்பயிற்சி போன்றவை மூலம் உங்கள் அடையாளத்தை கரைப்பதற்கான வெவ்வேறு சூழல்கள் உருவாக்குகிறோம். இந்தக் கிரியைகள் மூலம் உங்கள் அடையாளங்கள் வலுவிழந்து வளையும் தன்மையை எட்டுகின்றன. ஒருவேளை முழுக்க அகன்றிருக்காது. ஆனால் மெல்ல மெல்ல இளக்கம் பெற்றுவிடும். இன்னும் சற்று அதிகமாக முயன்றீர்களென்றால், அந்த முகமூடியை முழுவதுமாக கழற்றிக்கூட வைத்துவிடலாம்.

ஈஷாவில் மேல்நிலை வகுப்புகளான மூன்றுநாள் பாவ ஸ்பந்தனா, ஏழு நாள் சம்யமா போன்ற வகுப்புகளுக்கு வரும்போது நீங்கள் யார் என்பதையே முற்றிலும் மறந்துவிடுவீர்கள். அங்கிருக்கும் சூழ்நிலை அவ்வளவு தீவிரமாகவும், வித்தியாசமாகவும் இருக்கும். சிறிது நேரத்திற்குப்பிறகு அங்கே இருப்பது 'நீங்கள்' என்பதையே உணரமாட்டீர்கள். வகுப்பு முடிந்து திரும்பும்போது நீங்கள்தான் அந்த வகுப்பை மேற்கொண்டீர்கள் என்பதை நீங்களே நம்பமாட்டீர்கள். பலரும் தாங்கள் சம்யமா வகுப்பில் கலந்துகொண்டு திரும்பிவிட்டதை நம்புவதே இல்லை. ஏன் என்றால் தியானம் மட்டுமின்றி அங்கிருக்கும் சூழலே உங்கள் ஆளுமைக்குத் துணைபோகாத விதத்தில்தான் உருவாக்கப்பட்டுள்ளது.

உங்கள் ஆளுமைக்கு இருக்கும் அனைத்து உறுதுணைகளையும் அகற்றுவதுதான் நோக்கம். ஏனெனில் உங்கள் உதவியின்றி உங்கள் ஆளுமை ஒரு விநாடிகூட இருக்க இயலாது. ஏதாவது தீவிரமான செயலில் ஈடுபடுத்திக்கொண்டால் அது சிறிது இளக்கம் பெறலாம். ஆனால் அது முறையான வழி அல்ல. அதனை அறிவியல்ரீதியாக அணுகி அகற்றுவதற்கான வழிகளைத்தான் இப்போது நாம் பார்க்கிறோம்.

மிகத் தீவிரமான அர்ப்பணிப்புணர்வோடு தங்கள் செயல்களை ஆனந்தமாக அனுபவிப்பவர்கள், ஓர் இலக்கை வகுத்துக்கொண்டு செயல்படுபவர்களைவிடவும், வளைந்து கொடுக்கும் தன்மை மிக்கவர்களாக விளங்குகிறார்கள். ஏனெனில் பணியில் இருக்கிற ஈடுபாடே அவர்கள் ஆளுமையை இளக்கம் பெறச் செய்கிறது. ஆனால், ஓர் இலக்கை வகுத்துக்கொண்டு அதற்காக தீவிரமாக உழைப்பவர்கள் பலமான ஆளுமை கொண்டவர்களாகவே இருக்கிறார்கள்.

உங்கள் ஆளுமையை கட்டமைப்பதே உங்கள் விருப்பங்களும், வெறுப்புகளும் தான். உங்களுக்கும் உங்களை அடுத்துள்ள மனிதருக்கும் உள்ள வேறுபாடே அவரது விருப்பு, வெறுப்புகளுக்கும் உங்கள் விருப்பு, வெறுப்புகளுக்கும் உள்ள வேற்றுமை தான். யோகாவின் அடிப்படையே விருப்பு, வெறுப்புகளைக் கடந்த நிலைக்கு உங்களை அழைத்துச் செல்வதுதான். இங்கு எதைப் பற்றி நாம் பேசினாலும் எந்த ஒரு செயல் செய்தாலும் அவற்றின் அடிப்படை நோக்கமே விருப்பு, வெறுப்புகளை அழிப்பதுதான்.

விருப்பு, வெறுப்புகளோடு இந்த உலகில் வாழ்வது முட்டாள்தனமானது. ஆனால் உங்கள் தர்க்க மனம், 'எனக்குப் பிடித்ததை நான் செய்ய வேண்டும். அதுதான் சுதந்திரம்' என்று உங்களை எண்ணத் தூண்டுகிறது. உங்கள் விருப்பு, வெறுப்புகளுக்குள் அடிமைப்பட்டிருப்பதையே நீங்கள் சுதந்திரம் என்று கருதுகிறீர்கள். விரும்புவதைச் செய்வதே சுந்திரம் என்று உலகெங்கும் மனிதர்கள் கருதுகிறார்கள். உண்மையில் பார்த்தால் உங்கள் விருப்பங்களும், வெறுப்புகளுமே அடிமைத்தனத்தின் அடிவேர்கள்.

குடும்பத்திலோ, பணியிடத்திலோ இயங்குகிறபோது கூட விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் செயல்பட்டால்

பல முட்டாள்தனங்களைச் செய்வீர்கள். ஒரு மனிதரை உங்களுக்குப் பிடிக்கும், இன்னொருவரைப் பிடிக்காது என்றால் சூழ்நிலைக்கு என்ன தேவையோ அதனை உங்களால் செய்ய முடியாது. ஒரு மனிதரைப் பிடிக்காது என்பதாலேயே அவர் செய்கிற அற்புதமான காரியங்களைக் கூட கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறீர்கள். உங்கள் அன்றாட வாழ்விலேயே இதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? ஒரு மனிதரை பிடிக்கும் என்று முடிவு செய்தீர்களென்றால், அவர் எவ்வளவு மோசமான காரியம் செய்தாலும் அது உங்கள் கண்ணுக்கு தெரியாது. உங்கள் விருப்பு, வெறுப்புகளால் எடை போடுகிற தன்மையை இழந்துவிடுகிறீர்கள். இத்தகைய விருப்பு, வெறுப்புகளில் சிக்கிப்போகிறபோது விழிப்புணர்வு என்பது சாத்தியமே இல்லை.

ஒன்று பிடிக்கும் என்பதாலேயே உங்களையும் அறியாமல் அதனோடு அடையாளப்படுத்திக் கொள்கிறீர்கள். வாழ்க்கையின் அமைப்பே எப்படியிருக்கிறது என்றால், வாழ்க்கை உங்களுக்கு இயல்பாக நிகழ்வதற்கான அத்தனை சாத்தியங்களும் உள்ளன. நீங்கள் வெறுமனே அமர்ந்திருந்து வாழ்வின் எல்லையில்லாத தன்மையை ஆனந்தமாக அனுபவிக்க முடியும். ஆனால் என்ன சிக்கலென்றால் நீங்கள் தவறான கோணத்தில் அதை அணுகி துன்பத்திற்கு ஆளாகிறீர்கள். எல்லாவற்றையும் நீங்களே உருவாக்கி, நீங்களே ஈடுபட்டு, நீங்களே அனைத்தையும் ஏற்கவேண்டி வந்தால் வாழ்க்கையே மிகக் கடினமானதாக இருந்திருக்கும். ஆனால், இங்கு எல்லாமே நல்லவிதமாக அமைந்திருக்கிறது. ஒரு கணினியின் மென்பொருள் போல, வாழ்க்கை துல்லியமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஒன்றில் நீங்கள் விருப்பமுடன் ஈடுபடும்போது, வாழ்க்கை, அதை நோக்கி உங்களை வழிநடத்திச் செல்கிறது. ஆனால், அது வேற்றுமை இல்லாமல், பிரித்தறியாமல், உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு நகர்வதால், உங்கள் விருப்பம் நரகத்திற்கு செல்வதெனில், அது உங்களை நரகத்திற்கு அழைத்துச் செல்லும்.

பெரிய நிறுவனம் ஒன்றில் மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குனராக இருந்த ஒருவர் இறந்துபோனார். சொர்க்கத்திற்கு அவர் போனபோது அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. "சொர்க்கத்திற்கு வருகைதரும் முதல் மனிதவள மேம்பாட்டு நிபுணர் நீங்கள்தான். எனவே, சொர்க்கத்திற்கு வருவதற்கான

தியானலிங்கம் யோகக்கோவிலில் உள்ள பதஞ்சலி முனிவரின் கற்சிலை. யோக விஞ்ஞானத்தின் தந்தை என்று இவர் போற்றப்பட்டாலும், இவர் அதை உருவாக்கவும் இல்லை, கண்டுபிடிக்கவும் இல்லை..

மொழிகளிலும், இலக்கணத்திலும், இசையிலும் மிக்க ஈடுபாடும் திறனும் பெற்றிருந்த இந்த உயர்ந்த ஆன்மீக குரு, அன்றுவரை பழக்கத்தில் இருந்து வந்த அனைத்து யோகக் கலாச்சாரங்களையும் ஒருங்கிணைத்து இன்று நாம் காணக்கூடிய விஞ்ஞான வடிவம் தந்தவர். இவரது யோக சூத்திரங்கள்தான் இவரை உலகுக்கு அடையாளம் காட்டின.

பாஸ்போர்ட் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கலாம், ஆனால் நீங்கள் விரும்பினால் ஒருமுறை நரகத்தையும் பார்வையிட்டு விட்டு முடிவு செய்யலாம்" என்றார்கள். இவர் "நான் ஏன் நரகத்தை பார்க்க வேண்டும்? நான் சொர்க்கத்தில்தான் இருக்க விரும்புகிறேன்" என்றார். அதற்கு கடவுள், "ஒரு முறை அது எப்படி இருக்கிறது என்றாவது பார்க்கலாமே" என்றவுடன், இவர் ஒப்புக்கொண்டார். நரகத்திற்குப் போனபோது அழகான நீச்சல் குளத்தில் சிலர் மகிழ்ச்சியாக நீந்திக் கொண்டிருந்தனர். சிலர் மகிழ்ச்சியாக வெயில் காய்ந்து கொண்டிருந்தனர். ஒரு பெரிய கால்ப் மைதானமும் இருந்தது. "இது அற்புதமான நரகமாக அல்லவா உள்ளது?" என்று அந்த பெண்மணி எண்ணினார். கடவுள் அவரிடம், "சரி. இப்பொழுது நாம்

சொர்க்கத்தை பார்வையிட செல்லலாம். பிறகு நீ முடிவெடு" என்று சொல்லி, சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றார்.

அங்கே திறந்த ஆகாயம் இருந்தது. பலபேர் மேகங்களுக்கு மத்தியில் மிதந்து கொண்டு பாட்டு பாடிய வண்ணம் இருந்தனர். இதை பார்த்த பின், அந்தப் பெண்மணி, "இதுவும் நன்றாகத்தான் உள்ளது. ஆனால் நான் நரகத்திற்கே செல்ல விரும்புகிறேன். எப்படியும், என் நண்பர்கள் அங்குதான் இருக்கிறார்கள், கால்ப் மைதானம் வேறு அங்கு இருக்கிறது" என்று சொன்னார். எனவே, அவர் நரகத்திற்கு அனுப்பப்பட்டார். இந்தமுறை போனபோது நரகம் ஒரு பெரிய பாலைவனமாக இருந்தது. எல்லோரும் உணவில்லாமல் வருந்திக் கொண்டிருந்தார்கள். இவருக்கு அதிர்ச்சி. "இங்கிருந்த நீச்சல் குளம், கால்ப் மைதானம் இவையெல்லாம் எங்கே?" என்று கேட்டார். "நீங்கள் அலுவலகத்தில் நுழைந்த முதல் நாளைப் போன்றது அது. இதுதான் உண்மையான அலுவலகம் போன்றது" என்று பதில் வந்தது (சிரிக்கிறார்). இத்தனை நாள் மற்றவர்களுக்கு இதைச் செய்து வந்தார். இப்போது இவருக்கே இது நேர்ந்துவிட்டது! (சிரிப்பலை)

பொதுவாகவே ஒரு நிறுவனத்தில் மனிதவள மேம்பாட்டுத்துறையின் செயல்பாடே புதிதாக பணிக்கு வருகிற மனிதர்களை அந்த நிறுவனத்திற்கேற்ப மாற்றியமைப்பதுதான். அதாவது சரியான விதத்தில் பார்க்கும் பட்சத்தில், ஒருவருடைய ஆளுமையை உங்களால் நன்றாகப் புரிந்து கொள்ளமுடியும். அவர் வாய் திறந்து பேசவோ அல்லது ஏதாவது செயல் செய்யவோ கூட வேண்டாம். இதற்கு பெரிய யோகசக்தி எதுவும் தேவையில்லை. அவர் நிற்கும் விதம், உட்காரும் விதம், சிரிக்கும் விதம் இவற்றைப் பார்த்தாலே அவருடைய ஆளுமை எத்தகையது என்று உங்களால் புரிந்து கொள்ள முடியும். சம்பந்தப்பட்ட நபருக்கு தன் ஆளுமை குறித்து எதுவும் தெரியாது, ஆனால் மற்றவர்களுக்கு அவருடைய ஆளுமை எத்தகையது என்று தெரிகிறது. அதுதான் முழுப் பிரச்சனையுமே.

அத்தியாயம் 4

திருஷ்டி – தொலைநோக்குப் பார்வை

இந்த மனித சமுதாயத்தின் வரலாற்றை திரும்பிப் பார்த்தால், அந்தந்த கால கட்டங்களில் வாழ்ந்த புனிதமான சிலரின் வாழ்க்கையும் பணியும் மற்றவர்களின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

ஆனால் சத்குரு, வாழ்க்கையில் ஒரு குறிக்கோளை வைத்துக் கொள்வது மட்டுமே கூட ஒருவரை உயர்த்தக் கூடும் என்றும், ஒன்றை அடைய வேண்டும் என்று உறுதியாக இருக்கும்போது அது வாழ்க்கையில் நிகழும் வாய்ப்பு எப்படி அதிகரிக்கிறது என்பதையும் விளக்குகிறார்.

சில மகான்களின் தொலைநோக்கு இவ்வுலகில் ஏற்படுத்தி இருக்கும் தாக்கத்தையும், ஒரே குறிக்கோளை பல பேர் பகிர்ந்து கொள்ளும் போது, அது எப்படி இந்த உலகத்தையே வாழ்வதற்கு இனிமையான இடமாக மாற்றக்கூடும் என்பது பற்றியும் சத்குரு இங்கு விளக்குகிறார்.

தியானலிங்கம் சந்நிதியின் வாயிலைப் பார்த்தவாறு உள்ள, 15 அடி உயரம் கொண்ட, உலோகத்தால் ஆன நந்தி சிலை

உங்களைச் சுற்றியுள்ள உலகத்தை உணர்ந்து பார்த்தால், உங்கள் அனுபவம் என்பதை குரல்கள், எண்ணங்கள், உணர்வுகள் ஆகியவற்றின் குழப்பமான கலவையாக உணர முடியும். பல்வேறு நிலைகளிலும் சூழல்களிலும் வெளிப்படும் குழப்பங்களின் குவியல்தான் இந்த குரல்கள், எண்ணங்கள் மற்றும் உணர்வுகள். இப்போதைய உண்மைநிலையை முற்றிலும் முரணாக உணர்ந்து, இந்தக் குரல்கள், எண்ணங்கள், உணர்வுகள் உருவாகி, வெளிப்படுத்தப்படுகின்றன. மனிதன் இத்தகைய குழப்ப நிலையில் உள்ளபோது, தன்னைச் சுற்றியுள்ள உண்மைநிலையை மேலும் முரணாக உணர்ந்து, அதற்கு அடிமையாகி, துரதிர்ஷ்டவசமாக அவன் தனக்கு மட்டுமின்றி, தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்கும் எல்லா உயிர் வடிவங்களுக்கும் வலியையும், வேதனையையும் உருவாக்குகிறான்.

அறிவியலாலும், தொழில் நுட்பத்தாலும் பெற்றுள்ள வசதிகளும், வாய்ப்புகளும் தாண்டி, மனித சமூகம் முழுவதுமே பெரும் குழப்பத்திலும், சிக்கலிலும்தான் இருக்கிறது. உங்களைச் சுற்றியுள்ள மனிதர்கள் தங்கள் எண்ணங்களாலும், உணர்வுகளாகவும் வெளிப்படுத்தும் சத்தங்களை, நீங்கள் உணர்வு பூர்வமாக உற்று நோக்கினால், அவை எல்லாமே பெரும் குழப்பமாகவும், சிக்கலாகவும் இருப்பதை உணர முடியும்.

இதுதான் இன்றைய உண்மை நிலை. அவற்றில் தெளிவோ, செயல்திறனோ, தொலைநோக்குப் பார்வையோ எதுவுமே கிடையாது. உலகில் பலர் தங்களுக்கு உண்மையிலேயே எது தேவை என்பதை உணராமலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியே எது தேவை என்று உணர்ந்த சிலரும், அவர்கள் வாழ்க்கையில் அதை அடைவதற்கான செயல்திறனையோ, தொலைநோக்குப் பார்வையையோ வாழ்க்கையில் உருவாக்கிக் கொள்ளவில்லை. பெரும்பாலான நேரங்களில், எது எளிமையானதோ, அடையக்கூடியதோ, தங்களால் எட்ட முடிந்ததோ அத்துடன் நின்று விடுகிறார்கள்.

எளிதில் அடையக்கூடிய ஒன்றையே மக்கள் நாடுகின்றனர். அது அவர்களுக்குத் தேவையானதா? அதைத்தான் அவர்கள் வாழ்வில் உண்மையாக விரும்பினார்களா? என்றெல்லாம் யோசிப்பதில்லை. அந்த ஒன்றுதான் எளிதில் கிடைக்கிறது, அதனால் அது போதும். எது முடியும், எது முடியாது; எதை அடைய முடியும், எதை அடைய முடியாது என்பதை உணர வேண்டி உங்கள் தர்க்க மனதை நீங்கள் நம்பினால் அது எப்போதுமே சராசரி விஷயங்கள்தான் சாத்தியம் என்று சொல்லும். நாம் எப்போதுமே இந்த ஷணத்தில் நம்மைச் சுற்றியுள்ள உண்மைச் சூழலை மட்டுமே கணக்கில் கொண்டு நம் வாழ்க்கையை உருவாக்க முயல்கிறோம். இந்த ஷணத்தில் உள்ள சூழல் மட்டுமே மையப் புள்ளி இல்லை. நாம் இப்போதுள்ள நிலையுடன் நாளை செல்ல வேண்டிய திசையை இணைக்க வேண்டாம். நம் வாழ்வின் உச்ச நிலையைத் தொடும் நம் விருப்பத்துக்கும் இந்தச் சூழலுக்கும் எந்த முடிச்சும் போட வேண்டாம். நாம் இன்றுள்ள சூழ்நிலையுடன் தொடர்பு படுத்தி நம் இலட்சியங்களை யோசிப்போமானால், மீண்டும் எளிதானதை மட்டும், நம்மால் முடியும் என எண்ணுவதை மட்டும் வரையறுத்துக் கொள்வோம்.

எப்போது ஒருவன் தனக்கும் தன்னைச் சுற்றியுள்ள உலகத்துக்கும் தான் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் இருக்கிறானோ, அப்போது அதை அவனால் உருவாக்க முடியும். அது அவனின் திறமைக்கு அப்பாற்பட்டதாக இருக்காது. அது இந்தப் பிறவியில் நிகழலாம், அல்லது அடுத்த ஒன்றிரண்டு பிறவிகளில் நிகழலாம். எப்படியும் அவன் விரும்புவதை அடைந்தே தீருவான்.

அத்தகைய மனிதனுக்கு, தெளிவான தொலைநோக்குப் பார்வை உடைய மனிதனுக்கு, வாழ்வின் ஒவ்வொரு ஷணத்திலும் அதையே நாடுபவனுக்கு, அந்த உயர் நிலைகள் தானாகவே அவன் காலடியில் வந்து சேரும். மனிதன் குழப்பங்களின் மூட்டையாக இருப்பதால், அவன் விரும்பாததையே பெரும்பாலான நேரங்களில் தேடிச் செல்வதால், அவன் உண்மையிலேயே விரும்புவது அவனிடம் சேர்வதில்லை. தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை முரணாக உணர்வதே தொலைநோக்குப் பார்வையின்மைக்கும், செயல்திறன் அற்ற நிலைக்கும் காரணமாக அமைகிறது.

உங்களுக்குத் தெரிந்த உயர்நிலையையே தேடிச் செல்லுங்கள். அது நிகழ்கிறதோ, இல்லையோ, வெறுமனே அந்தத் தொலைநோக்குப் பார்வையோடு வாழ்வதே எந்த மனிதனுக்கும் வாழ்வில் ஏற்றமும், அவன் வாழ்வின் சுதந்திரமான, மகிழ்ச்சி ததும்பும் வழியாகவும் இருக்கும். அது நாளை நிகழப் போகிறதா அன்றி நூறு ஆண்டுகள் கழித்து நிகழப் போகிறதா என்பது முக்கியமில்லை. உங்களுக்கு அது நடக்குமா, நடக்காதா என்பது தெரியாது. ஆனால் நிச்சயம் ஒரு தொலைநோக்குப் பார்வை உள்ளது.

அது எளிதானதா? கடினமானதா? அடைய முடியுமா? அடைய முடியாதா? என்றெல்லாம் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இன்னும் சொல்வது என்றால், இறுதி முடிவைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை. நீங்கள் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் இருக்கிறீர்கள், அதற்காக உங்கள் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறீர்கள்.

வாழ்வின் உயர்நிலையை அடைய உள்ள எளிய வழிகளில் இதுவும் ஒன்று. பகவத் கீதை முழுவதுமே இதைப்பற்றித் தான் பேசுகிறது. அது நிகழுமா, நிகழாதா என்ற சந்தேகத்தையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு உங்கள் தேவையை உணர்ந்து செயல்படுங்கள். அத்தகைய செயல்பாடே ஒரு ஆன்மீகச் சாதனைதான். தொலைநோக்குப் பார்வை என்பது நம் உள்தன்மையிலும், வெளியேயும் உள்ள வரையறைகளைக் கடந்து செல்லும் ஒரு முக்கியமான வழிமுறை.

ஒரு மனிதன் எந்த வித தொலைநோக்குப் பார்வையுமில்லாமல் வாழ விரும்பினால், அந்த மனிதன் முழுமையான அப்பாவியாக இருக்க வேண்டும். அத்தகைய மனிதன் வாழ்க்கையை எளிதாக வாழ்ந்து விட முடியும். அவன் வாழ்வுக்குத் தொலைநோக்குப் பார்வை தேவையில்லை. ஏனெனில் அவன் அகங்காரமில்லாத ஒரு குழந்தையைப் போன்றவன். அப்படி இல்லாத பட்சத்தில், எந்த ஒரு மனிதனுக்கும் தொலைநோக்குப் பார்வை அவசியம் தேவை.

இந்தியப் பண்பாட்டில், பல கதைகள் உண்டு. சில குறிப்பிட்ட முனிவர்களும், சாதுக்களும் விருப்பப்படும்போது, கடவுளும் இங்கே வந்து அவர்களுக்கு வேண்டியதை செய்து தந்ததாக. இங்கே ஒரு மனிதன் தன் முழு விருப்பத்துடனும் தொலைநோக்குப் பார்வையுடனும் அமர்ந்து, சிவன் இங்கே வர வேண்டுமென்றால் சிவன் இறங்கி வந்துதான் தீர வேண்டும். அவருக்கு வேறு வழியேயில்லை.

உங்களுக்கு எதைத் தேடுகிறோம் என்ற தெளிவும், அதை அடையும் தீவிரமும் இருந்தால், இன்று முடியாது என்பது கூட உங்கள் வாழ்வில் நாளை சாதாரண நிகழ்வாக நடக்கும் சாத்தியம் உள்ளது என்பதைத்தான் இந்தக் கதைகள் சொல்கின்றன. எந்தச் சிரமமுமின்றி அது உங்கள் காலடியில் விழும். ஆனால் நீங்கள் ஒவ்வொரு ஷணமும் தர்க்கரீதியாக, அதை கேள்விக் குறியாக்கி அதை அடைய முடியுமா, முடியாதா என்று எண்ணிக் கொண்டிருந்தால் அதன் விளைவாக உங்கள் மனதிலும் உங்களைச் சுற்றியுள்ள உலகத்திலும் நீங்கள் உருவாக்கும் குழப்பம், உலகத்தையே பெரிய குழப்பமாக மாற்றி விடுகிறது.

நாம் உண்மையில் எதை நாடுகிறோம் என்பதற்கான தொலைநோக்குப் பார்வையை நம்முள் உருவாக்க வேண்டிய நேரம் இது. நீங்கள் உங்கள் உள்ளே ஆழமாகப் பார்த்தால், இந்த உலகத்தின் பொதுவான தொலைநோக்குப் பார்வையும் உங்கள் தொலைநோக்குப் பார்வையும் ஒன்றாகத்தான் இருக்கும். ஒரு மனிதனாக நீங்கள் எதை உயர்வு என்று அறிந்துள்ளீர்களோ, உங்கள் உயர்ந்த பட்சத் தேடல் எதுவாக இருக்குமோ, அதையே உங்கள் தொலைநோக்குப் பார்வையாக உருவாக்கிக் கொள்ளுங்கள். இடையில் நிகழும் அல்லது நிகழாத வேறு எதுவும் முக்கியம் இல்லை. சிதறாத கவனத்துடன் கூடிய, தீவிரமான தேடலே வாழ்க்கையை இவ்வுலகிலும், இதைத் தாண்டியும் உணர்வதற்கான எளிய வழி.

கேள்வி: எனக்குப் பின் 2500 வருடங்களில் தர்மச்சக்கரம் ஒரு முழு சுற்று முடித்து மீண்டும் புதிய சுற்றைத் தொடங்கும் என்பதாக கௌதம புத்தர் சொல்லியிருந்தார். இப்போது அவர் சொன்ன கெடுவிற்கு அருகில் நாம் இருக்கிறோம். இது பற்றி தாங்கள் ஏதும் சொல்லவிரும்புகிறீர்களா?

சத்குரு: புத்தர் சொல்லி ஏறக்குறைய 2500 ஆண்டுகள் ஆகிறது. நாம் இந்த நேரத்தில் இங்கிருப்பது ஏதோ தற்செயலானது அல்ல. உலகின் அனைத்துக் கலாச்சாரங்களிலும் குறிப்பாக இந்தக் கலாச்சாரத்திலும், அடுத்த 200 வருடங்களில் பெரிய அளவில் ஆன்மீக நிலையில் முன்னேற்றங்கள் நடக்கும். பல வழிகளில் அது ஒரு புரட்சியாக நிகழப் போகிறது. மனிதர்களால் செய்யமுடியாதவை, ஒரு மனிதர் தன் வாழ்நாளில் சாதிக்க முடியாதது, அடுத்த 200 வருடங்களில் நிகழும்.

நாம் வாழும் இந்த தருணங்கள்தான் இந்த பிரபஞ்சத்தில் மிக முக்கியமானவை என்று நான் சொல்ல வரவில்லை. ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு தலைமுறையும், அது வரலாற்றில் எந்தக் காலமாக இருந்தாலும் சரி, அந்த காலத்தில் அது மிகவும் முக்கியமான தருணம்தான். ஆனால் உலகின் வரலாற்றில் வெவ்வேறு தருணங்களில் வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கின்றன. வெற்றி பெற்றதாலோ, வளம் அடைந்ததாலோ, தோல்வி அடைந்ததாலோ அல்லது அடிமைப்பட்டதாலோ, அதைப்

பொறுத்து அந்தந்த தருணங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றன.

ஆனால் தற்போதைய உலகிற்கு இந்த தருணம் ஆன்மீக ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. முன்பு எப்போதும் இருந்ததை விட தற்போது மக்கள் மிகவும் வசதியாக இருக்கின்றனர். அதே நேரத்தில் முன்பு எப்போதும் இருந்ததை விட தற்போது அதிக மன அழுத்தத்தில் இருக்கின்றனர். இதற்கு முன்னர் மனிதன் இந்த அளவிற்கு ஆன்மீகத்தில் ஆர்வம் காட்டியதேயில்லை. உலகில் போராட்டங்கள் அதிகம் ஆக ஆக உள்நிலை பற்றிய ஆர்வமும் மனிதனுக்கு அதிகரித்து வருகிறது.

ஒரு வழியில், இது ஒரு அற்புதமான படிக்கல். இந்த செயல் முறை தொடர்ந்தால், இந்த ஆர்வம் ஒவ்வொருவருக்குள்ளும் தீவிரமானால், மனித குலத்திற்கு பல வழிகளில் அது ஒரு தீர்வாக இருக்கும்.

இதுவரை மனிதன் வெளியுலகை வெற்றி கொள்ளவே ஆர்வம் காட்டினான். தற்போது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் உதவியால் நாம் வெளிஉலகில் நிறைய சாதித்து விட்டோம். வெளியுலகை வெற்றி பெறுவது நம்மை எங்கும் கொண்டு சேர்க்காது என்பதை கடந்த 200 வருடங்களுக்குள்ளாகவே மனிதன் புரிந்து கொண்டு விட்டான். நவீன விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இல்லாதிருந்தால் வெளியுலகை வெற்றி பெறுவது பயனற்றது என்பதை அறிய இன்னமும் பல நூற்றாண்டுகள் எடுத்திருப்போம்.

ஒரு காலத்தில் கௌதம புத்தர், அலெக்ஸாண்டர், அசோகர் வெளியுலகை வெற்றி பெறுவது நம்மை எங்கும் கொண்டு சேர்க்காது என்பதை உணர்ந்தனர். ஆனால் இன்று ஒவ்வொரு சாதாரண மனிதனும் கூட உணர்ந்து கொள்ள ஆரம்பித்து விட்டான். நிலவுக்குச் செல்லவும், வியாழன் பற்றி அறியவும், விஞ்ஞான முன்னேற்றம் நமக்கு உதவுகிறது, ஆனால் நம்முள் நாம் எதையும் அறிய முடியவில்லை என்பதை அனைவராலும் இப்போது பார்க்க முடிகிறது. எனவே இப்போதைய நிலைமை ஆன்மீக ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கிறது. கலவரங்களும் போராட்டங்களும் பல வழிகளில் உச்சத்திற்குப் போயிருப்பதால் தற்போது உலகம் ஆன்மீகத்தை நோக்கி முன்னேறி வருகிறது.

நான் உங்களுக்கு என்ன வழங்க இருக்கிறேனோ அது என் வார்த்தைகளில் இல்லை. உங்களுக்கு சொல்லிக் கொடுக்க என்னிடம் போதனைகள் இல்லை. செய்திகள் இல்லை. உங்கள் எதிர்காலத்தை நான் கணிக்கவும் போவதில்லைநீங்கள் என் முன்னே இருக்கும் பொழுது, என்னில் உங்களை முற்றிலும் ஈடுபட, உங்களை நீங்கள் அனுமதித்தால், பேரானந்தத்தில் மூழ்கி விடுவீர்கள். இதைத்தான் நான் உங்களுக்குத் தர விரும்புகிறேன்.

கேள்வி: இயேசு வாழ்ந்து 2000 வருடங்கள் ஆகிவிட்டன. அவருடைய கனவு நிறைவேறி விட்டதா? உண்மையில் மக்கள் அவர் சொன்னதைக் கடைப்பிடிக்கிறார்களா?

சத்குரு: ஒரு மனிதர் மிகப்பெரிய தொலை நோக்கு கொண்டிருந்தார். அவர் ஒருவரின் கனவினாலேயே நிறைய நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அதை மறுக்கவே முடியாது. இயேசுவை

மக்கள் உண்மையில் புரிந்து வைத்திருக்கிறார்களோ இல்லையோ, இன்றும் கூட, அவருடைய பெயரால் மனித நலனுக்காக நிறைய விஷயங்கள் செய்யப்படுகின்றன. அதில் சந்தேகமே இல்லை. இன்றும் கூட நீங்கள் உங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டுமெனில் கான்வென்ட் பள்ளிக்குத்தான் அனுப்புகிறீர்கள். இவ்வாறு பல நல்ல விஷயங்கள் அவருடைய கனவாலேயே நடந்திருக்கிறது

இதே போன்று ஆயிரக்கணக்கான மக்கள் தொலைநோக்குப் பார்வை கொண்டிருந்தால், இன்னும் நிறைய நல்ல விஷயங்கள் நடந்திருக்கும்.

இயேசுவின் பெயரால் நடக்கும் அனைத்துமே சரி என்று நான் சொல்ல வில்லை. பல முட்டாள்தனங்கள் அவருடைய பெயரால் நடக்கத்தான் செய்கின்றன. ஆனால் பல நல்ல விஷயங்களும் அவருடைய பெயரால் நடக்கின்றன. ஒரு மனிதரின் கனவால் 2000 ஆண்டுகள் ஆன பின்னரும் மிகவும் அழகான விஷயங்கள் நடந்து வருகின்றன.

2000 வருடங்களுக்கு முன் எவ்வளவோ பேர் இருந்தார்கள், அவர்களெல்லாம் இப்போது எங்கே? ஆனால் இயேசு கனவு கண்டதால் ஏதோ ஒரு வழியில் அது நடந்து வருகிறது அல்லவா? தவறான விஷயங்களும் நடந்திருக்கின்றன. நான் மறுக்கவில்லை. ஆனால் நிறைய நல்லதும் நடந்திருக்கிறதே..

ஒரு கௌதம புத்தர், ஒரு இயேசு, ஒரு விவேகானந்தர் கனவுகள் வைத்திருந்தார்கள். அது போதாது. மிகவும் அதிகமானோர் கனவுகள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு மனிதர் கனவுகள் வைத்திருந்து அவரை எதிர்த்து மற்றவர்கள் பணி புரியும்போது மிகவும் குறைவான விஷயங்கள்தான் நடக்கும். அப்படியில்லாமல் எல்லோரும் ஒரே கனவு வைத்திருந்தால் நிச்சயமாக அது நடக்கத் துவங்கும். நம் மக்கள் தொகையின் பெரும் பகுதி ஒரு கனவுடன் வாழ்ந்தால், மிகவும் அழகான விஷயங்கள் இவ்வுலகில் நடக்கத் துவங்கும்.

அத்தியாயம் 5

கல்பவிருக்ஷா

ஒவ்வொரு பாரம்பரியமும், ஒவ்வொரு பண்பாடும், ஒவ்வொரு சமூகமும் துன்பத்தில் உள்ள மக்களுக்கு பல வழிகளில் நம்பிக்கையை வழங்கியிருக்கின்றன. மாயபூதம் அல்லது சாந்தா க்ளாஸ் அல்லது வரம் வழங்க சிறப்புக் கடவுள் என்று பல வழிகளில் நம்பிக்கைகளை அளித்திருக்கின்றன. சிலர் இவை எனக்கு உதவியிருக்கின்றன என்று சொல்கின்றனர். ஆனால் பலருக்கோ இவை ஏமாற்றத்தைத்தான் தந்திருக்கிறது.

இந்தியப் புராணங்களில் வழங்கப்படுகின்ற 'கல்பவிருக்ஷா' எனப்படும் வரம் வழங்கும் மரத்தைப் பற்றி சத்குரு இங்கு அலசுகிறார். இதன் பின்னர் புதைந்துள்ள தத்துவத்தை விளக்கும்போது, மனிதனின் தேடல் உண்மையாவதற்கு உண்டான பரிமாணத்தை அணுகுவதற்கு வழி காட்டுகிறார்.

மனிதன் இவ்வுலகில் உருவாக்கியிருக்கும் ஒவ்வொன்றும், முதலில் அவனுடைய மனதிலேதான் உருவாகிறது. பின்னரே அவை அவனுடைய செயல்களாக இந்த உலகில்

வெளிப்படுகிறது. எனவே இவ்வுலகில் அவன் செய்யும் நல்ல செயல்களும் சரி, கெட்ட செயல்களும் சரி, அவனுடைய மனத்தில்தான் முதலில் உருவாகிறது.

இவ்வுலகில் நாம் என்ன உருவாக்கப் போகிறோம் என்ற கவலை நமக்கு இருக்குமானால், சரியான செயல்களை நாம் விரும்பியவாறு நம் மனதில் உருவாக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நம் மனதை நாம் விரும்பியபடி வைத்துக் கொள்ளும் சக்தி நமக்கில்லை என்றால், இவ்வுலகத்தில் நாம் உருவாக்கும் அனைத்தும் தற்செயலாகவோ, குழப்பமானதாகவோ தான் இருக்கும். எனவே நம் மனதை நாம் விரும்பியவாறு வைத்துக் கொள்ள முடிந்தால்தான், நம்மால் இவ்வுலகத்தையும் நமக்கு வேண்டியவாறு உருவாக்க முடியும்.

யோகக் கலாச்சாரத்தில் ஒரு சுவையான கதை உள்ளது. ஒரு நாள் ஒரு மனிதன் நீண்ட தூரம் போய்க் கொண்டிருந்தான். அவனையும் அறியாமல் சொர்க்கலோகத்தை அடைந்து விட்டான். மிகவும் அதிருஷ்டசாலி இல்லையா? (சிரிக்கிறார்). வெறுமனே நடந்து சென்றவன் சொர்க்கலோகத்தில் கால் வைத்து விட்டான்!

நீண்ட தூரம் நடந்ததால் களைப்பாகி, "மிகவும் களைப்பாக இருக்கிறது. ஓய்வெடுக்க இடம் இருந்தால் நன்றாக இருக்கும்" என்று நினைத்து திரும்பினான். அங்கே ஒரு அடர்ந்த மரத்தின் கீழ் பச்சை பசேலென புல்வெளி படர்ந்திருந்தது. சந்தோஷமாக அங்கு சென்று நிம்மதியாக படுத்து உறங்கினான். சில மணி நேரங்கழித்து, களைப்பாறி எழுந்து அமர்ந்து, "பசியாக இருக்கிறது, சாப்பிட ஏதேனும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்"என்றெண்ணினான். தன் வாழ்வில் தனக்குப் பிடித்த அனைத்து வகை உணவுகளையும் யோசித்து சப்பு கொட்டினான். உடனே அவன் நினைத்த அத்தனை வகை பலகாரங்களும் அவன் முன் தோன்றின. சொர்க்கத்தில் சேவை அப்படித்தான் இருக்கும். கேள்வி எல்லாம் கேட்கக்கூடாது.(சிரிக்கிறார்)

பசியில் இருப்பவன் கேள்வி எல்லாம் கேட்க மாட்டான். இவனும் ஒன்றும் கேட்காமல், சந்தோஷமாக வயிறாற உண்டான். அதன் பின், "வயிறு முட்ட உண்டேன், ஆனால் குடிக்க ஏதேனும்

இருந்தால் நன்றாக இருக்கும்" என்றெண்ணி, அவன் வாழ்வில் குடிக்க விரும்பிய எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தான். அவைகளும் ஒன்று விடாமல் அவன் முன்னால் தோன்றின.

குடிப்பவர்களும் கேள்வி கேட்பதில்லை. இவனும் அப்படித்தான். மது வகைகளை அருந்திய பின்... நீங்கள் எல்லாம் சார்ல்ஸ் டார்வின் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அவர், நீங்கள் எல்லாம் மனிதர் ஆவதற்கு முன் குரங்காக இருந்தீர்கள் என்று ஒரு கோட்பாடு வழங்கினார். நான் சொல்லவில்லை. அவர்தான் அவ்வாறு சொல்கிறார் (சிரிக்கிறார்). நீங்கள் எல்லாம் குரங்காய் இருந்து, பின்னர் உங்கள் வால் விழுந்து மனிதராய் மாறியதாக அவர் கூறுகிறார். ஆமாம். நிச்சயமாக வால் விழுந்துவிட்டது... ஆனால் அந்த குரங்கு..?

யோகாவில், ஒரு நிலைபெறாத மனதை, 'மர்கத' என்று அழைப்போம். 'மர்கத' என்றால் குரங்கு என்று அர்த்தம். மனதை நாம் ஏன் குரங்கு என்று குறிக்கிறோம்? குரங்கின் குணாதிசயங்கள் என்ன? ஒன்று, அது ஒரு இடத்தில் நிலைத்திருக்காது. மற்றொன்று, இன்னொருவர் என்ன செய்கிறாரோ, அதையே திருப்பிச் செய்யும். குரங்கின் இந்த முக்கியமான 2 குணங்கள் நமது மனதின் குணமாகவும் இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், நிலையில்லாமல் குதிக்கும் தன்மையை, நீங்களே குரங்குக்கு இன்னும் நன்றாக சொல்லித் தரமுடியும், அப்படித்தானே? (சிரிக்கிறார்). அடுத்து, ஒருவரைப் போலவே கண்மூடித்தனமாக நடப்பது... இது நம் மனதின் முழு நேர வேலையாகவே ஆகி விட்டது. இந்த இரு குணங்களும் இருக்கும் மனதை குரங்கென்றே நாம் குறிக்கிறோம்.

அவனுள் இருந்த குரங்கு இப்பொழுது செயல்படத் துவங்கியது. அவன் சுற்றும் முற்றும் திரும்பி பார்த்து, "இங்கே என்ன நடந்து கொண்டு இருக்கிறது? நான் உணவு கேட்டால், உணவு வருகிறது. மது வகை கேட்டால், மது வகை வருகிறது, அப்படி என்றால் இங்கே நிச்சயமாக பூதங்கள் இருக்க வேண்டும் "என்றான். உடனே அந்த இடத்தில் பூதங்கள் தோன்றிவிட்டன. "அய்யய்யோ, பூதங்கள் வந்துவிட்டன. இனி அவை என்னை சுற்றி நின்று துன்புறுத்தப் போகின்றன" என்று நினைத்தான். உடனே அந்த

பூதங்கள் அவனை சூழ்ந்து துன்புறுத்த ஆரம்பித்தன. அவன் வலியில் அலறிக்கொண்டே, "இவை என்னை இப்பொழுது கொல்லத்தான் போகின்றன" என்று சொல்லி முடித்தான். அவ்வாறே இறந்தும் போனான். இப்பொழுதுதான் இவன் அதிருஷ்டசாலி என்று சொல்லி முடித்தோம்...

பிரச்சினை என்னவென்றால், அவன் 'கல்பவிருக்ஷம்' மரத்தின் கீழ் அமர்ந்திருந்தான். அதுவோ கேட்பதையெல்லாம் தரக்கூடிய மரம். அவன் சாப்பாடு கேட்டான், சாப்பாடு வந்தது. மதுபானம் கேட்டான், மதுபானம் வந்தது. பூதங்கள் கேட்டான், பூதங்கள் வந்தன. மரணம் கேட்டான், மரணம் வந்தது.

இப்போழுது நீங்களெல்லாம் கல்பவிருக்ஷம் தேடி காட்டுக்குப் போகாதீர்கள். அங்கே மரம் இருப்பதே பெரிய விஷயமாகிப் போய்விட்டது. திடமாக ஒரே நிலையில் நிலைபெற்று இருக்கும் மனதையே, கல்பவிருக்ஷம் என்ற சொல்லால் குறிக்கிறோம். மனதை ஒரு நிலையில் நீங்கள் நிலைநிறுத்தினால், அது தானாக உங்கள் முழு அமைப்பையும் சீரமைக்கும். உங்கள் உடல், உணர்ச்சி மண்டலம், சக்தி நிலை எல்லாவற்றையும் ஒரே திசையில் ஒருங்கிணைக்கும்.

எப்பொழுது உங்களின் நான்கு பரிமாணங்களும் - உடல், மனம், உணர்ச்சி, சக்தி நிலை ஆகிய நான்கும் - ஒரே திசையில், சிறிதும் அசையாமல், ஒருங்கிணைந்து இருக்கிறதோ, அப்பொழுது நீங்கள் விரும்பும் அனைத்துமே நீங்கள் ஒரு சுண்டு விரல் கூட அசைக்காமல் அப்படியே நடக்கும்.

உங்களுக்கு இப்பொழுது இருக்கும் பிரச்சினையே, உங்கள் மனம் ஒரு நிலையில் நில்லாமல், ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டிருப்பதுதான். ஒரு இடத்திற்கு செல்ல வேண்டும் என்றெண்ணி கிளம்பி, இரண்டடிக்கு ஒரு முறை திசையை மாற்றிக்கொண்டே இருந்தால், நீங்கள் நினைத்த இடத்தை தற்செயலாக வேண்டுமானால் அடையலாமே தவிர, மற்றபடி செல்லும் வாய்ப்பு மிகவும் குறைவு.

உங்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி, அதன் மூலம் உங்கள் முழு அமைப்பையும், உடல், மனம், உணர்ச்சி மற்றும் சக்திநிலை ஆகிய 4 பரிமாணங்களையும் ஒரே திசையில் நிலைநிறுத்தும்

போது, நீங்களே கல்பவிருக்ஷம் ஆகிறீர்கள். நீங்கள் நினைக்கும் எல்லாமே நடக்கும். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் விரும்பிய பொருட்களெல்லாம், விரும்பிய மனிதரெல்லாம் இன்றே உங்கள் வீட்டிற்குள் வந்துவிட்டால், அவற்றுடன் உங்களால் வாழ முடியுமா? அதைத் தாங்கும் நிலையில் நீங்கள் இருக்கீறீர்களா?

எனவே, இத்தகைய சக்தி உங்களுக்கு வேண்டுமென்றால், எது வேண்டும், எது வேண்டாம் என்ற பகுத்தறிவும், பொறுப்பும் மிக மிக அவசியம். இப்பொழுது இவ்வுலகில் ஏற்பட்டிருக்கும் விஞ்ஞான வளர்ச்சியில், 600 கோடி மக்கள் அல்ல, வெறும் ஒரு நபர் தவறான பொத்தானை அழுத்தினால் போதும். மொத்த உலகமும் அழிந்து போய்விடும்.

இப்படிப்பட்ட சக்தியை நாம் வளர்த்திருக்கும் போது, நமது செய்கை, எண்ணம், உணர்ச்சிகள், உள் உணர்ச்சி நிலை அனைத்தும் ஒரு கட்டுக்கோப்பில் ஒழுங்காக செலுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இல்லையென்றால், இது அழிவில், சுய அழிவில் கொண்டு விட்டுவிடும். நமக்கு இதுதான் இப்போது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. நம்முடைய வாழ்க்கையை அழகாகவும் எளிதாகவும் மாற்ற வேண்டிய விஞ்ஞான வளர்ச்சி, இப்பொழுது நமக்கு இருக்கும் துயரங்களுக்கு அடிப்படையாக மாறி விட்டது. மெதுவாக இந்த உலகையே அழிக்கவும் ஆரம்பித்துவிட்டது.

எது ஒரு வரப்பிரசாதமாய் இருக்க வேண்டுமோ, அதையே நாம் ஒரு சாபமாக மாற்றி வருகிறோம். எது நம்புவதற்கில்லாத அளவு வசதியை கடந்த 100 வருடங்களாக நமக்குத் தந்து வந்திருக்கிறதோ, அவையே இப்போது, நம் விழிப்புணர்வின்மை காரணமாக, நம் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக மாறிவிட்டது. நாம் ஒரு கட்டாய செயல்பாட்டில் மாட்டிக் கொண்டு விட்டோம். நம் மனதை ஒருங்கிணைத்து வைப்பது என்பது, கட்டாய செயல்பாட்டில் இருந்து, விழிப்புணர்வுடன் கூடிய செயல்பாட்டிற்கு மாறுவதாகும்.

எதிர்பார்ப்புகளை எல்லாம் மீறி, சிலருக்கு, அவர்கள் விரும்புவது நடக்கிறது. நம்பிக்கையுடன் இருப்பவர்களுக்குத்தான் இது பொதுவாக நடக்கும். உதாரணமாக, நீங்கள் வீடு கட்ட

"உங்களால் செய்ய முடியாததை நீங்கள் செய்யாமல் இருந்தால் அதில் ஒரு பிரச்சினையுமில்லை. ஆனால் உங்களால் செய்ய முடிந்ததைக் கூட செய்யாமல் இருந்தால், நீங்கள் ஒரு பயனற்ற பேர்வழி."

நினைக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். "அய்யோ, எனக்கு இப்போது வீடு கட்ட ஆசை. வீடு கட்ட 50 லட்சம் ரூபாய் செலவாகும், ஆனால் என்னிடம் 50 ரூபாய் தான் இருக்கிறது. எனவே இது நடக்க வழியேயில்லை" என்று நினைக்கும் போது, அது எதைக் குறிக்கிறது என்றால் "எனக்கு இது வேண்டாம்" என்று சொல்வதாகத்தான் அர்த்தமாகிறது.

ஒரு நிலையில் 'வேண்டும்' என்ற ஆசையையும், மற்றொரு நிலையில் நீங்களே 'வேண்டாம்' என்றும் நினைத்தால், அக்காரியம் எப்படி நடக்கும்? மிகவும் எளிய மனிதர்களுக்கு, கடவுளையும், கோவிலையும் முழுமையாக நம்புபவருக்கு, அது நடக்கும். எளிய

மனிதர்களுக்கு மட்டுமே நம்பிக்கை வேலை செய்யும். அதிகமான சிந்தனை உள்ள மனிதர்களுக்கு அது வேலை செய்யாது.

மிகவும் குழந்தைத்தனமான மனிதர், கடவுள் அல்லது கோவில் மீது அதிக பக்தி கொண்டவர், கோவிலுக்கு சென்று, "சிவா! எனக்கு ஒரு வீடு வேண்டும். எப்படி என்று தெரியாது...ஆனால் நீதான் எனக்கு செய்து தர வேண்டும்" என்கிறார். இப்பொழுது, அவரிடம் எந்த எதிர்மறை எண்ணங்களும் கிடையாது. "இது நடக்குமா? நடக்காதா? இது சாத்தியமா? சாத்தியமில்லையா" இது எதுவுமே அவர் மனதில் இல்லை. சிவனின் மேல் உள்ள உறுதியான நம்பிக்கையின் காரணமாக இது போன்ற எதிர்மறை எண்ணங்கள் அவருக்குள் வருவதில்லை.

சிவன் தனக்காக இதை செய்வார் என்று அவர் இப்போது நம்புகிறார். அப்படியே அது நடக்கவும் செய்யும். அப்படியென்றால் சிவனே நேரில் வந்து வீடு கட்டிக்கொடுப்பாரா? கிடையாது. கடவுள் உங்களுக்காக ஒரு சுண்டு விரலைக் கூட அசைக்கமாட்டார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் கடவுள் என்று குறிப்பிடுவது, படைத்தலின் மூலத்தைத்தான். ஒரு படைப்பாளியாக அவர் மிகவும் அசாதாரணமான, பிரம்மாண்டமான வேலையை செய்திருக்கிறார். அதில் சந்தேகமே இல்லை. உங்களால் இதை விட ஒரு நல்ல படைப்பினை உருவாக்க முடியுமா? இங்கே யாருக்காவது இதை மிஞ்சும் கற்பனை வளம் இருக்கிறதா? ஒரு படைப்பாளியாக அவர் ரொம்பவும் அற்புதமாக வேலை செய்திருக்கிறார். இதில் உங்களுக்கு ஏதேனும் வருத்தமோ, மனக்கசப்போ இருந்தால், அதற்குக் காரணம் வாழ்க்கை நீங்கள் விரும்பியது போல நடக்காததுதான். அதுதான் காரணம். நீங்கள் நினைத்தது போல் எதுவும் நடக்கவில்லை என்றால் ரொம்பவும் வருத்தத்தில் இருப்பீர்கள். நினைத்தது போலவே எல்லாம் நடந்தால் சந்தோஷமாக இருப்பீர்கள்.

வாழ்க்கையில் நீங்கள் நினைத்தது போலவே எல்லாம் நடக்க வேண்டும் என்றால், நீங்கள் யோசிக்கும் விதம், எவ்வளவு தீர்மானமாக சிந்திக்கிறீர்கள், உங்கள் சிந்தனை எவ்வளவு உறுதியாக இருக்கிறது போன்றவையே உங்கள் எண்ணம் நிறைவேறுமா அல்லது வெறும் எண்ணமாகவே இருக்குமா என்பதைத் தீர்மானிக்கும். மேலும் அது நீங்கள் எவ்வித

எதிர்மறை எண்ணங்களையும் உருவாக்காமல் இருப்பதைப் பொறுத்தும் இருக்கிறது.

"இது சாத்தியமா? சாத்தியமில்லையா?" என்ற கேள்விதான் இன்றைய மனித சமுதாயத்தை அழித்து வருகிறது. எது சாத்தியம், எது சாத்தியமில்லை என்பது உங்கள் வேலை இல்லை. இயற்கையின் வேலை. உங்கள் வேலை, உங்களுக்கு தேவையானதை நோக்கி முயற்சி செய்வதுதான். இங்கே நீங்கள் இப்பொழுது அமர்ந்து இருக்கிறீர்கள். உங்களை நான் இரண்டு சாதாரண கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுங்கள். உங்களால் இங்கிருந்து பறந்து செல்ல முடியுமா? நீங்கள் 'முடியாது' என்றால், அடுத்த கேள்வி, உங்களால் இங்கிருந்து நடந்து செல்ல முடியுமா? உங்கள் பதில் இதற்கு "ஆம். முடியும்" என்றிருக்கும். இந்த பதில்கள் சொல்ல அடிப்படை என்ன? உங்கள் வாழ்வின் இது நாள் வரையிலான அனுபவம். இதுவரை நீங்கள் நடந்து சென்று இருக்கிறீர்கள், ஆனால் பறந்து சென்றதில்லை.

வேறு வார்த்தையில் சொல்வதென்றால், உங்கள் கடந்த கால வாழ்க்கையையே, முடியும் அல்லது முடியாது என்று முடிவு செய்ய உபயோகிக்கிறீர்கள். இன்னும் சொல்லப் போனால், இதுவரை நடக்காதது இனியும் நடக்காது என்று முடிவே செய்துவிட்டீர்கள். இது மனிதனுக்கும், மனித குலத்துக்கும் பெருத்த அவமானம். இது வரை இவ்வுலகத்தில் நடக்காதது, நாளை நடக்க நிச்சயமாக வாய்ப்பு இருக்கிறது.

அதனால் எது சாத்தியம், எது சாத்தியமில்லை என்பது உங்கள் வேலை இல்லை. இயற்கையின் வேலை. இயற்கை அதை முடிவு செய்யும். உங்கள் வேலை, உங்களுக்கு வேண்டியதை முடிவு செய்து அதை நோக்கி முயற்சி செய்வதுதான். உங்கள் எண்ணம் திடமாக இருந்து, எவ்வித எதிர்மறை எண்ணங்களும் அதை தடை செய்யாமல் இருந்தால், உங்கள் எண்ணம் நிச்சயம் ஈடேறும்.

பொதுவாக, எதிர்மறை எண்ணங்களை ஒழிக்கும் கருவியாக, மக்கள் தங்கள் நம்பிக்கைகளைப் பயன்படுத்துகிறார்கள். இன்றோ, நீங்களெல்லாம் சிந்திக்கும் மனிதர்களாய் மாறிவிட்டீர்கள். உங்கள் நம்பிக்கைகள் ஆழமாய் இருப்பதில்லை. சந்தேகங்களும் அவநம்பிக்கைகளும் முளைத்துக் கொண்டே இருக்கிறது.

இக்கணமே கடவுள் உங்கள் முன் தோன்றினாலும், நீங்கள் அவரிடம் சரணடைய மாட்டீர்கள். அவர் மீது ஒரு விசாரணை கமிஷன் ஆரம்பித்து, அவர் உண்மையிலேயே கடவுள்தானா என்று சோதனை செய்ய விரும்புவீர்கள். இப்படிப்பட்ட மனதை வைத்துக்கொண்டு, 'நம்பிக்கைகள்' என்பதில் உங்கள் நேரத்தை நீங்கள் வீண் செய்யக் கூடாது.

இதற்கு மாற்று வழி உள்ளது. முழு ஈடுபாடு கொள்வது. உங்களுக்கு எது தேவையோ, அதிலேயே முழு மூச்சாக ஈடுபட்டு, உங்கள் எண்ணம் அனைத்தையும் அதிலேயே ஒருங்கிணைத்தால், நடக்குமா, நடக்காதா என்ற சந்தேகமே இருக்காது. உங்கள் எண்ணம் முழுவதும், உங்களுக்கு வேண்டியதிலேயே குறியாக இருக்கும். இது மட்டும் நடந்துவிட்டால், பிறகு நீங்கள் நினைத்ததும் தானாக நடக்கும்.

அதனால் உங்களுக்கு உண்மையிலேயே வேண்டிய ஒன்றை உருவாக்க, அதை முழுவதுமாக உங்கள் மனதில் உருவாக்குங்கள். "இதுதான் எனக்கு வேண்டும்" என்று தெளிவாய் முடிவு செய்யுங்கள். பல வேளைகளில் இது வேண்டும் என்றெண்ணி, அது நடந்தவுடன், இது இல்லை, எனக்கு வேண்டியது அதற்கும் அடுத்தது, அதற்கும் அடுத்தது என்று பல முறை மாற்றி இருக்கிறீர்களா, இல்லையா?

உண்மையிலேயே நமக்கு என்னதான் வேண்டும் என்று நாம் முதலில் பார்க்க வேண்டும். இதை நாம் நிச்சயமாக ஆராயத்தான் வேண்டும். அது தெளிவாகிய பின்னர், அதை உருவாக்க வேண்டும் என்ற உறுதி பிறந்த பின்னர், நம் கவனம் முழுவதும் அந்த திசை நோக்கியே செல்லும். திசையை மாற்றாமல் அதே எண்ணங்களில் நிலைத்து நிற்கும்போது, நீங்கள் விரும்புவது உங்கள் வாழ்க்கையில் நிச்சயமாக நடக்கும். எனவே இந்த மனித உருவையே கல்ப விருக்ஷமாகவும் மாற்றலாம் அல்லது ஒரு பெரிய குளறுபடியாகவும் மாற்றலாம். இது உங்களிடம்தான் உள்ளது.

நாம் அனைவரும் சேர்ந்து வாழ நினைக்கும் உலகத்தை நாம் இன்னும் ஏன் உருவாக்கவில்லை என்றால், நம்மில் பல பேர், இன்னமும் மேல் நோக்கியே பார்க்கின்றனர். இந்த பூமியை

விட்டுவிட்டு, மற்ற கோள்களிலேயே கவனமாக இருக்கின்றனர். தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும், அக்கோள்களின் நடமாட்டத்தை வைத்தே நிர்ணயிக்கின்றனர். இன்னும் பல பேர் சொர்க்கத்திற்கே எல்லா சேவைகளும் செய்து வருகின்றனர். பூமிக்கு எந்த சேவையும் செய்யவில்லை. இப்போதைக்கு இந்த பூமிக்குதான் அதிகமாக சேவை தேவைப்படுகிறது. இறைவனுக்கு அருகில், இந்த பூவுலகை விட சொர்க்கம் இருக்கிறதென்றால், நிச்சயமாக அவர்கள் நம்மை விட நல்ல நிலையில் தான் இருப்பார்கள். நம்முடைய உதவி அங்கே தேவைப்படாது.

இங்கே இதுதான் பெரும் பிரச்சினையாக உள்ளது. எதுவொன்று மனிதனுக்கு நல்லதோ, மதிப்பானதோ, மனிதனின் வாழ்விலேயே மிக உயர்ந்த தன்மையானதோ, அது அனைத்தையும் சொர்க்கத்திற்கு ஏற்றுமதி செய்து விட்டார்கள். உதாரணமாக, "அன்பு" என்று சொன்னால், உடனே மக்கள், "கடவுள் அன்பானவர்" என்று சொல்லி விடுவார்கள். கடவுள் அன்பானவரா, இல்லையா என்று இங்கு யாருக்கும் தெரியாது. ஆனால் மனிதன் அன்பானவன் தானே? மனிதனால் அன்பாய் இருக்க முடியும், கருணையுடன் சக மனிதருடன் பழக முடியும், மிகவும் சந்தோஷமாகவும், பேரானந்தத்திலும் நிலைத்திருக்க முடியும். உண்மைதானே?

மனிதனால் செய்ய முடிந்த அத்தனை நல்லவைகளும் சொர்க்கத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவிட்டன. கடவுள் என்னும் ஒரு சிந்தனை நமக்கு உருவானதே, நம்மை சுற்றி இருக்கும் படைப்பை நாம் உணர்ந்ததால்தான். அதனால்தான் படைத்தவனைப் பற்றி நினைத்தோம். அந்த படைப்பும் மிகவும் அழகாகவே நடந்திருக்கிறது.

கடவுள் ஒருமிகச் சிறந்த படைப்பாளி. நாம் கடவுள் என்று சொல்வது படைப்பின் மூலத்தைத்தான். அந்த சக்தியும் நம்மை ஏமாற்றவில்லை. அது மிக மிக அற்புதமாக தனது பணியைச் செய்திருக்கிறது. ஆனால், இப்போது நமது கேள்வியே நிர்வாகம் பற்றிதான். இந்த நிர்வாகத்தை கடவுளின் கைகளிலேயே விடுவதென்றால், அதை அவர் தன் இஷ்டம் போல, தன் செயல் திட்டத்திற்கேற்ப நிர்வகிப்பார். ஆனால் நீங்கள் விரும்புவது

வெள்ளியங்கிரி மலை உச்சியின் வெகு அருகே இருக்கும், இந்த ஏழாவது மலையின் ஒடுங்கிய நீள்வரை உச்சி, ஈஷா தியான அன்பர்களிடையே மிகவும் பிரபலமான இடம். இங்குதான், சத்குரு ஸ்ரீபிரம்மா, [சத்குருவின் முற்பிறவியில் அவரது பெயர்] தனது உடலை நீத்தார்.

யோக சாஸ்திரத்தில் ஆழமான புரிதலுடன் இருந்த இவர், 'சக்கரேஷ்வரர்' என்றும் வழங்கப்பட்டார். உடலின் ஏழு சக்தி சக்கரத்திலும் முழுமையான கட்டுப்பாடு செலுத்தும் வல்லமை பெற்றிருந்த இவர், உடலை நீக்கும் போது, அந்த ஏழு சக்கரங்கள் வாயிலாகவும் வெளி சென்றார். இது மிக மிக அரிதான ஒரு நிகழ்வு. இதனால் அவர் உயிர் நீத்த அந்த இடம், இன்றும் மிக சக்திவாய்ந்த அதிர்வுகளை வெளிப்படுத்தி வருகிறது.

உடலை நீக்கும் அச்சமயத்திலும், தனது குரு தனது பொறுப்பில் விட்டுச் சென்ற தியானலிங்கப் பிரதிஷ்டையை, பல காரணங்களால் தன்னால் செய்ய இயலாமல் உடல் நீக்க வேண்டிய நிலையில் இருப்பதை எண்ணி, சத்குரு ஸ்ரீ பிரம்மா, வெள்ளியங்கிரி மலை ஏறும் முன், அடிவாரத்தில் நின்றிருந்த தனது சிஷ்யர்களைப் பார்த்து, "நான் மீண்டும் வருவேன்" என்று கூறிச் சென்றார்.

அதையல்ல. உங்களின் வாழ்க்கை நீங்கள் விருப்பப்பட்டபடி தான் நடக்க வேண்டும், இல்லையா?

உதாரணத்திற்கு, நீங்கள் அனைவரும் அடுத்த வருட கால்பந்து உலகக் கோப்பையில், இந்தியாவின் அணியில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். நான்தான் உங்களுடைய பயிற்சியாளர். அடுத்த 4 வருடத்திற்கு, கால்பந்து பற்றிய எல்லா விவரங்களும் உங்களுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. கால்பந்து பற்றி நான் அறிந்த

அனைத்தும் பல வகைகளில் உங்களுக்குள் திணிக்கப்படுகிறது. தற்போது பந்தய நாளும் வந்துவிட்டது. நீங்கள் அனைவரும் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். பந்தும் உங்கள் காலருகில் வந்துவிட்டது. அக்கணம் நீங்கள் முடிவு எடுத்து விளையாடாமல், நிமிர்ந்து என்னைப் பார்த்தால், அது நல்லதல்ல. விளையாட்டு மைதானத்தில் நீங்களே பார்த்திருக்கலாம், பயிற்சியாளர்கள் ஒன்றும் செய்ய முடியாமல் தவித்துப் போவார்கள். எனவே நீங்கள் மைதானத்தில் இறங்கி விட்டால், பிறகு அது உங்கள் வேலை மட்டுமே. இதுவும் அதே போல் தான்.

கடவுள் மிக அருமையான ஒன்றை படைத்திருக்கிறார். இப்பொழுது நீங்களும் நானும் தான், இதை எப்படி நிர்வகிக்க வேண்டும், இது நமக்கு எப்படி வேண்டும், இந்த உலகை நாம் எப்படி வைத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும். எந்த நிலையில் இவ்வுலகை நாம் அனுபவிக்க விரும்புகிறோம் என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் நீங்கள், "இது மட்டும் நடந்து விட்டால் என் வாழ்க்கை மகிழ்ச்சியானதாக மாறிவிடும்" என்று நினைக்கிறீர்கள். ஆனால் அதை அடைந்த பின்னர், நான் விரும்பியது அது அல்ல, வேறொன்று என்று உணர்கிறீர்கள். இப்படி வேறொன்று, வேறொன்று என்றே வாழ்க்கை முழுவதுமாக ஆகிவிட்டது.

எனவே, உண்மையிலேயே உங்களுக்கு என்னதான் வேண்டும் என்பதில் நீங்கள் வெகு தெளிவாக இருக்க வேண்டும். என்ன வேண்டும் என்று உங்களுக்கு தெரியவில்லை என்றால், அதை உருவாக்க வேண்டிய சிக்கல் உங்களுக்கு இல்லை. பொதுவாகவே உங்களுக்கு என்ன வேண்டும் என்று பார்த்தால், மக்கள் ஒவ்வொருவருக்குமே என்ன வேண்டும் என்று பார்த்தால், வாழ்க்கையை மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்றுதான் ஆசை. உங்களது உறவுமுறைகளில் பார்த்தாலும், அன்பாகவும், பாசமாகவும் இருக்க வேண்டும் என்றே நீங்கள் ஆசைப்படுகிறீர்கள்.

இன்னும் சொல்லப்போனால், ஒவ்வொரு மனிதனும், தனக்குள்ளும், தன்னைச் சுற்றியும் இனிமையையே விரும்புகிறான்.

இந்த இனிமை உடலுள்ளே நிகழ்ந்தால், அதை ஆரோக்கியம் என்றும் இன்பம் என்றும் சொல்வோம். இது மனதில் நிகழ்ந்தால் நிம்மதி, சந்தோஷம் என்கிறோம். இது நமது உணர்ச்சியில் நிகழ்ந்தால் அன்பு, கருணை என்கிறோம். இது நமது சக்தி நிலையில் நிகழ்ந்தால் பேரானந்தம், பரவசம் என்கிறோம். இதைத்தான் ஒவ்வொரு மனிதனும் எதிர் பார்க்கிறான். அவன் அலுவலகம் சென்றாலும், பணம் சம்பாதிக்க நினைத்தாலும், குடும்பம் வேண்டும் என்று நினைத்தாலும், வேலை உயர்வுக்கு ஆசைப்பட்டாலும், மதுபானக் கடைக்குப் போனாலும், கோவிலுக்குச் சென்றாலும், எப்பொழுதும் ஒன்றை மட்டுமே - இனிமை தனக்குள்ளேயும், தனக்கு வெளியேயும் எதிர்பார்க்கிறான். இதைத்தான் நீங்கள் உருவாக்க நினைத்தீர்கள் என்றால், அதை நேரிடையாகவும் முழு ஈடுபாடுடனும் அணுக வேண்டிய நேரம் வந்துவிட்டது.

ஒரு அன்பான, மகிழ்ச்சியான, அமைதியான ஒரு மனிதனாக எல்லா நிலைகளிலும் இனிமையான ஒரு மனிதனாக உருவெடுக்க நீங்கள் விரும்புகிறீர்களா? அதே போன்றதொரு உலகம் உங்களுக்கு வேண்டும் என்று ஆசையா? ஒரு அமைதியான, அன்பான, சந்தோஷமான உலகம் வேண்டும் என்று ஆசையா? இல்லை, இல்லை. நான் முதலில் பசுமையைத்தான் விரும்புகிறேன். அப்புறம் உணவு என்று இப்படி நீங்கள் அடுக்கிக் கொண்டு போகலாம். சந்தோஷமான உலகம் என்று சொன்னாலே, அது இவற்றை எல்லாம் உள்ளடக்கியது தான்.

இத்தனை காலமும், நீங்கள் இதற்காகத்தான் ஏங்கினீர்கள். ஒரு அமைதியான, மகிழ்ச்சியான, அன்பான உலகத்தை, நீங்கள் உங்களுக்காகவும் உங்களைச் சுற்றி உள்ளவர்களுக்காகவும் உருவாக்க விரும்பினால், அதற்காக ஒரு உறுதி கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாள் காலையும், "இன்று நான் எங்கு சென்றாலும், ஒரு அமைதியான, அன்பான, சந்தோஷமான சூழ்நிலையை உருவாக்குவேன்" என்று ஒரு எளிய சிந்தனையுடன் உங்கள் நாளைத் துவங்குங்கள். ஒரு நாளில் நூறு முறை கூட ஏமாற்றம் அடையலாம், அதனால் என்ன? ஒரு உறுதியான மனிதனை, இதெல்லாம் ஒன்றும் செய்ய முடியாது. ஒவ்வொரு முறை தோல்வியடையும் போதும், அதிலிருந்து கற்க ஒரு

பாடம் இருக்கும். அவ்வளவுதான். இப்படி உங்களுக்கு மிகவும் தேவையான ஒன்றிற்காக உங்களை நீங்கள் ஈடுபடுத்திக் கொள்ளும் போது, உங்கள் மனம் தானாக ஒரு ஒழுங்கிற்குள் வந்துவிடும்.

உங்கள் மனம் ஒரு ஒழுங்கிற்குள் வரும் போது, உங்கள் உணர்ச்சிகளும் ஒரு ஒழுங்கிற்குள் வந்துவிடும். ஏனென்றால் உங்கள் எண்ணங்களைப் பொறுத்தே உங்கள் உணர்ச்சிகளும் இருக்கும். எப்பொழுது உங்கள் எண்ணங்களும், உணர்ச்சிகளும், ஒரு திசையில் இருக்கிறதோ, அப்போது உங்கள் சக்தி நிலையும் அதே திசையில் நிலைபெறும். உங்கள் எண்ணங்களும், உணர்ச்சிகளும், சக்தி நிலையும் ஒருங்கிணைந்து இருக்கையில், தானாக உங்கள் உடலும் ஒரு ஒழுங்கிற்குள் வந்துவிடும். இந்த நான்கும் ஒரு சேர இயங்கும் போது, நீங்கள் நினைப்பதை நடத்தி முடிக்கும் திறன் மிகவும் அற்புதமானதாக இருக்கும். பல வகைகளில் நீங்களும் ஒரு படைப்பாளியாக இருப்பீர்கள்.

நான் ஏன் அவ்வாறு சொல்கிறேனென்றால், உங்கள் வாழ்க்கையின் தன்மையை சற்று உற்று நோக்குங்கள். நீங்கள் ஒரு வாழைப்பழம் சாப்பிட்டால், அதுவே 4 மணி நேரத்தில், ஒரு மனிதனாக மாறிவிடுகிறது. இந்த உடலை உற்பத்தி செய்தவன் உள்ளேயே இருக்கிறான். அவனிடம் ஒரு வாழைப்பழம் தந்தால், அதை அவன் மனிதனாக மாற்றுகிறான். ஒரு வாழைப்பழத்தை மனிதனாக மாற்றுவது ஒன்றும் எளிதான காரியம் அல்ல. அது ஒரு அற்புதமான விஷயம். இது உங்களுக்குள் ஒரு விழிப்புணர்வின்றி நடக்கிறது, அவ்வளவுதான். இதையே நீங்கள் விழிப்புணர்வுடன் செய்யும் பொழுது, நீங்களும் ஒரு படைப்பாளி தான்.

பரிணாமக் கோட்பாட்டின் படி, ஒரு குரங்கு ஒரு மனிதனாக உருவாக பல லட்சம் ஆண்டுகள் ஆனது. ஆனால் நீங்கள் ஒரே மதியப் பொழுதில், ஒரு வாழைப்பழத்தையோ அல்லது ஒரு ரொட்டியையோ ஒரு மனிதனாக மாற்றி விடுகிறீர்கள். அப்படி என்றால், 'படைப்பின் மூலம்' உங்களுக்குள்ளேயே வேலை செய்து வருகிறது.

எனவே நீங்கள், உடல் மனம், உணர்ச்சி மற்றும் சக்திநிலை ஆகிய 4 பரிமாணங்களையும் ஒருங்கிணைக்கும்போது, 'படைப்பின் மூலம்' உங்களுக்குள்ளேயே இருப்பதை உணர்வீர்கள். அதனால்

நீங்கள் உருவாக்க நினைப்பது மிக சுலபமாக உருவாகும். அப்படி கட்டுப்பாடுடன் இருக்கையில், எவ்வித குழப்பமோ, குளறுபடியோ நடக்காது. நீங்களே ஒரு 'கல்பவிருக்ஷம்'தான். நீங்கள் விரும்புவதை உருவாக்கும் திறன் உள்ளவராய் ஆவீர்கள்.

யோக அறிவியல் மொத்தமும் உங்களை ஒரு சாதாரண படைப்பிலிருந்து படைப்பாளியாகவே மாற்றுவதுதான். இது கடவுளைத் தேடிப்போவது பற்றியில்லை, கடவுளாகவே மாறுவது பற்றியது. இது தெய்வீகத்தைத் தேடிப் போவதல்ல, தெய்வீகமாகவே மாறுவது. எதை நீங்கள் தெய்வீகம் என்கிறீர்களோ எது வாழ்க்கையின் ஆதாரமாக இருக்கிறதோ அது ஒவ்வொரு கணமும் உங்களுக்குள் துடித்துக் கொண்டிருக்கிறது. இல்லையென்றால் ஒரு ரொட்டித் துண்டு ஒரே மதிய நேரத்தில் மனிதனாக மாற முடியாது.

உருவாக்கும் சக்தி ஒவ்வொரு ஷணத்திலும் உங்களுக்குள் துடித்துக் கொண்டுதான் இருக்கிறது. வித்தியாசம், நீங்கள் அதனுடன் தொடர்பு வைத்திருக்கிறீர்களா, இல்லையா என்பது மட்டுமே. உங்களின் 4 அடிப்படை பரிமாணங்களையும் ஒன்று சேர்த்து ஒரே வழியில் இயக்கும் போது, இத்தொடர்பு மீண்டும் நிலைநாட்டப்படுகிறது. எனவே, தோலும் சதையுமாகிய ஒரு சாதாரண உயிரினத்திலிருந்து ஒரு படைப்பாளியாகவே உருமாற தனி அறிவியலும் விஞ்ஞானமும் இருக்கிறது. யோக விஞ்ஞானம் முழுவதுமே இதுபற்றிதான். ஒரு சாதாரண உயிரினத்திலிருந்து ஒரு படைப்பாளியாகவே மாறுவதைப் பற்றிதான்.

உதாரணமாக, 100 ஆண்டுகளுக்கு முன், ஒரு அலைபேசியைப் போல் ஒன்றை எடுத்து, உலகத்தின் வேறு முனையில் இருக்கும் நபரிடம் நான் பேசினேன் என்றால், நீங்கள் அதை ஒரு அதிசயமாகவே பார்த்திருப்பீர்கள். என்னை கடவுளின் தூதுவனாகவோ அல்லது கடவுளின் மைந்தனாகவோ அல்லது கடவுளாகவே கூட பார்ப்பீர்கள். ஆனால் இன்றோ இது நாம் அனைவரும் உபயோகிக்கும் ஒரு சாதனமாக இருக்கிறது.

இன்றும் கூட, இந்த அலைபேசியை உபயோகிக்காமல், உலகத்தின் வேறு முனையில் இருக்கும் நபரிடம் நான் பேசினேன் என்றால் அது உங்களுக்கு ஒரு அதிசயமாகவேதான்

இருக்கும். இந்த அலைபேசி என்னும் சாதனம், மனிதனின் மனம் "வேண்டும்" என்று கனவு கண்டதால்தான் உருவானது. 100 ஆண்டுகளுக்கு முன்பு இதை யாருமே சாத்தியமாக நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் இன்றோ இது ஒரு சாதாரண சாதனமாகவே இருக்கிறது. அதே போல், இப்பொழுது நம் தற்போதைய புரிதலில் இல்லாத பல விஷயங்களை நாம் நமது புரிதலுக்குள் கொண்டுவர முடியும். அப்போது, நமக்கு வேண்டியவாறு நம் வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளும் திறன் பெரிதும் மேம்படும்.

எனவே, நம் உடல், மனம், உணர்ச்சி, சக்தி நிலை, ஆகிய நான்கையும் ஒருங்கிணைத்து வைப்பது அத்தியாவசியமாக இருக்கிறது. இது நடந்தால் நீங்கள் "உருவாக்கும் மூலத்துடன்" தொடர்பில் இருப்பீர்கள். அந்த சக்தியுடன் தொடர்பில் இருக்கும் பொழுது, அந்த சக்தியை உங்களால் அணுக முடியும் போது, உங்களிடம் உருவாக்கும் திறன் இருக்கும். உங்கள் வாழ்வையும், உங்கள் சுற்றுச்சூழலையும் உங்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றி அமைக்கும் ஆற்றல் உங்களிடம் இருக்கும்.

இந்த உருவாக்கும் திறனை நாம் இழந்ததால்தான் நம் வாழ்விலும், இவ்வுலகத்திலும் பெரும் குழப்பங்களை உண்டாக்கி வருகிறோம். எப்படி நமக்குள் ஒரு படைப்பாளி இருந்து கொண்டு இந்த உடலை நமக்காக உருவாக்கித் தருகிறானோ, அதே போல, அதே ஒருங்கிணைப்புடன் நாம் நமது வாழ்க்கையை உருவாக்கும்போது, இந்த மனித குலமும் உலகமும் மிகவும் வித்தியாசமான உயர்ந்த நிலையில் இருக்கும்.

இவ்வுலகத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் படைப்பின் மூலத்துடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் அவன் ஒரு சாதாரண உயிரினமாக இல்லாமல், ஒரு படைப்பாளியாகவே இயங்கமுடியும். எனவே ஒவ்வொரு மனிதரும் இங்கு ஒரு படைப்பாக இல்லாமல் ஒரு படைப்பாளியாகவே இயங்க வேண்டும் என்பது எனது ஆசியும் ஆசையுமாகும்.

அத்தியாயம் 6

உள்நிலை நிர்வாகம்

மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டிருக்க, அதற்கு ஏற்றவாறு சமுதாய ஒழுங்குமுறையும் மாறிக்கொண்டிருக்க, மனித வாழ்க்கை இன்னும் அதிகமாகவே சிக்கல் ஆகிப் போய்விட்டது.

ஏற்கனவே பூமியின் வளங்கள் வேகமாகத் தேய்ந்து கொண்டிருக்க, உற்பத்தித் திறனை அதிகரிக்கிறோம் என்ற பெயரில் மனிதனோ மீதியையும் இன்னும் வேகமாக பிரித்தெடுக்க செய்யும் முயற்சிகள் ஒரு அறிவியலாக 'நிர்வாக அறிவியல்' ஆக வளர்ந்து வருகிறது.

வெளி உலகை ஆட்சி செய்யும் ஆர்வத்தில், நிர்வாகத்தின் அடிப்படையான 'மனித நலன்' மறக்கப் பட்டுவிட்டது. அதனால் நம் கவனம் திசை மாறிப்போய், நம் செயல்கள் நமக்கும் உலகத்திற்கும் கேடு விளைவிப்பதாக மட்டுமல்லாமல், நம் உள்நிலையை மறக்கும் அளவிற்கே கொண்டு வந்துவிட்டது.

ஒரு நிர்வாகக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய சத்குரு, மாணவர்களின்

கவனத்தை மீண்டும் மனித நலனில் நிலை நிறுத்த முற்படுவதோடு அதை அடைவதற்கான வழிகளையும் வழங்குகிறார்.

அன்றே வேறு ஒரு உரை நிகழ்த்துகையில், தனது பள்ளி நாட்கள் பற்றியும், உலகில் புதிதாய் காலடி வைக்கப்போகும் அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும் சவால்கள் குறித்தும், ஒரு நல்ல நிர்வாகியாக வளர உதவும் ரகசியங்களையும் பகிர்ந்துகொள்கிறார்.

உள்நிலையிலோ, புறநிலையிலோ நன்றாக வாழவேண்டும் என்று எண்ணினால் அது உங்களை நீங்களே எப்படி நிர்வகிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. உங்கள் உடல், உங்கள் மனம், உங்கள் உணர்வுகள், உங்கள் சூழ்நிலைகள், உங்கள் சமூகம், உங்கள் தேசம், உங்கள் உலகம் இவற்றை நீங்கள் எவ்வளவு திறம்பட நிர்வகிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கையின் தரம் அமைகிறது. பொதுவாகவே நிர்வாகம் என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் உங்களில் பலர் வணிக நிர்வாகத்தையும், தொழில் நிர்வாகத்தையுமே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அடிப்படையில் வாழ்க்கையே நிர்வாகம் தான்.

துரதிருஷ்டவசமாக இன்றைய உலகில் அனைத்துமே பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இயங்குகிறது. வாழ்வின் மற்ற அம்சங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. பொருளாதாரம் ஆட்சி செய்யும்போது, அதை பற்றி மட்டுமே நாம் யோசிக்கும் போது, நாம் பலவிதங்களில் மகிழ்ச்சியைத் தொலைத்து விட முடியும்.

உலகின் மிகப்பெரும் நிறுவனங்களில் பணிபுரியும் மேல்நிலை நிர்வாகிகளுக்கு யோக வகுப்புகள் எடுக்கிறபோது ஒன்றை கவனித்திருக்கிறேன். வாழ்வில் தோல்வி அடைந்தவர்கள் தோல்வியின் பாதிப்பால் அவதிப்படுகிறார்கள், வெற்றி பெற்றவர்களோ வெற்றியால் அவதிப்படுகிறார்கள். தோல்வியால் பாதிப்படைந்தால் பரவாயில்லை, அது எளிதில் வருகிறது. ஆனால் எளிதில் கிடைக்காத வெற்றி கிடைத்தும் நீங்கள் பாதிப்புக்கு உள்ளாகிறீர்கள் என்றால் அது துயரம் தான். நீங்கள் எதற்காக உழைத்தீர்களோ, எதற்காக ஏங்கினீர்களோ, வாழ்வில் எதை அடைய விரும்பினீர்களோ, அந்த வெற்றியை

> ஈஷாவில் நிலவும் எத்தகைய குழப்பமாயிருப்பினும், எல்லாவற்றையும் தாண்டி, ஏன் எதனால் என்று புரிந்து கொண்டிருப்பேன் என்பதை என்னைக் கூர்ந்து கவனிப்பவர்கள் அறிந்திருப்பார்கள்.
>
> ஆனால், இங்கு மானசரோவரில், அனைத்தையும் புரிந்து கொண்டேன் என்று சொல்ல முடியவில்லை. அனேகமாக இது போன்ற நிலையை முதன் முறையாக சந்திக்கிறேன்

மானஸரோவரில் நிகழும் அற்புதங்கள் பற்றி, சத்குரு, 2006ம் ஆண்டில், இவ்வாறு கூறினார். அப்போதிருந்து, ஒவ்வொரு வருடமும், நூற்றுக்கணக்கான தியான அன்பர்கள், அவருடைய வழி காட்டுதலில், கையிலாயத்திற்கும், மானஸரோவருக்கும் யாத்திரை மேற்கொண்டவாறு உள்ளனர்.

அடைந்தபிறகு, அதனால் பாதிப்பிற்கு ஆளாகிறீர்கள் என்றால் அது உண்மையிலேயே துயரம் தான்.

ஐந்து வயது குழந்தையாய் இருந்தபோது உங்கள் மகிழ்ச்சியையும், தற்போது உங்கள் மகிழ்ச்சியையும், ஒப்பிட்டுப் பார்த்தால் அது அதிகமாகிக் கொண்டு போயிருக்கிறதா? அல்லது குறைந்து போயிருக்கிறதா? நிச்சயமாகக் குறைந்துதான் போய்க் கொண்டிருக்கிறது. நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் சந்தோஷம் தேடித்தான் இருக்கிறது. அப்படியிருக்கும் போது, உங்கள் சந்தோஷம் குறைந்து கொண்டே சென்றால் நீங்கள் சரியான நிர்வாகி இல்லை என்று தானே அர்த்தம்? நீங்கள்

பெறுகிற கல்வி, செய்கிற வேலை, உருவாக்குகிற குடும்பம், தேடுகிற இலட்சியம் இவையெல்லாமே மகிழ்ச்சிக்காகத்தான். இத்தனைக்குப் பிறகும் மகிழ்ச்சி கூடவில்லை, குறைகிறது என்றால், உங்களை நீங்களே மோசமாக நிர்வகிக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்!

தன்னுடைய உடல், தன்னுடைய மனம், தன்னுடைய உணர்ச்சிகள், தன்னுடைய சக்திநிலை ஆகியவற்றை சரிவர நிர்வகிக்க முடியாதபோது புறச்சூழ்நிலைகளை நிர்வகித்தால் அந்த நிர்வாகம் எதேச்சையாக நிகழுமேயன்றி திட்டமிட்ட நிர்வாகம் என்று சொல்லமுடியாது. அது தற்செயலாக இருக்கிற பட்சத்தில் எந்த நேரத்திலும் குழப்பம் நிச்சயம். குழப்பம் நிச்சயம் என்றால் எப்போதும் பதட்டத்திலேயே இருப்பது உங்கள் அன்றாட வாழ்வின் அம்சமாகிறது.

இன்று எங்கே போனாலும் மனஅழுத்தத்தை நிர்வகித்தல் குறித்து எல்லோரும் பேசுகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு நான் முதல்முறையாக அமெரிக்கா சென்றபோது, மனஅழுத்தத்தை நிர்வகித்தல் என்பதை எல்லோரும் பரபரப்பாக பேசிக் கொண்டிருந்தனர். எல்லோரும் ஏன் மனஅழுத்தத்தை நிர்வகிக்க இவ்வளவு ஆர்வமாக இருக்கிறார்கள் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. உங்கள் தொழிலை நிர்வகிக்கலாம், பொருளாதாரத்தை நிர்வகிக்கலாம், குடும்பத்தை நிர்வகிக்கலாம், சொத்தை நிர்வகிக்கலாம். ஆனால் மனஅழுத்தத்தை ஏன் நிர்வகிக்க வேண்டும்? என்று யோசித்தேன். வாழ்வதற்கு வேறு வழியே இல்லையென்று அவர்கள் முடிவே செய்துவிட்டார்கள் என்பது எனக்குப் புரிய சிறிது காலம் பிடித்தது. உலகில் எது செய்தாலும் மன அழுத்தம் நிச்சயம் என்ற முடிவிற்கு எவ்வாறோ அவர்கள் வந்துவிட்டார்கள்.

எல்லோருக்குமே அவர்கள் வேலை மன அழுத்தம் தருவதாகத்தான் இருக்கிறது. ஒரு சாதாரண அலுவலக கடைநிலை ஊழியராக இருந்தாலும் சரி, உயர்ந்த அதிகாரியாய் இருந்தாலும் சரி, யாரைக் கேட்டாலும் எல்லோருக்குமே வேலை மன அழுத்தம் தருவதாய்த் தான் இருக்கிறது. வேலை நிச்சயம் மன அழுத்தம் தரும் என்றே அவர்கள் நம்புகிறார்கள். நீங்கள் செய்கிற செயலால் அழுத்தம் ஏற்படுவதில்லை. உங்களை



"நீங்கள் ஒரு முட்டாள் என்று உணர்ந்தால், பிறகு உங்கள் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தர மாட்டீர்கள். வாழ்க்கையை அதன் தன்மையில் பார்க்க ஆரம்பிப்பீர்கள், உங்கள் அறிவும் மலரும்."

நீங்களே மோசமாக நிர்வகிப்பதால்தான் அழுத்தம் வருகிறது. தன்னையே நிர்வகிக்கத் தெரியாததால்தான் மனிதருக்கு அழுத்தம் ஏற்படுகிறது. உண்மையில் அது பணியில் இல்லை. உங்கள் இயங்குமுறைகளை உங்களால் கையாள முடியாதபோது, நீங்கள் எதை செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, மனஅழுத்தத்திற்கு ஆளாவீர்கள். அப்படித்தானே?

அடிப்படையில் நிர்வாகம் என்றாலே உங்களுடைய வாழ்வின் போக்கை நீங்களே நிர்ணயிக்க விரும்புவது. வாழ்வை ஒரு விபத்து போல் நிகழ்த்தாமல், அதனை எங்கே கொண்டுசெல்ல விரும்புகிறீர்களோ அங்கே செலுத்துவீர்களென்றால் அதற்குத்தான் நிர்வாகம் என்று பெயர். எல்லாமும் எதேச்சையாக நிகழுமென்றால் நீங்கள் ஒரு நிர்வாகியாக அங்கு தேவையில்லை. இன்னும் சொல்வதென்றால், நீங்கள் அங்கே இல்லாவிட்டால் காரியங்கள் இன்னும் நன்றாகவே நடக்கும்.

உள்நிலையிலும் சரி, புறச்சூழ்நிலையிலும் சரி, குறிப்பிட்ட முறையில், குறிப்பிட்ட சில சூழ்நிலைகளை உருவாக்க விரும்புகிறீர்கள் என்றால்தான் நீங்கள் ஒரு நிர்வாகி என்று அர்த்தம். ஒவ்வொருவருமே வெவ்வேறு நிலைகளிலும் வகைகளிலும் அவரவர் நிலையில் நிர்வாகிதான். நான்கு பேருக்கு சமையல் நடக்கும் ஒரு நல்ல சமையலறை தேவைப்பட்டாலும் சரி, அல்லது பத்தாயிரம் பேர் கொண்ட ஒரு தொழிற்சாலை நன்கு நடக்க வேண்டுமென்றாலும் சரி, நீங்கள் அந்த சூழ்நிலையை நன்கு நிர்வாகம் செய்யக்கூடியவராய் இருக்க வேண்டும், இல்லையா?

புறச்சூழ்நிலையை நிர்வகிக்க விரும்பினால், உங்களைச் சுற்றியுள்ள பொருட்களையும், மனிதர்களையும் உங்களுக்கு கையாளத் தெரிந்திருக்க வேண்டும். உங்களைச் சுற்றியுள்ள பத்து மனிதர்களையோ, பத்தாயிரம் மனிதர்களையோ நிர்வகிக்கிறீர்களென்றால், பத்து அல்லது பத்தாயிரம் மனங்களை நிர்வகிக்கிறீர்கள் என்று பொருள். உங்கள் மனதையே உங்களால் நிர்வகிக்க முடியாதபோது பத்தாயிரம் மனங்களை நீங்கள் கையாண்டால் அது பேரழிவாகத்தான் முடியும்.

ஒரு நிலைமையை சரி செய்ய நினைத்து ஒன்றைச் செய்யப்போய், அதன் மூலம் மனிதர்களை துன்பத்தில் ஆழ்த்துகிறீர்கள் என்றால், அத்தகைய நிர்வாகத்தால் எந்தப் பயனும் இல்லை. இது தான் பல இடங்களில் இன்று நடந்து வருகிறது. நீங்கள் நிர்வாகம் செய்யும்போது உங்கள் கீழுள்ள மனிதர்கள் நொறுங்கிப் போகிறார்கள் என்றால் அது நல்ல நிர்வாகமே கிடையாது. ஏனெனில் அனைத்து நிர்வாகங்களின் அடிப்படை நோக்கமே மனித நலன் தானே?

எது செய்தாலும், எதில் ஈடுபட்டாலும் அது வெறுமனே ஆதாயம் பெருக்குவதற்கு மட்டுமல்ல. நீங்கள் ஒன்றை சரியாக நிர்வாகம் செய்தால், நீங்களும் உங்களுடன் பணியாற்றுபவர்களும் முழுத் திறமையை வெளிப்படுத்துவீர்கள். வேலை செய்வதில் மட்டுமல்லாமல், ஒரு தனி மனிதனாயும் உச்சநிலையை அடைய முடிய வேண்டும். சேர்ந்து பணிபுரிகிறபோது மனிதர்கள் தங்களின் அன்பு, அமைதி, பரிவு ஆகிய அருங்குணங்களின் சிகரங்களை எட்டவேண்டும். இது நிகழவில்லையென்றால் அங்கே நடப்பது மோசமான நிர்வாகம் என்று பொருள். ஏனெனில் நிர்வாகத்தின் அடிப்படை நோக்கமே மனித சமூகத்தின் நலவாழ்வுதான். அது நிகழாதபோது ஏதோ உற்பத்தி செய்கிறீர்கள், ஏதோ ஆதாயம் காண்கிறீர்கள். ஆனால், அதன் போக்கில் மனிதர்கள் சிதைகிறார்கள். இதனால் எந்தப் பயனும் கிடையாது.

எனவே, ஒரு தொழிலை நிர்வகிப்பதன் மூலமாகவே, உங்களைச் சூழ்ந்திருக்கிற மனிதர்கள் தங்கள் உச்சநிலையை அடைவார்கள் என்றால், உங்கள் உள்நிலையை நிர்வகிக்க நீங்கள் சிறிது நேரத்தை செலவிட வேண்டும். இல்லையென்றால் உங்கள் நிர்வாகம் ஒரு விபத்தாக மட்டுமே இருக்கும்.

பலரும் நிர்வாகம் என்பது தங்கள் பலத்தைக் காட்டுவதற்கான ஒரு வழி என்றுதான் கருதுகிறார்கள். ஒரு கானகத்தில் தற்பெருமை பிடித்த ஒரு சிங்கம் இருந்தது. அது சென்று கொண்டிருந்தபோது ஒரு முயல் துள்ளி ஓடியது. அதை பாய்ந்து பிடித்த சிங்கம் "சொல்! இந்தக் காட்டுக்கு யார் ராஜா?" என்று கேட்டது. பயந்து நடுங்கிய முயல் "நீங்கள்தான்! நீங்கள்தான்! நிச்சயமாய் நீங்கள்தான்!" என்றது. அதைப் போக அனுமதித்த சிங்கம் தனது பெருமையை சிலாகித்தவாறு வீம்புடன் நடந்தது. எதிரே வந்த ஒரு நரியைப் பிடித்து "இந்தக் காட்டுக்கு யார் ராஜா?" என்று கேட்டது. "உங்களைத்தவிர வேறு யாராக இருக்க முடியும்?" என்றது நரி. சிங்கத்திற்கு அளவில்லாத மகிழ்ச்சி. எதிரே வந்த எத்தனையோ விலங்குகளிடம் கேட்டது. எல்லா விலங்குகளும் பயத்தில் "நீங்கள்தான் ராஜா" என்று கூறின. இந்த முழு கானகமே தன் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டது என்கிற சந்தோஷத்தில், இன்னும் அதிகமாய் வீம்புடன், நிர்வாகிகள் போலவே (சிரிக்கிறார்) இங்கும் அங்கும் நடந்து, தந்தங்களுடன்

இருந்த ஒரு பெரிய யானையைப் பார்த்து, அதன் முன்னே போய் "யார் இந்தக் காட்டுக்கு ராஜா?" என்று கர்ஜித்தது. யானை தன் துதிக்கையால் சிங்கத்தைப் பற்றி, ஒரு சுழற்று சுழற்றி வீசியெறிந்தது. தொலைவில் போய் விழுந்த சிங்கத்திற்கு இடுப்பு உடைந்தது. தட்டுத்தடுமாறி எழுந்து நின்று "கேள்விக்கு பதில் மட்டும் சொல்லியிருக்கலாமே" என்றது (சிரிப்பலை). அதற்கு யானை "நான் தெளிவாகப் புரியவைக்க வேண்டுமில்லையா? அதற்காகத்தான்" என்றது.(சிரிக்கிறார்)

பலத்தைக் காட்டுவதுதான் நிர்வாகம் என்று பலரும் நினைக்கிறார்கள். அதை எந்த முட்டாளும் செய்யலாம். ஒரு சூழ்நிலையை நீங்கள் நிர்வகிக்கிறபோது அங்கே செயல்கள் நடந்தால் மட்டும் போதாது. அங்கிருப்பவர்கள் தங்கள் நிலை உயர்ந்திருப்பதாகக் கருதவேண்டும். உங்கள் நிர்வாகத்தில் உள்ள ஓரிடத்திற்கு நீங்கள் செல்லும்போது, அது ஒரு அற்புத உணர்வை உங்களுக்குத் தர வேண்டும். அப்படி இல்லையென்றால் நீங்கள் ஒரு நல்ல நிர்வாகி இல்லை. இவ்வாறு இருக்க உங்களுக்கு உள்நிலையில் ஒரு பரிமாணம் தேவைப்படுகிறது. உள்நிலை என்றால் உடலையும், மனதையும் மட்டும் சொல்லவில்லை. ஏனெனில் இந்த உடலும், மனமும் ஒருவிதத்தில் வெளியிலிருந்து நீங்கள் சேர்த்தவைதானே?.

குழந்தையாய் இருந்தபோது சிறிதாக இருந்த உடல் இன்று பெரிதாக வளர்ந்திருக்கிறது. நீங்கள் 'உடல்' என்று சொல்வது, நீங்கள் இதுவரை சேகரித்த உணவுக் குவியல் தான். நீங்கள் 'உணவு' என்று சொல்வது, இந்த பூமியின் ஒரு பகுதி, அதுதான் உணவாக மாறியிருக்கிறது. அதனால் இந்த உடல் என்பது நீங்கள் இதுவரை சேர்த்த உணவு தான். நீங்கள் மனம் என்று சொல்வது கூட வெளியிலிருந்து சேகரித்த தகவல்களின் தொகுப்பு தான். இல்லையா? இப்பொழுது உங்களிடத்தில் ஒரு உணவுக் குவியல், ஒரு தகவல் குவியல் இருக்கிறது. இவ்வளவு பெரிய உடலையும் மனதையும் உங்களால் சேகரிக்க முடிகிறது என்றால் இவற்றையும் விட அடிப்படையான ஏதோ ஒன்று இருக்கவேண்டும், இல்லையா? இத்தனை உணவையும், அபிப்பிராயங்களையும் திரட்ட முடிகிறதென்றால் அதற்கு அடிப்படையாக வேறொன்று இருக்கவேண்டும். ஆனால்,

"உள்நிலையில் நீங்கள் உணர நினைக்கும் யாவுமே கையிலாய மலையில் உள்ளது. உங்களின் படைப்பு, அதன் மூலம், அதன் தன்மை, உங்கள் ஞானோதயம், உங்கள் விடுதலை இன்னும் நீங்கள் அறிய விரும்பும் எல்லாவற்றிற்கும் விடை அங்குள்ளது.

எல்லா மரபுகளும் இந்த ஞானத்தை இங்குதான் பொதித்து வைத்திருக்கின்றன. ஒருவர் தெளிவான உணரும் தன்மையில் இருக்கும்போது அதை நன்றாகப் பார்க்க முடியும்."

அது உங்கள் அனுபவத்திற்குள் எப்போதும் வருவதில்லை. நீங்கள் இந்த இரண்டு குவியல்களுக்கிடையிலேயே காணாமல் போகிறீர்கள்.

புறநிலையை கையாள்வதற்கு ஒரு நிர்வாக அறிவியல் இருப்பதைப் போலவே, உங்கள் உள்நிலையின் நலவாழ்விற்கும் ஒரு நிர்வாக அறிவியல் உள்ளது. பெரும்பாலான நேரங்களில் அதனை நீங்கள் அறிவியல்ரீதியாக அணுகியதில்லை. ஏதோ ஒன்றைச் செய்வதால் எப்படியும் எல்லாம் சரியாகிவிடும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.

கல்வி கற்றால் எதிர்காலத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழலாம் என்று முதலில் நினைக்கிறீர்கள். பிறகு அது

அப்படியில்லை என்று தெரிகிறது. வேலை கிடைத்தால் பின்னர் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று நினைக்கிறீர்கள். அதுவும் அப்படியில்லை என்று பின்னால் தெரிகிறது. பணம் கிடைத்தால் பின்னர் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று நினைக்கிறீர்கள். அதுவும் அப்படியில்லை என்றாகிவிடுகிறது. அதற்குப் பிறகு சிலர் திருமணம் நடந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கின்றனர். அது அவ்வாறு இருக்க முடியாது என்று அவர்களே தெரிந்து கொள்கிறார்கள்..(சிரிக்கிறார்)

எப்படியேனும் ஏதாவது செய்தால் எல்லாம் சரியாகி விடும் என்று நீங்களே உங்களை ஏமாற்றிக்கொள்ள முயற்சி செய்கிறீர்கள். அந்த நம்பிக்கைகள் தொடர்ந்து உங்களைக் கைவிட்ட போதும்கூட ஏதாவது அதிசயம் நடக்கும், எல்லாம் சரியாகும் என்று கருதுகிறீர்கள். ஆனால் அப்படி நிகழாது.

ஒரு காளையும், ஒரு பறவையும் ஒன்றாக ஒரு வயலில் மேய்ந்து கொண்டிருந்தன. அருகில் இருந்த ஒரு பெரிய மரத்தைப் பார்த்த பறவை, பெருமூச்சோடு சொன்னது "அடடா! ஒருகாலத்தில் நான் இந்த மரத்தின் உச்சிக்கிளை வரையில் பறந்து அமர்ந்திருக்கிறேன். இப்போது அதன் முதல் கிளைக்குப் பறக்கக் கூட எனக்கு சக்தியில்லை" என்றது. உடனே, அந்தக் காளை மாடு "கவலைப்படாதே! தினமும் என் சாணத்தைக் கொஞ்சம் சாப்பிட்டு வந்தால் 15 நாட்களுக்குள் மரத்தின் உச்சிவரை பறப்பாய்" என்றது. பறவை நம்பவில்லை. அந்தக் காளை "நிஜமாகத் தான் சொல்கிறேன். மனித இனமே இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறது. நீயும் வேண்டுமானால் முயற்சித்துப் பார்" என்றது. இந்தப் பறவையும் சரி என்று சமாதானமாகி கொஞ்சம் கொஞ்சமாக சாணத்தை சாப்பிட்டு மேல்நோக்கி பறக்கத் தொடங்கியது. 15 நாட்களில் உச்சிக்கிளையையும் அடைந்தது. அப்போது அந்தப் பறவையைப் பார்த்த ஒரு விவசாயி உச்சிக்கிளையிலிருந்து அதனை சுட்டு வீழ்த்தினார். கதையின் கருத்து: மாட்டுச்சாணம் கூட ஒரு நாள் உங்களை உச்சிவரை எடுத்துச் செல்லலாம். ஆனால் உங்களால் அங்கு நிலைத்து நிற்க முடியாது. (சிரிப்பலை).

நீங்கள் நிறைவான வாழ்க்கையைத் தேடுகிறீர்கள் என்றால் உங்களுக்குள் அமைதியும், ஆனந்தமும் மிக்க வாழ்க்கையைத்

தேடுகிறீர்களென்றால், உங்களை நீங்களே எவ்விதத்திலும் ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். எப்பொழுதும் சரியானதையே செய்யுங்கள். இல்லையென்றால் எதுவும் வேலை செய்யாது. நீங்கள் ஒரு மேலாளராக இருந்தால் உங்களுக்குத் தெரியும், சரியான செயல்கள் செய்ய வில்லையென்றால் வெளியில் எதுவும் நடக்காது என்று. இது புறச்சூழ்நிலைக்கு மட்டுமல்ல, உள்நிலைக்கும் பொருந்தும். நீங்கள் உங்களையே ஏமாற்றிக்கொள்ளலாம். இதுவோ அதுவோ உங்கள் பிரச்சினைகளை சரி செய்து விடும் என்று. ஒரு கணம் அது வேலை செய்வது போல் இருந்தாலும், அடுத்த கணமே எல்லாம் நொறுங்கிப் போய்விடும்.

நீங்களே பாருங்கள், 24 மணி நேரத்தில் எவ்வளவு நேரம் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்? சாலைகளில் எத்தனை சந்தோஷமான முகங்களை நீங்கள் பார்க்கிறீர்கள்? மிகக்குறைவுதான் இல்லையா? அப்படியே பார்த்தாலும் அவையும் இள வயதினரின் முகங்களாகத்தான் இருக்கும். 30 வயதிற்கு மேற்பட்டவரின் முகமெல்லாம் கவலையும் துயரமும் மற்ற பிரச்சினைகள் அழுத்தும் சோகமான முகங்கள் தான். அவர்களுக்கு எல்லாம் என்ன ஆகிவிட்டது? பலருக்கும் அவர்கள் எதிர்பார்த்ததைவிடவும் அவர்கள் வாழ்க்கை நன்றாகத்தான் இருக்கிறது. முந்தைய தலைமுகைளில் இல்லாத அளவிற்கு இன்று வசதிகள் இருக்கின்றன. இருந்தாலும் அவர்கள் எல்லாரையும் விட நீங்கள் சந்தோஷமாய் இருக்கிறீர்களா? இல்லை தானே?

இது நாம் உள்நிலையில் நிர்வாகம் செய்யாததால் வந்த விளைவு. நாம் புறச்சூழலை நிர்வகிப்பதில் செலுத்துகிற கவனத்தை உள்நிலை நிர்வாகத்தின் மேல் செலுத்துவதில்லை. நமக்கு வேண்டியதை உருவாக்கிக் கொள்வதற்காக, நமது வாழ்க்கையின் மூலமாக இருக்கும் இந்த உலகத்தையே சிதைக்கிறோம். நம் சந்தோஷத்திற்காக இந்த உலகத்தையே எரிக்கவும் கூட செய்கிறோம். இருந்தும் நாம் திருப்தி அடைவதுமில்லை, 500 ஆண்டுகட்கு முன்பு இருந்தவர்களை விட நாம் சந்தோஷமாகவும் இல்லை.

எங்கோ நாம் உள்நிலையில் கவனம் செலுத்தத் தவறிவிட்டோம். குறிப்பாக இன்றைய இளைய தலைமுறையினர் இந்த முயற்சியை

மேற்கொள்வதில்லை. ஏனென்றால், கொஞ்சம் யோசிக்கத் தெரிந்து விட்டால், படிக்கத் தெரிந்துவிட்டால், ஆங்கிலம் பேசத் தெரிந்துவிட்டால், தன் பெயருக்குப் பின்னால் சில எழுத்துக்களைச் சேர்த்துக் கொண்டுவிட்டால் அவர்களுக்கு ஆன்மீகத்தின் மீது ஓர் ஒவ்வாமை உருவாகிவிடுகிறது. இது அவர்களுடைய தவறில்லை. தங்களை ஆன்மீகவாதிகள் என்று அழைத்துக் கொள்பவர்கள், ஆன்மீகம் என்ற பெயரில் வெளிப்படுத்தும் கேலிக் கூத்துக்கள் அவர்களைக் கோமாளிகளாக மாற்றி விட்டிருக்கின்றன. எனவே சிந்திக்கத் தெரிந்தவர்கள் அவர்களை நெருங்கவே கூச்சப்படுகிறார்கள்.

ஆன்மீகம் என்பது ஸ்தூல எல்லையைக் கடந்த ஒன்றை உணர்வது. இப்போதைக்கு உடல், மனம் ஆகியவற்றின் எல்லையிலேயே நிற்கிறீர்கள். இவையெல்லாம் வெளியிலிருந்து நீங்கள் சேகரித்தவை. எனவே, வெளியிலே நிகழ்வதெல்லாம் உங்களுக்கு உள்ளேயும் நிகழ்கிறது. அப்படியாகிவிட்டால் மகிழ்ச்சியும், அமைதியும் எதேச்சையாகத்தான் நிகழும். நீங்கள் வலிமை வாய்ந்தவராக இருந்தாலும், நீங்கள் எவ்வளவு பெரிய நிர்வாகியாக இருந்தாலும், வெளிச்சூழ்நிலை 100% உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்காது. இதுதான் வாழ்க்கையின் இயல்பு. உங்கள் குடும்பத்தில் இரண்டே பேர் மட்டும் இருந்தால் கூட முழு சூழ்நிலையையும் உங்கள் கட்டுக்குள் வைத்திருக்க முடியாது. உங்கள் வாழ்வின் செய்கைகளும், எல்லைகளும் விரிவடைந்து கொண்டே போகிறபோது, வாழ்க்கைச் சூழல்கள் மீதான கட்டுப்பாடு குறையும். இது தான் இயற்கை நியதி.

எனவே, வெளியே நிகழ்வதையெல்லாம் உங்களுக்குள்ளும் நிகழ அனுமதித்தால், அமைதிக்கும், ஆனந்தத்திற்கும் சாத்தியமேயில்லை. ஸ்தூல எல்லையைக் கடந்து தனக்குள் ஒன்றினை மனிதர்கள் உணர்வார்களென்றால், அவர்களால் உள்நிலையில் எந்த பாதிப்பும் இல்லாமல், புறச்சூழலை மிக எளிதாகக் கையாண்டு தனக்கு வேண்டியவற்றைச் செய்து கொள்ளமுடியும்.

வெளியுலகம் முழுக்கமுழுக்க உங்கள் விருப்பத்திற்கேற்ற முறையில் செயல்படாது. ஆனால், உள்நிலையையாவது உங்கள் விருப்பத்திற்கேற்ப இயங்க வைக்க வேண்டும். உங்கள்

சத்குரு பரப்பிரம்மா. தியானலிங்கா கோவிலில் உள்ள ஒரு கல்வெட்டு. சத்குரு ஒரு தனி சாதகராக, தீவிரமான யோகநிலையில், சிவனின் அருள் நாடி ஏங்கிக்கொண்டிருக்கையில், அவரது குரு அவருக்கு அருள் வழங்கிய காட்சி.

அவரது குருவுடனான இந்த சில நிமிட தொடர்பே, அவரது எதிகாலத்தை நிர்ணயித்தது.

தற்போது இங்கு உருவாகி வளர்ந்து வரும் 'ஈஷா உள்நிலை உணர்தலுக்கான அமைதிப் புரட்சி'க்கான அடிக்கல்லும் இது தான்.

உடல், உங்கள் மனம், உங்கள் உணர்வுகள், உங்கள் சக்திநிலை ஆகியவை, உங்கள் விருப்பத்திற்கேற்ப இயங்காதபட்சத்தில் அது மிக மோசமான அடிமைத்தனமாகும். உங்களுக்குள் என்ன நிகழவேண்டுமென்பதை வேறு யாரோ முடிவு செய்கிறார்கள். உங்கள் வெளிச் சூழலில், உங்களைச் சுற்றி என்ன நடக்க வேண்டும் என்று யாரேனும் முடிவு செய்தால், அதையே நீங்கள் அடிமைத்தனம் என்று முத்திரையிடுவீர்கள். அப்படியிருக்கும்போது, உங்கள் உள் சூழ்நிலையையே அடுத்தவரின் கட்டுப்பாட்டில் விட்டு வைப்பது இன்னும் மோசம் இல்லையா? ஆனால் பாருங்கள், இந்த முழு உலகமும் இந்த அடிமைத்தனத்தில்தான் சிக்கிப்போயிருக்கிறது. இதில் உங்களுக்கு ஒரே ஆறுதல் என்னவென்றால் இங்கு எல்லோருமே அப்படித்தான் இருக்கிறார்கள் என்பதுதான்.

புறச்சூழ்நிலையை நிர்வகிக்கும் அறிவியலைக் கற்றுக்கொள்வது போலவே, உள்நிலையை நிர்வகிக்கும் அறிவியலையும் நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். இல்லையென்றால், நீங்கள் உங்கள் வணிகத்தை நிர்வகித்தாலும், தொழிலை நிர்வகித்தாலும், முழுமையடைந்த, நலவாழ்வை அனுபவிக்க முடியாது. நீங்களும் நிறைவான வாழ்வை வாழ்ந்து, சுற்றியிருப்பவர்களுக்கும் அந்த அனுபவத்தைத் தரவேண்டுமென்றால் உங்கள் உள்நிலையை நீங்கள் நன்கு நிர்வகிக்கத் தெரிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் உங்கள் வாழ்க்கையே தற்செயலான ஒன்றாகத்தான் இருக்கும்.

உள்நிலை என்றால் என்ன? இப்பொழுதுவரை, உங்கள் வாழ்க்கை அனுபவத்தின் அடிப்படை என்ன? உங்களுடைய ஐந்து புலன் உறுப்புகளும்தானே? உங்களுக்கு இவ்வுலகில் நடக்கும் எல்லா அனுபவமும், உங்கள் கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் தொடு உணர்ச்சியின் வழியாகத்தானே கிடைத்திருக்கிறது? இந்த 5 புலன் உறுப்புகள் தான் இந்த உலகம் உங்களுக்குள் நுழைய வழி செய்திருக்கிறது. ஆனால் அவை படைக்கப் பட்டிருக்கும் விதத்திலேயே அவற்றால் உட்புறம் திரும்ப முடியாது. அவை எப்பொழுதும் வெளி நோக்கியே இருக்கும். அதனால் உள் நிகழ்வுகளை உணர, உங்களால் இவற்றை உபயோகிக்க முடியாது. அதற்கு உங்களுக்கு வேறு ஒரு திறன் தேவைப்படுகிறது.

வாழ்க்கை அனுபவத்தை உணர நீங்கள் சார்ந்திருக்கும் இந்த ஐந்து உறுப்பும் வாழ்க்கையின் அடிப்படையை உணர நம்பகரமானது இல்லை. "காண்பதுதான் உண்மை" என்று மற்றவர்கள் உங்களுக்கு சொல்லி இருக்கிறார்களா? ஆனால் பார்ப்பதெல்லாம் உண்மை இல்லை... ஒவ்வொருவரும் அவர்கள் பார்க்க விரும்புவதையே பார்க்கின்றனர், இல்லையா? (சிரிக்கிறார்). அது மட்டுமல்ல, 'பார்வையின்' தன்மையைப் பாருங்கள். சூரியன் காலையில் உதிக்கும் பொழுது உங்களுக்கெல்லாம் அது வெளிச்சம். மாலை சூரியன் மறையும் பொழுது உங்களுக்கு அது இருட்டு. ஆனால் இதுவே ஒரு ஆந்தைக்கு, சூரியன் வரும் பொழுது அது இருட்டு, மறையும் பொழுது வெளிச்சம். நீங்களும் ஆந்தையும் இப்பொழுது எது

இருட்டு, எது வெளிச்சம் என்ற வாக்குவாதத்தில் ஈடுபட்டால், அது எதில்தான் முடியும்? இது நிர்வாகத்திற்கும் தொழிலாளர் சங்கத்திற்கும் இடையிலான வாக்குவாதம் போலத்தானே? (சிரிக்கிறார்). எவ்வளவு வாக்குவாதங்கள் செய்தாலும் எதற்கும் பயனில்லை. இப்பொழுது உண்மையில் எதுதான் வெளிச்சம்? எது தான் இருட்டு? உங்களுக்கு வெளிச்சமாக இருப்பது வெளிச்சமா? அல்லது ஆந்தைக்கு வெளிச்சமாக இருப்பது வெளிச்சமா? எது வெளிச்சம்? 'இரண்டுமே' என்று பதிலளித்தீர்கள் என்றால், ஒன்று, நீங்கள் தூதுவர் குழுவில் இருக்க வேண்டும் இல்லை உங்களுக்கு திருமணம் ஆகி இருக்க வேண்டும். (சிரிக்கிறார்)

எது தான் வெளிச்சம்? எது தான் இருட்டு? இயற்கை ஒவ்வொன்றின் வாழ்க்கை வழிக்கு ஏற்றவாறு புலனறிவு படைத்துள்ளது. அந்த ஆந்தையின் வாழ்வு முறைக்கு ஏற்றவாறு இயற்கை அதன் புலன் திறனை செய்திருக்கிறது. பிழைப்பது மட்டும்தான் உங்கள் நோக்கம் என்றால், உங்கள் புலன் உறுப்புகள் மட்டுமே அதற்கு போதுமானது. ஆனால் பிழைப்பு தாண்டி வேறு எதுவும் நீங்கள் தேடினால், அப்பொழுது புலன் உறுப்புகள் மட்டும் போதாது. ஒரு மனிதனாக இவ்வுலகிற்கு நீங்கள் வந்திருப்பதால் நிச்சயமாக பிழைப்பு மட்டும் போதாது. வேறு எந்த உயிரினமாகவும் நீங்கள் வந்திருந்தாலும், உங்கள் வயிறு நிரம்பினால் வாழ்க்கையில் நிறைவு ஏற்பட்டுவிடும். மனிதனுக்கோ வயிறு காலியாய் இருந்தால் ஒரு சிக்கல், வயிறு நிறைந்துவிட்டால் நூறு சிக்கல். அப்படித்தானே? எல்லா உயிரினங்களுக்கும் பிழைப்பு மட்டும் நடந்துவிட்டால் போதும். ஆனால் மனிதனுக்கு மட்டும், பிழைப்புக்கான பிரச்சனைகள் முடிந்தபின்னர்தான் வாழ்க்கையே ஆரம்பமாகிறது.

வேறு பரிமாணங்கள் தெரியாமல் வாழும்போது, 'பிழைப்பு' நன்றாக நடந்துவிட்டால், பின்னர் விரக்தியும் மன உளைச்சலும் வந்து விடுகிறது. எல்லையற்ற விரக்தி வந்து விடுகிறது. உலக வாழ்க்கையில் மேல்நிலையை அடைய மிகவும் கடினமாக உழைத்தவர்களும், அங்கு சென்றபின், அது எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்று உணர்கிறார்கள். வாழ்க்கை முழுவதும் உழைத்தும், அவர்கள் எண்ணிய இடத்தை

அடைந்தும், அவர்கள் வாழ்க்கை, சாலையில் வசிப்பவரை விட எவ்வகையிலும் வித்தியாசப்படவில்லை என்று உணர்கிறார்கள். அப்போது வாழ்க்கையே வீணாகி விட்டதோ என்ற எண்ணம் அவர்களுக்கு வருகிறது. அதனுடன் ஒரு விரக்தியான வெறுப்பும் கசப்பும் உண்டாகிறது.

யோக விஞ்ஞானம் முழுவதுமே உள்நிலை நிர்வாகம் பற்றியது தான். உங்களைச் சுற்றி நடப்பவற்றால் அன்றி, நீங்களாகவே உள்நிலையில் அமைதியாக, சந்தோஷமாக, ஆனந்தமாக இருக்கும் சாத்தியத்தை உங்களுக்கு யோகா வழங்குகிறது. உங்கள் வாழ்க்கை அப்பொழுது சந்தோஷத்தைப் பின்தொடர்ந்து செல்வதாக இருக்காது. உங்கள் வாழ்க்கையே சந்தோஷத்தின் பிரதிபலிப்பாக இருக்கும்.

சிறிது திரும்பி உங்கள் வாழ்க்கையைப் பார்த்தீர்கள் என்றால், சந்தோஷத்தை நாடி பல பெரிய காரியங்கள் செய்திருப்பீர்கள், ஆனால் உங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்துவதற்கு மிகவும் சிலவற்றைதான் செய்திருப்பீர்கள். இருப்பினும், உங்கள் வாழ்க்கையில் அழகான நேரம் என்று யோசித்தால், சந்தோஷத்தை வெளிப்படுத்திய அந்த சில நொடிகளாகத்தான் இருக்குமே தவிர நீங்கள் சந்தோஷத்தின் பின் ஓடிய தருணங்கள் அல்ல. அப்படித்தானே?

"அய்யோ! என் வியாபாரம் நன்றாக நடக்கவில்லையே, நான் எப்படி நிம்மதியாக இருப்பது? எனக்கு வேலை கிடைக்கவில்லையே, நான் எப்படி நிம்மதியாக இருப்பது?" இது போன்ற கேள்விகள் எப்போதுமே இருக்கின்றன.

வாழ்வில் நீங்கள் பலவாறாக அடையாளம் கொண்டுள்ளீர்கள். இன்னாருடைய பையன் என்றோ, இன்னாருடைய பெண் என்றோ, இவரது நிர்வாகி என்றோ இன்னும் பலவாறாக அடையாளம் கொண்டிருக்கலாம். ஆனால் நீங்கள் இங்கு அமர்ந்து இருக்கையில், வெறுமனே கவனித்துக் கொண்டிருக்கையில், குறிப்பிட்ட அளவிலான ஒரு உயிர் சக்தியாகத்தானே இருக்கிறீர்கள்? நீங்கள் 'நான்' என்று குறிப்பிட்டுக் கொள்ளும் இந்த உயிர் சக்தி சில நேரம் சந்தோஷமாக இருந்திருக்கிறது, சில நேரம் குழப்பத்தில், சில நேரம் அமைதியில், சில நேரம் வலியில்,

சில நேரம் பரவசத்தில், சில நேரம் துயரத்தில், இது எல்லாமே நடந்திருக்கிறது. அதனால் நீங்கள் 'நான்' என்று சொல்லும் இந்த உயிர் சக்திக்கு இது அனைத்துமே சாத்தியம்.

எனவே, இப்பொழுது உங்களுக்கு சந்தோஷமான வாழ்க்கை வேண்டுமா அல்லது துக்கமான வாழ்க்கை வேண்டுமா என்று கேட்டால், நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்? சந்தோஷமான வாழ்க்கையைத்தானே? எல்லோருக்குமே இந்த அளவிற்கு நிச்சயம் அறிவு வேலை செய்யும். உங்களுக்கு யாரும் இதற்காக பாடம் எடுக்கத் தேவை இல்லை, "தயவு செய்து சந்தோஷமாக இருப்பதைத் தேர்ந்தெடு, துக்கத்தை ஏற்காதே"... இது போன்ற போதனை எதுவும் வேண்டுமா? இல்லை தானே? உங்களின் உயிரே எப்போதும் சந்தோஷமாக இருப்பதற்காகத் தான் ஏங்குகிறது. இருந்தும் ஏன் பலர் வாழ்க்கையில் துக்கமாகவே இருக்கிறீர்கள்? ஏனென்றால், உள்நிலையில் உங்கள் உயிர் சக்தி நீங்கள் விரும்பியவாறு செயல்பட வில்லை.

உங்கள் வாழ்க்கையின் அடிப்படை செயல்கள் கூட உங்கள் விழிப்புணர்வு இல்லாமலேயே நடக்கிறது. இப்படி சுயநினைவில்லாமல் நீங்கள் வாழ்ந்தால், உங்கள் உயிர் சக்தி நீங்கள் விரும்பியபடி இல்லாமல், உங்கள் கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்தால், பிறகு உங்கள் வாழ்க்கையில் நடப்பதெல்லாம் எதுவும் தற்செயலாகத்தான் இருக்கும். ஒவ்வொன்றிற்கும் உடனே நட்சத்திரங்களையும் கோள்களையும் பார்க்க ஆரம்பித்துவிடுவீர்கள். நிர்வாகம் என்பது, உங்கள் வாழ்க்கையை உங்கள் கையில் எடுத்துக் கொள்வது. அதாவது சூழ்நிலைகளை உங்களுக்கு ஏற்றவாறு உருவாக்கிக் கொள்வது. அதனால் நட்சத்திரத்தையும், கோள்களையும் பார்ப்பவர்கள் எப்போதும் நிர்வாகப் பதவிக்கு வந்து விடாதீர்கள். ஏனெனில் நீங்கள் நிர்வாகியாக மாறிவிட்டால், அடுத்தவரின் வாழ்க்கை வேறு அப்பொழுது உங்கள் கையில் இருக்கும்.

உள்நிலையை நிர்வகிப்பதற்கு சிறிது முயற்சி தேவைப்படுகிறது. ஒரு நாளில் வெறும் 30 நிமிடம் இதற்காக நீங்கள் செலவு செய்ய முன் வந்தால், உங்கள் உள்நிலையை நீங்கள் அற்புதமாக நிர்வாகம் செய்து கொள்ள முடியும். அப்போது உங்களை சொர்க்கத்தில் விட்டாலும் சரி நரகத்தில் விட்டாலும் சரி, உள்நிலையில்

பாதிப்பில்லாமல் உங்களால் இருக்க முடியும். வெளிசூழ்நிலையைப் பொறுத்தவரை மகிழ்ச்சியான சூழ்நிலையில்தான் இருக்க விரும்புவோம். ஆனால் ஒரு வேளை மகிழ்ச்சியற்ற சூழ்நிலை அமைந்து விட்டால் என்ன செய்வது? அந்த சூழ்நிலையில்தான் உங்களது உள்சூழ்நிலையை இன்னமும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது மிக முக்கியமானதாக இருக்கிறது.

உங்களைச் சுற்றி இருக்கும் எல்லோரும், உங்களிடத்தில் இனிமையாக நடந்து கொண்டால், உங்கள் உள்நிலை எப்படி இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் அவர்கள் உங்களிடத்தில் மோசமாக நடந்து கொள்ளும் போது, உள்நிலையில் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. எனவே நீங்கள் மோசமான சூழ்நிலைகளில் மாட்டிக்கொண்டாலும் சரி, இனிமையான சூழ்நிலையில் இருந்தாலும் சரி, உங்கள் வாழ்க்கையின் தரமும் சந்தோஷமும் உங்கள் உள்நிலையை நீங்கள் நிர்வாகம் செய்வதில் தான் இருக்கிறது. நீங்கள் அனைவரும் நல்ல நிர்வாகிகளாக ஆக வேண்டும்.

பட்டமளிப்பு விழாப் பேருரை

இது உங்கள் கல்வியின் கடைசிப் படியாகவோ அல்லது உங்கள் கல்வியின் முக்கியமான படியாகவோ இருக்கக்கூடும். இன்று நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஏனென்றால், நான் பல்கலைக்கழகத்தில் படித்தபோது, பட்டமளிப்பு விழாவுக்குச் செல்லவில்லை. (சிரிக்கிறார்) சிறந்த கல்விக் கூடங்களுக்கு நான் அனுப்பப்பட்ட போதிலும், மற்றவர்களைப் பார்ப்பதிலும், கேட்பதிலும் எனக்கு இருந்த அதீத உணர்வால், குழந்தைப் பருவத்திலிருந்தே கல்வி எனக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. ஆசிரியர்கள், ரசாயனம், உயிரியல், கணிதம் என்று எது பற்றிப் பேசினாலும், தாம் பேசுவதையெல்லாம் அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்பது எனக்குத் தெளிவாக தெரிந்தது. தனக்கே ஒரு பொருட்டாக இல்லாத ஒன்றை ஒருவர் பேசும்போது அதைக் கேட்க நான் விரும்பவில்லை. ஒரு ஆசிரியர் தன் முழு மனதுடன் ஈடுபட்டுப் பேசும்போது மட்டும்தான் அவர் பேசுவதைக் கேட்டுள்ளேன். அப்போது மட்டும் தான் வகுப்பில் இருப்பேன். இல்லாவிட்டால் வெளியில் சென்றுவிடுவேன்.

"உங்களின் படைப்புகளிலேயே அதிகம் சிக்கிப்போனால், கடவுளின் படைப்பை தவற விட்டு விடுவீர்கள்."

24 மணி நேரமும் ஏதாவது வெளி வேலைகள் எனக்கு இருந்து கொண்டே இருக்கும். எனவே தனக்கே ஆர்வமில்லாமல் ஒருவர் ஒன்றைப் பற்றி பேசுவதைக் கேட்க ஒரு மணி நேரமோ, ஏன் ஒரு ஐந்து நிமிடமோ கூட அதற்காகச் செலவிட நான் விரும்பியதில்லை. அவர் பேசுவது முட்டாள்தனமாக இருந்தாலும் பரவாயில்லை. அவர் அதை ஈடுபாட்டுடன் பேசினால், நான் கேட்கத் தயார். ஆனால் மிகப் பெரிய விஷயங்களைப் பேசினாலும் அவருக்கே அது ஒரு பொருட்டாக இல்லாதபோது அதை நான் கேட்க விரும்பவில்லை.

உங்கள் கல்வி முடிந்து விட்டதால், இனி இதைப் பற்றிப் பேசலாம் (சிரிக்கிறார்) . என் கல்லூரிக் காலத்தில் 90% நேரம் கல்லூரிக்கு வெளியேதான் கழிந்தது. 10% தான் உள்ளே இருந்தேன். ஒருவர் எப்போது எதைப் பற்றித் தீவிரமாகப் பேசினாலும் அப்போதெல்லாம் அங்கிருந்தேன். இல்லாவிட்டால் வெளியில்தான் இருந்தேன்.

எனவே இங்கு சிலர் தாங்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி ஆர்வத்துடன் பேசுவதைக் காணும்போது எனக்கு மகிழ்ச்சியாய் இருக்கிறது. அது சரியோ, தவறோ, சரியாகவோ இல்லை தவறாகவோ, கச்சிதமாகவோ, இல்லை எப்படியோ இருப்பினும், அவர்கள் செய்வதில் அவர்களுக்கு முழு ஈடுபாடு இருந்தால், அது போதும். நாம் எதையும் மிகச் சரியாக செய்வதால் மனித வாழ்க்கை அழகாக இல்லை. தாங்கள் செய்வதில் முழு உணர்வுடன் ஈடுபடும்போது மட்டுமே மனிதர்களின் வாழ்வு அழகாகத் திகழ்கிறது. அது தரையைக் கூட்டுவதாக இருந்தாலும் சரி, நாட்டை நிர்வாகம் செய்வதானாலும் சரி, எதுவானாலும் சரி. நாம் செய்வதில் முழு மனதுடன் ஈடுபட்டால், அந்தச் செயலைச் செய்வதே அழகாக இருக்கும்.

அப்படிப்பட்ட சிலரை நான் சற்று முன் பார்த்தேன். இங்குள்ள எல்லோரும் அவர்கள் செய்வதில் முழு மனதுடன் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தாங்கள் செய்யும் செயல்களில் ஆர்வமுடன் ஈடுபடும் மக்களுடன் வாழும் சூழலே பெரும் நிறைவு தரும்.

இதுவரை இவ்வுலகில், நீங்கள் அறிந்திராத ஒரு பரிமாணத்தில் இப்போது காலடி எடுத்து வைக்கிறீர்கள். அவ்வாறு அடியெடுத்து வைக்கும்போது நிறைய சேற்றை உணர்வீர்கள். அங்கே ஊழல் இருக்கும், முட்டாள்தனம் இருக்கும், இன்னும் பல விஷயங்கள் நடந்து கொண்டிருக்கும். இந்தச் சேற்றினால் ஒவ்வாமை ஏற்படும் சிலர், அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வழக்கமாக இமயமலைக்கு ஓடிவிடுவார்கள். அவர்களுக்கு எல்லாமே தூய்மையாக இருக்க வேண்டும், இல்லையென்றால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. ஆனால் அது போல் ஒரு தூய்மையான நிலை இங்கு இருக்காது. உலகத்தில் உள்ள அசிங்கங்கள் எல்லாம் எப்படியோ நம் மனதில் நுழைந்துவிட்டது. அந்த அசிங்கங்கள் நடக்க நாம் அனுமதிக்கிறோமா இல்லையா என்பது மட்டுமே நம் கையில் இருக்கிறது. ஆனால் அவை நம் மனதிற்குள் நுழைவதை நாம் தவிர்க்க முடியாது. இந்த உலகில் நடக்கக்கூடிய எல்லா முட்டாள்தனமும் இப்பொழுது உங்களுக்குத் தெரிந்துதானே இருக்கிறது..?

சில மனிதர்கள் ஒவ்வாமை கொண்டு ஓடிவிட முயன்றாலும் அது உண்மையில் நடப்பதில்லை. வேறு வகையான மக்கள், பெரும்பான்மையோர், எப்படியும் இந்த உலகம் முழுவதும் சேறாகத்தான் இருக்கிறது. எனவே நானும் அதில் சேர்ந்து சேறாக மாறி விடுகிறேன் என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். எனவே சேற்றுடன் சேறாக இணைந்து பின்னர் சேற்றுடன் ஐக்கியமாகி விடுகிறார்கள். இந்த சேற்றையும் உரமாக மாற்ற முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

இந்திய ஆன்மீகம் தாமரையை எப்போதும் ஒரு அடையாளமாகப் பயன்படுத்தியிருக்கிறது. சேற்றிலும் செந்தாமரை மலரும் என்பதால்தான் இந்த முக்கியத்துவம். உங்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு நாற்றம் மிக்க சேறுதான் அழகான நறுமணம் வீசும் மலராக மாறியிருக்கிறது. நம் வாழ்வில் ஒவ்வொரு ஷணத்திலும் இந்த சாத்தியம் நம்மிடம் கூட உள்ளது.

நாம் சூழலால் உருவாக்கப்பட்டால் நம்மை மேலாளர்கள் என அழைத்துக் கொள்ள முடியாது. நாம் வாழும் சூழல் நம்மால் உருவாக்கப்பட்டால் மட்டுமே நம்மை மேலாளர்கள் என அழைக்கலாம். இக்கணம் நடக்கக்கூடிய அழகான விஷயங்களை தாமே உருவாக்குபவர் தான் மேலாளர். சூழல்கள் உங்களை உருவாக்கினால் நீங்கள் செய்வது நிர்வாகமே இல்லை.

கல்வி முடிந்து வாழ்வின் ஒரு புதிய பரிமாணத்தில் காலடி எடுத்து வைக்கும் இந்தத் தருணத்தில், உங்களிடத்தில் ஒரு புத்துணர்வு தெரிகிறது. நீங்கள் நன்றாக இருக்கும், அற்புதமாக இருக்கும் என்று நம்புவதை நோக்கி காலடி எடுத்து வைப்பது சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால் வாழ்வில் நாம் கண்டிருப்பது, பலரைப் பொருத்தவரை உண்மையாய் இருப்பது என்ன? உதாரணமாக ஒருவருக்கு வேலை கிடைத்திருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். முதல் நாள் வேலை அன்று, மேசை முன் அமர்ந்தபோது, அதுதான் உலகத்திலேயே மிகவும் அற்புதமான இடமாக இருந்தது. ஆனால் சில ஆண்டுகளிலேயே அதே மேசைக்கு முன்னாலேயே அவர்கள் ரத்த அழுத்தம், நீரிழிவு, அல்சர் மற்றும் பலவற்றை உற்பத்தி செய்து கொள்கிறார்கள்.

இது நாம் செய்யும் வேலையில் உள்ள குறைபட்டால் நிகழ்வதில்லை. நாம் வாழும் உலகின் குறையாலும் நிகழ்வதில்லை. நாம் நமக்குள் போதிய கவனம் செலுத்தாததுதான் இதற்குக் காரணம். நாம் வெளியில் அதிக கவனம் செலுத்தி வருகிறோம்.

உயர்ந்த லட்சியங்கள் வைத்துக் கொண்டு அதை அடைய ஆசை கொண்டால், அது வெற்றிக்கு அழைத்துச் செல்லும் என மக்கள் நினைக்கிறார்கள். உயர்ந்த லட்சியங்கள் வெறும் துவக்கப்புள்ளிதான். நீங்கள் வெற்றிக்கு ஆசைப்படுவதால், செல்வச் செழுமைக்கு ஆசைப் படுவதால், உடல் நலத்திற்கு ஆசைப் படுவதால், அவை நிகழ்ந்து விடுவதில்லை. உங்களுக்குள் வெற்றி, செல்வச் செழுமை, உடல் நலம் இவற்றை உருவாக்கும் திறமையை வளர்த்துக் கொள்வதன் மூலமே அவை நிகழும்.

எல்லோருக்குமே இங்கு பெரிதாய் எதிர்பார்ப்பு உண்டு. உலகத்தில் வெற்றியை விரும்பாதவர் யார் இருக்கிறார்? தெருவில் பிச்சை எடுக்கும் ஒரு பிச்சைக்காரர் கூட வெற்றிகரமான பிச்சைக்காரராக இருக்கத்தானே முயல்கிறார்? ஒவ்வொரு மனிதனும் அவ்வாறு வெற்றி பெற ஆசைப்பட்டாலும், அவற்றுக்கேற்ற திறன் வளர்த்துக் கொள்பவர்களே வெற்றி பெறுகிறார்கள். உங்களை நீங்கள் தகுதிப்படுத்திக் கொள்வது, வளர்த்துக் கொள்வது என்று சொன்னால், வெறுமனே நிர்வாக ஆற்றலை வளர்த்துக் கொள்வது என்று மட்டும் பொருளல்ல. புறச்சூழ்நிலைகளால் தீண்டப்படாத தாமரை மலரைப் போல் உங்களை நீங்களே உருவாக்கிக்கொள்ள வேண்டும். மிக மோசமான சூழலில் இருக்கிறபோது கூட தாமரையின் அழகும், நறுமணமும் கெடாதது போல, புறச்சூழல்களால் தீண்டமுடியாத வாழ்வை வாழ வேண்டும். இந்தத் தன்மை இல்லையென்றால் பலவிதங்களில் வாழ்க்கை உங்களை விழுங்கிவிடும். இந்தப் புதிய நிர்வாகிகள் இவ்வுலகை, இந்நாட்டை, இந்தச் சமூகத்தை, தொழிலை, வர்த்தகத்தை முந்தைய தலைமுறையை விடச் சிறப்பாக நிர்வகிக்க வேண்டும் என்பதே என் ஆசையும், ஆசியும் ஆகும்.

வெளி உலகைப் பொருத்தவரை, முன்பில்லாத அளவிற்கு நமக்கு உதவியாகப் பல சாதனங்கள் வந்து விட்டன. இந்த நேரத்தில், உங்கள் உள்நிலையையும் நீங்கள் உறுதியாக்கிக் கொள்ள இந்த அமைப்பு தன்னால் முடிந்தவரை செய்வது ஒரு வரம் தான். உள்நிலை நிர்வாகத்திற்கும் நீங்கள் தயாராகி விட்டால் இங்கிருக்கும் எல்லாரும், இன்னும் இந்த ஸ்தாபனத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியே செல்லப் போகும் அனைவரும் நிச்சயமாக இதுவரை நிகழ்ந்ததைவிட இன்னும் நன்றாக இவ்வுலகை நிர்வாகம் செய்ய முடியும்.



“ஈடுபாட்டுடன் இருந்தால்தான் உங்களுக்கு வாழ்க்கையே நடக்கும். வாழ்க்கையில் எந்த அளவிற்கு ஆழமாக ஈடுபடுகிறீர்களோ, அந்த அளவிற்கு உங்கள் அனுபவங்களும் ஆழமாக மாறும்.”

நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இதுதான் சரியான நிர்வாகம் என்று துல்லியமாகச் சொல்லும் வரையறைகள் எதுவும் இல்லை. மனிதர்கள் தாங்கள் செய்கிற பணிக்கு தங்களையே முழுமையாக அர்ப்பணிப்பார்கள் என்றால் அங்கே எல்லாமே சரியாக நடைபெறும்.

ஈஷா யோக மையத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு இந்தியாவிலும், உலகின் பிற பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான மையங்கள் உள்ளன. இவற்றை நிர்வகிப்பவர்கள் அனைவருமே இளைஞர்கள். பத்து பதினைந்து ஆண்டுகளாக எங்களுடன் இருப்பவர்கள். மிகச்சிறிய வயதிலேயே எங்களுடன் வந்து

சேர்ந்து இப்போது தங்கள் 30களில் இருக்கிறார்கள். இவர்கள் பயிற்சி பெற்றவர்களோ, அனுபவம் பெற்றவர்களோ அல்ல. அவர்களைக் கொண்டு திறம்பட இதனை நிர்வகிப்பதை நான் ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டேன். முன்னனுபவத்திற்கு ஏதோ நான் எதிரி என்று பொருளல்ல. முழுமையான அர்ப்பணிப்பு இருந்தால் மகத்தான விஷயங்களை எல்லோரும் செய்ய இயலும் என்பதற்காகவே இதனைக் குறிப்பிடுகிறேன்.

இப்போது இந்த இயக்கம், உலகம் முழுவதும் 2 இலட்சத்திற்கும் அதிகமான செயல்திறன் மிக்க தன்னார்வத் தொண்டர்களைக் கொண்டு, முக்கியத்துவம் மிக்க பல சமூகத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவற்றைக் கையாள்பவர்கள் அனைவரும் தன்னார்வத் தொண்டர்கள். அவர்களுக்கு சம்பளம் தரப்படுவதில்லை. மாறாக தங்கள் பையிலுள்ள பணத்தைச் செலவிட்டு அவர்கள் சேவை செய்கிறார்கள். தன்னார்வத் தொண்டர்களை நிர்வகிப்பது ஒருவகையில் சிரமம். அவர்கள் செய்வது தொண்டு என்பதால் அவர்கள் திறம்பட வேலை செய்யாவிட்டால், அவர்களை வேலையை விட்டு நீக்க முடியாது (சிரிக்கிறார்).

ஈஷாவில் தற்போது நிர்வாகம் செய்பவர்கள் வயது குறைவாக இருந்தாலும், எந்த வித கல்வித் தகுதி இல்லாதிருந்தாலும் மக்களைச் சிறப்பாக நிர்வகிக்கிறார்கள். இங்கு அன்றாடம் உருவாகும் சூழல்களையும், ஆயிரக்கணக்கான மக்களையும் அவர்கள் சிறப்பாக நிர்வகித்து நல்ல முன் மாதிரியாகத் திகழ்கிறார்கள்.

நிர்வாகத்திறன் பள்ளியில் கற்பதால் வருவதில்லை. நிதித்துறை, வங்கித்துறை போன்றவற்றைக் கற்றுத்தான் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் நிர்வாகம் என்பது அடிப்படையில் மக்களை சிறப்பான முறையில் செயல்பட உள்ளூக்கம் தருவதுதான். அதைத்தான் நம்மால் செய்ய முடியும். நம்மைச் சுற்றியுள்ள எல்லோருமே சிறப்பாகச் செயல்பட்டால், அதுதான் சிறந்த நிர்வாகம் ஆகும். இது வெறும் தூண்டி விடுவதால் மட்டுமே நிகழ்வதில்லை. தீவிரமான அர்ப்பணிப்பு, அன்பு, உங்கள் பக்கத்தில் இருப்பவரிடம் அந்த ஷணத்தில் உங்கள் 100% கவனத்தையும் முழுமையாக அளித்தல் இவற்றால்தான் நிகழ்கிறது.

ஓ! இவையெல்லாம் சாத்தியமா? வெறும் பகல் கனவா? பெரிய நிறுவனங்களில் இது உண்மையாக நிகழுமா? நாங்கள் சிறைச்சாலைகளில், கிராமப்புறங்களில், உலகெங்கும் உள்ள பெரிய நிறுவனங்களில் எங்கள் பணியைச் செய்திருக்கிறோம். நீங்கள் சந்திக்கும் நபர் எப்படிப்பட்டவர் என்பது முக்கியம் அல்ல. அவருடைய மனிதத் தன்மையின் ஆழமான பகுதியைத் தொட்டுவிட நீங்கள் கற்றுக் கொண்டுவிட்டால், ஒவ்வொரு மனிதருமே உங்களுக்காகத் தங்கள் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்துவார்கள். உங்கள் அருகில் உள்ளவரின் மனிதத் தன்மையின் ஆழத்தை நீங்கள் தொட முடியுமென்றால், அவர் உங்களுக்காகத் தன் உயிரையும் தரத் தயாராக உள்ளதை உங்களால் உணர முடியும்.

உங்களைச் சுற்றி உள்ளவர்கள் உங்களை நேசித்து, உங்களுக்காகச் சிறப்பாகச் செயல்பட விரும்பும்போது, உங்களுக்கு நிர்வாகப் பிரச்சினைகளால் அல்சர் வராது. உங்களைச் சுற்றி உள்ளவர்கள் உங்களுக்கு எதிராகச் செயல்பட்டால், அந்த சூழலில் உங்களுக்கு அல்சர் வருவதைத் தவிர்க்க முடியுமா?

நம்மைச் சுற்றி உள்ளவர்கள் நம் மீது உண்மையிலேயே அன்பு செலுத்தும் சூழலை நாம் உருவாக்காவிட்டால், அவர்களைச் சிறப்பாகச் செயல்பட நிர்வகிப்பது வலியாகவும், பெருந்துயரமாகவும்தான் இருக்கும். உங்களைச் சுற்றி உள்ளவர்கள் உங்களுக்காகச் சிறப்பாகச் செயல்பட விரும்பும்போதுதான் நிர்வாகம் சிறப்பாக அமையும். நீங்கள் எல்லோரும் உங்களையும் உங்களைச் சுற்றி உள்ள உலகத்தையும் சிறப்பாக நிர்வாகம் செய்பவர்களாக வளர வேண்டும் என்பதே என் ஆசையும் ஆசியுமாகும்.

நாம் செய்யும் செயல்களால் நம் வாழ்க்கை அழகாவதில்லை. நம்மைச் சுற்றியுள்ள அனைவரும் நலமாக இருக்கவேண்டும் என்று நாம் கனவு காணும்போதுதான் நம் வாழ்க்கை அழகாகிறது. நீங்கள் எல்லோரும் நல்ல முறையில் வெற்றி பெறுவீர்கள் என நம்புகிறேன். உங்கள் உள்நிலை மேம்பட எந்த உதவி வேண்டுமானாலும், நாங்கள் எப்போதுமே செய்யத் தயாராக இருக்கிறோம்.

இந்த வாய்ப்பின் மூலம், எங்கள் மையத்துக்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம். கோவையிலிருந்து 35 கி.மீ

தொலைவில், வெள்ளியங்கிரி மலைச்சாரலில், எங்கள் மையம் அழகாக அமைந்துள்ளது. அது மிகவும் அழகான இடம். அதில் எங்கள் பங்கு எதுவும் இல்லை. நாங்கள் அதை அழகாக மாற்றவில்லை. எங்களுக்கு முன்பே அங்கே மலை இருந்தது. காடு இருந்தது. அதன் நடுவே மிகவும் சக்தி வாய்ந்த ஒரு மையத்தை உருவாக்கி உள்ளோம். அந்த சக்தியை நீங்கள் அனுபவப்பூர்வமாகத்தான் உணரமுடியும். ஒவ்வொருவருடைய உள்நிலை மாற்றத்துக்காகவே அந்த இடம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் நுழைவதே மக்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவமாக அமையும்.

அங்கே நிகழ்வது எல்லாமே 100% தன்னார்வத் தொண்டர்களால்தான் நிகழ்கிறது. ஈஷாவின் எல்லா நிகழ்வுகளுமே 100% தன்னார்வத்தால்தான் நடைபெறுகிறது.

2,50,000 க்கும் மேற்பட்ட பதிவு செய்து கொண்டுள்ள தன்னார்வத் தொண்டர்களும், ஆசிரமத்தில் உள்ள 2,000 முழு நேரத் தொண்டர்களும் ஆச்சர்யமூட்டும் விதத்தில் அதிசயிக்கத் தக்க வகையில் காரியங்களைச் செய்கிறார்கள். நான் அவர்கள் செய்யும் பணியின் அளவைக் குறித்து ஆச்சர்யம் என்று சொல்லவில்லை. அது செய்யப்படும் விதம், அங்கே மக்கள் அன்றாடச் செயல்களில் காட்டும் அளப்பரிய அன்பையும், ஈடுபாட்டையும் தான் ஆச்சர்யம் என்று கூறுகிறேன். என் வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் என்னைச் சுற்றி அன்பும், ஆனந்தமும் கூடிய கண்ணீர்த் துளிகளைக் காணத் தவறியதில்லை. இந்த விதத்தில், ஒரு மனிதனுக்கு இதை விட சிறந்த அதிர்ஷ்டம் கிட்டாது.

தயவுசெய்து நீங்கள் அங்கே வந்து இவற்றையெல்லாம் அனுபவபூர்வமாக ஒருநாள் உணர வேண்டுமென்று மனமார வேண்டுகிறேன்.

அத்தியாயம் 7

ஈஷா – உள்நிலை மாற்றத்திற்கான புனிதத்தலம்

இந்தியக் கலாச்சாரத்தில், ஒரு ஊர் அல்லது நகரம் உருவாக்கப்படும்போது, மக்கள், முதலில் ஒரு கோவிலையோ அல்லது பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு இடத்தையோதான் உருவாக்கினார்கள். பிறகு அதைச் சுற்றி அவர்களின் வாழ்க்கை உருவாகி வளர்ந்தது. மக்கள் மிகுந்த ஏழைகளாக இருந்தபோதும், குடிசைகளில் வசித்த போதும், தங்களுடைய கிராமங்களில் அல்லது நகரங்களில் பிரம்மாண்டமான கோவிலைக் கட்டினார்கள். இதற்கு சரித்திரத்தில் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. மனிதர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடங்களில்தான் வாழ வேண்டும் என்பதற்கு அப்போது மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

கோவை அருகிலுள்ள வெள்ளியங்கிரி மலைச்சாரலில் அமைந்துள்ள ஈஷா யோகா மையமும் மனிதனின் தேடல்களிலேயே மிகவும் புனிதமான தன்னை உணர்தலுக்காக அர்ப்பணிக்கப்பட்டதுதான். இங்கு வாழக்கையின் ஒவ்வொரு அம்சமும் தன்னை உணர்தலை நோக்கியே இருக்கும்படியாக

சத்குரு மிகவும் நுணுக்கமாக உருவாக்கியுள்ளார். தன்னை உணர்வதற்கான கருவிகள், முறைகள், சக்திநிலை, வழிகாட்டுதல் மற்றும் அனைத்திற்கும் மேலாக குருவின் அருள் ஆகியவற்றை வழங்குவதாக இந்த மையம் திகழ்கிறது.

கேள்வியாளர்: ஒவ்வொருவரிலும் உள்ள ஆன்மீகத் தாகத்தை நிலைப்படுத்தவும், நெறிப்படுத்தவும் குறிப்பிட்ட சில இடங்கள் ஏன் உருவாக்கப்படுகின்றன? அதுபோன்ற இடம் ஏன் தேவைப்படுகிறது?

சத்குரு: 100 பேர், 200 பேர் அல்லது 1000 பேர் சேர்ந்து வாழக்கூடிய ஒரு இடத்தை உருவாக்கினால், பிறகு அதற்கேயுரிய பிரச்சினைகளும் வருகின்றன. பிரச்சினைகளை நீங்கள் தவிர்க்க முடியாது. நீங்கள் ஒரே இடத்தில் 1000 பேரை வைக்கும்போது, அவர்கள் அங்குள்ள வசதிகளை பொதுவாகப் பகிர்ந்து கொள்ள நேரும்போது, பல பிரச்சினைகள் வரத்தான் செய்யும். இப்படி ஒரே இடத்தில் வசிக்கக்கூடிய ஏராளமானவர்களால் வரக்கூடிய பிரச்சினைகள் ஒருவருடைய வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை.

2, 3 தலைமுறைகளுக்கு முன்பு, குறிப்பாக இந்தக் கலாச்சாரத்தில், மக்கள் பெரிய குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். இன்றும் கூட சில குடும்பங்கள் சேர்ந்து வாழ்கின்றன. ஒரே குடும்பத்தில் 200 லிருந்து 300 பேர் வசிப்பார்கள். அப்படி 200லிருந்து 300 பேர் ஒரே இடத்தில் வசிக்கும்போது, இருக்கும் பொருள்களை பகிர்ந்து வாழ வேண்டியதிருந்திருக்கும். சுவாசிக்கும் காற்றையே கூட அங்கிருக்கும் ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த சூழ்நிலையில், எரிச்சல், கோபம், வெறுப்பு, போராட்டம் போன்றவற்றில் சிக்கிக் கொள்ளாமல் வாழ ஒருவருக்கு மிகுந்த சமநிலையும் மனப்பக்குவமும் தேவைப்படுகிறது. மக்கள் சேர்ந்து வாழும்போது, வெகு சுலபமாக கோபமும் வெறுப்பும் அடைய முடியும். மிகுந்த அன்பு, கருணை, அக்கறை போன்றவற்றைக் கொண்டிருக்க இந்த சூழ்நிலை உதவும் என்றாலும், மற்றவற்றிற்கும் இடமுண்டு.

எல்லாவற்றிற்கும் இக்கால கல்விமுறையின் மீது பழியைப் போட நான் விரும்பவில்லை. ஆனால், நவீன கல்வியின் விளைவாக, மக்கள் சேர்ந்து வாழ்வது மெதுவாக கடினமாகிக் கொண்டே வருகிறது. முன்னர், குடும்பம் என்றால், அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா, கணவன், மனைவி, குழந்தைகள், மாமா, அத்தை, அவர்கள் குழந்தைகள், அவர்கள் குழந்தைகளின் குழந்தைகள் என்று இருந்தது. இவ்வளவு பேர் சேர்ந்திருப்பதைத்தான் அப்போது 'குடும்பம்' என்று

நீங்கள் மிகவும் வலிமையிழந்தோ அல்லது வயதாகிப்போவதற்கு முன்போ, நிச்சயமாக அருள் நிறைந்த இமாலய மலைக்குச் சென்று, அதனுடன் நீங்கள் சங்கமிக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசையும் ஆசீர்வாதமும்.

ஒவ்வொரு வருடமும், சத்குருவின் வழி நடத்துதலில், ஈஷா தியான அன்பர்கள், பல ஞானிகளின் சக்தியாய் எதிரொலிக்கும் இமாலய மலையின் 'கார்வால்' பகுதியில் இருந்து யாத்திரையை துவங்குகிறார்கள்.

குருவின் அருள் நிறைந்த இந்த யாத்திரையை மேற்கொள்ளும் பலர், வயது வரம்பு தாண்டி, உடல் இயலாமைகள் தாண்டி அவர்களுக்கே அதிசயமாய், யாத்திரையை நிறைவு செய்கின்றனர். சக்திவாய்ந்த தியானங்களும், ஆன்மீக வழிமுறைகளும் இந்த மலைகளில் பொதிந்து இருக்கும் அதிர்வுகள் நிறைந்த சக்தி நிலையை நாம் உணர வழி செய்கின்றன.

ஈஷா

இந்த மலை சிகரங்கள்
குழந்தைப் பருவத்திலிருந்தே என் கண்களுக்குள்,
அவற்றின் பாதக் கமலங்களில் நிலை நிறுத்தியுள்ளேன்
இப்போது உன்னை.
சாதகர் பலரின் ஆழமான விருப்பம்
என்ஒரு பகுதியை நிலைநிறுத்தத் தூண்டியது
இந்த புனித மலைகளின் அழகிய அடிவாரங்களில்.

ஞானிகள் முனிவர்களின் பாதம்பட்டவை இந்த புனித மலைகள்.
மிகவும் அற்புதமானவர், என் ஞானமும் விடுதலையுமானவர்,
தான் கரைந்துபோகத் தேர்ந்தெடுத்தது
இந்த மகத்தான மலை சிகரங்களையே.

இப்போது அதன் பாதங்களில் உறுதியான தேடுதலை உடையவர்கள்
காலம் கடந்த அழிவற்ற இந்த பாதையைத் தொடர்கிறார்கள்.
அவர்களின் தேடுதலையும், விருப்பத்தையும்
அவர்களின் போராட்டத்தையும், ஆனந்தத்தையும்
அவர்களின் வலியையும், அன்பினையும்
நான் என் இதயத்தில் தாங்குகிறேன்.

இந்த அற்புதமான உயிர்கள், இந்த ஈஷாக்கள்
நிச்சயமாக இந்த உலகிற்கு ஒளியைக் கொண்டு வருவார்கள்.

சத்குரு

அழைத்தார்கள். பின்னர் நமக்கு, 'நான்' என்ற எண்ணம் வளர வளர, எரிச்சலடைய கற்றுக்கொண்டு, ஏற்றுக்கொள்ளும் தன்மையை குறைத்துக்கொண்டு, குடும்பம் என்றால், நான், எனது பெற்றோர், மனைவி, குழந்தை என்றாக்கிக் கொண்டோம்.

பிறகு பெற்றோரையும் விட்டு விட்டோம். இப்போது குடும்பம் என்றால் கணவன், மனைவி மற்றும் குழந்தைகள். மெதுவாக இது மேலும் தீவிரம் ஆகிக் கொண்டே போகிறது. மேற்கத்திய சமூகத்தில் அது ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்துவிட்டது. இந்தியாவின் பெரு நகரங்களில் கூட நாம் அதே நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். இப்போது குடும்பம் என்றால் நீங்கள் மட்டும்தான். இரண்டு பேர்கூட ஒரே வீட்டில் பல நாட்களுக்கு சேர்ந்து இருக்க முடிவதில்லை. ஒன்று அவர்கள் பிரிந்து விடுவார்கள் அல்லது ஒருவர் அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருக்க வேண்டும். இதற்கு இப்போது அவர்கள் அழகாக புதிய பெயர் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள், 'எனக்கென்று தனிமையான இடம் வேண்டும்'. பிரபஞ்சத்தில் இவ்வளவு இடம் இருக்கிறது, உங்களுக்கென்று தனிமையாக எதற்கு இடம்? ஆனால் 'எனக்கென்று தனிமையான இடம்' என்பதிலேயே நோக்கமாக இருக்கிறீர்கள்.

எது உங்களை தனிமையான இடம் கேட்கச் சொல்கிறது? தொடர்ந்து உங்களைச் சுற்றியுள்ள உயிர்களுடன் போராடுவது எது? இந்த உயிரானது நிச்சயமாக யாருடனும் போராட்டத்தில் இல்லை. நாம் நம்மோடு அடையாளப்படுத்தியுள்ள குறுகிய விஷயங்கள் மட்டுமே, யாருடனாவது அல்லது எதனுடனாவது போராட்டத்தில் இருக்க முடியும். 'நான் ஆன்மீகத்தில் வளர விரும்புகிறேன்' என்று ஒருவர் சொல்லும்போது எல்லா எல்லைகளையும் உடைத்துவிட்டு எல்லையற்றதை அடையும் நோக்கத்திலேயே அவர் அப்படிக் கூறுகிறார். அது நடக்க வேண்டுமென்றால், ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலையை, அனல் வீசும் சூழ்நிலையை, உருவாக்குவது அவசியமாகிறது. அந்த சூழ்நிலை எப்போதும் போதுமான ஒழுங்கில் இருக்காது. ஓரளவு ஒழுங்கில் மட்டுமே இருக்கும். எனவே நீங்கள் ஒருவருக்கொருவர் எப்போதும் போராட வேண்டியிருக்கும், ஆனாலும் மற்றவர் மீது அன்புடன் இருக்கவும் தன்னைச் சுற்றியுள்ளோர்க்கு முடிந்ததைச் செய்யவும் கற்றுக் கொள்வீர்கள்.

தியானலிங்க யோகத் திருக்கோவிலில் உள்ள தீர்த்தக்குண்டத்தின் நுழைவாயில். இந்த தீர்த்தகுளம் நிலமட்டத்திலிருந்து 35 அடிகள் கீழே, பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு நீர்நிலை.

இது ஒரு கவனமாக வடிவமைக்கப்பட்ட சூழ்நிலை. மேலும் ஒவ்வொருவரையும் போதுமான அளவு குழப்பமடையச் செய்யும் சூழ்நிலை. முழுவதும் தாறுமாறாகப் போகாது, ஆனால் உங்களை ஏமாற்றத்தில் தள்ளும் அளவிற்கு அல்லது ஆச்சரியத்தில் தள்ளும் அளவிற்கு போதுமான குழப்பம் இருக்கும் (சிரிக்கிறார்). 'என்ன, பைத்தியக்காரத்தனம் இது?' என்று நீங்கள் யோசிக்கும் அளவிற்கு, 'இவையெல்லாம் தேவைதானா?' என்று நீங்கள் உங்களையே, தினசரி கேட்கும்படியான அளவிற்கு போதுமான குழப்பம் இருக்கும். ஆனால் முழுவதும் தாறுமாறாகப் போகும் அளவிற்கு குழப்பம் இருக்காது. எந்தக் குழப்பமும் இல்லாமல் எல்லாமே தெளிவாக இருக்கும்படியான ஒழுங்கான அமைப்பும் எப்போதும் இருக்காது.

இந்த அளவிலான குழப்பம் எப்போதும் இருக்கும்படி பார்த்துக் கொள்வதற்கு நிறைய உழைப்பு தேவைப்படுகிறது (சிரிக்கிறார்). இந்த நிலையை நீக்கி விட்டால், நீங்கள் உங்கள் நிலையில் நிலைத்துவிட்டால், சூழ்நிலை மிகவும் ஒழுங்கானதாக ஆகி விட்டால், உங்களுக்குள் ஆன்மீகத் தாகம் இருக்காது. நீங்கள் உங்களுடைய சூழலில் நிம்மதியாக லயித்து, சில அடையாளங்களுடன் பொருந்திப்போய் விடுவீர்கள். அதனால் தான் இங்கு ஒவ்வொரு அம்சமும் கவனமாக உருவாக்கப்பட்டுள்ளது. இதே நிலையில் வைத்திருப்பது பெரிய விஷயமாக இருக்கிறது. ஏதாவது ஒரு நாளில் கவனமில்லாமல் இருந்தால் கூட, மொத்தமும் கட்டுக்கடங்கா குழப்பத்தில் ஆழ்ந்துவிடும் வாய்ப்பு இருக்கிறது. சீரான நிர்வாகத்தில் கவனமுள்ளவர்களின் கையில் இந்த அமைப்பைக் கொடுத்தால் இதை ஒரு நிறுவனம் போல மிகவும் ஒழுங்காக்கி விடுவார்கள். இந்த அமைப்பு அப்படி ஒரு நிறுவனமாக மாறிவிட்டால், இது மனிதர்களைத் தொலைத்துவிட்டு மனித இயந்திரங்களைத்தான் உருவாக்கும்.

எனவே சரியான சமநிலையில் வைத்திருப்பது கடினமான விஷயமாக இருக்கிறது. எதிர்காலத்திலும் கூட ஆசிரமத்தில் போதுமான குழப்பம் இருக்கும்படியும், போதுமான ஒழுங்கின்மை இருக்கும்படியும், அதே நேரத்தில் தாறுமாறாகிப் போகாமலும் பார்த்துக் கொள்வார்கள் என நம்புகிறேன். ஈஷாவில் எந்த சூழ்நிலையும் தாறுமாறாகப் போகவில்லை, கவனித்திருக்கிறீர்களா? எல்லா சூழ்நிலையையும் நன்றாக நிர்வகித்திருக்கிறோம், ஆனால் அதே நேரத்தில் ஒவ்வொரு சூழ்நிலையும் முழுமையான ஒழுங்குமுறையில் இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம் (சிரிப்பலை).

நாம் எங்கிருக்க வேண்டியவர்கள் என்பது பற்றி மக்கள் தொடர்ந்து யோசித்துக்கொண்டும், தேடிக்கொண்டும் இருந்தால்தான் தங்களுக்கு உள்ள வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் திறன் அவர்களுக்கு அதிகரிக்கும். மக்கள் தங்கள் நோக்கத்திலேயே மிகவும் முனைப்பாக இருந்தால் அது சிறந்தது. ஆனால் அந்த முனைப்பு அரிதாகவே இருக்கிறது. மக்கள் எப்போதும் ஒன்றில் சுகமாக அமர்ந்துவிடவே கவனம் கொள்கிறார்கள். இவ்வாறு நிலைபெற்றால், பின்னர் இயக்கம் நின்றுவிடுகிறது.

தொடர்ந்த குழப்பத்துடன் இந்த மக்கள் மத்தியில் வாழ்வது உங்களில் பலருக்கு மிகவும் துன்பம் தருவதாக இருக்கும். நமது முயற்சி எல்லாம் பயன் தருவதுதானா என்று நீங்கள் சந்தேகிக்கும் அளவிற்கு வெறுப்பைத் தருவதாகக் கூட இருக்கும். வெளியிலிருந்து வரும் மக்கள் ஈஷாவை ஒரு ஒழுங்கான அமைப்பாக உணர்கிறார்கள். ஆனால் இங்கு வாழ்பவர்கள் எப்போதும் இதை முழுவதும் ஒழுங்கற்ற அமைப்பாக உணர்கிறார்கள். வெளியிலிருந்து வரும் மக்கள் நமது நிகழ்ச்சிகள் மிகவும் அற்புதமான ஒழுங்கில் இருப்பதாக நம்புகிறார்கள். ஆனால் இங்கு வசிக்கும் மக்கள், எல்லாமே ஒழுங்கற்ற முறையில் அமைந்திருப்பதாக நம்புகிறார்கள் (சிரிப்பலை).

இதையெல்லாம் சரி செய்வதற்காக இந்த இடத்தில் முழுவதும் வேறுவிதமான சக்தியை முதலீடு செய்து நிரப்பியிருக்கிறோம். இல்லையென்றால் மக்கள் இந்த குழப்பத்தை தாக்குப்பிடிக்க முடியாது. வேறுவிதமான சக்தி என்று நான் சொல்லும்போது

உங்களில் பலர் அதை உணர்ந்திருக்கலாம், ஆனால் அது எப்படி நடக்கிறது என்று தெரியாமலிருக்கலாம்.

அதை சோதனை செய்து பார்க்க வேண்டுமென்றால், ஆசிரமத்தின் வேலிக்கு வெளியே 20 அடி தள்ளி சென்று உட்கார்ந்து தியானம் செய்யுங்கள். பிறகு வேலிக்கு உள்ளே வந்து தியானம் செய்யுங்கள். இரண்டிற்கும் வித்தியாசம் தெரியும். இந்த இடம் இப்படி இருப்பதற்காக பிரம்மாண்டமான அளவில் சக்தியை முதலீடு செய்திருக்கிறோம். அதிலேயே கரைந்து போக ஒருவர் தன்னை அனுமதித்தால், அற்புதமான விஷயங்கள் நடக்கும். அதனுடன் சண்டை போட்டால் எல்லா வழியிலும் அது உங்களை துன்புறுத்தும். இது நீங்கள் புரிந்து கொள்ள முடியாத ஒன்று; நீங்கள் ஒதுக்க முடியாத ஒன்று; ஒன்று நீங்கள் கரைந்துபோக வேண்டும் அல்லது துன்புற வேண்டும். அதுதான் ஒரே வழி. ஆன்மீக செயல்முறை என்பது அதுதான்: முழுவதும் உங்கள் தனித்தன்மையை கரைத்து பிரபஞ்சத்தை உணர விரும்புவதுதான்.

உங்கள் தனித்தன்மையைக் கரைக்க விரும்பாவிட்டால் பிறகு நீங்கள் ஆன்மீகத்தைப் பற்றிப் பேசக்கூடாது, ஆன்மீகத்தைத் தேடக்கூடாது. சமூகத்தில் இது இப்போது புதுப்பாணியாக இருப்பதால் நீங்கள் ஆன்மீகத்தைத் தேடுகிறீர்கள் என்றால் அது தவறு. ஏனெனில் எதனோடு விளையாடுகிறோம் என்று உங்களுக்குத் தெரியவில்லை. 'நான் ஆன்மீகவாதியாக மாற விரும்புகிறேன்' என்று நீங்கள் கூறும்போது, 'நான் என் தனித்தன்மையின் எல்லைகளை உடைத்து எல்லையில்லாததாக ஆக விரும்புகிறேன்' என்றே கூறுகிறீர்கள். உங்கள் அறிக்கை அதுதான். ஆனால் நீங்கள் ஆன்மீகமாக மாற விரும்பும் அதே நேரத்தில் உங்கள் எல்லைகளையும் அப்படியே வைத்துக் கொள்ள விரும்புகிறீர்கள். உங்கள் எல்லைகளை, உங்கள் கழுத்தைச் சுற்றி ஆபரணமாக அணிகிறீர்கள். இவ்வாறிருந்தால் நீங்கள் உங்களுக்கு துன்பத்தைத்தான் வரவழைத்துக் கொள்வீர்கள். அப்படி நீங்கள் உங்களுக்கு துன்பத்தை வரவழைத்துக் கொள்ளும்போது துரதிருஷ்டவசமாக பெரும்பாலும் உங்களைச் சுற்றியுள்ளோரையும் துன்பத்திற்கு உள்ளாக்குகிறீர்கள். உங்களில் சிலர் இதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறீர்கள்.

இது போன்ற இடத்தில் நீங்கள் வாழ்கிறீர்கள் என்றால், நீங்கள் கரைந்து போக விரும்புகிறீர்கள், ஒவ்வொன்றுடனும் ஒன்றிணைய விரும்புகிறீர்கள், உங்கள் உச்சபட்ச தன்மையை அறிய விரும்புகிறீர்கள், இதற்காக உங்களை ஏற்கனவே தயார் செய்துகொண்டு விட்டீர்கள் என்றுதான் பொருள். இது போன்ற முடிவு எடுத்தால் மட்டுமே நீங்கள் இந்த இடத்தில் நுழைய வேண்டும். உங்களில் பலர் ஒரு கட்டத்தில் அந்த முடிவு எடுத்துவிட்டீர்கள். ஆனால் மறுகட்டத்தில், உங்கள் எல்லைகளுடன் நீங்கள் சிக்கிப்போகும்போது, அது பற்றி உங்களிடம் கேட்கும்போது, இப்படி பதிலளிக்கிறீர்கள், 'ஓ, ஆன்மீகம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆன்மீகம் பற்றி எனக்கு அக்கறையில்லை. சத்குருவை நேசிப்பதால்தான் நான் இங்கிருக்கிறேன். ஆன்மீகம் பற்றி நான் கவலைப்பட வில்லை' (சிரிப்பலை).

நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். 'நான் சத்குருவை நேசிக்கிறேன்' என்று நீங்கள் சொல்லும்போது, நீங்கள் நேசிப்பது ஒரு நபரையல்ல. 'சத்குரு' என்பது ஒரு கரைக்கக் கூடிய அம்சம், உங்களை வேகமாக கரைப்பதற்கான ஒரு கிரியா ஊக்கி. எனவே, 'நான் சத்குருவை நேசிக்கிறேன், ஆனால் நான் கரைந்து போக விரும்பவில்லை' என்றோ அல்லது 'நான் ஆன்மீகத்தை விரும்பவில்லை' என்றோ நீங்கள் சொன்னால், பிறகு நீங்கள் மனதளவில் பாதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும் அல்லது உங்கள் வசதிக்குத் தக்கபடி, இந்தப் பக்கமோ அந்தப்பக்கமோ சாய்பவராக இருக்க வேண்டும். இந்த இரண்டுமே நல்லதல்ல.

ஆன்மீக செயல்முறைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் நீங்கள் நுழைய ஒருமுறை தீர்மானித்து விட்டால், பிறகு உங்கள் முயற்சி முழுவதுமே எல்லா எல்லைகளையும் கரைப்பதாகத்தான் இருக்கவேண்டும். நீங்கள் ஏறியுள்ள ரயில் ஒரு திசையில் போகிறது, ஆனால் நீங்கள் எதிர் திசையில் போகப் போராடுகிறீர்கள். ரயில் இன்ஜின் ஒரு திசையில் போகும்போது, இரயில் பெட்டிகள் எதிர் திசையில் போக விரும்பினால் விளைவு போராட்டமாகத்தான் இருக்கும். என்னுடன் நீங்கள் சேர்ந்து விட்டால் உங்களுக்கு ஒரு வாய்ப்புதான் இருக்கிறது. நீங்கள் விரும்புகிறீர்களோ இல்லையோ நான் உங்களை

"ஆன்மீகம் என்பது பழங்கால ஆன்மீக நூல்களைப் படிப்பதோ, மேலிருக்கும் ஏதோ ஒரு கடவுளைப் பற்றியதோ அல்ல. அது உங்கள் உள்ளே பார்ப்பது."

கரைப்பதை நோக்கி மட்டுமே அழைத்துச் செல்வேன். ஒன்று நீங்கள் மகிழ்ச்சியாக வரமுடியும் அல்லது அழுதுகொண்டு வரமுடியும். ஆனால் அந்த ஒரு திசை நோக்கி மட்டுமே நான் உங்களை எடுத்துச் செல்வேன். உங்களை இழுத்துக் கொண்டு வேண்டுமானாலும் செல்வேன், ஆனால் எதிர் பக்கம் உங்களை விடமாட்டேன்.(சிரிக்கிறார்).

இந்த இடம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்திற்கும் மேலாக, மிக நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக் கூடிய பிரமாண்டமான சக்தியுடன் இந்த இடம் உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த தலைமுறையைச் சார்ந்த இங்குள்ள மக்கள், மிகவும் களிப்புடனும் பேரானந்தத்துடனும் இங்கு ஈடுபட வேண்டும்.

ஏனெனில், இப்போது இங்குள்ள சில சாதகமான நிலைகள் பிற்காலத்தில் இருக்காது. சக்திநிலை இருக்கும், வழிகாட்டுதல்கள் இருக்கும், ஆனால் இப்போதுள்ள சில சாதகமான நிலைகள் பிற்காலத்தில் இருக்காது.

ஒரு ஆன்மீக வழிமுறை, அல்லது ஒரு ஆசிரமம் என்பது பொதுவாக துறவுக்கான ஒரு வழிமுறையாக இருக்கிறது. துறவு என்ற வார்த்தையை நான் உச்சரிக்கும் ஷணத்திலேயே மக்கள் மாமியாரை துறப்பது பற்றியும் மனைவியை துறப்பது பற்றியும் அவர்களுக்கு பிடிக்காததை எல்லாம் துறப்பதைப் பற்றியும் யோசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள் (சிரிக்கிறார்). வாழ்க்கையில் தங்களுக்கு துன்பம் தருபவற்றிலிருந்து எப்படி தப்பிப்பது என்று யோசிக்க ஆரம்பித்து விடுவார்கள். இது இப்போது ஒரு ஜோக்காகிவிட்டது: புனிதத்திலும் புனிதமாக கருதப்படுகிற காசிக்கு இந்திய மக்கள் யாத்திரை செல்வது வழக்கம். காசிக்குச் செல்லும்போது நீங்கள் முற்றிலுமாய் துறவு மேற்கொள்ள வேண்டும். நோக்கம் அதுதான். அது கடினமாகத் தெரியவே, சிறிது காலம் கழித்து, ஏதேனும் ஒன்றையாவது துறக்கவேண்டும் என்று மாற்றிக்கொண்டனர். ஆனால் மக்கள் வழக்கம்போல் அதிலும் தந்திரத்தைக் கையாள்கின்றனர். இன்று ஏராளமான இந்துக்கள் காசிக்கு பயணம் செல்லும்போது தங்களுக்கு பிடிக்காத ஒரு உணவுப் பொருளை அங்கு துறந்துவிட்டு வருவது வழக்கமாகி விட்டது. பெரும்பான்மையோர் பாகற்காயை அங்கு துறந்துவிட்டு வருகின்றனர். உண்மையிலேயே இது நடக்கிறது. துறவு என்பது இதையோ அல்லது அதையோ விடுவது அல்ல. துறவு என்பது உங்கள் விருப்பு வெறுப்புகளை துறப்பது. உங்கள் மனத்தில் உள்ள பிரித்துப் பார்க்கும் தன்மையை துறப்பது.

இந்த நாட்டில் காலம் காலமாக ஒரு பாரம்பரியம் இருந்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட வயது தாண்டிவிட்டால் அனைத்தையும் துறந்துவிட்டுச் செல்வார்கள். ஒரு குறிப்பிட்ட நிலை அடைந்துவிட்டால், தங்கள் வாழ்க்கையில் முக்கியமாக இருந்தவற்றையெல்லாம் தங்கள் சொத்து, தங்கள் வீடு, தங்கள் குழந்தைகள், தங்கள் உறவினர்கள் உட்பட அனைத்தையும் துறந்துவிட்டு சென்று விடுவார்கள். வழக்கமாக காசிக்குச் செல்வார்கள்.

எனவே 60 வயதைக் கடந்துவிட்டால், காசி மற்றும் இதர புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்வார்கள். பொதுவாக யாத்திரையின் போதே இறந்து விடுவார்கள். அல்லது சில நேரங்களில், நீண்ட காலமாகியும் இறப்பு வரவில்லை என்றால், மிகவும் வயதாகி வீட்டிற்குத் திரும்புவார்கள். சுமார் 3000 கி.மீட்டர் தூரம் கூட சென்று அனைத்து புனித தலங்களையும் நடைப்பயணமாக தரிசித்து விட்டுத் திரும்புவதற்கு அவரவர்கள் நடையைப் பொறுத்து 12லிருந்து 20 வருடங்கள் கூட ஆகிவிடும். அதற்குள் உங்கள் வாழ்க்கையும் பொதுவாக முடிந்துவிடும்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் அடிக்கடி ஒரு அழகான கதையைச் சொல்வது உண்டு. ஒரு தம்பதி துறவறம் மேற்கொண்டு கோவில் கோவிலாக சென்று கொண்டிருந்தார்கள். அவ்வாறு செல்கையில், கணவன் முன்னதாகவும் சில அடிகள் தள்ளி மனைவியும் போய்க் கொண்டிருந்தனர். வழியில் ஒரு வைரம் கீழே கிடப்பதைப் பார்த்த கணவன், இதை மனைவி பார்த்தால் ஒரு வேளை வைரத்திற்கு ஆசைப்பட்டு துறவை விட்டு விடலாம் என பயந்தார். எனவே தன் காலால் அந்த வைரத்தை மண்ணுக்குள் புதைக்க முயற்சித்தார். கணவன் செயலை தூரத்திலிருந்தே பார்த்துவிட்ட மனைவிக்கு எல்லாமே புரிந்துவிட்டது. பிறகு மனைவி கூறினார், "எப்போது உங்களுக்கு மண்ணிற்கும் வைரத்திற்கும் வித்தியாசம் தெரிகிறதோ அப்போதே உங்களுக்குள் துறவு மனப்பான்மை இல்லை" என்று. ஒன்றை மதிப்பு வாய்ந்தது என்றும் இன்னொன்றை மதிப்பற்றது என்றும் எந்த ஷணத்தில் உணர்கிறீர்களோ, ஒன்றை புனிதமானது என்றும் இன்னொன்றை புனிதமற்றது என்றும் எந்த ஷணத்தில் உணர்கிறீர்களோ அப்போதே உங்களுக்குள் துறவு இல்லை என்றே பொருள்.

எனவே 'துறவு' என்று நாம் சொல்லும்போதும், 'ஆசிரமத்தில் வாழ்வது' என்று நாம் சொல்லும்போதும், எல்லாவற்றையும் விட்டுவிட்டீர்கள் என்று பொருள் அல்ல. வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அதே தீவிரத்தோடு அதே புனிதத்தன்மையோடு ஈடுபடக்கூடிய தகுதி உடையவர் என்றே பொருள். இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒவ்வொன்றையும் முழு முட்டாள்தனமானவை என்று பார்ப்பது அல்லது ஒவ்வொன்றையும் புனிதமாகப்

பார்ப்பது. ஒன்றை புனிதமென்றும் மற்றொன்றை முட்டாள்தனம் என்றும் பார்க்கும்போது நீங்கள் அனைத்தையும் தவற விடுகிறீர்கள். ஒவ்வொன்றையும் முழு முட்டாள்தனம் என்றும் ஒவ்வொருவரையும் முழு முட்டாள்கள் என்றும் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் பிறகு நீங்கள் மக்கள் மத்தியில் வாழ மாட்டீர்கள். அது ஒரு வழி. அல்லது ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் புனிதமாக பார்ப்பது. இது மற்றொரு வழி. இந்த வழியில் நீங்கள் மக்கள் மத்தியில் வாழமுடியும்.

ஒன்று, உங்கள் உடல் மற்றும் உங்கள் மனம் உட்பட எதனோடும் முழுமையாக ஈடுபடுவதில்லை அல்லது நீங்கள் ஒவ்வொன்றுடனும் எந்தப் பாகுபாடுமின்றி முழுமையாக ஈடுபடுகிறீர்கள். இரண்டுமே உண்மையானவை. இந்த இரண்டு வழியுமே அற்புதமாக வேலை செய்யும். ஆனால் எதற்கு நாம் தயாராக இருக்கிறோமோ அதைத்தான் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும், இல்லையா?

ஒவ்வொன்றையும் முழு முட்டாள்தனம் என்று நீங்கள் பார்த்தால் பிறகு எதனோடும் உங்களுக்கு ஈடுபாடு இருக்காது. உங்கள் உடல், உங்கள் மனம் மற்றும் உங்கள் உணர்ச்சி ஆகியவற்றுடன் கூட உங்களுக்கு ஈடுபாடு இருக்காது. எதற்கும் முக்கியத்துவம் தர மாட்டீர்கள். இல்லையென்றால், பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றுக்கும் மிகுந்த முக்கியத்துவம் தருவீர்கள். மண்ணுக்கும் வைரத்திற்கும் வேறுபாடு பார்க்க மாட்டீர்கள். ஆக, இரண்டு வழிகளிலுமே வித்தியாசம் பார்ப்பது என்பது இல்லாத ஒன்றாகிவிடும். ஆசிரமத்தில் நாங்கள், ஒவ்வொன்றையும் புனிதமாகப் பார்க்கும் வழியைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம். ஏனெனில் மக்களுடன் சேர்ந்து வாழ அதுதான் சிறந்த வழி.

எனவே துறவு என்பது உங்களுக்கு வசதியில்லாததை விட்டுவிடுவதல்ல. எப்படியும் முழு உலகமும் அதைத்தான் செய்கிறது, இல்லையா? முழு உலகமும் தங்களுக்கு வசதியில்லாததை விட்டுவிட விருப்பம் கொள்கிறது. தான் விரும்பாததை ஒவ்வொருவரும் துறக்கிறார். ஒவ்வொருவரும் தனக்கு வசதியில்லாததை, தனக்கு முக்கியமற்றதை, தன் வாழ்க்கையில் அர்த்தமற்றதைத் துறந்து விடுகிறார். இப்படிச் செய்வது ஆன்மீகத்தைப் பொறுத்தவரையில் எந்த அர்த்தமும் இல்லாதது.

ஒரு முறை இங்கு நுழைந்து விட்டால், இரண்டு நாட்களுக்கு மட்டும் என்னுடன் உட்கார்ந்தாலும் சரி, அல்லது மீதி உள்ள உங்கள் வாழ்க்கை முழுதும் என்னுடன் உட்கார்ந்தாலும் சரி, நீங்கள் தவறு செய்து விட்டீர்கள். நீங்கள் என்னுடன் உட்காரும் தவறைச் செய்துவிட்டால், பிறகு நீங்கள் ஆன்மீகப் பாதையில் இருக்கிறீர்கள். விருப்பத்துடனும் ஆனந்தத்துடனும் வரலாம், அல்லது அழுது கொண்டும் புலம்பிக் கொண்டும் வரலாம். எப்படியும் நாம் உங்களை இழுத்துக்கொண்டு போவோம். நீங்கள் ஆனந்தத்துடன் வருவது அனைவருக்கும் நல்லது. நீங்கள் அப்படி வருவது நம் அனைவருக்கும் இனிதாக இருக்கும். இல்லை நான் புலம்புவேன், கத்துவேன் என்றாலும் சரி. நாங்கள் அதை பொறுத்துக்கொண்டு அப்போதும் உங்களை இழுத்துக்கொண்டே தான் செல்வோம். உங்களுக்கு வேறு வழி என்பது மட்டும் கிடையாது. (சிரிக்கிறார்).

கேள்வியாளர்: சத்குரு, நான் என்னுடைய தினசரி நடை பயிற்சிக்காக மஹாமுத்ரா உணவகம் சென்று, அங்கிருந்து வனத்துறை செக்போஸ்ட் வரை சென்று திரும்பும் போது...

சத்குரு: எங்கே? மஹாமுத்ராவிற்கா? (சிரிக்கிறார்) அது நடை பயிற்சி செய்யும் இடமென்று எனக்குத் தெரியவில்லையே..?

கேள்வியாளர்: அப்போதெல்லாம் நான் ஆசிரமத்தை விட்டு வெளியே கால் எடுத்து வைக்கும்போதே, மிகுந்த சக்தி வேறுபாட்டை என்னால் உணரமுடிகிறது. நான் அமெரிக்காவிற்குத் திரும்பிப் போகும்போது என்ன நடக்கும் என யோசிக்கிறேன். இந்த சக்திநிலை வேறுபாட்டைப் பற்றியும் ஏன் அப்படி நிகழ்கிறது என்பது பற்றியும் கூற முடியுமா? ஆசிரமத்தில் வேலை செய்யும் கட்டிடத் தொழிலாளிகளும், ஏன் தெரு நாய்களும் கூட இந்த சக்திநிலையால் பயனடைவார்கள் என்று முன்பொரு முறை கூறியிருக்கிறீர்கள். இது பற்றி மேலும் விளக்க முடியுமா?

சத்குரு: அமெரிக்கா என்ன, இங்கு உருவாக்கப்பட்டுள்ள சக்திநிலையை நீங்கள் செவ்வாய் கிரகத்திற்குக் கூட எடுத்துப்

ஈஷா யோக மையத்தை ஒட்டியிருக்கும் வெள்ளியங்கிரி மலைமீது இருக்கும் யாத்திரை நடைபாதை. யாத்திரீகர்களால் கோவிலாக மதிக்கப்படும் இந்த வெள்ளியங்கிரி மலை, பழங்காலத்தில் பல முனிவர்களுக்கும் ரிஷிகளுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்தது. இன்று, தியான அன்பர்கள் இங்கு பரவியிருக்கும் சக்தியை உணர்வதற்காகவே இந்த மலைகளில் யாத்திரை மேற்கொள்கின்றனர்.

சத்குருவிற்கு, குழந்தைப் பருவத்தில் இருந்தே இந்த மலைகள் அவரது கண்களுக்குள் இருந்தன. எனவே அந்த மலைகளைத் தேடி நாடெங்கும் அலைந்திருக்கிறார். இன்று, ஈஷா யோக மையம் இந்த மலைகளின் அடிவாரத்திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மலைச்சாரலை தக்ஷிண கைலாஷ் அல்லது தென் கையிலாயம் என்று வழங்குகின்றனர். இங்கு ஆதி யோகியான சிவன் கூட சில காலம் இருந்ததாக சொல்கின்றனர். இந்த மலைகளில் பொதிந்திருக்கும் சக்தி, அதன் அடிவாரத்தில் இருக்கும் தியானலிங்கத்தின் சக்தியோடு இணைந்து, மனித குலத்தையே முற்றிலுமாய் மாற்ற வல்லது என்கிறார் சத்குரு.

போகமுடியும். ஆனால் 'மஹாமுத்ரா'விற்கு எடுத்துப் போக முடியாது (சிரிக்கிறார்). நீங்கள் ஆசிரமத்திலிருந்து ஒரு இடைவெளியை விரும்புவதால்தான் 'மஹாமுத்ரா' செல்கிறீர்கள். உங்கள் நோக்கமே இந்த இடத்திலிருந்து சற்று நேரம் விலகி இருப்பதுதான். அதனால்தான் 'மஹாமுத்ரா'விற்குப் போகிறீர்கள். நீங்கள் இந்த சக்தியை செவ்வாய் கிரகத்திற்குக் கூட எடுத்துப் போக முடியும், ஆனால் 'மஹாமுத்ரா'விற்கு எடுத்துப் போக முடியாது. இதனுடைய அழகே அதுதான். (சிரிக்கிறார்)

எனவே, இங்கு என்ன கிடைக்கிறதோ இந்த சக்தி, இந்த இடத்தின் தன்மை, இந்த ஆதரவு அவற்றை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம், ஆனால் 'மஹாமுத்ரா'விற்கு எடுத்துப் போக முடியாது. அந்த இடத்தில் தவறு ஏதும் இல்லை. ஆனால் நீங்கள் அங்கு போவது இங்கிருந்து தப்பிக்க விரும்புவதால்தான். நீங்கள் தப்பிக்க விரும்பினால் தப்பித்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் தப்பிப்பது உங்களுக்கான சாத்தியத்திலிருந்துதான். அதனால் நீங்கள் சுய தோல்விக்கான திட்டங்களைத்தான் உண்டாக்கிக் கொள்வீர்கள். முழு உலகமும் இதில் தான் மும்முரமாக இருக்கிறது.

இப்படி ஏன் சொல்கிறேன் என்றால், உலகில் மக்கள் இறக்கும் விதத்தைப் பாருங்கள். மக்கள் இறக்கும்போது நீங்கள் அருகிலிருந்து பார்த்தால், 90 சதவீத மக்கள், அல்லது அதற்கும் அதிகமானவர்கள், கடைசி நேரத்தில் பயத்தில் இறப்பார்கள்; என்ன நடக்கிறது என்றே தெரியாமல் இறப்பார்கள்; தங்கள் உயிர்த்தன்மையின் மீது எந்தக் கட்டுப்பாடும் இன்றி இறப்பார்கள்; கடைசி நேரத்தில் சிறுநீர் கழித்து இறப்பார்கள்; மலம் கழித்து இறப்பார்கள். இவை சாதாரண உடல் சம்பந்தமான செயல்கள் மட்டும் அல்ல. உங்களுக்குள் நீங்கள் எந்த அளவு நிலை பெற்றிருக்கிறீர்கள், உயிர்த்தன்மையின் செயல்முறைகளில் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதையெல்லாம் அது வெளிப்படுத்துகிறது. நீங்கள் சுய அழிவில் இருக்கிறீர்களா அல்லது உயிர்த்தன்மையின் செயல்முறைகளில் ஏதாவது செய்திருக்கிறீர்களா என்பதையெல்லாம் உங்கள் இறப்பின்

கடைசி நேரம் தெளிவாக வெளிப்படுத்துகிறது. வாழ்க்கை முழுவதும் நீங்கள் நடிக்கலாம், ஆனால் இறக்கும் ஷணத்தில் நீங்கள் நடிக்க முடியாது. நீங்கள் யார் என்பதை இறப்பு சரியாக தெரிவித்து விடும்.

அதைக் கண்டுபிடிப்பதற்காக இறக்கும்வரை காத்திருக்கப் போகிறீர்களா? அந்த முடிவு உங்கள் கையில் இருக்கிறது. ஆனால் நீங்கள் அறிவுடன் செயல்படுபவராக இருந்தால், உங்களைக் குறித்து இப்போதே நீங்கள் ஏதாவது செய்யவேண்டும். உங்கள் உச்சபட்ச நலனுக்கான வழிகளைத் தவிர்க்க நினைத்தால் நிச்சயமாக நீங்கள் உங்களையே அழித்துக் கொள்கிறீர்கள், இல்லையா? உங்கள் உச்சபட்ச நலனை தவிர்க்க நினைத்தாலோ அல்லது அதிலிருந்து இடைவெளி எடுத்துக் கொள்ள நினைத்தாலும் கூட, அது உங்களை நீங்களே அழித்துக் கொள்வதற்கு சமம். இப்பொழுது உங்களுடைய செயலை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எதற்காக அந்தப் பக்கம் வாக்கிங் போகிறீர்கள்? வேறு விதமான உணவை விரும்புகிறீர்கள் என்றால் அது வேறு. புதிய காற்றை சுவாசிக்க விரும்புகிறீர்கள் என்றால் அது வேறு. சிறிது உடற்பயிற்சி பெற விரும்புகிறீர்கள், அதுவும் கூட பரவாயில்லை.... ஆனால் இந்த சூழ்நிலையிலிருந்து தப்பிக்க நினைக்கிறீர்கள் என்றால் அது மிகவும் முரணானது. எனவேதான் கூறினேன், இந்த சக்தியை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம், ஆனால் மஹாமுத்ராவிற்கு எடுத்துப் போக முடியாதென்று(சிரிக்கிறார்). எப்போது இதிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறீர்களோ அப்போது அதை எடுத்துப் போக முடியாது.

இந்த இடத்தைப் பற்றி அறியாமலேயே கூட யார் நுழைந்தாலும் - வியாபாரத்திற்காக வந்திருக்கலாம், வேலைக்காக வந்திருக்கலாம், இங்கு சுற்றிக் கொண்டிருக்கும் தெரு நாயாகவும் இருக்கலாம் - அனைவருமே இங்குள்ள சக்தியால் தாக்கப்படுகிறார்கள். நான் இப்போது சொல்லப்போவதை நீங்கள் வெகு எளிதாக எதேச்சையானது என்றோ அல்லது வேறு காரணம் கண்டுபிடிக்கவோ செய்யலாம். இது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம், இங்கு பக்கத்திலுள்ள ஒவ்வொரு வயலிலும் பலத்த பாதுகாப்பு

ஏற்பாடுகளும் மின்வேலியும் இருக்கிறது. அவ்வாறிருந்தும், அந்த ஏற்பாடுகளும் வேலிகளும், காட்டு யானைகளாலோ வேறு விலங்குகளாலோ சேதப்படுத்தப்படுகின்றன. ஆனால் ஒரு முறை கூட நமது ஆசிரமத்திற்கு அப்படி நேரவில்லை. இன்னும் சொல்லப்போனால் நமது மின்வேலி பல நேரங்களில் வேலை செய்வதில்லை(சிரிக்கிறார்). கடந்த 14 வருடங்களாக காட்டு விலங்குகள் இங்கே எதையும் சேதப்படுத்தவில்லை. அப்படியே அவை வந்தாலும் வாசல் வழியாகவே வந்து வாசல் வழியாகவே போய்விடுகின்றன.(சிரிக்கிறார்). இவையெல்லாம் காட்டு விலங்குகளிடமிருந்து எதிர்பார்க்க முடியாத மிகவும் நல்ல நடத்தைகள். அவையெல்லாம் தியானத்தன்மை பெற்றுவிட்டன என்று சொல்லவில்லை. ஆனால் இங்குள்ள சக்திநிலையால் அவையும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் இங்கே விழிப்புணர்வின்றி ஒரு கட்டிடத் தொழிலாளி போலவோ அல்லது ஒரு தெரு நாய் போலவோ வரவில்லை. ஓரளவு விழிப்புணர்வுடன் வந்திருக்கிறீர்கள். நீங்கள் முழு விழிப்புணர்வுடன் இல்லை, ஆனால் போதுமான விழிப்புணர்வு உங்களை இது போன்ற இடத்திற்கு அழைத்து வந்திருக்கிறது. அந்த அளவு விழிப்புணர்வு உங்களுக்குள் இருக்கும்போது, நீங்கள் பின்வாங்கக் கூடாது. பின்வாங்குதல் என்பது மிகவும் முட்டாள்தனமானது. இடைவெளி இருக்கக்கூடாது. 'மஹாமுத்ரா' இடைவெளி இருக்கவே கூடாது. எல்லா நேரமும் விழிப்புடன் இருக்கவேண்டும். ஏனெனில் பலர் பல பிறவிகளாக ஆன்ம சாதனை செய்து உண்டாக்கும் சூழ்நிலையை நாம் இங்கு உருவாக்க முயற்சிக்கிறோம். இந்தச் சூழ்நிலை, இப்பிறவியிலேயே உங்களுக்கு உச்சநிலை கிடைக்கும்படியான சூழ்நிலை. எனவே மாறாத கவனம் தேவைப்படுகிறது, இல்லையென்றால் அது உங்களுக்கு நிகழாது. 'ஓ, நான் என்ன செய்வது? நான் என்ன செய்வது?' நீங்கள் என்ன செய்வது என்பது விஷயமல்ல. செய்வதை எப்படி செய்கிறீர்கள் என்பதுதான் விஷயமே.

தினசரி அளவில் 100, 200 மக்களுடன் வாழ்வது, தினசரி அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வது, இப்படி வாழும்போது நிறைய விஷயங்களை பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் நினைக்கும்

வழியில் சிலர் நினைக்க மாட்டார்கள்; நீங்கள் சாப்பிடுவது போல் அவர்கள் சாப்பிட மாட்டார்கள்; நீங்கள் கழுவுவது போல் அவர்கள் கழுவ மாட்டார்கள். ஒவ்வொரு அம்சமும் உங்களை எரிச்சலடையச் செய்யலாம். நீங்கள் நினைப்பது போல மக்கள் நினைக்கவோ, உணரவோ, புரிந்து கொள்ளவோ மாட்டார்கள். ஒவ்வொரு மனிதரும் அவரவர் வழியில் தனித்தன்மை கொண்டவர்கள். ஒவ்வொரு அம்சமும் உங்களை எரிச்சலடையச் செய்யலாம் அல்லது ஏமாற்றத்தில் ஆழ்த்தலாம். மேலும், ஈஷா தற்போது அனைத்துக் கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து வசிக்கும் இடமாக இருப்பதால், மற்றவர் செய்வது இது பிடிக்கும் அது பிடிக்காது என்பதில் சிக்கிக் கொண்டால், நிச்சயமாக அது உங்களை பைத்திய நிலைக்குக் கொண்டு செல்லும்.

நீங்கள் உங்களுக்குள் இன்னும் சிறிது ஆழமாக பார்க்கத் தெரிந்தவராக இருந்தால் மட்டுமே, உங்கள் மனதை விடவும் சிறிது ஆழமான ஒன்றைத் தெரிந்து கொள்வீர்கள், உங்கள் சொந்த உணர்ச்சிகளை விடவும் சிறிது ஆழமான ஒன்றைத் தெரிந்து கொள்வீர்கள். உங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை விடவும் சிறிது ஆழமான ஒன்றைத் தெரிந்து கொள்வீர்கள். நீங்கள் 100 சதவீதம் முழுமையாக விடுபடவில்லை என்றாலும் ஓரளவு நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

அப்படி நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை என்றால் பிறகு அது உங்களை மனத் தடுமாற்றத்தில் தள்ளும். ஆனால் நீங்கள் அறிந்திருந்தால், ஒவ்வொரு நாளும் நீங்கள் முழுப் போராட்டத்தில் சிக்கினாலும் அது உங்களை பாதிக்காது. அது ஒரு நல்ல சூழ்நிலை. உங்களைச் சுற்றியுள்ள போராட்டத்தில் கவனம் இல்லாமல் இல்லை. அனைத்துப் போராட்டங்களிலும் ஈடுபடுகிறீர்கள், ஆனாலும் அது உங்களைப் பாதிப்பதில்லை. இது உங்கள் வளர்ச்சிக்கு நல்லது.

உங்களைச் சுற்றியுள்ள போராட்டத்தை நீங்கள் புறக்கணித்தால் அது உங்களுக்கு நல்லதல்ல. பிறகு நீங்கள் ஒரு தெரு நாய் போல்தான். ஒரு தெரு நாய்க்கு தன்னைச் சுற்றி நடக்கும் போராட்டங்கள் பற்றி எதுவும் தெரியாது. நீங்கள் விழிப்புணர்வுடன் இருக்கிறீர்கள், இந்தப் போராட்டங்களில்

“வேலை செய்வதின் பேரானந்தம், செயல் செய்வதற்கு அவசியம் அற்றவர்களால் மட்டுமே உணர முடியும்.”

ஈடுபடுகிறீர்கள், ஆனால் பாதிக்கப்படாமல் இருக்கிறீர்கள். அது நல்லது. அப்படி இல்லாமல் நீங்களே ஒரு போராட்டமாக மாறிவிட்டால், பிறகு நீங்கள் தொலைந்து விடுவீர்கள். எனவே ஒவ்வொருவருடனும் ஈடுபடத் தேவையிருக்கிறது. ஒவ்வொருவருடைய முட்டாள்தனங்களையும், ஒவ்வொருவருடைய எல்லைகளையும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ஆனாலும் பாதிக்கப்படாமல் இருக்கிறீர்கள்; போதுமான ஈடுபாடும் அக்கறையும் இருக்கிறது, ஆனாலும் பாதிக்கப்படாமல் இருக்கிறீர்கள். இது ஒரு மிகச் சிறந்த பயிற்சி. உங்களுடைய ஆன்மீகத்தை நிலைநிறுத்த ஒரு அடித்தளம்.

ஆன்மீகம் என்பது பொருள்தன்மைக்கும் அப்பாற்பட்ட சிலவற்றை அறிந்து கொள்வது; மனதிற்கும் உடலுக்கும்

அப்பாற்பட்ட சிலவற்றை அறிந்து கொள்வது. உங்கள் உடலுக்கும் மனதுக்கும் அப்பாற்பட்ட சிலவற்றை நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ இல்லையோ, இங்கு ஒவ்வொரு நாளும் மக்கள் உங்களை சோதித்து விடுவார்கள். (சிரிக்கிறார்). உங்கள் உடலுக்கும் மனதுக்கும் அப்பாற்பட்ட எதையும் நீங்கள் அறிந்திருக்காவிடில், இங்கு நீங்கள் மிகவும் துன்பத்திற்குள்ளாவீர்கள். உடலுக்கும் மனதுக்கும் அப்பாற்பட்ட மிகச் சிலவற்றையாவது அறிந்திருந்தால், பிறகு நீங்கள் ஒவ்வொன்றையும் கடந்து போகிறீர்கள்.

தற்போது இங்கிருக்கும் இந்த நிலையை மாறவும் விடமாட்டோம். அதே நேரத்தில் முழுக் குழப்பம் ஆகவும் விட மாட்டோம்; எவ்வளவு தேவையோ அவ்வளவு குழப்பம் மட்டுமே இருக்கும். ஏனெனில் நீங்கள் குழப்பமாகிற போதுதான் தேடுவீர்கள், மிக விழிப்பாக மாறுவீர்கள். நீங்கள் அமைதியாகிவிட்டால், மிகவும் வசதியாக உணர்வீர்கள். நிலைபெற்று விட்டோம் என்னும் தவறான உணர்வு உங்களுக்கு வரக்கூடும். சாதாரணமாக மக்கள் இது போன்ற நிலைத்துவிட்ட உணர்வை, தங்களை சுற்றி பல பாதுகாப்பு வளையங்களைக் கொண்டு அடைகிறார்கள். பாதுகாப்பான குடும்பம், பாதுகாப்பான வேலை, பாதுகாப்பான வாழ்க்கைச் சூழ்நிலைகள், பாதுகாப்பான சமுதாய சூழல்...இதெல்லாம் இருந்தால் நீங்கள் நிம்மதியாக உணர்வீர்கள். ஆனால் இதில் ஏதேனும் ஒன்று பறிபோய்விடுமோ, அவ்வாறு நிகழ்ந்தால் நம் வாழ்க்கையே தலைகீழாகிவிடுமோ என்ற நிரந்தர பயத்திலேயே வாழ்கிறீர்கள்.

இன்று, இவ்வுலகில் மிகவும் சந்தோஷமாக வாழும் சிலர், நாளைக்கே யாரேனும் இறந்துவிட்டாலோ, இல்லை சொத்து பறிபோனாலோ, இல்லை வேறு ஏதோ ஒன்று நிகழ்ந்தாலோ மொத்தமுமாக உடைந்து போய், மிகவும் பரிதாபமான நிலைக்கு வந்து விடுவார்களா இல்லையா? இது உங்களுக்கே கூட நிகழ்ந்துதான் இருக்கும். உண்மைதானே? இது மீண்டும் மீண்டும் இவ்வுலகில் நடந்து கொண்டே தானே இருக்கிறது? அதனால் இது போன்ற பாதுகாப்பான உணர்வு, இந்த வாழ்விலோ அல்லது இந்த வாழ்விற்கப்புறமோ எங்கும் அழைத்துச் செல்லாது.

'நான் ஆன்மீகவாதியாக மாற விரும்புகிறேன்' என்று நீங்கள் சொல்லும் ஷணத்திலேயே நீங்கள் உங்கள் வாழ்க்கையைக் குறித்து நீண்ட காலத் திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்றுதானே பொருள்? இந்தத் திட்டங்கள் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் மட்டும் அல்ல; நீங்கள் அதைத் தாண்டியும் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படித்தானே? எப்பொழுது உங்கள் இறப்பைத் தாண்டியும் நீங்கள் யோசிக்கிறீர்களோ அப்போது உங்கள் நலனுக்காக மிக நீண்ட திட்டம் தீட்டிவிட்டீர்கள் என்பதுதானே பொருள்? (சிரிக்கிறார்). குறுகிய காலத்திட்டத்தில் நீங்கள் சமாதானம் அடையவில்லை. உங்கள் நலனுக்காக மிக நீண்ட காலத்திட்டம் வைத்திருக்கிறீர்கள்.

இது உண்மையென்றால், இதுதான் உங்களுக்கு வேண்டுமென்றால், நீங்கள் உங்கள் உடல், மனம் தாண்டி வேறொன்றை உங்களுக்குள் நிலைநாட்டியாக வேண்டும். இல்லையென்றால், இவ்விடம் உங்களுக்குப் பெரும் துயரமாக இருக்கும். உங்களுக்கு இங்கு துயரம் இருப்பின், நீங்கள் சாதனா செய்து உங்களுக்குள் ஒன்றை நிலைநாட்டியே ஆக வேண்டுமென்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தவரின் மேல் எரிந்து விழாமல், அவரைக் கடிந்து கொள்ளாமல் , எப்பொழுதும் யாரேனும் ஒருவரைப் பற்றி குறை கூறாமல் இருக்க நிச்சயமாக நீங்கள் இன்னும் அதிக சாதனா செய்து உங்கள் உள்நிலையைச் சமன்படுத்தியே ஆக வேண்டும்.

கேள்வியாளர்: சத்குரு, இந்த கேள்வி இங்கு ஆசிரமத்தில் நாம் பின்பற்றி வரும் ப்ரசன்ஸ் நேரத்தைப் பற்றியது. (Presence time-மாலையில் 6.20லிருந்து 6.40 வரை இந்த நேரத்தில் ஆசிரமத்தில் இருப்பவர்கள், சத்குருவின் அருளைப் பெற, தினமும் மாலையில் கூடுவார்கள்). இது ஆன்மீகத்துக்கு உகந்தது என்று எனக்குத் தெரியும், ஆனால் இந்த நேரத்திற்கு குணமாக்கும் தன்மையும் இருப்பதாக கேள்விப்பட்டேன். இதைப் பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா? அதோடு இந்த நேரத்தை நாங்கள் எவ்வாறு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றியும் கூற முடியுமா?

சத்குரு: இங்கு ஆசிரமத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் "ப்ரசன்ஸ்" நேரம், நீங்களெல்லாம் ஒவ்வொரு ஷணமும

100% விழிப்புணர்வுடன், மாற்றமில்லாத உள்வாங்கும் திறனுடன் இருந்தால், தேவைப்படாது. ஒரு குறிப்பிட்ட இடமும் நேரமும் இதற்கென தேவைப்படாது. ஆனால் இது பேராசை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஷணமும் முழுமையான விழிப்புணர்வோடும் உள்வாங்கும் திறனோடும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முறையல்ல.

நீங்கள் அந்த நேரத்தில் அங்கிருந்து, இது உங்களுக்கு நிகழ அனுமதிப்பது மிகவும் அவசியம். இது போன்ற ஒரு இடமும் நேரமும் உங்களுக்கு பெரும் உறுதுணையாக இருப்பதற்காகவே அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த சக்திநிலை நாள் முழுவதும் இருப்பினும், இந்தத் தீவிரத்துடன் இருக்கச் செய்வதென்பது பல காரணங்களால் சாத்தியமில்லை. அதனால் குறிப்பிட்ட சில நேரங்களில் இந்த சக்திநிலை உச்ச பட்ச தீவிரத்தில், தடிப்பான தோலுடைய, எதையுமே உணராத கழுதைகளும் கூட உணருமளவிற்கு, தீவிரமாக இருக்கும். (சிரிக்கிறார்). எப்படிப்பட்டவரும் அந்த சூழ்நிலையில் உணர்வர். அனைவருமே இந்த 'ப்ரசன்ஸ்' நேரத்தில் நிச்சயமாக அங்கிருக்க வேண்டும் இது உங்களுக்கு ஒரு மிகப் பெரிய வாய்ப்பு.

நீங்கள் எங்கிருந்தாலும் இந்த நேரத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த ஆசிரமத்தில் ஒரு குறிப்பிட்ட இடம் இதற்கென்று அமைக்கப் பட்டாலும், இங்கிருந்து பல பேர் வெளியே வேலையாக செல்லும் போது, அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் நீங்கள் அந்தத் தன்மையுடன் இருக்க முடியும். வெளியில் வீட்டில் வசிப்பவர்கள் கூட தினம்தோறும் இந்த ப்ரசன்ஸ் நேரத்தை அனுஷ்டிக்க முடியும். அப்போதும் அது வேலை செய்யும். ஆனால் நீங்கள் முன்கூட்டியே எங்களிடம் தெரிவித்துவிட்டால், இன்னும் நன்றாக உங்களுக்கு இந்த நேரம் பயன்படும் படி எங்களால் பார்த்துக் கொள்ள முடியும். இந்த நேரத்தில் இந்த இடத்தில் நான் இதற்காக அமர்வேன் என்று எங்களிடம் நீங்கள் சொல்லிவிட்டால், உங்களுக்கு பயன்படக் கூடிய வகையில் இன்னும் சில கருவிகளை நாங்கள் உங்களுக்கு தர இயலும்.

நீங்கள் உங்களின் சொந்த முயற்சியிலேயே இந்த விழிப்புணர்வையும், சக்தி நிலையையும் அடைய

தீர்த்தகுளத்தின் உள்புற வடிவம். இங்குள்ள நீரில், 4 அடி ஆழத்தில், கெட்டிப்படுத்தப்பட்ட பாதரசத்தால் ஆன ரசலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

தீர்த்தகுளத்தின் அடிப்படை நோக்கம் ஒருவர் ஆன்மீக அதிர்வுகளைப் பெறுவதாக இருந்தாலும், உடல் மற்றும் மனக் கோளாறுகளுக்கு காரணமாக இருக்கிற சக்திநிலை மாறுபாட்டையும் இது சரி செய்கிறது. பழங்கால சித்த மருத்துவம், இது போன்று உருவாக்கப்படும் நீர் நிலைகளுக்கு பலவாறான குணப்படுத்தும் சக்திகள் இருப்பதாக சொல்கிறது.

வேண்டுமென்றால் - இதை உங்கள் தன்னம்பிக்கையை குறைப்பதற்காக சொல்லவில்லை - உண்மையிலேயே அதற்கு மிகவும் அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்வீர்கள். ஒரு சிலர் வேண்டுமானால் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். அவர்களும் கூட இந்த நிலையை அடைவதற்கு நிறைய காலத்தை வேறெங்கோ செலவழித்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட சக்தி

நிலையை அடைந்து அதைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள மனிதர்களுக்கு மிக நீண்ட காலம் தேவைப்படும்.

'ப்ரசன்ஸ்' நேரம் குணப்படுத்தும் தன்மை உடையதா? நாம் இதை உருவாக்கியது நிச்சயமாக நோய் நொடிகளை குணப்படுத்துவதற்காக இல்லை. ஆனால் அது சாத்தியம் தான். நீங்கள் "நான்" என்று எதை சொல்கிறீர்களோ அந்த சக்திதான், உங்கள் உள்ளிருந்து இந்த உடலை உருவாக்கியது. உங்கள் உடல் வெளியிலிருந்து உருவாக்கப்பட வில்லை. ஆக இந்த சக்தி தான் உங்கள் முழு உடலையே உருவாக்குகிறது என்றால், உடலில் ஏற்படும் பழுதுகளையும் நிச்சயமாக அதனால் சரிசெய்து கொள்ள முடியும்தானே? அந்த சக்தியை ஒரு தீவிரத்தில், ஒரு அதிர்வில், கூர்மையான நோக்குடன் வைத்திருந்தால், உங்கள் உடலில் சரியில்லாமல் போயிருக்கும் எதனையும் அதனால் சரி செய்து விட முடியும். உங்களுடைய சக்தி நிலை ஒரு தீவிரத்துக்கு உயர்ந்து விட்டால், அதனால் எதை வேண்டுமானாலும் குணப்படுத்த முடியும்.

'நான் எனப்படும் உங்கள் ஆளுமையை அழகாக பலவிதமாக அலங்கரித்துக் கொண்டு "நான் ப்ரசன்ஸ் நேரத்தில் வந்து அமர்ந்திருந்தேன், ஆனாலும் எனக்கு ஒன்றும் நடக்கவில்லை" என்று கூறுவீர்கள். ஏன் உங்களுக்கு ஏதும் நடக்கவில்லை என்றால், நீங்கள் தானாக வருபவராய் இல்லை. இழுத்துச் செல்லப்பட வேண்டியவராய் இருக்கிறீர்கள். நீங்கள் கத்தினாலும் கதறினாலும் உங்களை விடாமல் நாங்கள் இழுத்துச் செல்வோம். அதன் தாக்கத்தில் இருந்து உங்களால் தப்பிக்கவே முடியாது. இப்பொழுது அதை உணரும் அளவிற்கு உங்களுக்கு கூரிய உணர்வு இல்லை அவ்வளவுதான். நீங்கள் உங்களையே ஒரு சுவர் போல் மாற்றிக்கொண்டால், எதுவும் உங்களை அணுகவிடாமல் செய்து கொண்டால் பிறகு உங்களுக்கு நிகழவேண்டிய பலவற்றை நீங்களே தடுத்துக் கொள்கிறீர்கள்.

நீங்கள் சுவராகவும் செங்கல்லாகவும் இருந்தால்கூட நாங்கள் உங்களை விடமாட்டோம். இங்கு ஆசிரமத்தில் இருக்கும் உண்மையான கற்களும் செங்கற்களும் கூட, இங்கிருக்கும் சக்தியை உள்வாங்கி அதிர்வுகளை வெளிப்படுத்துகின்றன. எனவே நீங்கள் ஒரு சுவர் போல இருந்தாலும் உங்களை நாங்கள் விட்டுவிட

மாட்டோம். ஆனால் தொடர்ந்து நீங்கள் இப்படியே இருந்தால், உங்களுக்குள் மாற்றம் நடக்கும்போது, அது உங்களுக்கு மிகவும் வலியைத் தரும். ஒரு சுவர் ஓரிடத்திலிருந்து நகர முயற்சிக்கும்போது அதில் அங்கங்கு விரிசல் ஏற்படும் இல்லையா? அது போல்தான் நீங்கள் சுவராகவே இருந்தால், உங்களைக் கட்டி இழுத்துச் செல்லும்போது அது உங்களுக்கு வலியைக் கொடுக்கும்.

எனவே 'ப்ரசன்ஸ்' நேரம் என்பது இந்த ஆசிரமத்தின் மிகவும் முக்கியமான அம்சம். இது உங்களுக்கு கிடைக்கும் ஒரு வாய்ப்பு. படிப்படியான வளர்ச்சி மட்டுமே நமது நோக்கம் என்றால் இவையெல்லாம் தேவையில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். சில எளிய செயல்முறைகள் இருக்கும், அவற்றின் உதவியுடனேயே நீங்கள் மெதுவாக வளர்ச்சியடையலாம்.

நாம் இங்கு சில சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கிறோம். இந்த சூழ்நிலைகள் தரும் அனுபவங்களின் ஒரு பகுதியாக நீங்கள் இல்லாமல், வெறுமனே வெளியிலிருந்து பார்த்தீர்கள் என்றால், இவை கடுமையானதாகவும் உணர்ச்சியற்ற செயலாகவும் தோன்றும். இவற்றையெல்லாம் நாம் ஏன் செய்கிறோம் என்றால் நமது நோக்கம் படிப்படியான வளர்ச்சி அல்ல. ஒரு பரிமாணத்திலிருந்து இன்னொரு பரிமாணத்திற்கு வேகமாக உங்களை எப்படி மாற்றுவது என்பதைத்தான் நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். படிப்படியான வளர்ச்சியை மட்டுமே நீங்கள் நாடினால் நாம் அதை மெதுவாகச் செய்ய முடியும். இவ்வளவு தீவிரமான வழிகள் தேவையிருக்காது.

நான் மேலும் தீவிரமாக மாற விரும்புகிறேன். இயல்பாகவே, என் போக்கில் என்னை விட்டால், நான் மிக மிகத் தீவிரமாக இருப்பேன். ஆனால் சமூகச் சூழ்நிலை எவ்வளவு தூரம் அதை அனுமதிக்கப் போகிறது? ஒரு அடி முன் எடுத்து வைத்தாலே, அதிக பிரச்சினைகள் வரும். எனவே, மிக மோசமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளேன். வெளிச் சமூகத்தை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. செயல்கள் அமைதியாக நடக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. இப்போது இங்கு ஆசிரமத்தில் வசிக்கும் அனைவருமே ஒரு தனிவிதமான சமூகமாக உருவாகி விட்டீர்கள். ஆனாலும் இந்த சமூகமே

கூட, துரதிர்ஷ்டவசமாக ஒவ்வொன்றுக்கும் 100 சதவீதம் வெளிப்படையாக இல்லை. இங்கும் கூட நாம் கவனமாக செயல்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஆனால் வாழ்க்கையின் உண்மைகளில் இதுவும் ஒன்று. நான் கனவுகளில் மிதப்பவர் அல்ல.

எனவே மக்களை விளிம்பிற்கு மேல் தள்ளாமல் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு மட்டுமே நாம் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் சிறிது தள்ளினால் கூட, சிறுசிறு விஷயங்களுக்கும் இங்குள்ள பலர் துன்பமடைகிறார்கள். எனவே இந்த சமூக ஒழுங்கையும் மற்றும் வெளி சமூக ஒழுங்கையும் பராமரிப்பதற்காக நாம் மிகவும் சமாதானம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

வெளிப்புற சமூக நிலையை நாம் ஒரு நாளில் மாற்ற முடியாது, அது நமது கையில் இல்லை. ஆனால் இங்கு ஆசிரமத்தில் உள்ள சமூகம் இன்னும் சிறிது பக்குவம் அடைந்தால், இன்னும் சிறிது புரிதலுடன் இருந்தால், நோக்கத்தில் இன்னும் சிறிது கவனமுடன் இருந்தால், யாருக்கு என்ன நடக்கிறது என்பதைப்பற்றி கவலைப்படாமல் இருந்தால், நான் இன்னமும் சிறிது தீவிரமாக இருக்க முடியும். இன்னமும் சிறிது வலிமையுடன் இயங்க முடியும். வளர்ச்சி இன்னமும் சிறிது வலுக்கட்டாயமாக நடக்கும்படி செய்யமுடியும். இப்போது கூட அது வலுக்கட்டாயத்தில்தான் இருக்கிறது. ஆனாலும் நீங்கள் தப்பிக்கவே முடியாதபடி உங்கள் வளர்ச்சி மிக வலுக்கட்டாயமாக நடக்கும்படி நான் செய்யமுடியும். நான் இங்கு என்ன செய்யலாம் என்ன செய்யக்கூடாது என்பதில் இன்னமும் சிறிது சுதந்திரத்தை எனக்குக் கொடுத்தால் மட்டுமே நான் அப்படிச் செய்யமுடியும்.

சமூகத்தில் நிலவும் வாழ்க்கையின் எல்லைகளை இந்த சூழ்நிலைக்கும் கொண்டு வராதீர்கள். குறைந்தபட்சம் இங்காவது மக்கள் அவர்கள் விரும்பும்படி இருக்கட்டும். ஆசிரமம் எதற்காக உருவாக்கப்பட்டது என்னும் நோக்கத்திலிருந்து நாம் மாறக்கூடாது. இங்கு உருவாக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலிருந்து யாரும் மாறாமல் இருந்தால், இந்த இடம் எதற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்னும் நோக்கத்திலிருந்து யாரும் மாறாமல் இருந்தால், இப்போதுள்ளதை விட இன்னமும்

இவ்வுலகில் சுவாசம் செய்யும் ஒவ்வொரு மனிதனும் மரம் நடக் கடமைப் பட்டிருக்கிறான். நம் உள் மூச்சுதான் மரங்களின் வெளி மூச்சாகவும் நம் வெளி மூச்சுதான் மரங்களின் உள்மூச்சாகவும் இருக்கிறது. இது நமக்கும் மரங்களுக்கும் இடையிலான முறிக்க முடியாத உறவு. எனவே இங்கு வாழும் ஒவ்வொருவரும் மரம் நட கடமைப் பட்டிருக்கிறோம்.

ஈஷா பசுமைக் கரங்கள் திட்டம், சத்குரு அவர்களால் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அமைப்பு. இவ்வுலகில் இன்று உருவாகி இருக்கும் சுற்றுச்சூழல் பாதிப்பை சரி செய்யும் முயற்சியில், தமிழ்நாட்டில் 11 கோடியே 40 இலட்சம் மரங்கள் 10 ஆண்டுக் காலத்தில் நட்டு முடிப்பது இந்த அமைப்பின் நோக்கம்.

அதிக சாத்தியங்கள் கொண்டதாக இந்த இடத்தை நாம் மாற்ற முடியும். ஆனால், ஆசிரமம் உருவாக்கப்பட்டதன் அடிப்படைக் காரணத்திலிருந்து, தங்கள் வசதிக்கேற்ப மக்கள் தொடர்ந்து விலகிக் கொண்டேயிருந்தால், இங்குள்ள சூழ்நிலைகளை தங்கள் சொந்த காரணங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், பிறகு மொத்த சாத்தியமுமே காணாமல் போய்விடும்.

ஒரு இடத்தில் நூறு பேர் வாழும்போது, இந்த பிரச்சினைகள் வரும் என்பதை நான் அறிவேன். எனக்கு தயக்கமோ பயமோ இல்லை. இங்கிருந்து ஓடிப்போகவும் விரும்பவில்லை. ஆனால்

நாம் பிரச்சினையை குறைத்துக் கொண்டால், சாத்தியங்களை இன்னமும் சிறிது கூட்ட முடியும், உங்களின் வளர்ச்சியை இன்னமும் சிறிது கட்டாயமாக்க முடியும்.

நான் சில காலம் இப்பொழுது வெளியூர் பயணம் மேற்கொள்ளப் போவதால், அதற்குள்ளாகவே எனக்கு சிலர் சில குறிப்புகளை அவசரமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். "சத்குரு, நீங்கள் இவ்வளவு நாள் சென்றுவிட்டால், என் நிலைமை என்னாவது? அது எப்படி நடக்கும்? இது எப்படி நடக்கும்?" என்று. (சிரிக்கிறார்)

நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டியது, குரு என்பவர் ஒரு நபர் அல்ல. இன்னும் சொல்லப்போனால், அவருடைய ஆளுமை கூட ஒரு தடைதான். யாருடைய ஆளுமையிலும் உங்களுக்கு பிடித்தது சில இருக்கும்; பிடிக்காதது சில இருக்கும். நேசிப்பதற்கு சில இருக்கும்; வெறுப்பதற்கு சில இருக்கும். அதனால் ஆளுமையே ஒரு தடைதான். இங்கு உங்களுக்கு முக்கியமானது, உங்களுக்கு கற்றுத் தரப்படும் சாதனாவும், உங்கள் தடைகளையும் மீறி உங்களை மலரச் செய்யும் இந்த சூழ்நிலையும் தான். இது இரண்டும் தான் இங்கு மிகவும் முக்கியம்.

நீங்கள் உங்கள் சாதனாக்களை ஒழுங்காகச் செய்யாமல் இருந்தாலோ, இந்த சூழ்நிலைக்கு உங்களை முழுமையாகத் தராமல் இருந்தாலோ அல்லது நீங்கள் செய்யும் வேலைகளில் முழு ஈடுபாட்டுடன் இல்லாமல் இருந்தாலோதான் உங்களுக்கு பதற்றமும் பீதியும் ஏற்படும்.

ஒருவர் இங்கிருக்கும் சூழ்நிலைக்கு முழுவதுமாக தன்னைத் தந்தால், அவர்கள் வாழ்க்கையின் அடிப்படையையே, உடல் வளர்ச்சி உட்பட, பல வகைகளில் மாற்றி அமைக்க முடியும். பல்லாயிரக்கணக்கான மக்கள் பல விதமான நோய்களுடன் இங்கு வந்து, அவை குணமாகி திரும்பிச் செல்வதை பார்த்திருப்பீர்கள். அது நாங்கள் அந்த நோய்களை வாங்கிக்கொண்டதால் அல்ல. அதில் எனக்கு விருப்பமும் இல்லை. அது, நீங்கள் நோய் என்பதும், வயது முதிர்வு என்பதும், இறப்பு என்பதும், உடலின் வளர்ச்சிப் பாதையில் வெவ்வேறு கட்டங்கள் தான். யாராலும்

அவற்றை முழுமையாக தவிர்க்க முடியாது. ஆனால்... இங்கு பரவியிருக்கும் சக்தியை நீங்கள் நுகர்ந்தால், உங்களுக்கு நோயும் வராது, வயது முதிர்ச்சியும் தாக்காது. உங்களில் பலர் இங்கு வந்ததைவிட இப்பொழுது அதிக இளமையோடு இருக்கிறீர்கள். எது எப்படி இருந்தாலும் சாவதை உங்களால் தவிர்க்க முடியாது. (சிரிக்கிறார்) நீங்கள் நிச்சயம் இறந்து விடுவீர்கள். ஆனால் அது நல்லது தான்.

நீங்கள் இறக்கிறீர்கள் என்றால், வாழ்க்கையை வாழ்ந்து விட்டீர்கள் என்றுதான் அர்த்தம். வாழ்க்கையை வாழாதவர்களால் இறக்க முடியாது. ஏனெனில் உயிருடன் இருக்கும்போதே அவர்கள் ஒவ்வொரு நிமிடமும் இறந்து கொண்டுதான் இருப்பார்கள். ஒவ்வொரு நொடியும் அவர்கள் பயத்தில் சாகிறார்கள், கவலையில் சாகிறார்கள், பொறாமையில் சாகிறார்கள், பகையில் சாகிறார்கள், வெறுப்பில் சாகிறார்கள். உடல் இறந்தால் வித்தியாசம் என்ன? அது இன்னும் ஒரு வகை சாவு தானே ? ஒருவர் வாழ்ந்திருந்தால் தானே சாக முடியும்? இறப்பு என்பது மிகவும் அவசியம். நீங்கள் வாழ்ந்ததற்கான சாட்சி அதுதான். வாழ்விற்கும் இறப்பிற்கும் பெரிய வித்தியாசம் இருந்தது என்றால் நீங்கள் வாழ்ந்திருக்கிறீர்கள். நீங்கள் வாழ்ந்த நிலையில், இரண்டிற்கும் சொல்லும்படியாக பெரிய வித்தியாசம் எதுவுமில்லை என்றால் பிறகு நீங்கள் வாழவே இல்லை என்று தான் பொருள்.

நீங்கள் இந்த சூழ்நிலையை முழுமையாக நுகர, ஒவ்வொரு நாளும் இன்னும் அதிகமாய் மலர்வதைத் தடுக்க, ஒன்றால் மட்டும் தான் முடியும். அது, நீங்கள் உங்கள் முகமூடிகளைப் பயன்படுத்துவதிலேயே உங்கள் முழு நேரத்தையும் செலவிடுபவராக இருக்க வேண்டும்(சிரிக்கிறார்). எப்பொழுதும் எதையாவது மறைப்பதிலேயே முழு வாழ்க்கையையும் செலவிடுகிறீர்கள். நீங்கள் ஒரு வகையாக இருக்க, உங்களை நீங்களே வேறு தன்மையில் காட்டிக் கொள்ள விரும்புகிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதி இதிலேயே சென்றுவிடுகிறது. இது எதற்கும் உதவாது. ஆசிரமத்தில் நீங்கள் தங்குவதற்கு நாங்கள் வழி செய்திருப்பதே, இந்த முகமூடிளை எறிந்துவிட்டு ஒரு சாதாரண உயிராக நீங்கள் வாழ வேண்டும் என்றுதான்.

நீங்கள் இவ்வுலகத்தில் வேறு எங்கிருந்தாலும், இந்தப் முகமூடிகள் உங்களுக்கு அவசியம். இந்த உலகம் அதை கட்டாயமாக்குகிறது. இங்கிருக்கும் போதாவது நீங்கள் அவற்றை கழற்றி விடுவது அவசியம். இங்கும் பலர் கையை வீசிக் கொண்டு இவ்வாறு நடந்து போகிறீர்கள் (என்ன நடந்தால் எனக்கென்ன என்னும் தோரணையில் என்று சைகையில் செய்து காட்டுகிறார்). திடீரென்று என்னைக் கண்டவுடன் உங்கள் பக்தியை வெளிப்படுத்துகிறீர்கள்... இப்படி (வணங்கிக் காட்டி சிரிக்கிறார்)

பக்தி என்பது இன்னொரு வகை முகமூடி அல்ல. அது வாழ்க்கையை வாழ வேண்டிய விதம். பக்தி என்பது நீங்கள் நடக்கும் விதம், சுவாசிக்கும் விதம். பக்தி என்பது உங்கள் இதயம் துடிக்கும் விதம். யாரேனும் உங்களின் முன் வந்தால் நீங்கள் உடனே போட்டுக் கொள்ளும் முகமூடி அல்ல பக்தி. அது உங்களுக்கு எந்த பயனும் தராது.

இங்கிருக்கும் பாறைகள் சில மாதங்களுக்கு முன் இருந்ததை விட இப்பொழுது அதிகமாய் அதிர்வுகளை வெளிப்படுத்துகின்றன. எனவே நீங்களும் அப்படித்தான் இருப்பீர்கள். உங்களுடைய மூளை ஒத்துழைக்காவிடினும் உங்களுடைய எலும்புகளாவது சிறிது அதிர்வுகளை வெளிப்படுத்தும். இந்த அதிர்வுகளில் நீங்கள் முற்றிலும் மூழ்கியிருக்க வேண்டும். இந்த இடத்தை மாபெரும் முயற்சி எடுத்து உருவாக்கியிருக்கிறோம். இது நீங்கள் இப்படி நடந்து செல்வதற்கல்ல. (என்ன நடந்தால் எனக்கென்ன என்ற தோரணையை செய்து காட்டுகிறார்)

மிகவும் எளிமையாக ஒன்று உங்களுக்கு சொல்கிறேன். என்னைப் பார்க்கும் போது நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ, அதே போல் எல்லா நேரமும், எல்லாவற்றுடனும் இருங்கள். நீங்கள் இதைச் செய்தாலே போதும். ஒவ்வொரு மரத்தையும், ஒவ்வொரு புல்லையும், மேகத்தையும், கல்லையும், சுவற்றையும், மனிதரையும் ஆண், பெண், குழந்தை யாராயிருப்பினும், எல்லா உயிரினங்களையும், அஃறிணைப் பொருட்களையும் எதைப் பார்த்தாலும் சத்குருவைப் பார்ப்பதாக பாருங்கள். இங்கு அனைத்திலுமே ஒரு நல்ல அதிர்வு வெளிப்படுவதால் நீங்கள் அவற்றை அப்படிப் பார்ப்பது தவறல்ல.

“நீங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் பொழுதுதான், அடுத்தவரைப் பற்றிய அக்கறை உங்களுக்கு வரும். நீங்கள் சோகத்தில் இருக்கும் போது, உங்களுக்கு உங்களைப் பற்றிய அக்கறை மட்டுமே இருக்கும்.”

எல்லாவற்றையும் வித்தியாசமின்றி ஒன்றாகவே பாருங்கள். இந்த மரத்தைப் பார்க்கிறீர்கள், அங்கு சத்குருவே நிற்பதாகப் பாருங்கள். அந்த கல்லைப் பார்த்தால், அங்கும் சத்குரு நிற்பதாகப் பாருங்கள். இப்படி இருந்தால், இங்கிருக்கும் சூழ்நிலையை சுவாசித்து அதனோடு ஒன்றி விடுவீர்கள். அப்புறம் இதை முழுதாக உள்வாங்க முடியும். இல்லையென்றால் இங்கிருக்கும் எதுவும் உங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. அதையும் விட மேலாக, உங்கள் முகமூடிகளை அணிந்து கொண்டே இருந்தீர்களானால், உங்கள் முட்டாள்தனத்தை காத்துக் கொள்வதிலேயே உங்கள் கவனம் இருக்குமானால், நிச்சயமாக இங்கிருக்கும் அனைத்தையும் நீங்கள் உணரும் வாய்ப்பை இழந்து விடுவீர்கள்.

ஒரு ஊரில் ஒரு வயதான விவசாயி இருந்தார். அவரிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. ஒரு நாள் இந்த கழுதை நீர் இல்லாத கிணற்றில் விழுந்துவிட்டது. பயத்தில் மிகவும் பாவமாக அழ ஆரம்பித்தது. அந்த கிணறோ 30 அடி ஆழம் இருக்கும். சத்தம் கேட்டு வந்து எட்டிப் பார்த்த விவசாயிக்கு ஒரே எரிச்சல். "இந்த அறிவு கெட்ட கழுதை கிணற்றில் வேறு விழுந்துவிட்டது. இப்போது இதை வெளியே வேறு எடுத்தாக வேண்டும்" என்று.

அந்த கழுதையை வெளியே எடுக்க, அதுவும் ஒரு வயதான அறிவுகெட்ட கழுதையை, எதற்கும் பிரயோசனப்படாத கழுதையை, பணம் வேறு செலவு செய்ய வேண்டும் என்று நினைத்தார். "இதை அப்படியே வெளியே தூக்கினாலும், அதனால் பயன்தான் என்ன? எப்படியும் ஒன்றோ இரண்டோ வருடத்தில் இறந்து விடும். இப்பவும் கூட இதனால் பயனில்லை. இது தற்போது எந்த வேலையும் செய்வதில்லை. வயதும் ஆகிவிட்டதால் இதற்கு ஓய்வு தரும் நேரம் வந்து விட்டது." ஓய்வு பெற்ற கழுதையின் மீது யாருக்குமே அக்கறை இல்லை அப்படித்தானே? வேலை பார்க்கும் கழுதையாக இருந்தால் கூட பரவாயில்லை...இதுவோ வயதானது... யாருக்கும் அக்கறை இல்லை. (சிரிப்பலை)

தன் நண்பர்களையும், அக்கம்பக்கத்தில் இருப்பவர்களையும் கூப்பிட்டு, "இந்த கிணற்றை மூடி விடலாம் வாருங்கள். கிணறோ வற்றிவிட்டது, கழுதையும் வயதானது தான், அதனால் பரவாயில்லை" என்றார். அவர்களும் அவர்களுடைய மண்வெட்டிகளை எடுத்து வந்தனர். மண்ணை வெட்டி எடுத்து, கிணற்றுக்குள் போட ஆரம்பித்தனர். பீதியுற்ற கழுதையோ மிகவும் பாவமாக, இன்னும் அதிகமாக அழத்துவங்கியது. ஆனால் அவர்கள் மண் போட்டு மூடுவதை நிறுத்தவில்லை. சிறிது நேரம் கழித்து, அந்த கழுதை அழுகையை நிறுத்திவிட்டு, மிகவும் வித்தியாசமாகவும் புத்திசாலித்தனமாகவும் ஒன்றை செய்ய ஆரம்பித்தது. ஒவ்வொரு முறை மண் வந்து அதன் மேல் விழும் போதும், இது அதை உதறிவிட்டு, ஏறி அந்த மண் மேல் நிற்க ஆரம்பித்தது. வெளியே நின்றிருந்தவர்கள் பார்த்தார்கள்... "அடடா இது கெட்டிக்கார கழுதையாக இருக்கிறதே" என்று...

இப்படி கொஞ்சம் கொஞ்சமாக அந்த கழுதை, மண்ணின் மேல் ஏறி, வெளியே வந்துவிட்டது. இந்நேரத்திற்குள்ளாக,

அங்கிருந்த அனைவருக்கும் அந்தக் கழுதையின் மீது மிகுந்த மதிப்பு உண்டானது. "என்ன ஒரு கெட்டிக்கார கழுதை. இதனால் நிறைய காரியங்கள் செய்ய முடியுமே...". அந்த விவசாயியும் "அடேங்கப்பா!" என்று நினைத்தார். திடீரென்று அவருக்கு தன் கழுதையின் மீது பெருமை பிறந்தது. உடனே சென்று தன் கழுதையை கட்டியணைக்க நினைத்து அதனருகே செல்ல முயன்றார்.

அந்த கழுதை திரும்பி நின்று அவர் முகத்திலேயே உதைத்தது. இந்தக் கதையின் கருத்து: 'உங்கள் முட்டாள்தனத்தை எப்போதும் மூடி மறைக்கப் பார்க்காதீர்கள். பிறகு அது ஒரு நாள் உங்களை பலமாகத் தாக்கும்'.

அதனால் உங்கள் முட்டாள்தனங்களை எல்லாம் மூடி மறைப்பதிலேயே குறியாய் இருப்பவர்களுக்கு நான் சொல்வது இது தான். நீங்கள் என்னதான் முயற்சி செய்தாலும் நீங்கள் மறைக்க நினைக்கும் எல்லாம் ஒரு நாள் நிச்சயமாக வந்து உங்கள் தலையில் இடியாய் விழும். அதனால் அதையெல்லாம் இன்றே தூக்கி எறிந்து விடுங்கள். நாளையல்ல. இன்றே. இதை உங்கள் வாழ்க்கை முறையாக எடுத்துக் கொண்டீர்களானால், அடுக்கடுக்காய் எவ்வளவு முட்டாள்தனங்களை வைத்துள்ளீர்கள் என்று உங்களுக்கே புரியும். ஒவ்வொரு நாளும் "இன்றே! இன்றே!" என்று நீங்கள் ஒவ்வொரு அடுக்காய் பிரித்து எறிந்தீர்களானால், மிகக் குறுகிய காலத்திலேயே, நான் சில மாதங்களில் இங்கு திரும்பி வரும் போது, சந்தோஷத்தில் பளபளவென மின்னும் அழகிய முகங்களை நான் பார்க்கக் கூடும், இப்படிப்பட்ட முகங்களல்ல (உர் என்று முகத்தை வைத்துக் காட்டுகிறார்). (சிரிப்பலை). சரியா? செய்வீர்களா? இல்லையென்றால், நாங்கள் மூட வேண்டிய சில குழிகளும் இங்கு உள்ளது. (சிரிப்பலை). அப்புறம் இதே கதையை நாங்கள் உங்களுக்கு நடத்த வேண்டியிருக்கும். (சிரிக்கிறார்).

உள்நிலைப் பயணத்தில் உங்களுடன் துணையாக யாரும் வர இயலாது. நீங்கள் வெளியே போகும்போது யார் வேண்டுமானாலும் உங்கள் கையைப் பிடித்தபடி வர முடியும்... உங்களை தூக்கிக் கொண்டு கூட செல்ல முடியும். ஆனால் உள் வழி போவதென்றால், அங்கு ஒருவருக்கு மட்டும் தான் வழி

“ஸ்பந்தா ஹால் மற்றுமொரு நிகழ்ச்சிக்காக, மாலை நேரத்தில், கொண்டாட்ட கோலத்தில் இருக்கிறது. உள்நிலை வளர்ச்சியை இரு வகைகளில் நடத்திச் செல்லலாம் என்பார் சத்குரு - மிகவும் கடுமையாக அல்லது மிகவும் சந்தோஷமாக.

சொல்வதற்கு அவசியமின்றி இவ்விரண்டில், அவருடைய தேர்வு எப்போதும் ஒன்றுதான். ”

இருக்கிறது. யாரேனும் அளவுக்கதிகமாய் உங்கள் மீது பாசம் வைத்திருந்தாலும், அவர்களுக்குக் கூட வழியில்லை. அவர்களும் வெளியே தான் நிற்க வேண்டும். உள்நிலையில் ஒருவருக்கு மட்டும் தான் வழி இருக்கிறது. அது உங்களுக்கு மட்டும் தான்.

நீங்கள் உள் பயணத்தில் இருக்கும்போது, உங்களால் எதையெல்லாம் செய்ய முடியுமோ அது அனைத்தையுமே செய்வது மிகவும் அவசியம். உங்களிடம் சில தடைகள் இருக்கும். அவை என்னவென்றே கூட உங்களுக்குத் தெரியாமல் இருக்கும். அவை என்னவென்றே தெரியாததால் உங்களால் அவற்றைக் கையாளவும் முடியாது, நீக்கவும் முடியாது. அவற்றையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் எதையெல்லாம் நீங்கள் கவனித்துக் கொள்ள முடியுமோ, அவற்றையெல்லாம் நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். வேறு யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. உங்களுக்கு சுட்டிக் காட்ட முடியும், உங்களுக்கு உதவ முடியும், ஆனால் செய்ய வேண்டியதை நீங்கள் தான் செய்ய வேண்டும். வேறு வழியில்லை.

ஒரு ஜென் துறவி ஞானோதயம் தேடி பயணம் மேற்கொண்டார். பரவலாக பேசப்பட்ட ஒரு குருவிடம் சென்று “எனக்கு ஞானோதயம் வேண்டும்! அதற்கு உங்கள் உதவி நாடி வந்துள்ளேன்” என்றார். குரு, அவரை திரும்பிப் பார்த்துவிட்டு, “எனக்கு சிறுநீர் கழிக்க வேண்டும்” என்றார். துறவி, “இல்லை, இல்லை. நான் ஞானோதயம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஞானோதயம் வேண்டும்! அதற்கு உங்கள் உதவி வேண்டும்” என்று சொல்ல, குரு அவரை உற்று

நோக்கிவிட்டு, "எனக்கு சிறுநீர் கழிக்க வேண்டும்" என்றார். (சிரிப்பலை). துறவி, "அதை ஏன் என்னிடம் சொல்கிறீர்கள். போய் செய்யுங்கள்" என்றதற்கு, அந்த குரு, அதையே திருப்பி சொன்னார், "நீ ஏன் என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாய். நீ போய் செய்" என்றார் (சிரிப்பலை).

எனவே நீங்கள் மட்டுமே செய்ய முடிகிற விஷயங்களை நீங்களேதான் செய்து கொள்ள வேண்டும். வேறு யாரிடத்திலும் இந்த வேலைகளை ஒப்படைக்க முடியாது. வெளி விஷயங்களாக இருந்தால் வேறு யார் உதவியையாவது கேட்டுப் பெறலாம். அனால் நீங்கள் செய்ய வேண்டிய ஆன்மீகப் பயிற்சிகளை நீங்கள்தான் செய்ய வேண்டும். ஒரு மனிதர் முற்றிலும் மலர்ந்து, உயரிய நிலையை அடையத் தேவையான அனைத்தும் இங்கிருக்கிறது. அதற்குத் தேவையான குறிப்புகளும் இங்கிருக்கிறது. தேவையான சக்தி நிலையும் இங்கிருக்கிறது. தேவையான உத்வேகமும் சூழலும் இங்கிருக்கிறது. இப்போதைய தேவை என்னவென்றால் நீங்கள் இவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொள்வது மட்டுமே. நீங்கள் இங்கு முழு மனதோடு இருக்க வேண்டும், அவ்வளவுதான்.

சத்குரு

சத்குரு அவர்கள் தன்னை உணர்ந்த ஞானியாக, யோகியாக, குருவாகத் திகழ்பவர். அனைத்து மக்களும் தன் இயல்பான ஆனந்தத்தை உணரவும், வாழ்வை தன் உள்நிலை அனுபவத்தின் வாயிலாக நிகழ்த்தவும், தெய்வீகம் உணரவும் கருணையோடு வழிகாட்டுபவர்.

ஆன்மீகத்தை அறிவியல்ரீதியாக அணுகும் சத்குரு அவர்களின் வழிமுறைகளும், மனிதகுல மேன்மைக்காக அவர் ஆற்றிடும் பணிகளும் மகத்தானவை. சத்குரு அவர்கள் உலகின் மிக முக்கிய ஆன்மீகத் தலைவர்களோடும் இயக்கங்களோடும் ஒன்றிணைந்து உலக அமைதி, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் புரிந்துகொள்ளல் இவற்றின் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். புத்தாயிரமாண்டில், ஐக்கிய நாடுகள் சபையில் நிகழ்ந்த உலக அமைதிக்கான உச்சிமாநாட்டில் மிகச் சிறந்த பங்கேற்பாளராகவும் உலக மதத்தலைவர்கள் கூட்டமைப்பின் உறுப்பினராகவும் செயலாற்றும் சத்குரு அவர்கள், தனது அளப்பரிய செயல்களாலும், உலகெங்கும் ஆற்றிடும் சொற்பொழிவுகள் மூலமாகவும் உறுதியான, ஆனந்தமான மனிதகுலத்தினை உருவாக்கிட அயராது பணியாற்றுகிறார்.

ஸ்விட்சர்லாந்து நாட்டில் டாவோஸ் நகரில் ஆண்டுதோறும் நடைபெறும் உலகப் பொருளாதார உச்சிமாநாட்டில் 2006ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து சிறப்பு பிரதிநிதியாக பங்கேற்று வருகிறார். மேலும் ஆஸ்திரேலியன் லீடர்ஷிப் மாநாடு டால்பெர்க் மாநாடு, இந்தியப் பொருளாதார மாநாடு மற்றும் பல்வேறு சர்வதேச மாநாடுகளில் பங்கேற்றுள்ளார்.

நடப்பு விஷயங்கள் மற்றும் உலக விஷயங்களை சத்குரு புரிந்து வைத்திருக்கும் விதமும், மனிதநலனுக்கான அவரது விஞ் ஞான பூர்வமான அணுகுமுறையும் உலகளவில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

சக்திவாய்ந்த யோகப் பயிற்சிகளை மட்டுமல்லாது சமூகம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்கும் கிராம புத்துணர்வு

இயக்கம், பசுமைக்கரங்கள் திட்டம், ஈஷா வித்யா பள்ளிகள் போன்ற திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துகிறார். உலகின் பல பகுதிகளில் உள்ள பல்லாயிரம் தொண்டர்களோடு ஒன்றிணைந்து மனிதகுல மேம்பாட்டிற்கான மகத்தான செயல்களில் தம்மை அர்ப்பணித்துள்ள சத்குரு அவர்கள் சமூகச் சீரழிவுகள், தனிமனித சீரழிவுகள் மற்றும் உலகியல் நடைமுறைகள் குறித்து வெளிப்படுத்தும் அணுகுமுறைகளும் பரிமாணங்களும் ஆணித்தரமானவை. அனைத்து மக்களும் தமது இயல்பான நிலையை உணரவேண்டும் என்ற தீவிரத்தோடும், தெளிவோடும் சத்குரு அவர்களது உள்நிலையிலிருந்து வெளிப்படும் வார்த்தைகள் ஒரு மனிதனது வாழ்வின் போக்கையே மாற்ற வல்லவை. அவை உங்களுக்குள் ஆழமான தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும்.

ஈஷா அறக்கட்டளை

ஈஷா அறக்கட்டளை, மதச் சார்பற்ற, லாப நோக்கில்லாத ஒரு பொதுத் தொண்டு நிறுவனமாக, 1992ம் ஆண்டில் சத்குரு அவர்களால் நிறுவப்பட்டது. உலகளவிலான மனிதநேய அமைப்பாகத் திகழும் இந்த அமைப்பு, நாடு மற்றும் கலாச்சாரம் போன்ற எல்லைகள் தாண்டி லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. உள்நிலை மாற்றத்துக்கான ஈஷா யோகப் பயிற்சிகளிலிருந்து, மனிதகுலத்துக்கும் சுற்றுச்சூழலுக்குமான அதன் திட்டங்கள் வரை ஈஷாவின் செயல்பாடுகள் அனைத்தும், உலகின் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் அடிப்படையான ஒருங்கிணைந்து செயல்படும் பண்பாட்டைக் கொண்டதாக உள்ளது. இந்த அணுகுமுறை உலகளவில் ஈஷாவுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்திருப்பதோடு ஐ.நா சபையின் பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரிவு அமைப்பும் ஈஷா அறக்கட்டளைக்கு சிறப்பு ஆலோசகர் தகுதியை வழங்கியுள்ளது.

உலகெங்கிலுமுள்ள இதன் 200க்கும் மேற்பட்ட கிளைகளில் உள்ள தன்னார்வத் தொண்டர்கள் ஆதரவுடன் ஈஷா அறக்கட்டளை ஆற்றிவரும் பணிகள், மக்கள் ஓர் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு தங்களை மாற்றிக் கொள்ளவும், உறவு முறைகள் மற்றும் தன்னிறைவு நிலைகளை மேம்படுத்திக் கொள்ளவும், தங்களுள் பொதிந்துள்ள முழு ஆற்றலை உணரவும் ஓர் உறுதுணையான சூழ்நிலையை வழங்குகின்றன.

ஈஷா யோகப் பயிற்சிகள்

சத்குரு அவர்களால் வடிவமைக்கப்பட்ட ஈஷா யோகப் பயிற்சிகள் உடல், மனம், உணர்ச்சி ஆகியவற்றில் உள்ள எல்லைகளை உடைப்பதற்கு அரிய வாய்ப்பினை அளித்து, மனிதனின் இயல்பு நிலையான விடுதலை, அன்பு, மகிழ்ச்சி இவற்றை அடைய வழி வகுக்கிறது. மேலும் ஒருவர் உயர்ந்த உடல் நலத்தையும், மன அமைதி மற்றும் மனத்தெளிவையும் அடைய



முடிவதுடன் தன்னை உணர்ந்த ஞானியின் வழிகாட்டுதல் மூலம் உள்நோக்கிய பயணத்துக்கான அரிய வாய்ப்பையும் வழங்குகிறது. உலகம் முழுவதும் ஈஷா யோகப் பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஈஷா யோக மையம்

ஈஷா அறக்கட்டளையின் கீழ் 1994ம் ஆண்டு நிறுவப்பட்ட ஈஷா யோக மையம், மேற்குத் தொடர்ச்சிமலையின் ஒரு பகுதியான வெள்ளயங்கிரி மலைச்சாரலில் அடர்ந்த காடுகளால் சூழப்பட்டு, ஏராளமான வன விலங்குகள் உறையும் வனப்பகுதியின் அருகில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. உள்நிலை வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டுள்ள புகழ்வாய்ந்த இந்த சக்தி மையம், ஒரே கூரையின் கீழ் யோகாவின் பிரிவுகளான பக்தி, ஞானம், கர்மா மற்றும் கிரியா ஆகிய அனைத்தையும் வழங்குவதுடன் குரு சிஷ்யப் பாரம்பரியத்தையும் புதுப்பித்து வருகிறது.

இந்த மையம், நுணுக்கமான கட்டிடக் கலைகள் கொண்ட 64,000 சதுர அடி பரப்பளவுள்ள 'ஸ்பந்தா ஹால்' என்னும் தியானக் கூடத்தை உள்ளடக்கியுள்ளது. மேலும் தியானலிங்க யோகத் திருக்கோயில், லிங்கபைரவி திருக்கோயில், தீர்த்தக்குண்டம், ஈஷா புத்துணர்வு மையம், ஈஷா கல்வி இல்லம் மற்றும் கிருகஸ்தர்களுக்கான வானப்பிரஸ்தா குடியிருப்புகள் ஆகியவையும் இந்த யோக மையத்தில் அமைந்துள்ளன.

தியானலிங்கம் யோகத் திருக்கோயில்

ஒரு தனித்துவமான சக்தி உருவமாக, யோக அறிவியலின் சாரமாக 1999ஆம் ஆண்டு சத்குரு அவர்களால் பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்ட 13 அடி 9 அங்குலம் உயரமுடைய தியானலிங்கம், கடந்த 2000 வருடங்களில் முழுமையடைந்த முதல் தியானலிங்கமாகும். தியானலிங்கம் வீற்றிருக்கும் கருவறையின் அரைக்கோள வடிவ மேற்கூரை, இயற்கைப் பொருட்களான செங்கல், மண் போன்றவற்றை மட்டுமே பயன்படுத்திக் கட்டப்பட்டுள்ளது. கான்கிரீட் அல்லது இருப்பு போன்றவை பயன்படுத்தப்படவில்லை.

தியானலிங்கம் யோகத் திருக்கோயில் எந்த ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை முறையையும் சார்ந்தது இல்லை. இதற்கு எந்தவிதமான சடங்குகள், பிரார்த்தனை மற்றும் வழிபாடுகள் தேவை இல்லை. தியானலிங்கத்தின் அதிர்வூட்டும் சக்திப்பிரவாகமானது, தியானம் பற்றிய விழிப்பு உணர்வு இல்லாதவர்களைக் கூட ஆழமான தியானத்தன்மையை அனுபவ பூர்வமாய் உணர்ந்திடச் செய்கிறது.

தியானலிங்கம் அருகிலேயே தீர்த்தக்குண்டம் அமைந்துள்ளது. அதிலுள்ள லிங்கம், பாதரசம் கொண்டு உருவாக்கப்பட்டு சத்குருவினால் பிரதிஷ்டை செய்யப்பட்டதால், தீர்த்தக்குண்டத்தின் நீர் மிக்க அதிர்வலைகளோடு உள்ளது. அதில் ஒரு முறை குளித்து எழுந்தாலே, உடலுக்கும் உள்ளத்துக்கும் எண்ணற்ற பயன்கள் விளைகிறது. அனைத்துக்கும் மேலாக, ஒருவர் ஆன்மீக சக்தியைப் பெறுதலை விரைவுபடுத்தி, தியானலிங்கத்தை முழுமையாக உணர வழி வகுக்கிறது.

லிங்க பைரவி திருக்கோயில்

தியானலிங்க யோகத் திருக்கோவிலின் தென்மேற்கு மூலையில், சமச்சீர் முக்கோணத்தில் லிங்கபைரவி திருக்கோவில் அமைந்துள்ளது. தியானலிங்கத்தின் துணை ஆலயமாய், பெண்மையின் சக்திமிக்க சந்நிதானமாய் உருவாகியுள்ளது லிங்கபைரவி.

தியானலிங்கம் மனிதவாழ்வின் ஆன்மீக மேம்பாட்டுக்கு வழி செய்கையில், லிங்கபைரவி நல வாழ்வுக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் துணை நிற்கும்.

கிராமப் புத்துணர்வு இயக்கம்

இந்தியக் கலாச்சாரத்தின் அடித்தளமாய் விளங்கும் கிராமங்களில் புத்துணர்வினை ஏற்படுத்துவதற்காக இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது. நடமாடும் மருத்துவமனைகள் மூலமாக கிராம மக்களுக்கு இலவச சிகிச்சைகள், யோகப் பயிற்சி வகுப்புகள், மூலிகைத் தோட்டங்கள், பெண்களுக்குத் தொழிற்பயிற்சிகள், பள்ளி மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்புகள், சுற்றுச்சூழல் விழிப்பு உணர்வுத் திட்டங்கள் மற்றும் ஆண்கள், பெண்களுக்கான விளையாட்டுக்கள் போன்றவை நிகழ்ந்து வருகின்றன. இதுவரை தென்னிந்தியாவில் 4700 கிராமங்களிலுள்ள சுமார் 70 லட்சத்திற்கும் மேலான மக்கள் பயனடைந்துள்ளனர்.

ஈஷா வித்யா

கிராமக் குழந்தைகளின் மேம்பாட்டுக்காக, சத்குரு அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உருவான கல்விப் பணியே ஈஷா வித்யா. தன்னம்பிக்கை, கணிப்பொறி அறிவு, ஆங்கிலப் பேச்சாற்றல் ஆகியவை கொண்ட இளம் சமூகத்தினரை உருவாக்குவதும் இந்தக் கல்விப் பணியின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. பெரும்பாலான மாணவர்களுக்கு முழு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பசுமைக்கரங்கள் திட்டம்

கடும் வறட்சி, தீராத நீர்ப் பற்றாக்குறை மற்றும் உலகம் வெப்பமாதல் ஆகிய பிரச்சனைகளுக்கான தீர்வாக சத்குரு அவர்கள் 2005ம் ஆண்டில் பசுமைக்கரங்கள் திட்டத்தினைத் துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் மக்கள் ஆதரவின் மூலம் 11.4 கோடி மரக்கன்றுகளை நட்டு தமிழகத்தின் பசுமைப்பரப்பை 10 சதவிகிதம் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 17.10.2006 ல் 2.5 இலட்சம் தன்னார்வத் தொண்டர்கள் மூலம் 29 மாவட்டங்களில், 6284 இடங்களில் 8,52,587 மரக்கன்றுகள் நடப்பட்டு புதிய கின்னஸ் உலக சாதனை நிகழ்த்தப்பட்டது. 2009 இறுதி வரை 81 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

மஹா சிவராத்திரி

எந்தவொரு ஆத்மசாதகருக்கும் மஹாசிவராத்திரி மிகவும் முக்கியமான ஒன்று. மிகுந்த எழுச்சியோடும், ஆன்மீகத் தீவிரத்தோடும் இந்த இரவு ஒவ்வோராண்டும் ஈஷாவில் கொண்டாடப்படுகிறது. மஹா சிவராத்திரி இரவன்று அமையும் கோள்களின் நிலைப் பாட்டால் கிடைக்கும் பலன்களைப் பெற, இரவு முழுவதும் சத்குரு அவர்கள் சக்திமிக்க பல தியானங்களை வழங்குகிறார். உலகப் புகழ்வாய்ந்த இசைக்கலைஞர்களின் இன்னிசை மற்றும் நமது கலாச்சாரத்தை வெளிப்படுத்தக்கூடிய பல நிகழ்ச்சிகள் நடக்கும் இந்த மஹா சிவராத்திரி விழாவிற்கு ஒவ்வொரு வருடமும் சில இலட்சம் மக்கள் வருகை புரிகின்றனர்.

யக்ஷா

மஹா சிவராத்திரிக்கு முந்தைய 13 நாட்கள் 'யக்ஷா' திருவிழா என்று கொண்டாடப்படுகிறது. அன்றைய நாட்களில் மாலை நேரங்களில் புகழ் பெற்ற கலைஞர்களின் நடனம் மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறும். நமது கலாச்சாரத்தின் பெருமையைப் பறைசாற்றும் விதங்களில் இந்த நிகழ்ச்சிகள் இருக்கும்.

மையத்திற்கு வரும் வழி

ஈஷா யோக மையம், கோவையிலிருந்து பேரூர் செல்லும் சாலையில் முப்பது கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளியங்கிரி மலைச்சாரலில் அமைந்துள்ளது. கோவையிலிருந்து வாடகைக்கார் வசதிகள் உண்டு. சொந்த வாகனத்தில் வருபவர்கள், பேரூர் சாலையில் 23 கிலோ மீட்டர் வந்து இருட்டுப்பள்ளம் என்ற இடத்தில் வலது பக்கம் திரும்பி 7 கிலோ மீட்டர் வர வேண்டும். நகரப் பேருந்து நிலையத்திலிருந்து மையம் வரை பஸ் (எண்: 14D) வசதி உள்ளது. அல்லது பூண்டி பேருந்தில் ஈஷா யோக மையம் நிறுத்தம் வரை வந்து ஒரு கிலோ மீட்டர் நடந்து வர வேண்டும். அல்லது செம்மேடு பேருந்தில் (எண் : 14C) செம்மேடு வரை வந்து ஆட்டோ மற்றும் டாக்ஸியில் வரலாம். மையத்தில் தங்க விரும்புபவர்கள், முன்கூட்டியே அறைக்கு பதிவு செய்ய வேண்டும். (04222515471, 2515472)

ஈஷா காட்டுப் பூ தமிழ் மாத இதழ்
இது புத்தகமல்ல, பொக்கிஷம்

❖ சத்குருவின் கட்டுரைகள் ❖ சொற்பொழிவுத் தொடர்கள் ❖ கேள்வி பதில்கள் ❖ பொன்மொழிகள் ❖ பயணத் தொடர்கள் ❖ சுற்றுச்சூழல் விழிப்புணர்வுத் தொடர்கள் ❖ ஈஷாவின் நிகழ்வுகள் ❖ சத்தான உணவுக் குறிப்புகள்

அனைத்துக் கடைகளிலும் கிடைக்கும். தனி இதழ் ரூ.15/-,
ஒரு வருட சந்தா ரூ.180/-, 2 வருட சந்தா ரூ.350/-, 3 வருட சந்தா ரூ.500/-.

ஈஷா காட்டுப்பூ - ஈஷா யோக மையம்

F4, ஸ்ரீ பாலாஜி அபார்ட்மெண்ட்ஸ்,
4/6, ராஜாம்பாள் தெரு, தி.நகர், சென்னை 600 017.
சந்தா தொடர்புக்கு: 96770 16700; 044 45011137

www.ishashoppe.com

ISHA ONLINE STORE

CRAFTS

RAIMENTS

RUDRAKSHA MALAS



BOOKS

VIDEO CDs

AUDIO CDs

email: support@ishashoppe.com
Tel: +91-422-2515393